# தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்

## (DEVELOPMENT ADMINISTRATION IN TAMIL NADU)

### TNPSC குரூப் 1 & 2,2A புதிய பாடத்திட்டத்திற்கான பாடக் குறிப்புகள்

"ஜனநாயக செயல்பாடுகள், பகுத்தறியும் திறன், சமூக செயல்பாடுகள் ஆகியவற்றின் விளைவாக, அனைவருக்குமானதும், சிறப்புடன் செயல்படுவதுமான பொதுச்சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு தனது அர்ப்பணிப்பை வளர்த்துள்ளது."

- அமர்த்தியா சென் & ஜீன் டிரேஸி

தொகுப்பு

**www.portalacademy.in**

**(Prepared for Portal Academy's TNPSC Group 1 & 2 Test Batch Students)**

## உள்ளடக்கம்


| வ. எண். | பாடத்தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் | 1-15 |
| 2 | தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு & தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும் | 16-28 |
| 3 | அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் | 29-80 |
| 4 | இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் | 81-89 |
| 5 | தமிழகத்தின் பொருளாதார போக்குகள் | 90-115 |
| 6 | சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள். | 116-123 |
| 7 | தமிழகத்தின் கல்வி | 124-137 |
| 8 | தமிழகத்தின் நலவாழ்வு முறைமைகள் | 138-158 |
| 9 | தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில்அவற்றின் தாக்கமும் | 159-204 |
| 10 | பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள் | 205-213 |
| 11 | தமிழகத்தில் மின்னாளுகை. | 214-229 |

## முன்னுரை

மாணவர்களுக்கு வணக்கம் ! **TNPSC** வெளியிட்டிருந்த அதிகாரப்பூர்வ மாதிரி வினாத்தாளில், "அலகு – **VIII:** தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்" பகுதியிலிருந்து சுமார் **50** கேள்விகளும் , "அலகு – **IX:** தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்" பகுதியிலிருந்து சுமார் **20** கேள்விகளும் கேட்கப்பட்டிருந்தன. அலகு – **VIII:** தமிழ்நாட்டின் வரலாறு, மரபு, பண்பாடு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள் தலைப்பைப் பொறுத்த வரையில், தமிழக அரசின் புதிய மற்றும் பழைய சமூக அறிவியல், வரலாறு , பொருளாதாரம், அறவியலும் இந்திய பண்பாடும் மற்றும் தமிழ் பாட புத்தகங்கள் **90%** பகுதிகளை உள்ளடக்கியுள்ளதால் , பள்ளிப் புத்தகங்களை மட்டுமே படிப்பது போதுமானது. ஆனால், அலகு – **IX:** தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம் பகுதியைப் பொறுத்தவரையில், பள்ளிப் புத்தகங்களில் **40%** தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. மீதமுள்ள **60%** தகவல்களுக்கு பல்வேறு அரசு இணையதளங்கள், தமிழக அரசின் கொள்கை விளக்க குறிப்புகள், புத்தகங்கள், இயர்புக்குகள் என பல ஆதாரங்களிலிருந்து திரட்ட வேண்டியுள்ளது. மாணவர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் குறுகிய காலத்தில், பல்வேறு ஆதாரங்களைத் தேடி படிப்பது சிரமம், என்பதாலேயே, **TNPSC** குரூப் **1** மற்றும் **2/2A** தேர்வுகளிலுள்ள "அலகு – **IX:** தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்" பகுதிக்கான ஒரு முழு கையேடாக இந்த குறிப்புகளைத் தயாரித்துள்ளோம். படித்து பயன்பெற்று, வெற்றி பெற வாழ்த்துகிறோம். இந்த பாடக்குறிப்புகளைக் குறித்த உங்கள் கருத்துக்களை வரவேற்கிறோம்.

**D.Kessal**

8778799470

support@portalacademy.in

www.portalacademy.in

**PORTAL ACADEMY –ன் TNPSC குரூப் 1 2020 மற்றும் குரூப் 2/2A 2020**

**தேர்வுகளுக்கான தேர்வு வகுப்புகள் (TEST BATCH)**

- 30 தேர்வுகள் (ஒவ்வொரு தேர்விலும் 200 வினாக்கள் | GS-175 + APTITUDE-25 )
- தமிழ் & ENGLISH MEDIUMS | EXPLANATION FOR MATHS / APTITUDE QUESTIONS
- TNPSC வெளியிட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கான மாதிரித்தேர்வு தரத்தில் கேள்விகள்
- தேர்வுகளை ஆன்லைன் (ONLINE EXAM) மூலமாகவோ, பிரிண்ட் எடுத்தோ (PDF FILES) பயிற்சி செய்யலாம் .
- Online தேர்வுகளை எப்போது வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும் பயிற்சி செய்யலாம்.
- அனைத்து மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் (Rank List)

**அட்மிஷன் நடைபெறுகிறது !**

**WWW.PORTALACADEMY.IN | 8778799470**

முதல் தேர்வை இலவசமாக பயிற்சி செய்ய **www.portalacademy.in/p/free-tests.html**

# 1. தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் (Human Development Indicators in Tamil Nadu and a comparative assessment across the Country)

- தமிழ் நாடு அரசின் முதலாவது மனித வள மேம்பாட்டு அறிக்கை 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையை தமிழக மாநில திட்டக்குழு , மத்திய திட்டக் குழு மற்றும் ஐ.நா. வளர்ச்சி திட்டம் (UNDP) ஆகியவற்றின் உதவியுடன் தயாரித்தது.
- **தமிழ்நாடு அரசின் இரண்டாவது மனிதவள மேம்பாட்டு அறிக்கை 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.** இதனை மாநில திட்டக்குழு , ஐ.நா-வின் வளர்ச்சி திட்டம் (United Nations Development Programme) மற்றும் நிதி அயோக் ஆகியவற்றின் உதவியுடன் தயாரித்தது. இரண்டாவது மனித வள மேம்பாட்டு அறிக்கையை தயாரிப்பதில் தமிழக திட்டக் குழுவிற்கு , சென்னையிலுள்ள மெட்ராஸ் வளர்ச்சி கல்வி நிறுவனம் (Madras Institute of Development Studies (MIDS)) உதவி புரிந்தது.

**தமிழ்நாடு மாநில மனித மேம்பாட்டு அறிக்கை-2017**

**1. முக்கிய அம்சங்கள்மாநிலத்தின் நிலவரம்**

**தமிழகத்தில் மக்கள் தொகையில் மாற்றங்கள்**

- தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 72.14 மில்லியன் (7.21 கோடி).
- கடந்த பத்தாண்டுக் கால வளர்ச்சி விகிதம் (2001 - 2011) 15.6% (1991 - 01 காலகட்டத்தில், 11.19%)
- பத்தாண்டுக் கால (2001 - 2011) கிராமப் புற மக்கள் தொகையில் மாறுதல் 6.49% ஆகவும், நகர மக்கள்தொகை 27.16% ஆகவும் இருந்தது.
- பாலின விகிதாச்சாரம் 1001-ல் 987 லிருந்து, 2011-ல் 995- ஆக அதிகரித்தது. அதே சமயம், இந்த விகிதாச்சாரம், மொத்தமுள்ள 32 மாவட்டங்களில், 12 மவட்டங்களில் சாதகமானதாக இல்லை.
- 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை நெருக்கம் ஒரு கிமீக்கு 555 (இது தேசிய சராசரியான 382-ஐ விட அதிகம்) என்று இருந்தது.
- குடிசைப் பகுதிகளின் மக்கள் தொகை 2011-ல் 2.6 மில்லியனாக இருந்தது. இது ஒட்டு மொத்த நகர மக்கள் தொகையில் (34.90 மில்லியன்) 8% ஆகும்.
- குறைந்த கல்வியறிவு கொண்டுள்ள மாவட்டம் - தர்மபுரி.

**பொருளாதாரம்**

- 2013- 14-ல் பதிவான மொத்த உள் நாட்டு உற்பத்தி வளர்ச்சி சதவிகிதம் 7.29%
- 2004 - 05- 0ல் விவசாயம் மற்றும் அது தொடர்புடைய தொழில்கள் மூலம் மாநிலத்தின்



www.portalacademy.in

வருவாய்க்கான பங்களிப்பு 11.65% ஆக இருந்தது. இது, 2011- 12-ல், 8.7% ஆகக் குறைந்தது.

- 2011 - 12ஆம் ஆண்டில் நிகர உள்நாட்டு உற்பத்தியில் தொழில்துறை 27.91 விழுக்காடு பங்களித்து, இதில் உற்பத்தி துறையின் பங்களிப்பு மட்டுமே 17.5 விழுக்காடு ஆகும்.
- ஏறக்குறைய 92% சிறு மற்றும் குறு விவசாயப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.
- பயிரிடும் பரப்பு,1950 - ல், 56.38 லட்சம் ஹெக்டேர்கள் இருந்தது, மெதுவாகக் குறைந்து 2008 - 2009-ல், 50.43 லட்சம் ஹெக்டேராகவும்,, 2011- 12ல், 49.65 லட்சம் ஹெக்டேராக ஆனது.
- அதே போல, 2007 - 08 - ஆம் ஆண்டில் 21.69 லட்சம் ஹெக்டேர் நிலம் விவசாயம் சாராத பயன்பாட்டிற்காக என்றிருந்தது, அதிகரித்து, 2008 - 09 -ல் 21.73 லட்சம் ஹெக்டேர் நிலமும், 2011 - 12- ல் 21.80 லட்சம் ஹெக்டேர் என்று உயர்ந்தது.
- ஆனாலும் 2013 - 14 ஆண்டில் மாநில அளவிலான விளைச்சல், 10.33 மில்லியன் மெட்ரிக் டன்கள் அளவுக்கு உணவுப் பொருள் உற்பத்தி இருந்தது. இது அதற்கு முந்தைய ஆண்டின் விளச்சலை விட 0.16 மெட்ரிக் டன் அதிகம்.

**2. மனித மேம்பாட்டு நிலை**

- மாவட்ட அளவிலேயே, பல வகைப் பட்ட, மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது,
- மனித மேம்பாட்டு அட்டவணை என்பது, நலமாக இருக்கத் தேவையான, கல்வி,ஆரோக்கியம், வருவாய் ஆகிய மையப் பரிமாணங்களின் அளவீடுகள்தாம். மரபு ரீதியிலான, மனித மேம்பாட்டு அம்சங்களுடன், துல்லியமான புரிதலுக்காக, பிற குறியீடுகளுடன் இணைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுகிறது.
- பாலின சமமின்மைக் குறியீட்டு அட்டவணை, பாலின வேறுபாட்டால் உருவாகக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், தேவையான வளர்ச்சி சார்ந்த தலையீடுகள் குறித்து முடிவு செய்யவும் பயன்படுகிறது.
- குழந்தை மேம்பாட்டுக் குறியீட்டு அட்டவணையின் அம்சங்களாக கல்வி,ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலை போன்றவை எடுத்துக் கொள்ளப்படுகின்றன.
- பல்பரிமாண வறுமைக் குறியீட்டு அட்டவணை என்பது அடிப்படை வசதிகளான, குடிநீர், எரிபொருள், கழிப்பிட வசதி போன்றவைகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கானது. இவற்றைப் பெற முடியாமல் போனால் நல வாழ்வு சாத்தியமில்லை.
- உணவுப் பாதுகாப்புக் குறியீட்டு அட்டவணையில், உணவு உற்பத்தி, மற்றும் விநியோகம் ஆகிய இரண்டைப் பற்றியும் அறிந்துகொள்ளுதல் தவிர, பயன்படும் உணவின் ஊட்டச்சத்து குறித்தும் விவரம் இருக்கும்.

ஒவ்வொரு குறியீட்டு அட்டவணையிலும் உள்ள முதல் மற்றும் கடைசியில் உள்ள ஐந்து மாவட்டங்களின் விவரம் வருமாறு,

**மனித மேம்பாட்டுக் குறியீட்டு அட்டவணை (Human Development Index)**

| முதல் நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள் | | |
|---|---|---|
| **Districts** | Index | Rank |
| **Kanyakumari** | 0.944 | 1 |
| **Virudhunagar** | 0.855 | 2 |
| **Thoothukudi** | 0.852 | 3 |
| **Chennai** | 0.847 | 4 |
| **Kancheepuram** | 0.845 | 5 |
| **கடை நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள்** | | |
| **Thiruvarur** | 0.568 | 28 |
| **Villupuram** | 0.561 | 29 |
| **Theni** | 0.539 | 30 |
| **Perambalur** | 0.447 | 31 |
| **Ariyalur** | 0.282 | 32 |

**பாலின சமமின்மை குறியீடு (Gender Inequality Index)**

| முதல் நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள் | | |
|---|---|---|
| **Districts** | Index | Rank |
| **Nilgiris** | 0.036 | 1 |
| **Virudhunagar** | 0.048 | 2 |
| **Vellore** | 0.051 | 3 |
| **Namakkal** | 0.054 | 4 |
| **Perambalur** | 0.057 | 5 |
| **கடை நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள்** | | |
| **Chennai** | 0.111 | 28 |

| | | |
|---|---|---|
| **Madurai** | 0.112 | 29 |
| **Villupuram** | 0.113 | 30 |
| **Sivagangai** | 0.114 | 31 |
| **Ariyalur** | 0.118 | 32 |

## குழந்தை நல மேம்பாட்டு குறியீட்டெண் (Child Development Index)

| முதல் நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள் | | |
|---|---|---|
| **Districts** | Index | Rank |
| **Kanyakumari** | 0.872 | 1 |
| **Coimbatore** | 0.745 | 2 |
| **Thoothukudi** | 0.712 | 3 |
| **Thanjavur** | 0.710 | 4 |
| **Sivagangai** | 0.706 | 5 |
| **கடை நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள்** | | |
| **Ramanathapuram** | 0.528 | 28 |
| **Vellore** | 0.523 | 29 |
| **Krishnagiri** | 0.474 | 30 |
| **Thiruvanamalai** | 0.426 | 31 |
| **Ariyalur** | 0.410 | 32 |

## பல்பரிமாண வறுமைக் குறியீட்டெண் (Multi-Dimensional Poverty Index)

| முதல் நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள் | | |
|---|---|---|
| **District** | Index | Rank |
| **Kancheepuram** | 0.34 | 1 |
| **Chennai** | 0.34 | 2 |
| **Cuddalore** | 0.38 | 3 |
| **Coimbatore** | 0.41 | 4 |
| **Nagapattinam** | 0.41 | 5 |
| **கடை நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள்** | | |

www.portalacademy.in

| | | |
|---|---|---|
| **Ariyalur** | 0.62 | 28 |
| **Virudhunagar** | 0.62 | 29 |
| **Ramanathapuram** | 0.63 | 30 |
| **Perambalur** | 0.63 | 31 |
| **Dharmapuri** | 0.70 | 32 |

### உணவுப் பாதுகாப்புக் குறியீட்டெண் (Food Security Index)

| முதல் நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள் | | |
|---|---|---|
| **Districts** | Index | Rank |
| **Thiruvarur** | 0.580 | 1 |
| **Kanyakumari** | 0.562 | 2 |
| **Nagapattinam** | 0.524 | 3 |
| **Thiruvallur** | 0.511 | 4 |
| **Thiruppur** | 0.487 | 5 |
| **கடை நிலையில் இருக்கும் ஐந்து மாவட்டங்கள்** | | |
| **Villupuram** | 0.333 | 28 |
| **Ramnathapuram** | 0.286 | 29 |
| **Virudhunagar** | 0.268 | 30 |
| **Permabalur** | 0.267 | 31 |
| **Nilgiris** | 0.266 | 32 |

## 3. வேலைவாய்ப்பு, வருவாய், வறுமை

### வேலைவாய்ப்புகளின் போக்கு:

- பெரும்பான்மை வருவாயைத் தரும் தொழில் கட்டுமானத் துறைதான். அதிகப்படியான வேலைவாய்ப்பும் இங்குதான் உருவாகிறது
- பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் பங்களிப்பு குஜராத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் தான் இரண்டு புள்ளிகளுக்கு மேல் திகரித்திருக்கிறது.
- மாநில வருவாயில் கட்டுமானத் தொழில் மூலமான பங்களிப்பு அதிகரித்திருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்.

**மாவட்ட வாரியாக வறுமை மற்றும் வருவாய் நிலவரம்.**

- அதிக வருவாய் ஈட்டும் மாவட்டங்களான கன்னியாகுமரி, ஈரோடு ஆகியன, குறைவான வருவாய் ஈட்டும் மாவட்டங்களான அரியலூர், பெரம்பலூரைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக வருவாய் ஈட்டுகின்றன.
- குறைவான வருவாய் ஈட்டும் பிற மாவட்டங்களான, விழுப்புரம், திருவண்ணாமலை, தேனி, மற்றும் திருவள்ளூர் ஆகியவற்றின் தனி நபர் வருமானம், அதிக வருவாய் ஈட்டும் மாவட்டங்களின் தனி நபர் வருமானத்தில் பாதிதான் இருக்கிறது.
- திருவண்ணாமலை, திருவாரூர், கடலூர், அரியலூர், விழுப்புரம், மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆகியோரின் மக்கட்தொகைக்கும் இந்த இடங்களின் வறுமை நிலைக்கும் தொடர்பு உள்ளது.

**4. எழுத்தறிவும் கல்வியும்**

- தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதாச்சாரம் கடந்த பல வருடங்களாக அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது1991 - ல் 62.96% என்பதிலிருந்து 2011-ல்,80.33% ஆக உயர்ந்திருக்கிறது.
- கல்வியைத் தொடராமல் பாதியில் விலகும் மாணவர் எண்ணிக்கை குறைந்துவரும் போக்கே காணப்படுகிறது. பட்டியில் இனப் பிரிவு மாணவர்கள், பாதியில் விலகுவது, ஒப்பீட்டளவில் குறைவான விகிதாச்சாரத்தில் உள்ளது.
- கல்வியைத் தொடராமல் நிற்பது குறைந்ததற்குக் காரணம், மாநில அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் என்று கூறலாம்.
- மாணவ, மாணவியர் மற்றும் அனைத்து வகைப் பிரிவினர் ஆகியோர் கல்வியை முடிப்பது மற்றும் மறுமுயற்சி செய்வது ஆகியன மேம்பட்டுள்ளன.
- உள்கட்டமைப்பு, பள்ளியின் தரம் ஆகியவற்றோடு அதன் விளைவும் (தேர்ச்சி பெறுபவர்களின் விகிதம்) நன்கு வளர்ச்சி பெற்றிருப்பதும் பிற காரணங்கள்.

**உயர் கல்வி**

- 2013 -14-ல், உயர் கல்வி பயில சேருபவர்களின் விழுக்காடு 43%.
- தமிழ்நாடுதான் இந்தியாவின் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பல்கலைக் கழகங்கள், தொழிற்நுட்பப் பல்கலைகழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையில் முதலிடம் பெற்றுள்ளது. இதில் பெரும்பாலானவை அரசு உதவி பெறாத கல்லூரிகள். இவை மாநிலத்தின் அனைத்துக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் 88.5% ஆகும்.

- 2001 2011 ஆண்டு காலகட்டத்தில், தொழில்நுட்பக் கல்வி மிகப்பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டது.
- மாநில திறன் வளர்ச்சித் திட்டம் (TNSDM) என்ற அமைப்புதான் 12 - ஆம் வகுப்பு படித்தவர்களுக்கான திறன் வளர்ச்சித் திட்டத்தை செயலாக்கும் ஒரே முகமையகமாக விளங்குகிறது. பயிற்சி நிறுவனங்களுக்குத் தகுதிச் சான்று வழங்குவதும் இந்த அமைப்புதான்.

**5. நல வாழ்வு, ஊட்டச்சத்து**

- பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி அளித்தல் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. 1991 1992 ஆண்டில், ரூ. 410 கோடியாக இருந்தது, 2015 16-ல், ரூ.8245.41 கோடியாக அதிகரித்தது.
- நிதி ஒதுக்கீட்டில் கிட்டத்தட்ட 40% ஆரம்ப சுகாதாரத்திற்கு செலவிடப் படுகிறது.
- NHRAM கீழ் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டில் (இந்திய அரசாங்கம் அளிப்பது) 95 - விழுக்காட்டிற்கும் மேலாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.
- சுகாதாரத்திற்கான உட்கட்டமைப்பு உருவாக்குவதில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில், டோ, பே, ஆரம்ப சுகாதார நிலையம், நடமாடும் மருத்துவ மையங்கள் ஆகியன
- செயல்படுகின்றன, 2000 -ஆம் ஆண்டில் 660 பொது சுகாதார மையங்கள் அரசுக்கு சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டன. இது 2005 -ல்,1360 கட்டிடங்கள், 2015-ல், 1564 கட்டிடங்கள் என்று விரிவடைந்து இருக்கிறது.
- மாநில சுகாதார ஒழுங்கமைவுத் திட்டத்தின் கீம், மத்திய தர மருத்துவனைகளின் தகுதி நிலை மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படுகிறது.
- குழந்தைப் பிறப்பிற்கு அரசு மருத்துவமனைகளின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. 1992-93 ஆண்டு காலத்தில் 64% என்று இருந்தது, 2005 -ல், 98% ஆக உயர்ந்தது. அதிலும் குறிப்பாக PHC / CHC அளவில் இந்த நிலை உருவாகியுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஏழை மக்களில் பெரும்பாலோர், பொது மருத்துவமனைகளைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.
- சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்த தமிழ்நாடு மருத்துவபபணி பொருள் கழகம் - பங்கு அதிகம். அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான, CT Scans , MRI Scan, மருந்துகள் மற்றும் நோய் பகுப்பாய்வு வசதிகள் ஆகியனவற்றை பெற்றுத் தருகிறது.
- மாநிலத்தின் சுகாதார IMS பெருமளவில் வளர்ச்சி பெற்றது.
- சிகிச்சையின் தரம், குறிப்பாக நச்சு தொடர்பான சிகிச்சை நிர்வாகம் ஆகியவை மேம்படுவதற்கான முயற்சிகள் அவசியம்.

### மனித வளம்

- தமிழ் நாட்டில் பரவலாக,1990 - களின் மத்தியிலிருந்து 2013 வரையிலான காலகட்டத்தில், 18 புதிய மருத்துவக் கல்லூரிகள் செயல்படத் துவங்கின. இதில் 9 அரசு மற்றும் 9 தனியார் மருத்துவக் கல்லூரிகள். இதன் மூலம் மருத்துவ இளநிலைப் படிப்புக்கான இடங்கள் இரட்டிப்பாயின.
- துணை மருத்துவக் கல்வி நிலையங்கள், அரசு, தனியார் சார்பில் அதிக எண்ணிக்கையில் உள்ளன.
- ஊட்டச்சத்து, நீர் மேலாண்மை மற்றும் கழிவறை, வடிகால் அமைப்பு ஆகியவை குறித்து தொடர் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்களை மறுபடியும் உருவாக்கியது.
- மேம்பட்ட குடிநீர் இணைப்புடன் வீடுகள், 94.7% (2007 - 2008), 97.4% (2012 - 13)
- கழிவறை வடிகால் வசதியுடன் வீடுகள் 38.9% (2007 - 08): 52.5% (2012- 13)

### 6. பாலினம்

### குழந்தை பாலின விகிதாச்சாரம்

- கடைசியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின், மாவட்டங்களில் குழந்தை பாலின விகிதாச்சாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.
- அனைத்து இந்திய குழந்தை பாலின விகிதாச்சாரமான 919 - ஐ விடத் தமிழ்நாட்டின் 6 மாவட்டங்களில் குறைவாக உள்ளது. அவை, அரியலூர், கடலூர், தருமபுரி, நாமக்கல், சேலம் மற்றும் பெரம்பலூர்.
- மாநிலத்தின் 8 மாவட்டங்களில், குழந்தை பாலின விகிதம் மாநில சராசரிக்கும் (943) அகில இந்திய சராசரிக்கும் இடையில் உள்ளது.

### பெண்கள் எழுத்தறிவு விகிதாச்சாரம்

- 14 மாவட்டங்களில் பெண்கள் எழுத்தறிவு விகிதாச்சாரம் மாநில சராசரியை (73.86%) விட அதிகமாக உள்ளது.
- எழுத்தறிவு விகிதாச்சாரம் சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, விழுப்புரம், அரியலூர், தருமபுரி ஆகிய 6 மாவட்டங்களில் தேசிய சராசரியை விடக் குறைவு.
- 14 மாவட்டங்களில் எழுத்தறிவில் பாலின விகித இடைவெளி 10 % - லிருந்து 15% வரை.
- இந்தியத் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு - டெல்லாய்ட் நிறுவனம் இவற்றின் ஆய்வின்படி, சான்றிதழ் படிப்புகள், MPhill ஆகியவற்றில், ஆண்களை விட பெண்கள்தாம் அதிக எண்ணிக்கையில் சேர்ந்திருக்கிறார்கள்

- பணிகள் / வேலைகளில், பெண்களின் பங்கேற்பு விகிதம் காஞ்சிபுரத்திலும், கன்னியாகுமரியிலும் மிகக் குறைவு. இருப்பதிலேயே அதிகமான பங்கேற்பு பெரம்பலூரில்.
- தமிழ்நாட்டில் பெண்கள் குடும்பத் தலைவராக இருக்கும் வீடுகள் 14% இருக்கின்றன. அதாவது 2.59 மில்லியன் வீடுகள்.
- இதில் 40.74% வீடுகளில் வங்கி வசதிகளைப் பெறாதவர்களாக இருக்கின்றனர். இது தேசிய சராசரியை (53.4%) விடக் குறைவு.

**7. சமூகப் பாதுகாப்பு**

- 75.5% மாணவர்கள் மதிய உணவுத் திட்டத்தில் சேர்ந்திருக்கின்றனர்.
- பொது விநியோகத்திட்டத்தின்-லிருந்து, அரிசியைப் பெறுவது, 2004 - 05 காலகட்டத்தில், கிராமப் பகுதியில் 78.9%, நகரப் பகுதிகளில் 4.7 விழுக்காடு என இருந்தது இது, 2009- 10 ஆண்டில், கிராமப் பகுதிகளில் 91%, நகரப் பகுதிகளில் 67% என்று உயர்ந்தது.
- PDS காரணமாக ஏழை மக்கள் மத்தியில், 2009 - 09 ஆண்டில் HCR 44.4% குறைந்திருக்கிறாது.
- 2013 - 14 காலகட்டத்தில் தொழிலாளர் நல வாரியத்தின் திட்டங்களால் பயன் பெற்றோர் எண்ணிக்கை 18,942.
- 2013 - 14 காலகட்டத்தில் அமைப்பு சாராதொழிலாளர் நல வாரியத்தின் திட்டங்களால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை, 3,71,303.
- சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தைப் பெறுபவர்களின் எண்ணிக்கை, 2011 -12 ல், 26,45,537 என்பதிலிருந்து, 31- 03-14 வரை 35,64,20 என்று அதிகரித்துள்ளது.
- 2013 - 14 - ல், 62.6 குடும்பங்கள், MGNREGS பங்கு கொண்டிருக்கின்றனர்.
- 2014, ஏப்ரல் வரை CMCHYIS மூலமாக 6,51, 185 நபர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

## மனிதவள மேம்பாட்டுக் குறியீடு தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் (HDI - comparative assessment across the Country)

### மனித வள குறியீடு பற்றி ...

மனித வளக் குறியீடு (Human Development Index (HDI)) 1990 ஆம் ஆண்டில் பாகிஸ்தானைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் மஹ்பப் உல் ஹக் (Mahbub ul Haq) மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் அமர்த்தியா சென் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. மனிதவளக் குறியீடு பின்வரும் மூன்று அம்சங்களைக் கருத்தில் கொண்டு கணக்கிடப்படுகிறது.

1. நீண்ட கால , ஆரோக்கியமான வாழ்வு (life expectancy)
2. சிறந்த கல்வி ( education )

3. நல்ல வாழ்க்கைத்தரம் : தனி நபர் வருமானம் (per capita income )

இந்த பட்டியலை ஐக்கிய நாடுகளவையின், ஐ.நா.வளர்ச்சி திட்டத்தின், மனிதவள அறிக்கை அலுவலகம் (United Nations Development Programme (UNDP)'s Human Development Report Office)) வெளியிடுகிறது.

**<u>மனிதவள மேம்பாட்டில் உலகளவில் இந்தியாவின் நிலை</u>**

ஐக்கிய நாடுகளவையின் வளர்ச்சி திட்டம் ( United Nations Development Program (UNDP) 2019 ஆம் ஆண்டிற்கான் மனித வள அறிக்கையை 'வருமானத்தையும் தாண்டி, சராசரியையும் தாண்டி, இன்றையும் தாண்டி : 21 ஆம் நூற்றாண்டில் மனித வள ஏற்றத்தாழ்வுகள்' (Beyond income, beyond averages, beyond today: Inequalities in human development in the 21st century ) என்ற தலைப்பில் 9 டிசம்பர் 2019 அன்று வெளியிட்டது. 189 நாடுகள் அடங்கிய இந்த மனித வள மேம்பாட்டுக் குறியீடு 2019 பட்டியலில் உலகளவில் இந்தியா 0.647 மதிப்பீட்டுடன் 129 இடத்தில் உள்ளது. 2018 ஆம் ஆண்டில் இந்தியா 130 வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த பட்டியலில் முதல் ஐந்து இடங்களை முறையே நார்வே, சுவிட்சர்லாந்து, அயர்லாந்து, ஜெர்மனி மற்றும் ஹாங்காங் நாடுகள் பெற்றுள்ளன.

இந்தியாவின் அண்டைநாடுகளில், இலங்கை 71, பூட்டான் – 134, வங்காளதேசம் – 135, பாகிஸ்தான் – 152 மற்றும் ஆப்கானிஸ்தான் – 170 ஆகிய இடங்களில் உள்ளன.

**<u>மனிதவள மேம்பாட்டுக் குறியீடு தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும்</u>**

- இந்தியாவில் அனைத்து மாநிலங்களுங்கான மனித வள மேம்பாட்டு குறியீடு கடைசியாக 2017 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டில் ஐ.நா. வளர்ச்சி திட்டம் (UNDP -United Nations Development Programme) வெளியிட்ட மனித வள மேம்பாட்டு குறியீட்டில், 189 நாடுகள் கொண்ட பட்டியலில் இந்தியா 0.64 குறியீடுகளுடன், 130 வது இடத்தைப் பெற்றிருந்தது.
- 2017 ஆம் ஆண்டைய மனித வளக் குறியீட்டு பட்டியலில் தமிழ்நாடு 0.708 குறியீடுகளுடன் இந்திய அளவில் 6 வது இடத்தைப் பெற்றுள்ளது. அவ்வாண்டில், தேசிய குறியீடு 0.64 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.
- 2017 ஆம் ஆண்டைய மனித வளக் குறீட்டு பட்டியலில் இந்திய மாநிலங்களின் குறியீடுகள் மற்றும் அவை பெற்றிருந்த இடங்களின் விவரம் பின்வரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| Rank | State | HDI 2017 |
|---|---|---|
| 1 | Kerala | 0.790 |

| Rank | State | HDI 2017 |
|---|---|---|
| UT1 | Chandigarh | 0.774 |
| 2 | Goa | 0.764 |
| UT2 | Lakshadweep | 0.749 |
| UT3 | Delhi | 0.744 |
| UT4 | Andaman and Nicobar Islands | 0.742 |
| UT5 | Puducherry | 0.739 |
| 3 | Punjab | 0.721 |
| 4 | Himachal Pradesh | 0.720 |
| 5 | Sikkim | 0.716 |
| 6 | Tamil Nadu | 0.708 |
| UT6 | Daman and Diu | 0.706 |
| 7 | Haryana | 0.704 |
| 8 | Mizoram | 0.697 |

| Rank | State | HDI 2017 |
|---|---|---|
| **9** | Maharashtra | 0.695 |
| **10** | Manipur | 0.695 |
| **11** | Jammu and Kashmir | 0.684 |
| **12** | Karnataka | 0.682 |
| **13** | Uttarakhand | 0.677 |
| **14** | Nagaland | 0.676 |
| **15** | Gujarat | 0.667 |
| **16** | Telangana | 0.664 |
| **UT7** | Dadra and Nagar Haveli | 0.661 |
| **17** | Arunachal Pradesh | 0.658 |
| **18** | Tripura | 0.655 |
| **19** | Meghalaya | 0.650 |
| **20** | Andhra Pradesh | 0.643 |

| Rank | State | HDI 2017 |
|---|---|---|
| 21 | West Bengal | 0.637 |
| 22 | Rajasthan | 0.621 |
| 23 | Assam | 0.605 |
| 24 | Chhattisgarh | 0.600 |
| 25 | Odisha | 0.597 |
| 26 | Madhya Pradesh | 0.594 |
| 27 | Jharkhand | 0.589 |
| 28 | Uttar Pradesh | 0.583 |
| 29 | Bihar | 0.566 |
| | **India**<br>**Source : Wikipedia** | **0.639** |

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களின் மனித வள குறியீடுகள்

| Rank | State | HDI 2017 |
|---|---|---|
| 1 | Kerala | 0.790 |

| | | |
|---|---|---|
| 6 | Tamil Nadu | 0.708 |
| 12 | Karnataka | 0.682 |
| 16 | Telangana | 0.664 |
| 20 | Andhra Pradesh | 0.643 |

**தமிழக அரசின் தொலைநோக்கு திட்டம் 2023**

- "தமிழக அரசின் தொலைநோக்கு திட்டம் 2023" ஐ முன்னாள் முதல்வர் செல்வி , ஜெயலலிதா அவர்கள் 22 மார்ச் 2012 ல் வெளியிட்டார்.
- தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023, 2011-12-ஆம் ஆண்டில் தொடங்கி, 2022-23-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தும் திட்டமாகும்.
- இந்த 11 ஆண்டுகளில் கணிக்கப்பட்டுள்ள மொத்த முதலீட்டு மதிப்பீடு, 15 லட்சம் கோடி ரூபாயாகும்.
- இந்தத் திட்ட அறிக்கையின்படி, சுமார் 60 சதவீத நிதி ஆதாரம் அரசின் மூலமாக பெறப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதி அரசின் நேரடி மூலதனச் செலவு மட்டுமல்லாமல் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.
- அடுத்த 11 ஆண்டுகளில், மாநில உற்பத்தி வளர்ச்சி விகிதம் 11 சதவீதமாக இருக்கும். இது, எதிர்பார்க்கப்படும் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் 20 சதவீதம் அதிகம்.
- அடுத்த 11 ஆண்டுகளில் மக்கள் தொகை 15 சதவீதம் அதிகரித்திருக்கும். இந்த காலகட்டத்தில், தனிநபர் வருமானம் ஆறு மடங்கு உயர்ந்து இருக்கும். அடுத்த 10 ஆண்டுகளில், தமிழகத்தின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ஆறு மடங்கு உயர்ந்து, நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயரும். இதன் மூலம் வறுமை ஒழிக்கப்பட்ட மாநிலமாகத் தமிழகம் மாறும்.
- 2023ம் ஆண்டு தமிழகத்தில் உள்ள அனைத்து பொதுமக்களும், 100 சதவீத சுகாதார வசதி பெற்றவர்களாக இருப்பர். திறந்தவெளிக் கழிவறை இல்லாத நிலை உருவாக்கப்படும்.
- குடிசைகள் இல்லாத, தமிழகத்தை உருவாக்க 25 லட்சம்வீடுகள் ஏழை மக்களுக்குக் கட்டித் தரப்படும்.
- அடுத்த 10 ஆண்டுகளில், 20 ஆயிரம் மெகாவாட் கூடுதலாக மின்சார ம் உற்பத்தி செய்யப்படும்.
- தமிழக அரசின், "தொலைநோக்குத் திட்டம் -2023' பத்து நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

  * 2023ம் ஆண்டில், இந்தியாவிலேயே பொருளாதார ரீதியாக வளம் பெற்ற மாநிலமாக விளங்கும். தற்போதுள்ள தனிநபர் வருமானம் ஆறு மடங்காக உயர்ந்து, 11 ஆண்டுகளில், உலகளவில் உயர்நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு இணையாக இருக்கும்.

* தமிழகம் உள்ளடக்கிய வளர்ச்சி விகிதத்தை வெளிப்படுத்தும். வறுமை இல்லாத மாநிலமாகவும், வேலைவாய்ப்பு வேண்டுவோருக்கு லாபமான வாய்ப்புகள் அளிக்கப்படும்.

* சமூக வளர்ச்சியில், இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழகம் திகழும். இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே, அதிக மனிதவள குறியீடு கொண்ட மாநிலமாக திகழும்.

* வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு, எரிசக்தி, போக்குவரத்து, பாசனம், இணைப்புகள், சுகாதாரம் மற்றும் கல்வியில் இந்தியாவிலேயே சிறந்த உள்கட்டமைப்பு சேவைகளை தமிழகம் வழங்கும்.

* ஆசியாவிலேயே முதலீடுகளுக்கு விரும்பும் முதல் மூன்று இடங்களில் தமிழகம் இடம்பெறும். குறிப்பாக, இந்தியாவிலேயே மிகவும் விருப்பப்படும் மாநிலமாக இருக்கும்.

* இந்தியாவிலேயே, புதுமையை புகுத்துதலுக்கான மையம் மற்றும் அறிவுசார் தலைநகரமாக தமிழகம் கருதப்படும்.

* அனைத்து குடிமகன்கள் மற்றும் வர்த்தகத்துக்கு, அமைதி, பாதுகாப்பு மற்றும் வளத்தை தமிழகம் உறுதி செய்யும். சுதந்திரமான போக்குவரத்து, கருத்துகள் பரிமாற்றம், வர்த்தகம் ஆகியவற்றில் இந்தியாவின் மற்ற மாநிலங்கள் மற்றும் உலகத்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்படும்.

* தமிழகம் தனது சுற்றுச்சூழல் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்து, கவனம் செலுத்தும்.

* இயற்கை சீற்றங்கள், பொருளாதார வீழ்ச்சிகள் மற்றும் மனிதனால் ஏற்படும் இதர அம்சங்களால் ஏற்படும் நிலையற்ற தன்மையில் இருந்து மாநிலத்தையும் மக்களையும் பாதுகாக்க தமிழகம் நடவடிக்கை எடுக்கும்.

* நிர்வாகத்தில் வெளிப்படையான மற்றும் பதிலளிக்கக் கூடிய கலாசாரத்தை தமிழகம் பின்பற்றும். அனைவருக்கும் பாதுகாப்பு, சம வாய்ப்பு உறுதி செய்யப்படும்.

# 2. தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு (Impact of Social Reform movements in the Socio - Economic Development of Tamil Nadu.)

| சமூக மறுமலர்ச்சி இயக்கம் | தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு |
|---|---|
| **சென்னை சுதேசி சங்கம் :**<br>❖ 1852 ஆம் ஆண்டு ஹார்லி, இலஷ்மி நரசுச் செட்டி மற்றும் சீனிவாசப் பிள்ளை ஆகியோரால் நிறுவப்பட்டது.<br>❖ 1884 ஆம் ஆண்டு சென்னை சுதேசி சங்கம், சென்னை மகாஜனசபையுடன் இணைக்கப்பட்டது. | ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கைகளை விமர்சனம் செய்தது. சுதந்திரப் போராட்டத்தில் பங்களித்தது. |
| **சென்னை மகாஜனசபை :**<br>❖ 1884 ஆம் ஆண்டில் எஸ்.இராமசாமி முதலியார் , பி. அனந்தாசாருலு மற்றும் இரங்கய்யா நாயுடு ஆகியோரால் நிறுவப்பட்டது.<br>❖ சென்னை மகாஜன சபையின் முதல் தலைவராக பி.இரங்கையா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார்.<br>❖ 1896 அக்டோபர் 24 ம் நாள் மகாத்மா காந்தி சென்னை மகாஜன சபையில் உரையாற்றினார்.<br>❖ இச்சபையில் பொன்விழா கொண்டாட்டத்தில் ஜவகர்லால் நேரு கலந்துகொண்டார். | ❖ சென்னை மகாஜன சபை சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய பங்காற்றியது. இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் எழுப்பியது.<br>❖ 1920 ம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டது.<br>❖ 1930 ஆம் ஆண்டு உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தை சென்னையில் ஜார்ஜ் டவுண் மற்றும் கடற்கரைப் பகுதியில் தலைமையேற்று நடத்தியது. அப்போராட்டத்தின் போது, இவ்வமைப்பின் உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.<br>❖ இதனை விசாரிக்க மூன்றுபேர் கொண்ட குழு நீதிபதி டி.ஆர்.இராமச்சந்திர அய்யர் தலைமையில் அமைக்கப்பட்டது.<br>❖ ஆங்கில அரசு காங்கிரஸ் கட்சிக்குத் தடை விதித்தபோது, சென்னை மகாஜன சபை |

| | |
|---|---|
| | பல்வேறு பொருட்காட்சிகளை நடத்தி, குறிப்பாக, அனைத்திந்திய காதி (கைத்தறி) கண்காட்சி மற்றும் சுதேசி பொருட்கள் கண்காட்சிகள் மூலம் மக்கள் மனதில் தேசியப் பற்றை வளர்த்தது. |
| **"மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம்"** எனும் அமைப்பு , 1909 ல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக உருவாக்கப்பட்டது. | |
| **"மதராஸ் ஐக்கிய கழகம்"** எனும் அமைப்பு 1912 ஆம் ஆண்டு டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவரால் உருவாக்கப்பட்டது. இது பின்னாளில் "மதராஸ் திராவிடர் சங்கம்" என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது.<br><br>பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது, அவர்களைக் கற்கவைப்பது ஆகியவற்றோடு, அவர்களது, குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது.<br><br>தங்கும் விடுதி வசதியில்லாத பிராமணரல்லாத மாணவர்களுக்கு உதவி செய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் **"திராவிடர் இல்லம்"** என்ற தங்கும் விடுதியை நடேசனார் 1916 ஆம் ஆண்டு தொடங்கினார். | |
| **நீதிக்கட்சி :**<br><br>❖ நீதிக்கட்சி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக பிராமணர்கள் அல்லாதவர்களால் தொடங்கப்பட்ட | ❖ நீதிக்கட்சி தொடக்க காலத்தில் கோரிக்கை மனுக்கள் மூலம் பிராமணர் அல்லாதவர்களுக்கு நிர்வாகத்தில் அதிக பிரதிநிதித்துவம் கோரியது.<br><br>❖ நீதிக்கட்சியின் ஆட்சி காலம், சாதி அடிப்படையில், கல்வி மற்றும் வேலை |

சமூக இயக்கமாகும்.

- நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட "தென்னிந்திய நல உரிமைக்கழகம்" 1916 ஆம் ஆண்டு டாக்டர் நடேசனார், டி.எம்.நாயர் மற்றும் தியாகராயச் செட்டி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது.
- 1916 டிசம்பரில், "பிராமணரல்லாதோர் அறிக்கை" வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துகளை தெளிவுபடக் கூறியது. மேலும், சென்னை மகாணத்தின் பிராமணரல்லாதோர்களின் பொதுவான நிலையை அளவீடு செய்தது.
- இக்கட்சி தமிழில் 'திராவிடன்', தெலுங்கில் ' ஆந்திர பிரகாசிகா' மற்றும் ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' என்ற பத்திரிக்கைகளை அச்சிட்டு வெளியிட்டது.
- இதன் ஆங்கில பத்திரிக்கையான 'ஜஸ்டிஸ்' பெயரினால் 'நீதிக்கட்சி' / 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என அழைக்கப்பட்டது.
- 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு சுப்பராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது.
- 1923 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று திரு.டி.எம்.சிவஞானம் பிள்ளை தலைமையில் ஆட்சி அமைத்தது.
- 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற வாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் மதச் சீர்திருத்தங்களில் சிறந்த பங்களிப்பை வழங்கியது.
- நீதிக்கட்சி ஆட்சி, பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தங்கள் மூலம் கிராமங்கள் முன்னேற்றம் என்ற புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தியது.
- நீதிக்கட்சி அனைத்து சமூகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம் பெற வழிசெய்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தியது.
- சமூக அரசாணை 1921 (செப்டம்பர் 26) மற்றும் 1922 (ஆகஸ்டு 15) மூலம் , பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.
- 1924 ஆம் ஆண்டு, அரசு ஊழியர்களைத் தேர்வு செய்வதற்காக, பணியாளர் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தியது. இது, 1929 ஆம் ஆண்டு பொதுப் பணி தேர்வாணையமாக மாறியது.
- உயர்க் கல்வி நிலையங்களை நெறிப்படுத்துவதற்காகவும், அனைத்து சமூகத்தினரும் பயன்பெறவும் கல்லூரிக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.
- 1925 ஆம் ஆண்டு ஆந்திரா பல்கலைக்கழகம் மற்றும் 1929 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக்கழகங்கள் தொடங்கப்பட்டன.
- கோவில் வரவு - செலவுக் கணக்குகளை முறைப்படுத்த, கோவில் குழுக்கள் அமைக்கப்பட்டன. 1926 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் ஒரு

தேர்தலில் வெற்றி பெற்று ப.முனிசாமி நாயுடு தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆனால் 1932 ல் இவரை பதவி நீக்கிவிட்டு பொப்பிலி இராஜா பதவியேற்றார்.

- 1937 ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வியடைந்து மீண்டும் எழவேயில்லை.
- 1944 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் 'நீதிக்கட்சியின்' பெயரை 'திராவிடர் கழகம்' என ஒரு சமுதாய இயக்கமாக மாற்றினார்.

குறிப்பிட்ட உயர்சாதியினர் கோவில்களில் ஆதிக்கம் செலுத்தும் முறையை ஒழித்து, எந்த ஒரு தனி நபரும் சாதி வேறுபாடின்றி கோவில்களில் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும், கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

- 1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இதன் மூலம், முத்துலட்சுமி அம்மையார் 1926 ல், இந்தியாவின் முதல் இந்திய பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.
- தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
- பெண்கள் வன்கொடுமைத் தடைச் சட்டம் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன.
- ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- "இலவச மதிய உணவுத் திட்டம்" சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் தியாகராயச் செட்டியாரால் அறிமுகப்படுத்தப்பட்டு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.
- ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.
- நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென இடத்தை உருவாக்கியது.
- தமிழகத்தில் சமூகநீதி மரபுத் தொடர்ச்சியானது, நீதிக்கட்சியின்

| | |
|---|---|
| | ஆட்சியில் வேர்கொண்டதாகும்.<br>❖ சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக்கட்சி அகற்றியது.<br>❖ பொதுக் கிணறுகளையும், நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளை நீதிக்கட்சி தகர்த்தது.<br>❖ ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது.<br>❖ ஒடுக்கப்ப்பட்ட பிரிவினைச் சேர்ந்த மாணவர்களுக்கென 19263 ல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன.<br>❖ இந்தியாவிலேயே முதல் முறையாக அரசுப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கான, 'சென்னை தேர்வுக் குழு' 1929 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. |
| **சுயமரியாதை இயக்கம் :**<br>❖ தமிழ்நாட்டின் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதியான ஈ.வே.ரா. பெரியாரால் சுயமரியாதை இயக்கம் 1925 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.<br>❖ சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வமான செய்தித்தாள் "குடி அரசு" ஆகும்.<br>❖ முதலாவது சுயமரியாதை மாநாடு 1929 ல் செங்கல்பட்டில் நடைபெற்றது. அந்த மாநாட்டில், பெரியார் தனது பெயருடன் இருந்த சாதிப் பெயரைத் துறப்பதாக | ❖ சுயமரியாதை இயக்கம், மதம் , ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கத்தை கடுமையாக எதிர்த்தது.<br>❖ மூடநம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.<br>❖ பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம் மற்றும் குழந்தை திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றிற்காக குரலெழுப்பியது.<br>❖ ஏழ்மையே சமுதாயத்தில் நிலவும் தீமைகள் அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்த பெரியார், 14 அம்ச சோஷலிச அறிக்கையினை |

| | |
|---|---|
| அறிவித்தார். | வெளியிட்டார்.<br>❖ பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுபடுத்தவும், மக்களின் ஆரோக்கிய வாழ்விற்காகவும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தை அறிவுறுத்தினார்.<br>❖ தமிழ் எழுத்து சீர்திருத்தத்தில் ஈ.வெ.ரா.பெரியார் முக்கிய பங்காற்றினார்.<br>❖ பெரியாரின் ஆசைகளை, கொள்கைகளை அவர் வழி வந்த தி.மு.க. மற்றும் அ.தி.மு.க கட்சிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் நிறைவேற்றின.<br>❖ சுயமரியாதை இயக்கத்தின் மூலம், அர்த்தமற்ற கொள்கைகள், மூட நம்பிக்கைகள் மற்றும் நம்பகத்தன்மையற்ற புராணக் கதைகளை கண்டித்து பெரியார் பொது மேடைகளில் சாடினார் சமூகத்தின் ஒதுக்கப்பட மக்கள் பிரிவினரின் மீது அக்கறைக் கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையும், அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது.<br>❖ சடங்குகளும், சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற , பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை கட்டமைக்க இவ்வியக்கம் குரல் கொடுத்தது.<br>❖ பகுத்தறிவும், சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை என இவ்வியக்கம் பிரகடனம் செய்ததுடன் சுயாட்சியைக் காட்டிலும் இவையே முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்தி பிடித்தது.<br>❖ சுயமரியாதை இயக்கம், பெண்களின் |

| | |
|---|---|
| | தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் எனும் கருத்தைக் கொண்டிருந்ததுடன், அனைவருக்கும் கட்டாயத் தொடக்க கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது.<br>❖ இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூட நம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளைக் கோரியது.<br>❖ சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது.<br>❖ சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது "இனம்" ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.<br>❖ சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல், இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இருப்பினும், முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கவழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்தார். |



www.portalacademy.in

| **இந்தி எதிர்ப்பு போராட்டம் (1937-1939)**<br><br>1937 ஆம் ஆண்டில் ராஜாஜி தலைமையில் ஆட்சி அமைத்த காங்கிரஸ் அரசு பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற 'இந்தி எதிர்ப்பு இயக்கத்தை' நடத்தினார். 21 ஏப்ரல் 1938 அன்று இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு வெளியிட்ட அரசாணையின் படி, சென்னை மகாணத்திலுள்ள 125 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. இது இந்தி எதிர்ப்பு போராட்டத்தை மேலும் தீவிரமாக்கியதோடு, தமிழ்நாட்டு அரசியலில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த போராட்டத்தை ஈ.வெ.ரா. பெரியார் தலைமையில் சுயமரியாதை இயக்கத்தினரும், ஏ.டி.பன்னீர்செல்வத்தின் தலைமையிலான நீதிக்கட்சியினரும் எதிர்த்தனர். இவர்களுக்கு மறைமலை அடிகள், சோமசுந்தரபாரதி, கே.அப்பாத்துரை, முடியரசன், இலக்குவனார் ஆகியோர் ஆதரவளித்தனர். 1937 டிசம்பர் மாதம் வேலூரில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகாசமாஜ மாநாட்டில், பள்ளிகளில் இந்தி மொழி திணிப்பிற்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இப் போராட்டத்திற்காக மூவாலூர் ராமாமிர்தம், நாராயணி, வ.ப.தாமரைக்கனி, முன்னகர் அழகியார், டாக்டர்.தர்மாம்பாள், மலர் முகத்தம்மையார், பட்டம்மாள், சீத்தம்மாள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 13 நவம்பர் 1938 அன்று நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டிலும் எதிர்ப்பு | |
|---|---|

www.portalacademy.in

| | |
|---|---|
| தெரிவிக்கப்பட்டது. காஞ்சி இராஜகோபாலாச்சாரி போன்ற பிராமணர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். இந்த போராட்டத்தின் போது, தாளமுத்து, நடராசன் ஆகியோர் உயிரிழந்தனர். பெரியாருக்கு ரூ.1000 அபராதமும், ஓராண்டு கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. அண்ணாதுரை நான்கு மாதங்கள் சிறை தண்டனைப் பெற்றார்.<br><br>21 பிப்ரவரி 1940 அன்று ஆளுநர் எர்ஸ்கின் இந்தி மொழி கட்டாயம் என அறிவித்த அரசாணையை விலக்கி கொண்டார். அதன்படி, இந்தி விருப்பப் பாடமாக அறிவிக்கப்பட்டது. | |

**இராமலிங்க சுவாமிகள்:**

- வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகளார் சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் எனும் கிராமத்தில் 1823 ஆம் ஆண்டு பிறந்தார்.
- 1856 ல் "சமரச வேத சன்மார்க்க சங்கம்" எனும் அமைப்பை நிறுவினார். பின்னர், அது சமரச சுத்த சன்மார்க்க சத்ய சங்கம் என 1865 ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1867 ல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான சத்திய தர்ம சாலை ஒன்றை வடலூரில் நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்கத் தொடங்கினார்.
- தேவார, திருவாசகப் பாடல்களால் ஈர்க்கப்பட்ட அவர் மனம் உருகும் பாடல்களைச் சொந்தமாக இயற்றினார். இராமலிங்க அடிகளின் பாடல்கள் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தன. அவர் மதவெறியையும், பகுத்தறிவற்ற தன்மையையும் கண்டனம் செய்தார்.
- முக்கியமாக 1860 களில் பஞ்சங்களும் கொள்ளை நோயும் ஏற்பட்ட போது சாதிமத வேறுபாடின்றி உணவளித்தார். தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்காக சத்ய ஞான சபை எனும் அமைப்பை நிறுவினார். இதனால் நிறுவனபடுத்தப்பட்டிருந்த சைவ அமைப்புகளோரு அவர் மோதல் துவங்கியது.
- இவருடைய சீடர்கள் அவருடைய பாடல்களைத் திரட்டித் 'திருவருட்பா' எனும் பெயரில் 1867இல் வெளியிட்டபோது மோதல் உச்சத்தை எட்டியது. இலங்கையைச் சேர்ந்த வைதீக சைவர்கள் சீர்திருத்தவாதி ஆறுமுக நாவலரின் தலைமையில் இதைத் தெய்வநிந்தனை எனக் கூறி இவருக்கு எதிராக கட்டுரை எழுதும் போரில் ஈருபட்டனர். ஆனால் இறுதியில் இராமலிங்க அடிகளின் பணி அங்கீகரிக்கப்பட்டது.

**வைகுண்ட சுவாமிகள் :**

- வைகுண்ட சுவாமிகள் 1809 ஆம் ஆண்டில் கன்னியாகுமரிக்கு அருகில் சாமித்தோப்பு என்ற இடத்தில் பிறந்தார்.
- இவர் ஆங்கிலேய ஆட்சியையும் , திருவிதாங்கூர் அரசரின் ஆட்சியையும் முறையே 'வெள்ளை பிசாசுகளின் ஆட்சி', 'கறுப்பு பிசாசுகளின் ஆட்சி' என விமர்சித்தார்.
- அவருடைய சமயவழிபாட்டு முறை ' அய்யாவழி' என்றறியப்பட்டது.
- சாதி பேதத்திற்கு எதிராக கடுமையான கருத்துகளைத் தெரிவித்தார். அனைவரும் சமம் எனும் கருத்தினைப் போதித்தார்.
- வழிபாட்டின் போது பின்பற்றும் தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்கலைக் கைவிடும் படி மக்களைக் கேட்டுக் கொண்டார்.
- தன்னை பின்பற்றுவோரை எதிர்ப்பின் அடையாளமாக தலைப்பாகை அணியும்படி வலியுறுத்தினார். அக்காலத்தில் தலைப்பாகை அணியும் உரிமை உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
- தென் திருவிதாக்கூர் என்று அழைக்கப்பட்ட தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும்பகுதியில், மக்கள் எவற்றை அணியலாம், எவற்றை அணியக் கூடாது என்பது உட்பட பல கட்டுபாடுகளுக்கு உட்பட்டிருந்தனர். சமூகத்தின் சில குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தலைப்பாகை அணியக் கூடாது என்றிருந்த நிலையில் வைகுண்டர் எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் அம்மக்களைத் தலைப்பாகை அணியும் படி கூறினார். இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திர உணர்வை வழங்கியதோடு, அவர்களுக்கு சுயமரியாதை சார்ந்த ஊக்கத்தையும் வழங்கியது.
- பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதற்காக வைகுண்டசாமிகள் "சமத்துவ சமாஜம்" எனும் அமைப்பை நிறுவினார். அந்நோக்கத்தில் வெற்றி பெறுவதற்காக அனைத்து சாதி மக்களும் சேர்ந்துண்ணும் "சமபந்தி விருந்துகளை" நடத்தினார்.
- வைகுண்ட சாமிகளின் அறிவுரைகள் நீதிக்குபுறம்பான சமூகப் பழக்கவழக்கங்களிலிருந்தும் மூட நம்பிக்கைகளிலிருந்தும் மக்களை விடுவித்தது.
- அவருடைய கருத்துகள் "அகிலத்திரட்டு" எனும் நூலாகத் திரட்டப்பட்டுள்ளது.
- "நிழல் தாங்கல்" என்றழைக்கப்பட்ட இவர் உருவாக்கிய உணவுக் கூடங்களில் சாதிக்கட்டுப்பாடுகள் உடைக்கப்பட்டன.
- 1851 ல் வைகுண்ட சாமிகள் காலமானார்.

**அயோத்தி தாசர் :**

- பண்டிதர் அயோத்தி தாசர் 1845 ஆம் ஆண்டு சென்னையில் பிறந்தார்.
- தீவிர தமிழ் அறிஞரும், சித்த மருத்துவரும், பத்திரிக்கையாளரும், சமூக சீர்திருத்தவாதியுமான இவர், தமிழ் , ஆங்கிலம், சமஸ்கிருதம் மற்றும் பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்.
- உயர் சாதியினர் மட்டுமே ஆதிக்கம் செலுத்திய அச்சிட்டு வெளியிடும் இதழியலை தனது கருவியாகக் கொண்டு சமூக நீதிக்காக பாடுபட்டார்.
- சாதிய ஆதிக்கத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பெறப் பாடுபட்டார்.
- கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிக்கூடங்கள் உருவாக உந்துசக்தியாகத் திகழ்ந்தார்.
- ஒடுக்கப்பட்டோரின் கோவில் நுழைவிற்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் "அத்வைதானந்தா சபா" எனும் அமைப்பை நிறுவினார்.
- 1882 ஆம் ஆண்டு அயோத்தி தாசரும், ஜான் திரவியம் என்பவரும் இணைந்து, "திராவிடர்க் கழகம்" எனும் அமைப்பை நிறுவினர்.
- 1885 ஆம் ஆண்டில் "திராவிட பாண்டியன்" எனும் இதழையும் தொடங்கினார்.
- 1891 ல் "திராவிட மகாஜனசபை" என்ற அமைப்பை நிறுவினார்.
- 1908 முதல் ஒரு பைசாத் தமிழன் (பின்னர் தமிழன்) என்ற பெயரில் வாராந்திரப் பத்திரிகை ஒன்றை தொடங்கி தான் இயற்கை எய்தும் காலம் வரை நடத்தினார்.
- பிரம்மஞான சபையை நிறுவியவர்களில் ஒருவரான கர்னல் HS ஆல்காட் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவாக 1898 ல் இலங்கை சென்ற அவர் புத்த மதத்தைத் தழுவினார். அதே ஆண்டில் பௌத்த மதத்தின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தைக் கட்டமைப்பதற்காக "சாக்கிய பௌத்த சங்கம்" எனும் அமைப்பை சென்னையில் நிறுவினார்.
- ஒடுக்கப்பட்டவர்களை "சாதி பேதமற்ற திராவிடர்" என அழைத்த அவர் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் போது அவர்களைச் சாதியற்ற திராவிடர்கள் எனப் பதிவு செய்யுமாறு வற்புறுத்தினார்.
- அயோத்திதாச பண்டிதர் 1867இல் சீவகசிந்தாமணி, 1858இல் மணிமேகலை ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்த பின்னணியில் மிகமுக்கியமான ஆளுமை அயோத்திதாச பண்டிதராவார்.
- ஆதிதிராவிடர்களே உண்மையான பௌத்தர்கள் என்றும், வேத பிராமணியத்தை

எதிர்த்ததன் விளைவாக அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர் என்றும் வாதிட்டார். கோலார் தங்கவயலில் பணியாற்றிய தொழிலாளர்கள் பலர் இவரது கொள்கையைப் பின்பற்றினர்.

**பெரியார் ஈ.வெ.ராமசாமி :**

- 1879 ஆம் ஆண்டில் ஈரோட்டில் பிறந்தார்.
- 1918 - 1919 வரையில் ஈரோட்டின் நகரசபைத் தலைவராக பதவி வகித்தார்.
- 1917 க்கு பின்னர் நீதிக்கட்சியின் எழுசிக்குப் பின்னர் சி.ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி.வரதராஜீலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர்.
- ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவாக தான் வகித்து வந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் பெரியார் இராஜினாமா செய்தார்.
- காதி இயக்கத்திற்கு ஆதரவாக தமிழக வீதிகளில் கதர் விற்பனை செய்தார்.
- மது விலக்கிற்கு ஆதரவாக தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார்.
- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.
- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பதவி வகித்த போது, ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார்.
- பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதற்காக குடியரசு (1925) , ரிவோல்ட்(1928), புரட்சி(1933), பகுத்தறிவு(1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாழ்கள் மற்றும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார்.
- பி.ஆர்.அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Anihilation of caste) எனும் நூலை , அந்நூல் வெளிவந்தவுடன் 1936 ல் தமிழில் பதிப்பித்தார்.
- 1937 ஆம் ஆண்டு ராஜாஜி அரசு இந்தியை பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்து மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை ஈ.வே.ரா. பெரியார் நடத்தினார்.
- சுதந்திர இந்தியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றும் சென்னை மகாணத்தின் முதலமைச்சராக ராஜாஜி (1952-1954) இருந்த காலத்தில் கொண்டு வந்த தொழில்கல்வி பயிற்சி (குலக் கல்வி) திட்டத்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார்.
- கோயில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை பெரியார் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆக அனுமதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

- சடங்குகளற்ற சாதி மறுப்பு சுயமரியாதை திருமணங்களை பரிந்துரைத்தார்.
- குழந்தைத் திருமணத்தையும், தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.
- பெண்களைப் பொருளாகக் கருதி "திருமணம் செய்து கொடுப்பது" என்ற வார்த்தைகளை மறுத்த அவர், அவைகளுக்கு மாற்றாக திருக்குறள் வழியில் "வாழ்க்கைத் துணை" என்ற வார்த்தையைப் பயன்படுத்த அறிவுறுத்தினார்.
- "பெண் ஏன் அடிமையானாள்" என்ற பெயரில் பெண்ணியம் குறித்து சிறந்ததொரு நூலைப் படைத்தார்.
- பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்கு சமூகத்தில் நன்மதிப்பையும் , பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.

  **கூ.தக.** பெரியாரின் கனவை நனவாக்கும் வகையில் தமிழக அரசு 1989 ல் தமிழ் நாடு இந்து வாரிசுரிமைத் திருத்த சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் , முன்னோர்களின் சொத்துகளை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்கு சம உரிமை உண்டென்பதை உறுதிப் படுத்தியது.
- குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர், தாய்மை என்பது பெண்களுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.
- இவருடைய சமுதாய பங்களிப்பைப் பாராட்டி யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் 1973 ஆம் ஆண்டு பெரியாரைப் ' புத்துலக நோக்காளர்' தென்னிந்தியாவின் சாக்ரடிஸ் எனப் பாராட்டி விருது வழங்கியது.
- தன்னுடைய 94 வது வயதில் 1973 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

## 3. அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் (Political parties and Welfare schemes for various sections of people)

| **அரசியல் கட்சியின் பெயர்** | **துவங்கியவர்** | **துவங்கப்பட்ட ஆண்டு** |
|---|---|---|
| நீதிக்கட்சி | டாக்டர் டி. எம். நாயர் மற்றும் தியாகராய செட்டி | 1916 |
| திராவிடர் கழகம் | ஈ.வெ.ரா.பெரியார் | 1944 |
| திராவிட முன்னேற்றக் கழகம் | CN அண்ணாதுரை | 1949 |
| அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | எம். ஜி. இராமச்சந்திரன் | 1972 |
| இந்து முன்னணி | இராமகோபாலன் | 1980 |
| விடுதலைச் சிறுத்தைகள் கட்சி | மலைச்சாமி | 1982 |
| பாட்டாளி மக்கள் கட்சி | மருத்துவர் ச. இராமதாசு | 1989 |
| மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் | வை. கோபால்சாமி | 1994 |
| தமிழ் மாநில காங்கிரஸ் | ஜி. கே .மூப்பனார் | 29 மார்ச் 1996 |
| புதிய நீதிக் கட்சி | ஏ.சி. சண்முகம் | 2001 |
| புதிய தமிழகம் கட்சி | க. கிருஷ்ணசாமி | 1997 |
| தேசிய முற்போக்கு திராவிட கழகம் | விஜயகாந்த் | 2005 |
| அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி | சரத்குமார் | 2007 |
| மனிதநேய மக்கள் கட்சி | ஜவாஹிருல்லா | 7-2 -2009 |
| கொங்குநாடு முன்னேற்றக் கழகம் | பெஸ்டு S. | 15-2-2009 |

| | | |
|---|---|---|
| | ராமசாமி | |
| நாம் தமிழர் கட்சி | சீமான் | 2010 |
| தமிழக வாழ்வுரிமைக் கட்சி | பண்ருட்டி தி. வேல்முருகன் | 2012 |
| கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி | E. R. ஈஸ்வரன் | 2013 |
| காந்திய மக்கள் கட்சி | தமிழருவி மணியன் | 2014 |
| மக்கள் நீதி மய்யம் | கமல் ஹாசன் | 21-2-2018 |
| அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் | டி. டி. வி. தினகரன் | 15-3- 2018 |

**தமிழக முதலமைச்சர்கள் - சுதந்திரத்திற்கு முன்**

| வ.எண் | பெயர் | தொடக்கம் | முடிவு | முறை | கட்சி |
|---|---|---|---|---|---|
| 1 | ஏ. சுப்பராயலு | 17 டிசம்பர், 1920 | 11 ஜூலை, 1921 | 1 | நீதிக்கட்சி |
| 2 | பனகல் ராஜா | 11 ஜூலை, 1921 | 3 டிசம்பர், 1926 | 1 | நீதிக்கட்சி |
| 3 | பி. சுப்பராயன் | 4 டிசம்பர், 1926 | 27 அக்டோபர், 1930 | 1 | சுயேச்சை |
| 4 | பி. முனுசுவாமி நாயுடு | 27 அக்டோபர், 1930 | 4 நவம்பர், 1932 | 1 | நீதிக்கட்சி |
| 5 | ராமகிருஷ்ண ரங்காராவ் | 5 நவம்பர், 1932 | 4 ஏப்ரல், 1936 | 1 | நீதிக்கட்சி |
| 6 | பி. டி. இராஜன் | 4 ஏப்ரல், 1936 | 24 ஆகஸ்டு, 1936 | 1 | நீதிக்கட்சி |
| 7 | ராமகிருஷ்ண ரங்காராவ் | 24 ஆகஸ்டு, 1936 | 1 ஏப்ரல், 1937 | 2 | நீதிக்கட்சி |
| 8 | கூர்மா வெங்கட ரெட்டி நாயுடு | 1 ஏப்ரல், 1937 | 14 ஜூலை, 1937 | 1 | நீதிக்கட்சி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | சி. இராஜகோபாலாச்சாரி | 14 ஜூலை, 1937 | 29 அக்டோபர், 1939 | 1 | காங்கிரஸ் |
| 10 | த. பிரகாசம் | 30 ஏப்ரல், 1946 | 23 மார்ச்சு, 1947 | 1 | காங்கிரஸ் |
| 11 | ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் | 23 மார்ச்சு, 1947 | 6 ஏப்ரல், 1949 | 1 | காங்கிரஸ் |
| 12 | பூ. ச. குமாரசுவாமி ராஜா | 6 ஏப்ரல், 1949 | 26 ஜனவரி, 1950 | 1 | காங்கிரஸ் |

**தமிழக முதலமைச்சர்கள் - சுதந்திரத்திற்கு பின்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பி. எஸ். குமாரசுவாமிராஜா | 26 ஜனவரி, 1950 | 9 ஏப்ரல், 1952 | 1 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 2 | சி. இராஜகோபாலாச்சாரி | 10 ஏப்ரல், 1952 | 13 ஏப்ரல், 1954 | 2 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 3 | கே. காமராஜ் | 13 ஏப்ரல், 1954 | 31 மார்ச்சு, 1957 | 1 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| | | 13 ஏப்ரல், 1957 | 1 மார்ச்சு, 1962 | 2 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| | | 15 மார்ச்சு, 1962 | 2 அக்டோபர், 1963 | 3 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 4 | எம். பக்தவத்சலம் | 2 அக்டோபர், 1963 | 6 மார்ச்சு, 1967 | 1 | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 5 | சி. என். அண்ணாத்துரை | 6 மார்ச்சு, 1967 | ஆகஸ்டு, 1968 | 1 | தி.மு.க. |
| | சி. என். அண்ணாத்துரை | ஆகஸ்டு, 1968 | 3 பிப்ரவரி, 1969 | 1 | திமுக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | இரா. நெடுஞ்செழியன் (தற்காலிக முதல்வர்) | 3 பிப்ரவரி, 1969 | 10 பிப்ரவரி, 1969 | 1 | திமுக |
| 8 | மு. கருணாநிதி | 10 பிப்ரவரி, 1969 | 4 ஜனவரி, 1971 | 1 | திமுக |
| | மு. கருணாநிதி | 15 மார்ச்சு, 1971 | 31 ஜனவரி, 1976 | 2 | திமுக |
| | குடியரசுத் தலைவராட்சி | 31 ஜனவரி, 1976 | 30 ஜூன், 1977 | | |
| 10 | எம். ஜி. இராமச்சந்திரன் | 30 ஜூன், 1977 | 17 பிப்ரவரி, 1980 | 1 | அஇஅதிமுக |
| | குடியரசுத் தலைவர் ஆட்சி | 17 பிப்ரவரி, 1980 | 9 ஜூன், 1980 | | பொருத்தமற்றது |
| 11 | எம். ஜி. இராமச்சந்திரன் | 9 ஜூன், 1980 | 15 நவம்பர், 1984 | 2 | அஇஅதிமுக |
| 12 | எம். ஜி. இராமச்சந்திரன் | 10 பிப்ரவரி, 1985 | 24 டிசம்பர், 1987 | 3 | அஇஅதிமுக |
| 13 | இரா. நெடுஞ்செழியன் (தற்காலிக முதல்வர்) | 24 டிசம்பர், 1987 | 7 ஜனவரி, 1988 | 1 | அஇஅதிமுக |
| 14 | ஜானகி இராமச்சந்திரன் | 7 ஜனவரி, 1988 | 30 ஜனவரி, 1988 | 1 | அஇஅதிமுக |
| 15 | குடியரசுத் தலைவர் ஆட்சி | 30 ஜனவரி, 1988 | 27 ஜனவரி, 1989 | | |
| 16 | மு. கருணாநிதி | 27 ஜனவரி, 1989 | 30 ஜனவரி, 1991 | 3 | திமுக |
| | குடியரசுத் தலைவர் ஆட்சி | 30 ஜனவரி, 1991 | 24 ஜூன், 1991 | | பொருத்தமற்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | ஜெ. ஜெயலலிதா | 24 ஜூன், 1991 | 12 மே, 1996 | 1 | அஇஅதிமுக |
| 18 | மு. கருணாநிதி | 13 மே, 1996 | 13 மே, 2001 | 4 | திமுக |
| 19 | ஜெ. ஜெயலலிதா | 14 மே, 2001 | 21 செப்டம்பர், 2001 | 2 | அஇஅதிமுக |
| 20 | ஓ. பன்னீர்செல்வம் | 21 செப்டம்பர், 2001 | 1 மார்ச்சு, 2002 | 1 | அஇஅதிமுக |
| 21 | ஜெ. ஜெயலலிதா | 2 மார்ச்சு, 2002 | 12 மே, 2006 | 3 | அஇஅதிமுக |
| 22 | மு. கருணாநிதி | 13 மே, 2006 | 15 மே, 2011 | 5 | திமுக |
| 23 | ஜெ. ஜெயலலிதா | 16 மே, 2011 | 27 செப்டம்பர், 2014 | 4 | அஇஅதிமுக |
| 24 | ஓ. பன்னீர்செல்வம் | 28 செப்டம்பர், 2014 | மே 23, 2015 | 2 | அஇஅதிமுக |
| 25 | ஜெ. ஜெயலலிதா | மே 23, 2015 | டிசம்பர் 6, 2016 | 6 | அஇஅதிமுக |
| 26 | ஓ. பன்னீர்செல்வம் | டிசம்பர் 6, 2016 | பிப்ரவரி 16, 2017 | 3 | அஇஅதிமுக |
| 27 | எடப்பாடி கே. பழனிச்சாமி | பிப்ரவரி 16, 2017 | *தற்போது பதவியில்* | 1 | அஇஅதிமுக |

(ஆதாரம் : https://ta.wikipedia.org/wiki/தமிழ்நாட்டு_முதலமைச்சர்களின்_பட்டியல்)

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சுதந்திரத்திற்கு முன்னர் நீதிக்கட்சி மற்றும் காங்கிரஸ் கட்சியும் சுதந்திரத்திற்கு பின்னர் காங்கிரஸ், தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகளும் ஆட்சியமைத்து பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றின.

**1. நீதிக்கட்சியின் ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்கள் (1920-1937)**

நீதிக்கட்சியின் ஆட்சியின் போது நிறைவேற்றப்பட்ட நலத்திடங்களைக் குறித்த தகவல்கள் முந்தைய (*"தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு"*) தலைப்பில் வழங்கப்பட்டுள்ளன

**2. காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்கள் :**

**இராஜாஜி தலைமையிலான ஆட்சி (1937 -1939)**

இந்திய அரசாங்கச் சட்டம், 1935 இன் படி 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மகாண சட்டமன்றத் தேர்தலில் மொத்தம் 215 இடங்களில் 159 இடங்களை வென்று காங்கிரஸ் கட்சி 15 ஜீலை 1937 அன்று ஆட்சி ராஜாஜியின் தலைமையில் ஆட்சி அமைத்தது. அவரின் ஆட்சியின் முக்கிய நலத்திட்டங்கள் வருமாறு,

- **விவசாயிகளின் கடன் தள்ளுபடி சட்டம்,** 1938 (Agricultural Debt Relief Act, 1938) , சென்னை மகாணத்திலுள்ள விவசாயிகளைக் கடன் பிடியில் இருந்து விடுவிக்கும் நோக்கோடு இயற்றப்பட்டது.
- ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டம், 1939 (Temple Entry Authorisation and Indemnity Act, 1939) - தலித்துக்கள் மற்றும் நாடார்கள் கோவிலுக்கு செல்வதற்கு எதிராக இருந்த கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்கியது. இதன் மூலம் 1939 ஆம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் உட்பட அனைத்து ஆலயங்களும் தலித்துகளுக்கும் நாடார்களுக்கும் திறந்து விடப்பட்டது.
- மது விலக்கு (Prohibition) மாநிலம் முழுவதும் அமல்படுத்தப்பட்டது. மது விலக்கினால் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக விற்பனை வரி விதிக்கப்பட்டது.
- பள்ளிகளில் காந்தியடிகளின் " வார்தா கல்வித் திட்டம் " (Wardha Scheme) அமல்படுத்தப்பட்டது.
- பள்ளிகளில் ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புகள் வரையில் இந்தி மொழி இரண்டாவது மொழிப் பாடமாக்கப்பட்டது.

**த. பிரகாசம் (30 ஏப்ரல், 1946 - 23 மார்ச் , 1947)**

இராஜாஜி முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின் சென்னை மகாணத்தில் ஆளுநர் ஆட்சி அமலுக்கு கொண்டு வரப்பட்டது. அதன் பின் 1946 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்ட பேரவைத் தேர்தலில் 163 இடங்களை வென்று காங்கிரஸ் கட்சி த.பிரகாசம் தலைமையில் ஆட்சியமைத்தது.

- த.பிரகாசம் பொறுப்பேற்றவுடன், அனைத்து துவக்கப் பள்ளிகளையும் காந்தியடிகளின் ஆதாரக் கல்வி முறையின் கீழ் 'ஆதாரப் பள்ளிகளாக' (Basic Schools) மாற்றிட முயன்றார்.
- இவரது ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட ஜவுளிக் கொள்கையின் படி, அனைத்து ஜவுளித் தொழிற்சாலைகளையும் மூடிவிட்டு அதற்குப் பதில் கதர் நூற்பு மற்றும் கதர் உற்பத்தி மையங்கள் துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. இக்கொள்கை பெரும் விமர்சனத்திற்குள்ளானது.
- தேசிய மொழிக் கொள்கையைப் பின்பற்றினார். இந்தி மீண்டும் கட்டாயப் பாடமாக்கப்பட்டு. இந்தி மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்திய கல்வி அமைச்சர் டி.எஸ் அவினாசிலிங்கம் கடுமையான விமர்சனத்திற்குள்ளானார்.

**ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (23 மார்ச்சு, 1947 - 6 ஏப்ரல், 1949)**

- டி.பிரகாசம் பதவி விலகியதையடுத்து ஓமத்தூர் ராமசாமி ரெட்டியார் 23 மார்ச் 1947 அன்று சென்னை மகாணத்தின் முதலமைச்சரானார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்த போது, சென்னை மகாணத்தின் முதலமைச்சராக ஓமத்தூர் பி. ராமசாமி ரெட்டியார் இருந்தார்.
- ஆலய நுழைவுச் சட்டம், 1947 இவரது ஆட்சிகாலத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சட்டமாகும். இச்சட்டத்திற்கு அப்போதைய சென்னை ஆளுநர் ஆர்ச்பால்டு எட்வர்டு நை ஒப்புதல் அளித்தார். இந்த சட்டத்தின் மூலம் தலித்துகள் கோவில்களுக்குள் நுழைவதற்கான உரிமைகளை வழங்கியது.
- தேவதாசி அர்ப்பணிப்பு ஒழிப்புச் சட்டம், 1947 (Devadasi Dedication Abolition), கோயில்களில் இளம்பெண்களுக்கு பொட்டுக்கட்டி இறைவனுக்கு அர்ப்பணிக்கும் வழங்கத்திற்கு முடிவு கொண்டுவந்தது.
- இவருடைய ஆட்சியில் கல்வி அமைச்சராக தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் இருந்தார். இவர் "தமிழ் வளர்ச்சிக் கழகம்" எனும் அமைப்பை நிறுவி இந்தியிஆவில் முதல் முறையாக "தமிழ் கலைக்களஞ்சியம்" (Tamil Encyclopeadia) ஒன்றை பெரியசாமி தூரன் என்பவர் தலைமையில் தயாரித்தார்.
- தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டது. பாரதியார் பாடல்கள் பொதுவுடமையாக்கப்பட்டன.
- 20 ஜீன் 1948 ல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவின் மூலம் முதலில் ஆந்திரா, கேரளா, கர்நாடகப் பகுதிகளில் இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தமிழ் நாட்டில், முதலில் விருப்பாப் பாடமாக இருந்த இந்தி பின்னர் கட்டாயப் பாடமாக்கப்பட்டது. இந்திக்கு எதிராக தமிழகத்தில் நடைபெற்ற தொடர் போராட்டம் காரணமாக கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் பதவி விலகினார்.
- இவரது ஆட்சியில் தான் இந்தியாவிலேயே முதன் முதலாக 'நூலகச் சட்டம்', 'மெட்ராஸ் பொது நூலகங்கள் சட்டம் 1948' நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் மாநிலத்தில் செயல்பட்டு வந்த நூலகங்கள் அனைத்தும் ஒரு சட்ட வரம்புக்குள் கொண்டு வரப்பட்டன. இச்சட்டத்தை உருவாக்க அவினாசிலிங்கம் தலைமையில் தேர்வுக் குழு அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால், அவினாசிலிங்கம் 'தமிழ்நாட்டில் நூலக இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- இந்தியாவில் முதல் முறையாக அரசு உபயோகத்திற்காகத் தனி விமானம் வாங்கியவர் எனும் பெருமை ஓமந்தூர் ராமசாமி ருக்கு உண்டு.
- 1948 ஆம் ஆண்டு சென்னை மகாண ஜமீன் ஒழிப்பு மசோதா சட்டமாக்கபட்டதன் மூலம் ஜமீந்தாரி முறைக்கு முடிவுகட்டப்பட்டது.

- முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின்னர் இவர் இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பூ. ச. குமாரசுவாமி ராஜா ( 6 ஏப்ரல், 1949 - 9 ஏப்ரல், 1952)**

- த. பிரகாசம் அமைச்சரவையில் விவசாயம் , பொதுப்பணி, கூட்டுறவு அமைச்சராகப் பணியாற்றிய குமாரசுவாமி ராஜா 6-4-1949 ல் சென்னை மகாண முதலமைச்சரானார்.
- இந்தியாவில் வயது வந்தோருக்கு வாக்குரிமை அடிப்படையில் ஜனவரி 1952 ல் நடைபெற்ற முதல் தேர்தலில் , வெற்றி பெற்று , இந்திய குடியரசின் கீழ் (26 ஜனவரி 1950 க்கு பின்) சென்னை மகாணத்தின் முதல் முதலமைச்சர் எனும் பெருமையை குமாரசுவாமி ராஜா பெற்றுள்ளார்.
- இவரது ஆட்சியில் வழக்கத்தில் இருந்த 'பொது விநியோகத் திட்டம் ' (Public Distribution) மறுசீரமைக்கப்பட்டது.
- செயல்படுத்தப்படாமலிருந்த, 1948 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருந்த ஜமீன் ஒழிப்பு சட்டத்தை பெரும் எதிர்ப்புகளுக்கிடையே செயல்படுத்தினார். இச்சட்டத்தின் மூலம், அரசுடைமையாக்கப்பட்ட ஜமீன் நிலங்களில் பெரும்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- 14 ஏப்ரல் 1949 ல் சமூக நலத்துறையின் பிரிவாக இருந்த 'அரிசன நலத்துறையை' தனித்துறையாக மாற்றினார்.
- பூரண மதுவிலக்கு, சென்னை மகாணத்திலிருந்த 25 மாவட்டங்களிலும், 1 ஏப்ரல் 1949 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்தடையைக் கண்காணிக்க சிறப்பு அமலாக்கப் பிரிவும், மதுவிலக்குப் பிரிவும் தொடங்கப்பட்டன.
- பள்ளிக் கல்வியில், மும்மொழி திட்டம் பின்பற்றப்பட்டது. முதல் மொழி தமிழாகவும், இரண்டாம் மொழி ஆங்கிலமாகவும் (இரண்டாம் வகுப்பு முதல்), மூன்றாம் மொழி இந்தியாகவும் கற்பிக்கப்பட்டது.
- கிராம மக்களின் பொருளாதார, சமூக, கவி மேம்பாட்டிற்காக 'கிராமப்புனரமைப்புத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2 அக்டோபர் 1949 ல் நீதித்துறை ஆட்சித் துறையிலிருந்து பிரிக்கப்பட்டது. இதன்மூலம், நீதிமன்றங்கள் தனி அதிகாரங்களுடன் சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கின.
- 1947 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டு இயக்கத்தினர் மீது விதிக்கப்பட்ட தடை 1951 ல் விலக்கிக் கொள்ளப்பட்டது.
- அண்ணாதுரை எழுதிய இடசிய வரலாறு, புலவர் குழந்தை எழுதிய ராவண காவியம், பாரதிதாசனின் இரண்யன் அல்லது இணையற்ற வீரன், ஏவிபி ஆசைத்தம்பி எழுதிய 'காந்தியார் சாந்தியடைய' போன்ற நூல்கள் தடைச் செய்யப்பட்டன. 1943 ல் அண்ணாத்துரை எழுதிய 'ஆரியமாயை' எனும் நூல் குமாரசாமி ராஜா அரசினால் 1950 ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டது.

- தொடர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் காரணமாக 10-7-1950 அன்று, இந்தி திணிப்பு அரசாணை திரும்பப் பெறப்பட்டது.

**சி. இராஜகோபாலாச்சாரி (10 ஏப்ரல், 1952 - 13 ஏப்ரல், 1954)**

- சுதந்திரத்திற்கு முன்னர் 1937-1939 காலக்கட்டத்தில் சென்னை மகாணத்தின் முதலமைச்சராக பதவி வகித்த இராஜாஜி, நேருவின் இடைக்கால அமைச்சரவையில் (1946-47) நிதி, கல்வி, தொழில், விநியோக அமைச்சராக்வும், இந்திய விடுதலைக்குப் பின்னர் 1947-1978 ஆண்டுகளில் மேற்கு வங்க ஆளுநராகவும், மௌண்ட் பேட்டன் பிரபுக்குப் பிறகு சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும் (1948-1950) பதவி வகித்தவர்.
- தேர்தலில் போட்டியிடாமலேயே , சட்டமன்ற மேலவை நியமன ஊறுப்பினராக இருந்த இராஜாஜி 10-4-1952 அன்று சென்னை மகாணத்தின் முதலமைச்சராக அப்போதைய ஆளுநர் ஸ்ரீபிரகாசா அவர்களினால் நியமிக்கப்பட்டர்.
- சுதந்திர இந்தியாவின் முதல் முறையாக சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானம் 1952 ஆம் ஆண்டில் இவரது ஆட்சியில் கொண்டுவரப்பட்டது.
- உணவுக் கட்டுப்பாட்டை அறிவித்தார். அதன் மூலம், உணவுப் பொருட்களின் மீதிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் அகற்றப்பட்டதுடன், எவ்வித அரசுக் கட்டுப்பாடும் இல்லாமல் உணவுப் பொருட்களை விறகவும், மர்ற இடங்களுக்கு கொண்டு செல்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.
- உழவர் பாதுகாப்புச் சட்டம் (Tenants Protection Act / Pannaiyal Protection Act, 1952) உழவர்களுக்கு சட்டப்பாதுகாப்பை உறுதி செய்ததோடு, அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைக்கு சட்டவரம்பையும் நிற்ணயித்தது. குத்தகை விகிதம், செலவினம் போக, உழவருக்கு 40 % எனவும், நிலச் சொந்தக்காரருக்கு 60% எனவும் நிர்ணயிக்கப்பட்டது.
- கைத்தறி நெசவாளர்களுக்காக கைத்தறி வாரியங்கள் (Handloom Boards) அமைக்கப்பட்டன.
- 1953 அக்டோபரில் ஆந்திரம் சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்து தனி மாநிலமாகியது. அப்போது, திருப்பதியையும் , திருத்தணியையும் ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும் என ஆந்திர தலைவர்களின் கோரிக்கையை எதிர்த்து, தமிழரசு கட்சியின் தலைவர் மா.பொ.சிவஞானம் போராட்டம் நடத்தினார். இந்த பிரச்சனைக்கு தீருவ் காண "எச்.வி.படாஸ்கர் குழு' அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரையின் படி திருத்தணி தமிழகத்துடனும், திருப்பதி ஆந்திராவுடனும் சேர்க்கப்பட்டன.
- 1953 இல் தொடக்கக் கல்வி முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர முயன்றார். "மாறுபட்ட தொடக்கக் கல்வித் திட்டம் 1953" (Modified Scheme of Elementary education 1953) என்று அதிகாரப் பூர்வமாகப் பெயரிடப்பட்ட அத்திட்டத்தின் கீழ் ஆரம்பப்பள்ளி மாணவர்களின் பள்ளிக்காலம் நாளொன்றுக்கு மூன்று மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. மீதமுள்ள நேரத்தில் அவர்கள் தங்களது பெற்றொரின் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இக்கல்விமுறை ஜாதி அமைப்பை பலப்படுத்தும் குலக் கல்வித் திட்டமென திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள் எதிர்த்தன.

ஆகஸ்ட் 1953 இல் பருலேக்கர் குழு இத்திட்டம் முறையானதுதான் என்று அறிக்கை வெளியிட்டது. ஆனால் அதற்குள் பொதுமக்களுள் பெரும்பாலானோர் திட்டத்திற்கு எதிராகத் திரும்பியிருந்தனர். ராஜகோபாலாச்சாரியின் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் பலத்த எதிர்ப்பு உருவாகியது. ஆனால் ராஜகோபாலாச்சாரி திட்டத்தை கைவிடப் போவதில்லை என உறுதியாக இருந்தார். இதனால், அவரை பதவியிலிருந்து இறக்க கட்சிக்காரர்கள் தயாராகினர். இதனை அறிந்த ராஜகோபாலாச்சாரி, மார்ச் 1954 இல் தன் பதவியை ராஜினாமா செய்தார். அவருக்குப் பின் முதல்வராகிய காமராஜர் குலக்கல்வித் திட்டத்தின் எதிர்ப்பாளர். மே 18 1954 இல் கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம், பொது மக்களின் எதிர்ப்பால் திட்டம் கைவிடப்படுவதாக சட்டமன்றத்தில் அறிவித்தார்.

**கே. காமராஜ் (13 ஏப்ரல், 1954 - 2 அக்டோபர், 1963)**

ராஜாஜியின் தலைமையில் 1930 மார்ச் மாதம், வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரகம் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டார். அதற்காகக் காமராசர் கைது செய்யப்பட்டு கல்கத்தா அலிப்பூர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.அடுத்த ஆண்டு காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலை ஆனார். விருதுநகர் வெடிகுண்டு வழக்கில் கைதாகி, சேலம் டாக்டர் பெ.வரதராசுலு நாயுடு அவர்களின் வாதத் திறமையால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

1940ல் மீண்டும் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருக்கும்போதே விருதுநகர் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு விடுதலை ஆன காமராசர் நேராகச் சென்று தனது நகராட்சித் தலைவர் பதவியை துறந்தார். அப்போது பதவிக்கு நேர்மையாகவும் முழுமையாகவும் கடமையாற்ற முடியாத நிலையில் அதில் ஒட்டிக் கொண்டிருப்பது தவறு என்று கூறினார்.

மீண்டும் 1942ல் ஆகஸ்ட் புரட்சி நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டார். இந்த முறைகளுக்காகக் கைது செய்யப்பட்டார். இந்த முறை மூன்று ஆண்டுகள் தண்டனையக அமராவதி சிறைக்கு அனுப்பப்பட்டார். இம்மாதிரியான சிறை வாழ்க்கைகளின்போது சுயமாகப் படித்துத் தன் கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார்.

மிகச்சிறந்த பேச்சாளரும் சிறந்த நாடாளுமன்ற வாதியுமான சத்தியமூர்த்தியை தனது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார் காமராசர். 1936ல் சத்தியமூர்த்தி பிரதேச காங்கிரசின் தலைவரானபோது காமராசரைச் செயலாளராக ஆக்கினார். இருவரின் முயற்சியில் காங்கிரஸ் கட்சி நல்ல வளர்ச்சியைக் கண்டு தேர்தல்களில் பெரும் வெற்றி பெற்றது. இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தி கேட்டு காமராசர் முதலில் சத்தியமூர்த்தியின் இல்லத்திற்குச் சென்று அங்குதான் தேசியக் கொடியை ஏற்றினார்.

குடியாத்தம் தொகுதியில் சட்டப்பேரவைக்கு தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். தமிழக முதல்வராக 13.04.1954 தமிழ் புத்தாண்டு அன்று பதவியேற்றார்.முதல்வராக பதவியேற்றதும் முதலில் சத்தியமூர்த்தியின் இல்லம் சென்று அவர் படத்துக்கு மாலை அணிவித்துவிட்டுதான் தன் பணிகளைத் தொடங்கினார்.

காமராஜரின் அமைச்சரவையில், மிகக்குறைந்த எண்ணிக்கையிலேயே (8 பேர்) அமைச்சர்கள் இருந்தனர். காமராசர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி. சுப்பிரமணியம், அவரை முன்மொழிந்த பக்தவச்சலம் இருவரையும் அமைச்சரவையில் அமைச்சர்களாக சேர்த்திருந்தார்.

### அரசியலமைப்பின் முதல் திருத்தத்திற்கு வித்திட்டவர்

தமிழகத்தில் நீண்டகாலமாக அமலில் இருந்த, பின்தங்கிய சமுதாயத்தினருக்கான இடஒதுக்கீட்டை உறுதிசெய்யும் 'கம்யூனல் ஜி.ஓ.' (சமூக அரசாணை 1921 (செப்டம்பர் 26) மற்றும் 1922 (ஆகஸ்டு 15) ) செல்லாது என சென்னை உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் வழங்கிய தீர்ப்பு கடும் கொந்தளிப்பை உருவாக்கியது. இந்நிலைமையை நன்கு உணர்ந்த காமராஜர், பிரதமர் நேருவிடம் வலியுறுத்தி அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டுவர வித்திட்டார். அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த சில மாதங்களிலேயே 1951-ல் அதில் திருத்தம் கொண்டுவரக் காரணமாக இருந்து, பின்தங்கிய சமுதாய மாணவர்கள் கல்வி, வேலைவாய்ப்புகளில் பெற்றுவந்த இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற்றுத் தந்தவர் காமராஜர்.

### கல்விப் புரட்சி

காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் முதல் நடவடிக்கையாக இராஜாஜி அமல்படுத்திய குலக்கல்வி முறையை ஒழித்தார்.

பூரண மதுவிலக்கை கொண்டு வந்ததால் இராஜாஜி அரசினால் மூடப்பட்ட 6000 பள்ளிகளை மறுபடியும் திறந்தார்.

300 க்கும் மேற்பட்ட மக்கள் தொகைக் கொண்ட கிராமங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டன. இதன்மூலம் 14000 புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன. ராஜாஜி ஆட்சியில் மொத்தம் இருந்த 12000 பள்ளிகளின் எண்ணிக்கை காமராஜர் ஆட்சியின் போது 27000 ஆக அதிகரித்தன. மாணவர் எண்ணிக்கை 19 லட்சத்திலிருந்து 40 லட்சமாக அதிகரித்தது. 637 ஆக இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,995 ஆனது.

மாவட்டம் தோறும் பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன.

ஆசிரியர் நலனுக்காக 'ஆசிரியர் ஓய்வூதியத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது.

எந்தச் சொத்தும் இல்லாதவர்களுக்குக் கல்வி என்ற சொத்தை வழங்கி, வாழ்க்கையில் முன்னேற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் இலவசக் கல்வியையும், மதிய உணவுத் திட்டத்தையும் கொண்டுவந்தார். அதன் பலனாக பள்ளிகளில் படிப்போரின் எண்ணிக்கை 37 சதவீதமாக உயர்ந்தது.(வெள்ளையர் காலத்தில் இது 7 சதவீதமாக இருந்தது). பள்ளிகளில் வேலை நாட்கள் 180 லிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டது.

நெ.து.சுந்தரவடிவேலுவை பொதுக் கல்வி இயக்குநராக நியமித்தார். அவரது கல்வித் தலைமையின் கீழ் பல்வேறு முற்போக்குக் கல்வித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

காமராஜர் ஆட்சியில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்பட்டது. இதன்படி, தமிழும் ஆங்கிலமும் கட்டாயப்பாடங்களாகவும், இந்தி விருப்பப் பாடமாகவும் கற்பிக்கப்பட்டது.

**அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்**

சென்னை ஐ.ஐ.டி, ராமானுஜம் கணித நிறுவனம், சென்னை, அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம், திருச்சி பிராந்திய தொழில்நுட்பக் கல்லூரி, கோவை அரசு பொறியியல் கல்லூரி, காரைக்குடி மின் வேதியல் ஆராய்ச்சி மையம் ஆகியவை காமராஜர் ஆட்சியில் தொடங்கப்பட்ட முக்கிய உயர்க்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களாகும்.

**தொழில் வளர்ச்சி**

ஜவாஹர்லால் நேரு ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களின் முழுப் பலனையும் தமிழகம் பெற்று முன்னேறும் வகையில் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக தமிழகத்தில் தொழில் புரட்சி நடந்தது. சென்னை - பெரம்பூரில் ரயில் பெட்டித் தயாரிப்புத் தொழிற்சாலை, சென்னை, கிண்டியில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை, ஊட்டியில் இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலை, திருச்சி, திருவெறும்பூரில் உயர் அழுத்த கொதிகலன் தொழிற்சாலை (BHEL) அமைய 750 ஏக்கர் பட்டா நிலமும், 2,400 ஏக்கர் புறம்போக்கு நிலமும் வழங்கப்பட்டன.

இன்று சர்வதேச அளவில் புகழ்பெற்று, பொதுத் துறை நிறுவனங்களிலேயே அதிக லாபத்தைத் தருகிற 'மகாநவரத்தினா'என்ற தகுதியை பெற்றுள்ளது பெல் நிறுவனம். பாதுகாப்பு அமைச்சகத்துக்கு உட்பட்ட ஆவடி டாங்க் ஃபேக்டரி தொழில் வளர்ச்சியில் அரசுத் துறையோடு, தனியார் துறையும் இணைந்து பல தொழில்கள் தொடங்கப்பட்டன. 'மதராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன், அசோக் லேலண்ட் தொழிற்சாலை, டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை, சிம்சன், இந்தியா பிஸ்டன்ஸ், டி.வி.எஸ், லூகாஸ் இவையெல்லாம் அந்தக் காலகட்டத்தில் தொடங்கப்பட்டவைதான். 1951-ல் தமிழகத்தில் 71-ஆக இருந்த நெசவாலைகளின் எண்ணிக்கை, 1962 முடிவில் 134-ஆகப் பெருகியது. அதேபோன்று கூட்டுறவுத் துறையில் நூற்பு ஆலைகள் தொடங்கப்பட்டன. சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை மூன்றிலிருந்து எட்டாக உயர்ந்தது. இவற்றின் உற்பத்தி 1 லட்சத்து 27 ஆயிரத்து 500 டன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, கூடுதலாகப் பல சர்க்கரை ஆலைகள் தொடங்க ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஆண்டொன்றுக்கு 20 ஆயிரம் டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய ஆலையை ஈரோடு அருகே பள்ளிபாளையத்தில் சேஷசாயி காகிதம் மற்றும் போர்டுகள் லிமிடெட் நிறுவனம் தொடங்கியது. அதே போன்று, மாநிலத்தில் கூடுதலாக காகிதக்கூழ் மற்றும் வைக்கோல் அட்டைகள் தயாரிக்க எட்டு ஆலைகள் தொடங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது. கோவை மாவட்டம் மதுக்கரை, திருச்சி மாவட்டம் டால்மியாபுரம், ராமநாதபுர மாவட்டம் துலுக்கப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்து என நான்கு சிமெண்ட் தயாரிக்கும் ஆலைகள் தொடங்கப்பட்டன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 'மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்' என்ற ஒரு புதிய சிமெண்ட் ஆலை ராஜபாளையத்தில் தொடங்கப்பட்டது. 1962-ல் சேலம், சங்கரிதுர்க்கம் என்ற இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்குவதற்கு உரிமம் வழங்கப்பட்டது. கரூரில் மற்றொரு ஆலை தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**தொழிற்பேட்டைகள்**

காமராஜர் ஆட்சிக்காலத்தில் தொழில் வளர்ச்சிக்காகவும், வேலைவாய்ப்பு வழங்கவும் தொழிற்பேட்டைகள் சென்னை, கிண்டி, விருதுநகரில் தொடங்கப்பட்டன. இவற்றின் பயன்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து கும்பகோணம், விருத்தாசலம், கிருஷ்ணகிரி, தேனி, திண்டுக்கல், கோவில்பட்டி, ராஜ பாளையம், நாகார்கோவில், சென்னையை அடுத்த அம்பத்தூர் போன்ற இடங்களில் இத்தகைய தொழிற் பேட்டைகளை உருவாக்குதவற்காக ரூ.4.08 கோடி ஒதுக்கப் பட்டது. இவற்றைத் தவிர மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் மார்த்தாண்டம் (கன்னியா குமரி) ஆகிய இடங்களில் தொழிற்பேட்டைகள் தொடங்கப் பட்டன. சென்னை அம்பத்தூரில் தொழிற்பேட்டை தொடங்கி 1,200 ஏக்கர் நிலம் வழங்கி இடஒதுக்கீட்டுடன் 400 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டன.

**காமராஜர் ஆட்சியில் தொடங்கப்பட்ட பொதுத்துறை தொழில் நிறுவனங்கள்**

1. நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம் (கிழக்கு ஜெர்மனி முதலீட்டைப் பெற்று தொடங்கப்பட்டது)

2.பெரம்பலூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை (சுவிட்சர்லாந்து நாட்டின் உதவியுடன்)

3.திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ்

4.ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை (பிரஞ்சு தொழில்நுட்ப உதவியுடன்)

5.ஆவடி கனரக வாகன தொழிற்சாலை

6.கல்பாக்கம் அணுமின் நிலையம்

7.கிண்டி டெலிபிரின்டர் தொழிற்சாலை

8.சங்ககிரி துர்க்கம் சிமெண்ட் தொழிற்சாலை

9.மேட்டூர் காகிதத் தொழிற்சாலை

10.கிண்டி அறுவைச் சிகிச்சைக் கருவித் தொழிற்சாலை

11.துப்பாக்கித் தொழிற்சாலை

12. நெய்வேலி அனல் மின் திட்டம் (ரஷிய உதவியுடன் நிறைவேற்றப்பட்டது.)

13.சேலம் இரும்பு உருக்காலை

14.பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலை

15.அரக்கோணம் இலகுரக ஸ்டீல் ப்லான்ட் தொழிற்சாலை

16.சமய நல்லூர் அனல்மின் நிலையம்

17.சென்னை அனல்மின் நிலையம்

18.நீலகிரி கச்சாபிலிம் தொழிற்சாலை

19. இந்துஸ்தான் டெலி பிரிண்டர் தொழிற்சாலை (இத்தாலிய நிறுவனத்தின் ஒத்துழைப்போடு)

**காமராஜர் ஆட்சியில் தமிழ்நாட்டில் துவங்கப் பட்ட சில முக்கியமான தனியார் தொழிற்சாலைகள்**

- ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ், சென்னை. ஆண்டொன்றுக்கு 6000 கார்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.
- அசோக் லேலண்ட், சென்னை. ஆண்டொன்றிற்கு 5400 சேசிஸ் தயாரிக்கும் திறன் கொண்டது.
- டி.ஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, சென்னை. ஆண்டொன்றிற்கு சுமார் 30 லட்சம் சைக்கிள்களை உற்பத்தி செய்தது.
- பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் சிம்சன்ஸ், இந்தியா பிஸ்டன்ஸ், டி.வி.எஸ் மற்றும் திருச்சித் துப்பாக்கித் தொழிற்சாலை போன்ற முக்கிய தொழிற்சாலைகளும் அமைக்கப் பட்டன.
- 1962ல் சவுத் இந்தியா விஸ்கோஸ் என்ற கூட்டுறவு ஆலை கோவை சிறுமுகையில் நிறுவப்பட்டது.
- காமராஜர் ஆட்சிக்கு முன் 3 ஆக இருந்த சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 8 ஆக உயர்த்தப்பட்டது.
- பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டன.

**பாசனத் திட்டங்கள்**

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகு தமிழகம் தனது நீர்வளத்தைப் பெருக்க உரிய பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக காமராஜர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். அவற்றின் பயனாக கீழ்பவானி திட்டம், மணிமுத்தாறு திட்டம், மேட்டூர் கால்வாய் திட்டம், ஆரணியாறு திட்டம், அமராவதி திட்டம், வைகை திட்டம், சாத்தனூர் திட்டம், கிருஷ்ணகிரி திட்டம், 30 லட்ச ரூபாய் மதிப்பிலான காவிரி கழிமுக வடிகால் திட்டம் ஆகியவை உருவாகின.

இவை தவிர, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் புள்ளம்பாடி வாய்க்கால் திட்டம், புதிய கட்டளைத் திட்டம், வீடூர் நீர்த்தேக்கத் திட்டம், கொடையாறு வாய்க்கால் திட்டம், நெய்யாறு திட்டம், பரம்பிக்குளம் - ஆழியாறு திட்டம் ஆகிய ஏழு புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

சென்னை நிலச் சீர்திருத்தச் சட்ட, 1955 (Madras Land Reforms Act, 1955) மற்றும் சென்னைப் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம், 1955 (Madras Cultivating Plants Protection Act, 1955) ஆகியவை காமராஜர் காலத்தில் விவசாயிகளின் நலனுக்காக இயற்றப்பட்ட முக்கிய சட்டமாகும்.

காமராசர் ஆட்சியின்கீழ் நிறைவேற்றப்பட்ட 9 முக்கிய நீர்பாசனத் திட்டங்கள்

* கீழ் பவானித்திட்டம்

* மேட்டூர் கால்வாய்த்திட்டம்

* காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம்

* மணிமுத்தாறு

* அமராவதி

* வைகை

* சாத்தனூர்

* கிருஷ்ணகிரி

* ஆரணியாறு ஆகியவையாகும்.

**மின்உற்பத்தி**

காமராஜர் ஆட்சிக்காலத்தில் மின்உற்பத்தியில் வியக்கத் தக்க சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. மின்உற்பத்தியிலும், அதைப் பயன்படுத்துவதிலும் சென்னை மாகாணம் இந்தியாவில் மூன்றாவது இடத்தை வகித்தது. காமராஜர் ஆட்சியில்தான் பெரியார் நீர்மின்உற்பத்தித் திட்டம், குந்தா நீர்மின்உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டது. நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் ரூ. 86 கோடி முதலீட்டில் தொடங்கப்பட்டது. இதன்மூலம் மின் உற்பத்தியில் மகத்தான சாதனைகள் நிகழ்ந்தன. இன்று ரூ.1,500 கோடிக்கும்மேல் லாபம் ஈட்டித்தரும் மிகப்பெரிய பொதுத்துறை நிறுவனமாக வளர்ந்துள்ளது.

சென்னை மாகாணத்தின் மின்பற்றாக்குறையைச் சமாளிப் பதற்காக 5 லட்சம் கிலோவாட் மின்உற்பத்தித் திறன்கொண்ட அணுமின் நிலையத்தைக் கல்பாக்கத்தில் அமைக்க முயற்சிகள் மேற்கொண்ட காமராஜர், இந்திய அரசின் அணுமின் உற்பத்தித் துறையை அணுகி, இத்திட்டத்தைப் பெறுவதில் வெற்றிகண்டார். அதன் பயன்களைத் தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் இன்று அனுபவித்துவருகின்றன.

**நிலச் சீர்திருத்தம்**

காமராஜர் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குத்தகைதாரர்களின் பாதுகாப்புக்காக, 'குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் - 1955' காமராஜர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. நிலச் சீர்திருத்தத்தை மேன்மைப்படுத்தும் நடவடிக்கையாக 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கும்மேல் வைத்திருந்தால் அவற்றை அரசுடமையாக்கும் நில உச்சவரம்புச் சட்டம் 1962-ல் கொண்டுவரப்பட்டது.

**பஞ்சாயத்து ராஜ்**

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக, பஞ்சாயத்து ஆட்சி செயல்படுத்தப்பட்டது. ராஜஸ்தான் மாநிலத்தில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பை நேரு தொடங்கியதையொட்டி தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1958-ல் காமராஜர் ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் காமராஜர் ஆட்சியில்

373 பஞ்சாயத்து யூனியன்களும், 12 ஆயிரம் பஞ்சாயத்துக்களும் தொடங்கப்பட்டுச் செயல்படத் தொடங்கின.

**தமிழ் வளர்ச்சி**

சென்னை மாகாணத்தின் பட்ஜெட்டை 1957-58-ல் தமிழிலேயே சமர்ப்பித்தார் காமராஜர். 1956-ல் தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் கொண்டுவந்ததும் காமராஜர் ஆட்சியே. 1959 ஜனவரியில், தமிழ் அறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராகக் கல்வி அமைச்சர் நியமிக்கப்பட்டார். கல்லூரிப் பாடங்களைக் கற்பிக்கும் மொழியாக தமிழைக் கொண்டுவரவும் மலிவான விலையில் உயர் கல்விக்கான பாடநூல்களைத் தமிழில் வெளியிடவும் இந்த அமைப்பு செயல்பட்டது. இத்துடன் 'தமிழ்ப்பாடநூல் வெளியீட்டுக் கழகம்' தோற்றுவிக்கப்பட்டது. தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு மாத ஊக்கத்தொகையும், அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன. பாடங்கள் தொடர்பான ஆங்கில நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன.

காமராஜர் ஆட்சிக்காலத்தில்தான் கலைச்சொல் அகராதி 1960-ல் வெளியிடப்பட்டது. 1956-ல் மொழிவாரி மாநிலம் அமைக்கப்பட்டவுடன் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதை 'தமிழ்நாடு' என்று மாற்றி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதுகுறித்து சட்டமன்றத்தில் 24.2.1961-ல் நடந்த விவாதத்தில் உரையாற்றிய சி.சுப்பிரமணியம், "மெட்ராஸ் ஸ்டேட் என்று குறிப்பிடப்படும் இடத்தில் சென்னை ராஜ்யம் என்று எழுதுவதற்குப் பதில் தமிழ்நாடு என்று எழுதலாம் என பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'என்று தெரிவித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

**அகிலஇந்திய காங்கிரஸ் (K.PLAN):**

- மூன்று முறை (1954-57, 1957-62, 1962-63) முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த காமராசர் பதவியை விட தேசப்பணியும் கட்சிப்பணியுமே முக்கியம் என்பதை மக்களுக்கும் குறிப்பாக கட்சித் தொண்டர்களுக்கும் காட்ட விரும்பி கொண்டு வந்த திட்டம் தான் K-PLAN எனப்படும் 'காமராசர் திட்டம்' ஆகும். அதன்படி கட்சியின் மூத்த தலைவர்கள் பதவிகளை இளையவர்களிடம் ஒப்படைத்து விட்டு கட்சிப்பணியாற்றச் செல்ல வேண்டும் என்று இவர் நேருவிடம் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டார் நேரு. இந்தத் திட்டத்தை முன்மொழிந்த கையோடு தன் முதல்வர் பதவியை (02.10.1963) துறந்து பக்தவத்சலம் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு தில்லி சென்றார் காமராசர். அக்டோபர் 9 ஆம் தேதி அகில இந்தியக் காங்கிரஸின் தலைவர் ஆனார். லால்பகதூர் சாசுதிரி, மொரார்சி தேசாய், எசு.கே.பாட்டீல், ஜெகஜீவன்ராம் போன்றோர் அவ்வாறு பதவி துறந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.
- அகில இந்திய அளவில் காமராசரின் செல்வாக்கு கட்சியினரிடம் மரியாதைக்குரியதாக இருந்தது. அதனாலேயே 1964-ல் ஜவகர்லால் நேரு மறைந்தவுடன் இந்தியாவின் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரி அவர்களை முன்மொழிந்து காமராசர் சொன்ன கருத்தினை அனைவரும் ஏற்றனர். 1966-ல் லால் பகதூர் சாஸ்திரியின் திடீர் மறைவின் போது ஏற்பட்ட

அசாதாரண அரசியல் சூழ்நிலையின் போது இந்திரா காந்தியை பிரதமராக வரச் செய்ததில் காமராசருக்குக் கணிசமான பங்கு இருந்தது.

**நினைவுச் சின்னங்கள்:**

காமராசர் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு சென்னை கிண்டியில் அவருக்கு பெருந்தலைவர் காமராசர் நினைவிடம் ஒன்றை அமைத்துள்ளது. இங்கு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம் ஒன்றையும் அமைத்துள்ளது. இங்கு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவு சிலை அமைக்கப்பட்டுள்ளது. நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராசர் அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்குக் கண்காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

காமராசர் இறந்த பிறகு 1976-ல் இவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. சென்னை வானூர்தி நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**இந்திய அரசியலில் ‘கிங்மேக்கர்’**

“நேருவுக்குப்பின் யார்?” என்றபோது, லால்பகதூர் சாஸ்திரியை முன் நிறுத்தினார். “சாஸ்திரிக்கு பின் யார்?” என்ற போது, இந்திராகாந்தியை முன்னிறுத்தினார். ஆட்சியில் அமர்த்தினார். இவையாவும் காமராஜர் செய்த அரசியல் சாதனைகளேயாகும்.

**காமராசரைப் பற்றிய கருத்துக்கள்**

- “மூவேந்தர்கள் ஆட்சிக்காலத்தில் நிகழாத அற்புதங்கள் எல்லாம் தமிழகத்தில் நடந்தது காமராஜர் ஆட்சியில்!” - தந்தை பெரியார்
- “தனது பலவித கஷ்டங்களையும் பொருட்படுத்தாது, சதா காலமும் நாட்டின் நலன்களிலே ஈடுபட்டுள்ள உள்ளத்தைப் பெற்றவரே சகல தர்மங்களையும், நிதிகளையும் நன்குணர்ந்தவரே காமராசு, காமராசு மகாபுருசர்.”-காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகர சரசுவதி
- "திறமை, நல்லாட்சி, இவைகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் ஓர் அரசாங்கத்திற்குத் தலைவர் என்ற முறையில் காமராசர் சென்னை முதல் அமைச்சராக இருக்கிறார். மக்களுக்கு மேலும் மேலும் தொண்டுபுரிய அவர் நீண்ட காலம் வாழ்வாரென நான் நம்புகிறேன். -நேரு
- “சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் ஏற்படாத மறுமலர்ச்சியும் விழிப்பும் இப்போது ஏற்பட்டுள்ளன. இதற்குக் காரணம் நமது காமராசர்தான். ஊர்தோறும் சாரம் தொழில்வளம் ஏற்பட்டுள்ளன. மூவேந்தர் காலத்தில்கூட நிகழாத இந்த அதிசயத்தைச் சாதித்த நமது காமராசரின் அறிவுத்திறனை மறுக்க முடியுமா?" -பெரியார்.
- “காமராசு தோற்றத்தில் மட்டுமின்றி மதிநுட்பத்திலும் மக்களையும், அவர்களுடைய பிரச்சினைகளையும் புரிந்து கொள்வதிலும் அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் நாட்டம் மிகுந்த தலைவராக விளங்குகிறார்.” -இந்திரா காந்தி

- "சத்தியமூர்த்திக்கு பின்னர் காமராசை நான் பிள்ளையாகப் பார்த்திருக்கிறேன். நான் இன்னும் அப்படியே இருக்கிறேன். அவர் உயர்ந்திருக்கிறார். அன்று அவரை நான் குனிந்து பார்த்தேன். இன்று அண்ணாந்து பார்க்கிறேன்." -சிதம்பரம் சுப்ரமண்யம்
- "காமராசர் என் தலைவர், அண்ணா என் வழிகாட்டி"- ம. கோ. இராமச்சந்திரன்
- "தியாகச் சுடர், தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றவர்."- கருணாநிதி
- "காமராசர் அரசு பிற மாநிலங்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. முற்போக்கு அரசியலிலும், சுதந்திரமான சர்க்காரிலும், நிர்வாகத்திறமையிலும் தமிழகம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது." - மத்திய உணவு அமைச்சர் ஏ.எம்.தாமசு

**சான்றுகள் :**


1. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இணையதளம், http://tncc.org.in/services/industries/
2. காமராஜர் காலம் ஏன் பொற்காலம்? - ஆ.கோபண்ணா (தமிழ் இந்து கட்டுரை)
3. https://ta.wikipedia.org/wiki/காமராசர்
4. http://www.tamilandam.com/பதிவு/224-கர்ம-வீரர்-காமராஜர்-ஆட்சியின்-சாதனைகள்
5. தற்கால தமிழ்நாட்டு வரலாறு, டாக்டர்.க.வெங்கடேசன்
6. www.dinamani.com


**எம். பக்தவத்சலம் ( 2 அக்டோபர், 1963 - 6 மார்ச், 1967)**

- காமராஜ் தனது 'காமராஜ் திட்டத்தின்' மூலம் பதவி விலகியபோது எம்.பக்தவத்சலத்தை தனக்கு அடுத்தபடி தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக சிபாரிசு செய்தார். தமிழ்நாட்டில் கடைசி காங்கிரஸ் அரசாங்கத்தின் முதலமைச்சராக இருந்தவர்தான் எம்.பக்தவத்சலம். முன்னதாக, 1952 தேர்தலுக்குப் பின் ராஜாஜி தலைமையில் அமைந்த மந்திரி சபையில் எம்.பக்தவத்ஸலமும் ஒரு அமைச்சராக இருந்தார். 1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்தது மட்டுமல்லாமல் பல பெரும் தலைவர்களும் தேர்தலில் தோற்றுப் போனார்கள். காங்கிரஸ் கட்சியின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த காமராஜ் அவர்கள்கூட விருதுநகர் தொகுதியில் ப.சீனிவாசன் என்னும் மாணவர் தலைவரிடம் தோற்றுப் போனார்.
- எம்.பக்தவத்சலம் காலத்தில் உணவுத் தட்டுப்பாடு வந்தது. பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி உணவு விடுதிகளில் இரவு உணவு பரிமாறுவதை நிறுத்தி வைத்தது; தேர்தலுக்குச் சில ஆண்டுகள் முன்புதான் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வன்முறை இயக்கமாக நடந்து முடிந்தது; அதன் பயனாக தி.மு.க. பலம் பொருந்திய கட்சியாக உருவெடுத்தது; இவை எல்லாம் சேர்ந்து 1967 தேர்தல் தோல்வியில் முடிந்தது.

**3. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்கள்**

**CN அண்ணாதுரை தலைமையிலான தி,மு,க. ஆட்சி (6 மார்ச் , 1967 - 3 பிப்ரவரி, 1969)**

- 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் - மணியம்மை திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, "திராவிட முன்னேற்றக் கழகம்" எனும் புதிய அரசியல் கட்சியை பேரறிஞர் அண்ணா 17 செப்டம்பர் 1949 அன்று தொடங்கினார். தி,மு.க. வின் முதல் பொதுச் செயலர் பதவியை அண்ணாதுரை ஏற்றார், ஆனால் தலைவர் பதவியை பெரியாருக்காக காலியாக வைத்திருப்பதாகவும் அறிவித்திருந்தார்.
- முதலில் தனியாகத் திராவிட நாடுஎன்ற கொள்கையைக் கொண்டிருந்த தி,மு.க, 1963 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்த பிரிவினைத் தடைச் சட்டத்தின் விளைவாக 'திராவிட நாடு' கொள்கையைக் கைவிட்டது.
- 1963 ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்த இந்தி மொழியை ஆட்சி மொழியாக்கும் அரசியல் சட்ட திருத்தத்தை எதிர்த்து தி.மு,க கட்சியின் சார்பில் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. அண்ணாதுரை கைது செய்யப்பட்டு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.
- 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க தலைமையிலான ஐக்கிய கூட்டணி வெற்றி பெற்று அண்ணா தமிழக முதலமைச்சரானார். இந்த கூட்டணியில் ராஜாஜியின் சுதந்திரா கட்சி, மார்க்சிய கம்யூஉனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு கட்சி, சம்யுக்த சோஷலிஸ்டு கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, இந்திய குடியரசுக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருந்தன. பெரியார் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளித்திருந்தார்.
- படி அர்சி திட்டத்தை (ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி) 15-5-1967 அன்று சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அறிமுகப்படுத்தினார். ரூ. 5 கோடி செலவில் அமல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 31 லட்சம் ஏழைகள் பயனடைந்தார்கள். ஆனால் நிதி நெருக்கடியால், இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த இயலவில்லை.
- ரூ.1500 க்கும்க் குறைவாக மாதவருவாய் கொண்ட பெற்றோரின் பிள்ளைகளுக்கு இலவச பல்கலைக்கழக முன்சட்ட கல்வி பெற வழிவகை செய்யப்பட்டது. இவ்வசதி அனத்து சாதியினருக்கும் வழங்கப்பட்டது.
- தனிநபர்கள் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டது.
- தமிழகத்தில் தொழில்துறையை மேம்படுத்தும் நோக்கோடு, 1967 ஜீலை மாதம் தொழில் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டது.
- தமிழ் மொழி வளர்ச்சித் திட்டத்தை அறிவித்தார்.
- சித்திரை முதல் தேதியை தமிழ் புது வருட நாளாக (14-04-1967) அறிவித்தார்.
- சென்னை மாநிலம் என்பதை தமிழக அரசு அல்லது தமிழகம் என 16 ஏப்ரல் 1967 அன்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

- புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியேட் என்பதை தலைமைச் செயலகம் எனவும், 'சத்யமேவ ஜெயதே' என்ற அரசுக் குறிக்கோளை 'வாய்மையே வெல்லும்' எனவும் மாற்றி அறிவித்தார்.
- "ஸ்ரீ, ஸ்ரீமதி, மற்றும் குமாரி" என்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக "திரு, திருமதி மற்றும் செல்வி" ஆகிய தமிழ் சொற்களை அறிவித்தார்.
- 1968 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து கௌவுரவித்தது.
- பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் தேதி முதலமைச்சர் ஆனார். தி.மு.க. 138 சட்டமன்ற தொகுதிகளில் வென்றிருந்தது. தமிழில் பதவி ஏற்பு உறுதிமொழியை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.
- ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி எனும் வடமொழிச் சொற்களுக்கு மாற்றாக திரு, திருமதி, செல்வி என்னும் தமிழ்ச் சொற்களை அரசு பாடங்களில் ஆவணங்களில் பயன்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்.
- 9 ஜூன் 1967 இல் தலைமைச் செயலகத்தில் திருவள்ளுவர் படத்தை திறந்து வைத்தார்.
- பெரியாரின் சுயமரியாதைத் திருமணமுறையை சட்டப்பூர்வமாக்குவதற்காக, 18-7-1967 அன்று 'இந்து திருமணங்கள் திருத்த மசோதாவை ' (Hindu Marriages Amendment Bill) சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.
- கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் வண்ணம், கலப்பு திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.
- இரண்டாவது உலக தமிழ் மாநாட்டை 3-10 ஜனவரி 1968 தினங்களில் சென்னையில் நடத்தினார். இந்த மாநாட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகமும், தி,மு,க அரசும் இணைந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடத்தின. இந்திய குடியரசுத் தலைவர் ஜாகிர் உஷேன் இம்மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டிற்கு அண்ணா தலைமை தாங்கினார்.
- தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கல்விசாலைகளிலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளை மட்டுமே பயிற்றுவிக்கப்படும் என்பதான இருமொழிக் கொள்கைக்காக 23-1-1968 அன்று தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- தமிழ் வளர்த்த சான்றோர் சிலைகளைக் மெரினா கடற்கரையில் நிறுவினார்.
- திருக்குறள் ஆராய்ச்சிக்காக பல்கலைக்கழகங்களில் திருக்குறள் துறையைத் தொடங்கினார்.
- நிதி அமைச்சர் என்ற முறையில் ஆடம்பர செலவுகளை குறைத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்குச் செலவிட்டார். படியரிசித் திட்டம் வழங்கினார். மதுவிலக்கு கொள்கையை நிலைநிறுத்தினார்.

- வீராணம் குடிநீர் திட்டம் I : வீராணம் ஏரி, தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்திலுள்ள நாட்டர்மங்கலம் என்ற ஊரில் 14 கி.மீ ல் (8.7 மைல்) அமைந்துள்ளது. கிபி.10 ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழனின் மகன் ராஜாதித்தன் கொள்ளிடம் ஆற்றின் நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்க கட்டியது . 1967 ஆம் ஆண்டு வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு நீர் வழங்குவதற்காக வீராணம் திட்டம் 1967 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆன எம். கருணாநிதியின் காலத்தில் நிறைவேற்றப்பட்டது.
- 1967 ஜீலை மாதத்தில் தலைமைச் செயலகத்தின் பெயர் ' தமிழ்நாடு அரசாங்க செயலகம்' என மாற்றப்பட்டது.
- 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சர் நல நிதி (Chief Minister Welfare Fund) தொடங்கப்பட்டது.
- அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்றும் ஏப்ரல் 1968 ல் அமெரிக்காவுக்கு சென்றார். செல்லும் வழியில் வாடிக்கன் நகரில் போப்பாண்டவரையும் சந்தித்து உரையாடினார்.
- கீழவெண்மனீக் கொடுமை நிகழ்வு (25 டிசம்பர் 1968) : தஞ்சாவூர் மாவட்டம் கீழவெண்மணி கிராமத்தில், விவசாயக் கூலியை உயர்த்திக் கேட்ட, 42 ஆதி திராவிடப் பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் ஒரே குடிசைக்குள் உள்ளே வைத்து பூட்டப்பட்டு எரித்து கொல்லப்பட்ட நிகவு அண்ணாவின் ஆட்சியில் நடைபெற்ற துயர சம்பவமாகும்.
- 14 ஜனவரி 1969 ல் சென்னை மகாணத்தின் பெயர் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தோடு தமிழ்நாடு என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- தமிழ், ஆங்கிலம் இருமொழிகளே போதும் இந்தி தேவையில்லை, என்ற தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது
- "பரதன், சமதர்மன், நக்கீரன், குறிப்போன், பீரன், ஒற்றன், வீனஸ்" என பல்வேறு புனைப்பெயருடன் கட்டுரைகள் எழுதினார்.
- புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அண்ணா அவர்கள் 3 பிப்ரவரி 1969 நாள் காலமானார். அவரது இறுதி ஊர்வலட்டில் ஒன்றரை கோடி மக்கள் கலந்து கொண்டனர் என்று கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- உடல் அடக்கமான இடத்தில் "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்று பொறித்துள்ளனர்.

**மு.கருணாநிதி தலைமையிலான தி,மு,க. ஆட்சி (10 பிப்ரவரி, 1969 - 31 ஜனவரி, 1976)**

- பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் (1955-1960) பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது. கேரள மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே, 29.05.1970 அன்று மேற்குறிப்பிட்டுள்ள நதிகளிலிருந்து கிடைக்கக் கூடிய நீரை இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை

பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு 09.11.1958 முதல் முன் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய தாலுகாக்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன.

❖ தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் அறிவிப்பு : மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய புகழ்பெற்ற நாடகமான மனோன்மணீயம் நூலில் இடம்பெற்ற "நீராருங்க கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்...." எனும் பாடல் ஜூன் 1970ஆம் ஆண்டு தமிழக அரசால் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் 3-6-1971 ல் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்காக மாவட்டங்களில் விடுதிகள் கட்டப்பட்டு அங்கு நல்ல உணவு மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது.

❖ இலவசக் கண்ணொளி வழங்கும் திட்டம் 3-6-1972 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இலவச கண் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு , அவற்றின் மூலம், கண் மருத்துவ நிபுணர்களால் இலவச கண்படல அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

❖ குடிசை மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது . குடிசை மாற்றுத் திட்டத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்க Tamil Nadu Areas Improvement and Clearance Act, 1971 இயற்றப்பட்டது.

❖ ஆதரவற்ற குழந்தைகளுக்கு திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் திட்டம் 3-6-1975 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கருணை இல்லங்கள் ஆலயங்களோடு இணைக்கப்பட்டும் அவற்றின் செலவினங்களை அரசும் , ஆலய நிர்வாகமும் இணைந்து பகிர்ந்து கொண்டன.

❖ கை ரிக்‌ஷாக்களை ஒழித்துச் சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்கும் திட்டம் 3-6-1973 அன்று அறிவிக்கப்பட்டது. இதன் மூலம், ஆயிரக்கணக்கான கை ரிக்‌ஷா தொழிலாளர்களுக்கு இலவச சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்கப்பட்டன.

❖ மாற்றுத் திறனாளிகள் நல வாழ்வுத் திட்டம் 3-6-1974 அன்று தொடங்கப்பட்டது. இதன் மூலம், அரசின் பல்வேறு தொழிற்கூடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க வசதிகள் செய்யப்பட்டன. மாமல்லபுரம் அருகே முட்டுக்காடு என்ற இடத்தில் டொரு தொழிற்சாலை நிறுவப்பட்டு, அங்கு மாற்றுத்திறனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், ஆயிரக்கணக்கான ஊனமுற்றோருக்கு இலவச மூன்று சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. ஊனமுற்ற சிறுவர்களுக்காக சிறப்புப் பள்ளிகளும் திறக்கப்பட்டன.

❖ **ராஜமன்னார் குழு அமைப்பு :**

மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக தமிழக அரசு பி.வி.ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை 1969 இல் அமைத்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஏ.லெட்சுமண முதலியார் மற்றும் ஆந்திராவின் முன்னாள் தலைமை நீதிபதி பி.சந்திரா ரெட்டி ஆகியோரும் இதில் அங்கம் வகித்தனர். 27-05-1971 இல் இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

**ராஜமன்னார் குழுவின் சில பரிந்துரைகள் :**

- அரசியலமைப்புச் சட்டத்தின் 7-ஆவது இணைப்பிலுள்ள அதிகாரப் பட்டியல்களின் பொருளடக்கத்தை மாற்றியமைத்து மாநிலங்களுக்கும் சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்கவேண்டும். இப்போது நீட் பிரச்னையில் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது.
- கார்ப்பரேஷன் வரி, ஏற்றுமதி தீர்வைகள், சுங்க வரிகள் போன்ற வரிகளின் பங்கும் பகிர்வும் மாநிலங்களுக்கு அதிகரித்து வழங்க வேண்டும். மாநிலங்களுக்கு வருவாயை அதிகப்படுத்த வேண்டும். வரி சீர்திருத்தம் வேண்டும் மாநிலங்களுக்கான நியாயமான நிவாரணங்கள், மானியங்கள் குறித்தான உரிமைகளை எந்தச் சிக்கலும் இல்லாமல் தாராளமாக வழங்க வேண்டும்.
- ஆளுநர், மாநில அரசுகளின் ஆலோசனையைப் பெற்றே நியமிக்கப்பட வேண்டும்.
- அவசர நிலை பற்றி முடிவெடுக்கும்போது, அந்த நெருக்கடி கால அறிவிப்பைப் பிரகடனப்படுத்தும்போது மாநிலங்களின் இடையேயுள்ள உறவு கவுன்சிலிடம் (Inter State Council) கலந்தாலோசித்து அறிவிக்கப்பட வேண்டும்.
- நீதித்துறையில் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்போது மாநில அரசு, ஆளுநர், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் கருத்துகள் முக்கியமாகக் கருதப்பட வேண்டும்.
- மாநிலங்களவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.
- மாநிலங்களிடையே உள்ள நீர் தகராறுகளை உச்ச நீதிமன்றம் முடிவுசெய்து அதன் ஆணைகளை உடனடியாக மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்.
- அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்றால், மாநிலங்களில் மூன்றில் இருபங்கு மாநில சட்டமன்றங்கள் அதை ஏற்க வேண்டும்.

❖ அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமணத் திட்டம், 1969 – 1976-ல் தங்கப் பதக்கம், 1989 – 1990-ல் ரூ.5,000 நிதியுதவி, 1996-ல் ரூ.10,000 நிதியுதவி, 1997 முதல் ரூ.20,000 நிதியுதவியாக அதிகரிக்கப்பட்டது.

❖ அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்.

❖ பணிக் காலத்தில் உயிரிழக்கும் அரசு ஊழியர் வாரிசுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்கும் திட்டம்.

- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம். 1975-ல் திட்டம் தொடக்கம், 1989-ல் நிதியுதவி ரூ.5,000. 1997 – 1998-ல் நிதியுதவி ரூ.7,000. 1999 – 2000-ல் நிதியுதவி ரூ.10,000.

- மாநிலத் திட்டக் குழு (State Planning Commission) 1971 ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்டடு. முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட இந்த திட்டக்குழுவின் முதல் துணைத் தலைவராக , அப்போதைய தலைமைச் செயலர் இ.பி.இராயப்பா நியமிக்கப்பட்டார். இதுவே இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் மாநிலத் திட்டக் குழு என்பது சிறப்பிற்குரியது.

- காவல்துறை மேம்பாட்டுக்கு 1969-ல் முதலாவது காவல் ஆணையம். 1989-ல் இரண்டாவது காவல் ஆணையம். 2006-ல் மூன்றாவது காவல் ஆணையம்.

- மது விலக்கு இரத்து : இராஜாஜி காலத்தில் தமிழ் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த மதுவிலக்கு, அரசின் நிதி நெருக்கடையைக் காரணமாகக் காட்டி, 30 ஆகஸ்டு 1971 ல் இரத்து செய்யப்பட்டது.

- கச்சத்தீவுப் பிரச்சனை : 1948 ஆம் ஆண்டிலிருந்து கச்சத்தீவு சென்னை ஜமீந்தாரி ஒழிப்புச்சட்டத்தின் படி தமிழ்நாட்டின் தாலுக்காக்களில் ஒன்றாக இருந்துவந்தது. கச்சத்தீவு யாருக்கு சொந்தமானது என்ற பிரச்சனை இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே நெடுங்காலமாக இருந்தது. இறுதியாக, 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இந்தியா – இலங்கை இடையே நடைபெற்ற உடன்படிக்கைகளின் படி கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நடவடிக்கையை, அப்போதைய இந்திராகாந்தி தலைமைலான மத்திய அரசு தமிழக அரசிடம் கலந்து பேசாமல் தன்னிச்சையாக நிறைவேற்றியதால், தி.மு.க. அரசு இதனை எதிர்ப்பு தெரிவித்துவந்தது.

- இந்திராகாந்தி அரசு 26-6-1975 அன்று நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்ததைக் கண்டித்து, இந்தியாவில் முதல் மாநிலமாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றியது. 31-1-1976 ல் தி.மு.க அரசு கலைக்கப்படுவதாக அப்போதைய குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது ஆணை பிறப்பித்தார். தமிழகத்தை நிர்வகிக்க பி.கே.தவே, ஆர்.வி.சுப்பிரமணியம் ஆகியோர் ஆளுநரின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர்.

- சென்னையில் ஜெமினி மேம்பாலம் / 'அண்ணா மேம்பாலம்' 17 ஜீலை 1973 அன்று கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, 'மாநில சுயாட்சி தீர்மானத்தை' கருணாநிதி அவர்களின் தலைமையிலான தி.மு.க அரசு 16-4-1974 அன்று நிறைவேற்றியது.

- சுற்றுலா வாரியம்.

- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (Tamil Nadu Water Supply and Drainage Board) 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. .

- ஆதிதிராவிடர் இலவசக் கான்க்ரீட் வீட்டு வசதித் திட்டம்.

- சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டம்.
- பிற்படுத்தப்பட்டோர் – மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கெனத் தனி அமைச்சகம்.
- பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு அமைத்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் இட ஒதுக்கீடுகளை உயர்த்தியது.
- பேருந்துகள் நாட்டுடைமை, போக்குவரத்துக் கழங்கங்கள் உருவாக்கம்.
- அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் திட்டம்.
- விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை உரிமைச் சட்டம்.
- சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா 18-9-1970 அன்று நடைபெற்றது. அப்போதைய இந்திய பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.
- உச்சவரம்புச் சட்டம் 1970 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், தனி நபர்களின் நில உச்ச வரம்பு 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராகக் குறைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அரசு கையக்கப்படுத்திய 88,146 ஏக்கர் நிலம் நிலமற்ற ஏழைகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.
- 1,78,880 ஏக்கர் உபரி நிலம் மீட்கப்பட்டு 1,37,236 வியசாயிகளுக்கு வழங்கப்பட்டது.
- **சிப்காட் தொடக்கம்** : பொதுத்துறை நிறுவனமான மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT- State Industries Promotion Corporation of Tamil Nadu) 1972 ல் தொடங்கப்பட்டது. இது பல சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கிறது.
- **பூம்புகார் கப்பற் போக்குவரத்துக் கழகம்**. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் (Poompuhar Shipping Corporation Limited), 1974 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் கப்பல்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை வெளிநாடுகளிலிருந்து ஏற்றி வருகிறது. மேலும் சுற்றுலா தலங்களில் குறிப்பாக கன்னியாகுமரியின் விவேகானந்தர் பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கும் சுற்றுலா பயணிகளை விசைப்படகுகளில் ஏற்றிச் செல்கிறது

(தகவல்கள் ஆதாரம் : https://dmk.in/achievements)

**மு.கருணாநிதி தலைமையிலான தி,மு,க. ஆட்சி (27 ஜனவரி, 1989 - 30 ஜனவரி, 1991)**

- தமிழக அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம், பொங்கல் முன்பணம் உள்ளிட்ட சலுகைகள்.
- பெண்களுக்கு சொத்துரிமை வழங்கிடத் தனிச் சட்டம்.
- ஏழைப் பெண்கள் பயன்பெறும் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம். 1989-ல் ரூ.5,000 நிதியுதவி, 1996-ல் ரூ.10,000 நிதியுதவி, 2006-ல்

- ரூ.15,000 நிதியுதவி, 2007-ல் ரூ.20,000 நிதியுதவி.
- ஈ.வெ.ரா – நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்.
- வட சென்னையில் புதிதாக அனல் மின் நிலையம் தொடங்கப்பட்டது.
- சென்னையில் உள்ள உள்நாட்டு விமான நிலையத்திற்கு காமராஜர் பெயரும், வெளி நாட்டு விமான நிலையத்துக்கு அண்ணா பெயரும் சூட்டப்பட்டது.
- ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், வருமான வரபுக்கு உட்பட்ட பிற்படுத்தப்பட்டோரில் பெண்களுக்குப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி, 2008-ல் முதுகலைப் பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி.
- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம். 1989- 1990-ல் ரூ.200 நிதியுதவி, 1996- 2001-ல் ரூ.500 நிதியுதவி, 2006-ல் ரூ.6,000 நிதியுதவி.
- மகளிர் திட்டத்தின் மூலம் மாநிலமெங்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள்.
- வன்னியர், சீர்மரபினர் உட்பட மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு.
- ஆதிதிராவிடர்களுக்கு மட்டும் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு நிர்ணயித்து, பழங்குடி இனத்தவருக்கு 1 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு.
- மகளிர்க்கு அரசு வேலை வாய்ப்பில் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு. பள்ளிகளில் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்.
- நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பு.
- இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அரசுடைமையாக்கப்பட்டு, எம்.ஜி.ஆர் பெயரில் மருத்துவப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது.
- ஆசியாவிலேயே முதல் கால்நடைப் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்டது.

(தகவல்கள் ஆதாரம் : https://dmk.in/achievements)

**மு.கருணாநிதி தலைமையிலான தி,மு,க. ஆட்சி (13 மே, 1996 - 13 மே, 2001)**

- உயர்கல்வித் துறை உருவாக்கம்.
- நெடுஞ்சாலைத் துறை உருவாக்கம்.
- தகவல் தொழில்நுட்பத் துறை உருவாக்கம்.
- சமூக சீர்திருத்தத் துறை உருவாக்கம்.
- இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை உருவாக்கம்.

- சென்னையில் டைடல் பூங்கா அமைக்கப்பட்டது.
- உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு.
- பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் 1997-1998 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முதல் சமத்துவபுரம் 17-08-1998 அன்று மதுரை மாவட்டம் மேலக்கோட்டை கிராமத்தில் 100 வீடுகளுடன் தொடங்கி வைக்கப்பட்டது. பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது. சாதி சமய வேறுபாடின்றி பயனர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்த சமத்துவ புரங்களில் குடியேற்றப்பட்டனர்.
- உழவர் சந்தைத் திட்டம், 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முதல் உழவர் சந்தை மதுரையில் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பின்னர் இவை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்த சந்தைகளில் உழவர்கள் தங்கள் விளை பொருட்களை எந்தவித இடைத்தரகர்களின் குறிக்கீடும் இன்றி நேரடியாக விற்பனை செய்யலாம். இவர்களுக்காக ஒதுக்கப்படும் இடத்திற்கு வாடகை கொடுக்க வேண்டியதில்லை. காய்கறிகள் , பழங்கள் போன்றவற்றின் விலை சந்தைக்குழுவால் நிர்ணயிக்கப்படும்.
- வருமுன் காப்போம் திட்டம்.
- கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்.
- பள்ளிகளில் வாழ்வொளித் திட்டம்.
- விவசாயத் தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர் நலனுக்கெனத் தனித்தனி நல வாரியங்கள்.
- தாய்மொழி வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம்.
- போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்.
- தென்குமரியில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை 1-1-2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- ஆட்சிப் பொறுப்பேற்ற 6 மாதங்களுக்குள் தடைபட்டுக் கிடந்த உள்ளாட்சி
- அமைப்புகளுக்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல்.
- கிராமங்கள்தோறும் சிமெண்ட் சாலைகள்.
- வரலாறு காணாத வகையில் ஆறு, குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் தூர்வாரும் திட்டம்.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம்.
- கிராமப்புற பெண்களுக்குத் தொழிற்கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு.
- கிராமப்புறங்களுக்கு மினிபஸ் திட்டம்.
- சென்னை கோயம்பேட்டில் ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையம்.

- சேமிப்புடன்கூடிய மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்.
- பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டம்.
- மதுரை மாநகரில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமைக்கப்பட்டது.
- மாணவர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டது.
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.
- 10,000 சாலைப் பணியாளர்கள் நியமனம்.
- 13,000 மக்கள் நலப் பணியாளர்கள் மீண்டும் நியமனம்.

(தகவல்கள் ஆதாரம் : https://dmk.in/achievements)

**மு.கருணாநிதி தலைமையிலான தி,மு,க. ஆட்சி (13 மே, 2006 - 15 மே, 2011)**

- நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ அரசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம் 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தபட்டது.
- 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி.
- வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி திட்டம் 15-9-2006 ல் தொடங்கப்பட்டது.
- விவசாயிகளுக்கான பயிர்க்கடன் வட்டி 2005-2006-ல் 9 விழுக்காடு, 2006-2007 ல் 7 விழுக்காடு, 2007-2008-ல் 5 விழுக்காடு, 2008-2009-ல் 4 விழுக்காடு , 2009-2010-ல் பயிர்க்கடன் வட்டி ரத்து.
- 'வருமுன் காப்போம் திட்டம்' என்ற பெயரில் நோயத்தடுப்பு திட்டம் 30-12 2006 அன்று தொடங்கப்பட்டது.
- ஆதிதிராவிட விவசாயிகள் 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற கடன் தொகை வட்டியுட்பட 5 கோடியே 25 லட்சம் தள்ளுபடி.
- நில அடமானத்தின்மீது தொழில்புரிய வழங்கப்பட்ட பண்ணைசாராக் கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு, வாங்கிய கடன் அசல் தொகையைச் செலுத்தினால் கடன் ரத்து.
- மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்.
- 369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம்.
- விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து சுழல்நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 294 குழுக்கள் அமைக்கப்பட்டு, 27 கோடியே 29 லட்சத்து 40

ஆயிரம் ரூபாய் சுழல்நிதியாக வழங்கப்பட்டு, 32 ஆயிரத்து 940 குழுக்களுக்கு 402 கோடியே 56 லட்சம் ரூபாய் பயிர்க் கடனாகவும் அளிக்கப்பட்டுள்ளது.

- விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தில், மின்சாரம் விரயமாவதைத் தடுத்திட, சிறுகுறு விவசாயிகளுக்கு பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக இலவசமாக புதிய மின்மோட்டார்களும், பெரும் விவசாயி களுக்கு பம்ப்செட்டுகளில் உள்ள பழைய மின் மோட்டார்களுக்குப் பதிலாக 50 சதவீத மானியத்தில் புதிய மின்மோட்டார்களும் 5 ஆண்டுகளில் மாற்றி அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1 லட்சத்து 5 ஆயிரத்து 494 கைத்தறி நெசவாளர்களுக்கும், 90 ஆயிரத்து 547 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்ற 2 லட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம். மேலும், 2 லட்சம் பம்ப் செட்டுகளுக்கும் இலவச மின்சார இணைப்பு படிப்படியாக வழங்கிட ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டது.
- விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 35 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 13 லட்சத்து 55 ஆயிரத்து 884 உறுப்பினர்கள் சேர்ப்பு.
- 21 லட்சத்து 41 ஆயிரத்து 692 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1011 கோடியே 62 லட்சத்து 81 ஆயிரத்து 687 ரூபாய் உதவித் தொகை.
- தென்னை விவசாயிகளின் நலன்களை மேம்படுத்திட திரு. ச. ராஜ்குமார் மன்றாடியார் தலைமையில் 27.8.2010 அன்று தென்னை விவசாயிகள் நல வாரியம் அமைப்பு.
- 3742 கோடியே 42 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய்ச் செலவில் ஒரு கோடியே 72 லட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கள் வழங்க முடிவு செய்யப்பட்டு, ஒரு கோடியே 62 லட்சத்து 59 ஆயிரத்து 526 குடும்பங் களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- 661 கோடி ரூபாய்ச் செலவில் 29 லட்சம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டன.
- 1 லட்சத்து 79 ஆயிரத்து 2 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 லட்சத்து 12 ஆயிரத்து 995 ஏக்கர் இலவச நிலம் வழங்கப்பட்டது.
- 8 லட்சத்து 30 ஆயிரத்து 495 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள்.
- காமராஜர் பிறந்த நாளில் "கல்வி வளர்ச்சி நாள்" என பள்ளிகளில் கல்வி விழா.
- 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 73 லட்சம் குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 5 நாட்களும் முட்டைகள், சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழங்கள்.

- தமிழ் வழியில் பயிலும் 50 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும், 11 லட்சம் மாணவ, மாணவியருக்கு 10, 12ஆம் வகுப்பு களின் அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.
- பட்டப்படிப்பு பயிலும் 3 லட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரி மாணவ மாணவியரின் படிப்புக் கட்டணங்கள் ரத்து, 2010-2011 முதல் எம்.ஏ., எம்.எஸ்சி., வகுப்புகளுக்கும் படிப்புக் கட்டணங்கள் ரத்து.
- படிப்பைத் தொடர இயலாமல் இடையில் நிறுத்திய ஏழை மாணவர்களில் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளுக்கேற்ற தொழிற் பயிற்சிகளைச் சமுதாயக் கல்லூரிகள் மூலம் பெற, ஒரு கோடி ரூபாய் செலவில் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் மூலம் தலா ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.
- ஆண்டுதோறும் 24 லட்சத்து 82 ஆயிரம் பள்ளி மாணவர்களுக்கும், 4 லட்சத்து 35 ஆயிரம் கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்.
- ஏழை மகளிர்க்கு பட்டப்படிப்பு வரை வழங்கப்பட்ட இலவசக் கல்வி, முதுகலைப் பட்டப் படிப்பு வரை நீட்டிப்பு.
- தொழிற்கல்வி படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வு ரத்து.
- பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களிலிருந்து ஒற்றைச் சாளர முறையில் தொழிற் கல்லூரிகளில் சேரும் முதல் தலைமுறை மாணவர் களுக்குக் கல்விக் கட்டணம் 20 ஆயிரம் ரூபாய் ரத்து செய்யப்பட்டு முதலாண்டில் 67 ஆயிரத்து 405 மாணவ மாணவியரும் இரண்டாம் ஆண்டு நேரடிச் சேர்க்கையில் 10 ஆயிரத்து 750 மாணவ மாணவியரும் பயன்பெற்றனர்.
- சென்னை, கோவை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில் 5 புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள்.
- 2006க்குப்பின், ஒரத்தநாடு, பெரம்பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம், பென்னாகரம், திருப்பத்தூர் (வேலூர்), வேதாரண்யம் ஆகிய 14 இடங்களில் அரசின் புதிய கலை அறிவியல் கல்லூரிகள்.
- "மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி" கோட்பாட்டின்படி விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 6 புதிய மருத்துவக் கல்லூரிகள்.
- அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லா திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் ஆகிய 12 மாவட்டங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள்.
- பத்தாம் வகுப்புவரை பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடமெனச் சட்டம்.

- நூறாண்டுக் கனவை நனவாக்கிச் "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்" சென்னையில் அமைப்பு.
- 2010 ஜூன் 23-27 தினங்களில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.
- தஞ்சையில் 2010 செப்டம்பரில் மாமன்னர் இராஜராஜனின் தஞ்சைப் பெரிய கோயில் 1000-ம் ஆண்டு நிறைவு விழா.
- அருந்தமிழ்ச் சான்றோர் 113 பேரின் நூல்கள் நாட்டுடைமை, 7 கோடியே 61 லட்சம் ரூபாய் பரிவுத் தொகை.
- நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பது 1.9.2006 முதல் 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2006-க்குப்பின் புதிதாக 2500 நலிந்த கலைஞர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டு 9 ஆயிரத்து 563 கலைஞர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெற்றுள்ளனர்.
- தமிழறிஞர்கள் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் 999 தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஒய்வூதியம் 15 ரூபாய் மருத்துவப் படியும், 528 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாதம் 1500 ரூபாய் குடும்ப ஒய்வூதியமும் 15 ரூபாய் மருத்துவப் படியும் வழங்கப்படுகிறது.
- எல்லைக் காவலர்கள் 339 பேருக்கு மாதந்தோறும் 4 ஆயிரம் ரூபாய் ஒய்வூதியம், 15 ரூபாய் மருத்துவப்படியும், 166 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு மாதம் 2000 ரூபாய் குடும்ப ஒய்வூதியமும் 15 ரூபாய் மருத்துவப்படியும் வழங்கப்படுகிறது.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் உட்பட அனைத்துத் திருமண உதவித் திட்டங்களின் நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 4 லட்சத்து 67 ஆயிரத்து 419 ஏழைப் பெண்களுக்கு 882 கோடியே 6 லட்சம் ரூபாய் நிதியுதவி.
- ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவித் திட்டத்தின்கீழ் 25 லட்சத்து 76 ஆயிரத்து 612 ஏழை மகளிர்க்கு மொத்தம் 1389 கோடியே 42 லட்சம் ரூபாய் நிதியுதவி.
- 50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் 12 ஆயிரத்து 904 ஏழைப் பெண்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை.
- தமிழகத்தில் உள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், புதிதாக உருவாக்கப்பட்ட 116 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தலா மூன்று செவிலியர்களைப் பணியமர்த்தி, 24 மணிநேரமும் மருத்துவ சேவை அளிப்பதால், அங்கு 2005-2006-ல் நடைபெற்ற மகப்பேறுகளின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 532 என்பது, 2009-2010-ல் 2 லட்சத்து 98 ஆயிரத்து 853 ஆக மூன்று மடங்கு உயர்ந்து கிராமப்புற மகளிர் மகிழ்ச்சியடைந்தனர்.

- குழந்தைகள் உயிர் காத்திட மூடிய அறுவை சிகிச்சைக்கு 20 ஆயிரம் ரூபாய், சாதாரண திறந்த அறுவை சிகிச்சைக்கு 50 ஆயிரம் ரூபாய், கடினமான திறந்த அறுவை சிகிச்சைக்கு 1 லட்சம் ரூபாய் என அரசு நிதி உதவி வழங்கப்பட்டது. 21.11.2007-ல் தொடங்கப்பட்ட இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம், 3.6.2008-ல் தொடங்கப் பட்ட பள்ளிச் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின்கீழ் 3264 சிறார்க்கு 17 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் புகழ்வாய்ந்த 28 தனியார் மருத்துவமனைகளின் மூலம் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, குழந்தைச் செல்வங்களின் அரிய உயிர்கள் பாதுகாக்கப்பட்டன.
- கிராமப்புற ஏழைகளுக்கும் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து 15.9.2008-ல் தொடங்கப்பட்ட 445 ஊர்திகளுடன் கூடிய அதிநவீன "அவசர கால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்" தமிழகம் முழுவதும் நடைமுறை, 8 லட்சத்து 8 ஆயிரத்து 907 பேர் பயனடைந்தனர்.
- அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 லட்ச ரூபாய் வரை மருத்துவ உதவி வழங்கும் புதிய "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்".
- "உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" 2009 ஜூலை முதல் நடைமுறை, 1 கோடியே 34 லட்சம் குடும்பங்கள் பதிவு, 3 லட்சத்து 3 ஆயிரத்து 328 ஏழை மக்களுக்கு 781 கோடியே 40 லட்சம் ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப் பட்டன.
- இதய நோய், நீரிழிவு நோய், புற்றுநோய் போன்றவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த உடற்பரிசோதனை செய்யும், "நலமான தமிழகம் திட்டம்."
- மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பலனின்றி உயிரிழந்தவர்களின் உடல்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்ல இலவச அமரர் ஊர்தி சேவைத் திட்டம்.
- ஏறத்தாழ 2 லட்சத்து 35 ஆயிரத்து 464 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 62 ஆயிரத்து 349 கோடி ரூபாய் முதலீட்டிலான 27 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 24 அரசாணைகள் மூலம் 51 புதிய தொழிற் சாலைகள் அமைக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் 12 தொழிற்சாலைகள் திறப்பு.
- ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 1.9.2006-ல் 400 ரூபாய் எனவும், 24.11.2010 முதல் 500 ரூபாய் என மேலும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 23 லட்சத்து 71 ஆயிரத்து 370 பேர் மாதம் 500 ரூபாய் வீதம் உதவித்தொகை பெற்றனர்.
- கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 500 ரூபாய் என உயர்த்தப்பட்டு, 2006 முதல் ஆண்டுதோறும் 10 ஆயிரம் கடும் மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றனர்.
- 1989-ல் தருமபுரி மாவட்டத்தில் தி.மு.க. அரசு தொடங்கிய மகளிர் சுய உதவிக்குழு திட்டத்தின்மூலம் 2011 வரை உருவாக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின்

எண்ணிக்கை 5,54,538. இக்குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் 9 ஆயிரத்து 32 கோடி ரூபாய். 2006-க்குப்பின் 26 லட்சத்து 95 ஆயிரம் மகளிர் உறுப்பினரைக் கொண்ட 1 லட்சத்து 75 ஆயிரத்து 493 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 7,756.13 கோடி ரூபாய் அளவுக்கு பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 2,81,883 மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்ட சுழல் நிதி 281 கோடியே 88 லட்சம் ரூபாய்.

- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செப்டம்பர் 2006 ல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய அம்சம் 2,549 கோடி ரூபாய்ச் செலவில் 12 ஆயிரத்து 618 கிராம **ஊராட்சிகளில்** அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றுவதாகும்,
- அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 280 கோடி ரூபாய்ச் செலவில் 561 பேரூராட்சிகளில் கட்டமைப்புப் பணிகள், நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளிலும் தலா 75 லட்சம் ரூபாய்ச் செலவில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- மாநகராட்சி, நகராட்சிகளின் நிதிநிலை மேம்பட்டு மக்களுக்கு வசதிகள் செய்திட அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய 793 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி.
- 12 ஆயிரத்து 94 கோடி ரூபாய்ச் செலவில் 57 ஆயிரத்து 787 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.
- தமிழகத்தில் உள்ள சாலைகளில் 1046 பாலங்கள் மற்றும் 3800 மிகச் சிறுபாலங்கள் 881 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள 4,676 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளில் 3,226 கி.மீ நீளச் சாலைகள் 4 வழிச்சாலைகளாக மாற்றப்பட்டு உள்ளன.
- தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து, நிலவரி, ஏக்கர் ஒன்றுக்குப் புன்செய் நிலங்களுக்கு 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் பெயர் அளவிற்கு மட்டுமே வசூலிக்க அரசு ஆணை.
- ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய 4 நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டன.
- அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் உதயம்.
- தருமபுரி மாவட்டத்தில் அரூர்-புதிய கோட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் புதிய கோட்டம், திருப்பூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை புதிய கோட்டம் என மூன்று புதிய கோட்டங்கள்.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம் பட்டு, திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர், திருவள்ளூர் மாவட்டம் மாதவரம், கரூர் மாவட்டம் தரகம்பட்டியைத் தலைமை இடமாகக் கொண்டு கடவூர், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி, வேலூர் மாவட்டம் ஆம்பூர், திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆலந்தூர், சோழிங்கநல்லூர் என 9 புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- இஸ்லாமியர் சமுதாயம் மேன்மை பெற 3.5 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு.
- அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு.
- சமத்துவ சமுதாயம் காணும்நோக்கில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் நிறைவேற்றப்பட்டு பல்வேறு சாதிகளையும் சார்ந்த 216 பேருக்கு அர்ச்சகர் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.
- அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்க ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன் மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைத்து, 240 சமத்துவ புரங்களையும் தந்தை பெரியார் திருவுருவச் சிலைகளுடன் நிர்மாணிக்கும் திட்டம் நடைமுறை, 95 சமத்துவபுரங்களில் இதுவரை 65 சமத்துவபுரங்கள் திறப்பு.
- சென்னை கோட்டூர்புரத்தில் உலகத் தரத்திலான 179 கோடி ரூபாய்ச் செலவில் "அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்" 15.9.2010-ல் திறப்பு.
- ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைத் திட 910 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, புதிய சட்டமன்ற - தலைமைச்செயலக வளாகம் திறக்கப்பட்டது.
- 100 கோடி ரூபாய்ச் செலவில் அடையாறு தொல்காப்பியப் பூங்கா.
- சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் 8 கோடி ரூபாய்ச் செலவில் உலகத்தரத்திலான "செம்மொழிப் பூங்கா" 24.11.2010-ல் திறப்பு.
- சென்னை மாநகர் குடிநீர்ப் பற்றாக்குறையை முற்றிலும் தீர்த்திட, வட சென்னை மீஞ்சூரில் "கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்" நிறைவேற்றப்பட்டு, 31.7.2010-ல் திறப்பு.
- மத்திய அரசு அனுமதித்துள்ள 908 கோடி ரூபாய் நிதியுதவியுடன் தென் சென்னையில் நெம்மேலியில் "கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்," தொடங்கப்பட்டது.
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மெட்ரோ ரயில் திட்ட" அமைப்புப் பணிகள்.
- 1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில், "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்".
- 630 கோடி ரூபாய்ச் செலவில், "இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றம்".
- சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில், "பறக்கும் சாலைத் திட்டம்," பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்டது.
- மத சுதந்திரம் பேண - "கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து".
- 2006 ஆம் ஆண்டு "மூன்றாவது காவல் ஆணையம்" மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பூர்ணலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டு, அது வழங்கிய 444 பரிந்துரைகளில் இதுவரை 278 பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப்பட்டது. (1969-இல் கோபால்சாமி ஐயங்கார் தலைமையில் முதல் ஆணையமும், 1989-இல் அன்றைக்கு தலைமைச்

செயலாளராக இருந்த சபாநாயகம் தலைமையில் இரண்டாவது காவல் ஆணையமும் அமைக்கப்பட்டன.)

- 2 லட்சத்து 12 ஆயிரத்து 981 சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற காலமுறை ஊதியம், ஓய்வூதியம்.
- டெஸ்மா, எஸ்மா சட்டங்களை நீக்கி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் வழங்கப்பட்டு, 1.1.2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 லட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 6வது ஊதியக் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- ஏறத்தாழ 2 லட்சம் அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பயன்பெறும்வகையில் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவில் ஒரு நபர் குழு பரிந்துரை 1.8.2010 முதல் நடைமுறைபடுத்தப்பட்டது.
- அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப் படும் ஊர்திப்படி 300 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக 1.10.2010 முதல் உயர்த்தி வழங்கிட ஆணை.
- 21 லட்சம் குடிசை வீடுகளை 6 ஆண்டு களில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" என்னும் புரட்சிகரமான திட்டம் நடைமுறை. இத்திட்டத்தின்கீழ் முதல் வீடு கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே வல்லம்படுகை கிராமத்தில் 9.10.2010 அன்று பயனாளிக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 77 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 60 ஆயிரத்து 486 வீடுகளுக்குப் பயனாளிகள் குடிபுகுந்துள்ளனர். மேலும், 12 லட்சம் பயனாளிகளுக்கு தகுதி அட்டைகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மேலும் 3 லட்சம் குடிசைகள் இத்திட்டத்தின் கீழ் கான்கிரீட் வீடுகளாகக் கட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டு 2 லட்சத்து 98 ஆயிரத்து 162 வீடுகள் கட்டு வதற்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டன.
- "108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை" 2008 செப்டம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- "கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" 2-2-2009 ல் தொடங்கப்பட்டது, இத்திட்டத்தின் கீழ் ரூ.72000 க்குக் குறைவான ஆண்டு வருவாய் உள்ள குடும்பத்தினர் உயிர் காக்கும் உயர் சிகிச்சைகளை இலவசமாகப் பெற முடிந்தது.
- சமச்சீர் கல்வி முறைக்கான அவசரச் சட்டம் 27-11-2009 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சமச்சீர் கல்வி முறை தமிழ்நாட்டில் 2010-2011 கல்வியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

**தகவல்கள் ஆதாரம் :**


- https://dmk.in/achievements
- தற்காலத் தமிழ்நாட்டு வரலாறு, க.வெங்கடேசன்




www.portalacademy.in

## 4. அ.இ.அ.தி.மு.க ஆட்சியில் நலத்திட்டங்கள்

### எம். ஜி. இராமச்சந்திரன் (30 ஜூன், 1977 - 17 பிப்ரவரி, 1980 | 9 ஜூன், 1980 - 15 நவம்பர், 1984 | 10 பிப்ரவரி, 1985 -24 டிசம்பர், 1987)

தி.மு.க- விலிருந்து நீக்கப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள் 18 அக்டோபர் 1972 அன்று அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க.) என்ற புதிய கட்சியை தொடங்கினார். அவர் ஆட்சியின் முக்கிய மக்கள் நலத் திட்டங்கள் வருமாறு,

- கல்லூரிகளில் வழக்கத்திலிருந்த பி.யு.சி (Pre University Course) க்குப் பதில் மேல்நிலைப் பள்ளி படிப்பாக 10+2+3 என்ற கல்வி முறை எம்.ஜி.ஆர்.ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சென்னையில் அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகமும் (1978), தஞ்சாவூரில் தமிழ் பல்கலைக்கழகமும் (1981) , கோயம்பத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகமும் (1982), கொடைக்கானலில் அன்னை தெரசா பல்கலைக் கழகமும் (1982), காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகமும் (1985) எம்.ஜி.ஆர்.ஆட்சியில் உருவாக்கப்பட்டன.
- தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் எம்.ஜி. ஆர். அவர்களால் ஊரக பகுதிகளில் 01.07.1982 அன்றும் நகர்புறங்களில் 15.09.1982 அன்றும் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி, 5-14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பள்ளிகளிலும், 2-5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நல்வாழ்வு நிலையங்களிலும் சத்துணவு வழங்கப்பட்டது. இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முதலமைச்சர் இலவச சத்துணவு திட்ட நிதி தொடங்கப்பட்டது.
- ‘தெலுங்கு கங்கை திட்டத்திற்கு’ 1977 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் படி ஆந்திரமாநிலத்திலுள்ள கிருஷ்ணா நீர் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னையிலுள்ள சத்தியமூரித்தி சாகர் (பூண்டி நீர்தேக்கத்திற்கு) கொண்டுவரப்பட்டது.
- பெரியார் நூற்றாண்டு விழா 18-19 செப்டம்பர் 1978 தினங்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
- தமிழ் எழுத்து சீர்திருத்தம், பெரியார் நூற்றாண்டுவிழாவையொட்டி 19-10-1978 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.
- கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு ‘பெரியார் மாவட்டம்’ அமைக்கப்பட்டது.
- பிறபடுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 33 % த்திலிருந்து 50 % ஆக உயர்த்தப்பட்டது.
- ‘கர்ணம்’, ” கிராம முன்சீப் “ ஆகிய பரம்பரைப் பதவி ஒழிக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக ‘கிராம நிர்வாக அதிகாரிகள்’` நியமிக்கப்பட்டனர்.
- ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு 1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்றது.
- உலகத் தமிழ் சங்கத்துக்கென 20 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி 1986 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

- தமிழ்நாட்டில் சட்ட மேலவையை ஒழிப்பதற்கான மசோதா 14-5-1986 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதலுடன் 4-9-1986 அன்று சட்ட மேலவை ஒழிக்கப்பட்டது.
- **ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் :** எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் வழங்கும் சிறப்பான திட்டத்தை 1985 - 86 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது.

## ஜெ. ஜெயலலிதா ( 24 ஜூன், 1991 - 12 மே, 1996)

ஜானகி ராமச்சந்திரனைத் தொடர்ந்து, தமிழகத்தின் இரண்டாவது பெண் முதல்வராகப் பொறுப்பேற்றார் ஜெயலலிதா. 1991, 2001, 2002, 2011, 2015, 2016-ம் ஆண்டு காலகட்டங்களில் முதல்வராக பதவி வகித்ததன் மூலமாக, தமிழகத்தில் அதிக முறை முதல்வராக பதவி வகித்தவர் என்ற பெருமையும் ஜெயலலிதாவையே சேரும்.

- தொட்டில் குழந்தை திட்டம் என்பது தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் மட்டும் நடைபெற்று வந்த பெண் குழந்தைக் கொலையை முற்றிலும் ஒழித்திடும் நோக்கத்தில் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆட்சியில் 1992 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம், 2001 ஆம் ஆண்டில் மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. பெண் குழந்தைகளைக் கொலை செய்வதற்கு பதில், இத்தொட்டில்களில் குடும்பத்தார் இட்டுச் செல்கின்றனர். இக்குழந்தைகள் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள தொட்டில் குழந்தை மையங்களால் வளர்க்கப்படுகின்றன. இதன் மூலம், தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டில் 1000 குழந்தைகளுக்கு 942 பெண் குழந்தைகள் என இருந்த பாலின விகிதம் 2011 ஆம் ஆண்டில் 946 ஆக அதிகரித்துள்ளது.
- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் : 1992-ம் ஆண்டு முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் ஜெயலலிதா. அத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் வங்கியில் 50,000 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டுப் பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தை பெயரிலும் தலா 25,000 வைப்புத் ரூபாயும் இருப்பு வைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் அத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தால் கிடைக்கும் தொகை, ஏழைப் பெண்களின் உயர்கல்வி, திருமணம் போன்ற எதிர்காலத் தேவைகளுக்கு உதவியது, லட்சக்கணக்கான பெண்கள் இத்திட்டத்தால் பயன்பெற்றனர்.
- காவிரி நதிநீர் பிரச்சனைக்கு இடைக்காலத் தீர்வு : காவிரி நடுவர் மன்றம் கர்நாடகம் 205 டி.எம்.சி தண்ணீரை தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும் என 25-6-1991 அன்று நிர்ணயித்து உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றமும் இதனை உறுதி செய்தது. ஆனால், இதனை அமலாக்காமலிருந்த கர்நாடக அரசின் மெத்தனப் போக்கை கண்டித்து ஜெயலலிதா அவர்கள் 18-7-1993 அன்று எம்.ஜி.ஆர் சமாதிக்கு முன் உண்ணாவிரதத்தைத்

தொடங்கினார். பின்னர் மத்திய நீர்வளத்துறை அமைச்சரின் பேச்சுவார்த்தைக்கிணங்க 21-7-1993 அன்று உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

❖ பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்களை நாட்டுடைமை ஆக்கி, அதன் ஈட்டுத் தொகையாக ரூ.75 இலட்சத்தை முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் நேரடியாக அண்ணாவின் வீட்டுக்கு 2-11-1995 அன்று சென்று வழங்கினார்.

❖ பெண் சிசுக் கொலையை தடுத்து நிறுத்துவதற்காக தீவிர நடவடிக்கைகளை ஜெயலலிதா அரசு மேற்கொண்டது.

❖ ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்க்குநரகம் தொடக்கம் : மாற்றுத் திறனாளிகளுக்கான நல்த்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த 1993ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கான தனி இயக்ககம் சமூக நல இயக்ககத்திலிருந்து பிரித்து ஏற்படுடுத்தப்பட்டது.

❖ 1994 ஆம் ஆண்டு முதன் முறையாக மாற்றுத் திறனாளிகளுக்கான விரிவான மாநிலக் கொள்கை வெளியிடப்பட்டது.

❖ டாக்டர் ஜெ ஜெயலலிதா 15 அம்ச குழந்தை நலத்திட்டத்திட்டம்" 1993-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் தொடர் நடவடிக்கையாக 2001-2002 ஆம் ஆண்டு திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ இலவச இருசக்கர வண்டித் திட்டம் பள்ளி மாணவ – மாணவியர் நலனுக்காக அறிமுகம் செய்யப்பட்டது.

❖ 1992- ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலாவது அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்னை ஆயிரம் விளக்கில் தொடங்கப்பட்டது. படிப்படியாக மாநிலம் முழுவதிலும் இது விரிவுபடுத்தப்பட்டது.

❖ முறை 'தமிழ்நாடு பஞ்சாயத்து ராஜ் சட்டம் 1994 மூலம கொண்டு வரப்பட்டது. தமிழகததில முதல் உள்ளாட்சி தேர்தல் 1996 ஆம் ஆண்டு நடைபெற்றது.

**தகவல்கள் ஆதாரம் :**

- https://www.vikatan.com/government-and-politics/politics/74319-10-schemes-by-jayalalithaa-for-women-welfare
- https://tamil.indianexpress.com/tamilnadu/jayalalitha-achievements-in-tamilnadu-politics/

**ஜெ. ஜெயலலிதா ( 14 மே, 2001 - 21 செப்டம்பர், 2001 & 2 மார்ச், 2002 - 12 மே, 2006)**

❖ மழைநீர் சேர்கரிப்புத் திட்டம், 2001ம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. மூன்று வடிவத்தில் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்தை தமிழக அரசு, முதலில் கட்டடத்தின் அமைப்பின்படி அமைக்க வலியுறுத்தியது. பின், மழைநீர் சேகரிப்பு திட்டம் இல்லாத கட்டடத்திற்கு மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும் என எச்சரித்தது. மேலும், புதிதாக

கட்டப்படும் கட்டடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பு இருந்தால் மட்டுமே, "கம்ப்ளீசன்" சான்றிதழ் தரப்பட்டது. இதனால், அப்போது சென்னை மட்டுமல்லாமல் தமிழகம் எங்கும் பெரும்பான்மை கட்டடங்களில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

- அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திட்டம்: தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்ற முதல் பதவிக் காலத்தில்தான், பெண்களுக்கெதிரான குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கவும், பெண் காவலர்கள் மட்டுமே பணியாற்றும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடங்கப்பட்டன. பின்னர், 2003ல் மீண்டும் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பின்னர், பெண்களை மட்டுமே கொண்ட சிறப்பு பெண்கள் ஆயுதப்படையும் தொடங்கப்பட்டது.
- தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை, 2002 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- தமிழ்நாடு புதிய தொழில் கொள்கை (Tamil Nadu New Industrial Policy) 2013 ஆண்டு வெளியிடப்பட்டது.
- நமது கிராமத் திட்டம் 14-8-2004 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தெருவிளக்குகள். சிமெண்ட் பாதகள் போன்ற கிராம கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டன.
- புதிய வீராணத் திட்டம் 2004 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
- மகளிர் சுய உதவிக் குழுக்கள் : இது தமிழ்நாடு மாநில அரசு பெண்கள் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும் திட்டம் ஆகும். பெண்களை 12 முதல் 200 நபர் வரை கொண்ட குழுவாக அரசு சார நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகள் மூலம் அமைத்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் முதன் முதலில் தர்மபுரி மாவட்டத்தில் 1989 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்படுகிறது.

**ஜெ. ஜெயலலிதா ( 16 மே, 2011 -27 செப்டம்பர், 2014)**

- **பெண்களுக்கு இலவச சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டத்தை 2012-ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி வைத்தார்** ஜெயலலிதா. இந்த திட்டத்தின்படி கிராமங்களில் உள்ள 10 முதல் 19 வயது வரையிலான இளம் பெண்கள், மாணவிகள், இல்லத்தரசிகள் மற்றும் சிறைச்சாலையில் இருக்கும் பெண் கைதிகளுக்கும் இலவச சானிட்டரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன.
- **அம்மா உணவகத் திட்டம்** 24-02-2013 அன்று தொடங்கப்பட்டது. இந்த உணவகங்களில் இட்லி ஒரு ரூபாய்க்கும், சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.
- **மழைநீர் சேகரிப்பு திட்டம்** - 2011-இல் மீண்டும் முதல்வர் பொறுப்பை ஏற்றதும், சென்னை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் அனைத்து குடியிருப்புகள், கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு திட்டம் அதிரடியாக அமல்படுத்தப்பட்டது.

- **அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்** அரசு மருத்துவமனைகளில் குழந்தை பெற்றுக்கொள்ளும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் அரசின் பரிசாக, சோப்பு, பொம்மை, துண்டு, ஷாம்பூ, குழந்தைக்கான ஆடை உள்ளிட்ட 16 பொருட்கள் வழங்கும் 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பொட்டகம்' என்ற புதிய திட்டத்தை, 2015-ம் மார்ச் மாதம் அறிமுகப்படுத்தினார் ஜெயலலிதா.
- **முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் :** சாதாரண மக்களும் வசதிபடைத்தவர்களுக்கு இணையாக தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோக்கில், கருணாநிதி தலைமையிலான திமுக அரசு, 2010-இல் மருத்துவ காப்பீட்டு திட்டத்தை கொண்டு வந்தது. 2011-இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்தியது. அத்துடன், இத்திட்டத்தின் நிர்வாக பொறுப்பை, தனியார் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பொதுத் துறை நிறுவனத்துக்கு மாற்றப்பட்டது. இந்தத் திட்டமும் பொதுமக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றதையடுத்து, இந்தத் திட்டத்துக்கான ஆண்டு காப்பீட்டு தொகையை தமிழக அரசு ரூ.5 லட்சமாக அண்மையில் உயர்த்தியது.
- நகரங்களிலும் சிற்றுந்து (Small Bus) சேவை: பேருந்து வசதியில்லாத குக்கிராமங்களில் சிற்றந்து வசதியை கருணாநிதி தலைமையிலான திமுக அரசு கொண்டு வந்தது. அந்தத் திட்டத்தின் மறுவடிவமாக, சென்னை போன்ற பெருநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள சிறுநகரங்களில் அரசு நகரப் பேருந்து (டவுன் பஸ்) வசதியில்லாத வழித்தடங்களில் சிற்றுந்து சேவையை ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.
- 2011 ஆம் ஆண்டில் , இந்தியாவிற்கு 3 நாள் அரசு முறை பயணமாக வருகைத் தந்த அமெரிக்க வெளியுறவு மந்திரி ஹிலாரி கிளிண்டன் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா அவர்களை சந்தித்து பேசினார். அமெரிக்காவின் உயர் பதவி வகிக்கும் ஒருவர் இந்தியாவின் மாநில முதல்- அமைச்சரை சந்தித்தது இதுவே முதல் முறையாகும்.
- முல்லை பெரியாறு அணையை கட்டிய பென்னிகுவிக் மணி மண்டபத்தை ஜெயலலிதா 15-1-2013 அன்று திறந்து வைத்தார். தேனி மாவட்டம் கூடலூர் அருகே கேரள எல்லையில் முல்லை பெரியாறு அணை உள்ளது. இந்த அணை மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 12 ஆயிரத்து 758 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. குடிநீருக்கும் ஜீவாதாரமாகவும் 5 மாவட்ட மக்களுக்கு இந்த அணை உள்ளது. இந்த அணையை ஆங்கிலேய பொறியாளர் கர்னல் ஜான் பென்னி குவிக் கடந்த 1895-ம் ஆண்டில் கட்டி முடித்தார். தொழில் நுட்பம் வளராத அந்த காலக்கட்டத்தில் பென்னி குவிக் தன் சொத்துக்களை விற்று பெரும் சவால்களை சந்தித்து பெரியாறு அணையை கட்டினார். இதனால் தான் பென்னிகுவிக் தேனி மாவட்ட மக்களின் மனதில் நிறைந்து இருக்கிறார்.
- '**முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம் 2011**' அறிமுகம் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ஓய்வூதியம், திருமண உதவித் தொகை உள்ளிட்ட சலுகைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், இரண்டரை ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் சொந்தமாக வைத்திருந்து



www.portalacademy.in

அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயதுக்கு உட்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்துக்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள், தொழிலாளர்கள் மற்றும் இவர்களை சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள் பயன் அடைவர்.

- **விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்** 15-09-2011 அன்று தொடங்கப்பட்டது.
- **அம்மா குடிநீர் திட்டம்** 15-09-2013 ல் தொடங்கப்பட்டது. இதன் மூலம் குறைந்த விலையில் (ரூ.10) குடிநீர் பாட்டில்களில் விற்பனைச் செய்யப்படுகிறது.
- **அம்மா மருந்தகம் திட்டம்** 26-06-2014 அன்று சென்னை, காஞ்சிபுரம், கடலூர், ஈரோடு, மதுரை , சேலம், சிவகங்கை, விருது நகர் ஆகிய எட்டு மாவட்டங்களில் தொடங்கப்பட்டன. இத்திட்டம் கூட்டுறவுத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஜெ. ஜெயலலிதா (மே 23, 2015 - டிசம்பர் 6, 2016)**

- **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு நிதியுதவித் திட்டத்தின் கீழ்**, இளநிலைப் பட்டம் அல்லது டிப்ளோமா படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.50 ஆயிரம் மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம், படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.25 ஆயிரம் மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம் என அதை உயர்த்தினார் ஜெயலலிதா. 2016-ம் ஆண்டு 6-வது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, இத்திட்டத்தில் வழங்கப்பட்ட உதவித் தொகையுடன், தாலிக்கு வழங்கும் தங்கத்தின் அளவை 8 கிராமாக உயர்த்தி வழங்கினார் ஜெயலலிதா. இத்திட்டத்தின்படி ஆண்டுக்கு பல ஆயிரம் பெண்கள் பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.
- **'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற திட்டம் :** மகப்பேறு காலத்திற்கான 11 வகை மூலிகை மருந்துகள் கொண்ட 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற திட்டத்தை முதலமைச்சர் ஜெயலலிதா 11-6-2016 அன்று தொடங்கி வைத்தார்.
- **தமிழ்நாடு முதலாம் உலக முதலீட்டாளர் மாநாடு 9,10 செப்டம்பர் 2015-தேதிகளில்** நடத்தப்பட்டது.
- **அம்மா சிமெண்ட் திட்டம்** 06-01-2015 அன்று திருச்சியில் தொடங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் சிமெண்ட், வீடுகள் புதுப்பிக்க மற்றும் பழுது பார்ப்பதற்காக பொது மக்களுக்கு 10 -100 மூட்டைகள் வரை விற்பனை செய்யப்படும்.
- **அம்மா உப்பு திட்டம்** 05.09.2015 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நியாய விலைக்கடைகள் மற்றும் கூட்டுறவு பண்டக சாலை விற்பனை நிலையங்களில் அயோடின் கலந்த உப்பு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

- **அம்மா அழைப்பு மையத் திட்டம்** 19-01-2016 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 24*7 மணி நேரமும் பொதுமக்களின் குறைகள் விரைந்து பெற்று அதற்கான தீர்வுகள் வழங்கப்படுகின்றன. இதற்கான கட்டணமில்லா தொலைப்பேசி எண் 1100 ஆகும்.
- **அம்மா விதைகள் திட்டம்** 19.01.2016 அன்று தொடங்கப்பட்டது. தமிழக விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் தரமான சான்று பெற்ற விதைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த விதைகள் அம்மா சேவை மையம் மூலம் வழங்கப்படுகிறது.
- **அம்மா குடிநீர் திட்டம்** 09.03.2016 அன்று தொடங்கப்பட்டது. எதிர்மறைச் சவ்வூடு பரவல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்கும் திட்டமான இத்திட்டத்தின் மூலம் தானியங்கி முறையில் குடிநீரை வழங்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் ஒரு குடும்பத்திற்கு நாளொன்றிற்கு 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படுகிறது.

## எடப்பாடி கே. பழனிச்சாமி ( பிப்ரவரி 16, 2017 - தற்போது பதவியில்)

**'தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல்' மசோதா 2020'** 20 பிப்ரவரி 2020 அன்று தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்ட முன்வரைவின் படி மூலமாக, டெல்டா பகுதிகளில் ஹைட்ரோகார்பன், மீத்தேன், மென்களிக்கல் உள்ளிட்ட இயற்கை எரிவாயுக்களின் ஆய்வு, துளைத்தல் மற்றும் பிரித்தெடுத்தலுக்குத் தடை விதிக்கப்படுகிறது. துத்தநாக உருக்காலை, இரும்புத்தாது செயல்முறை ஆலைகளுக்கும் தடை விதிக்கப்படுகிறது. தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய டெல்டா மாவட்டங்கள் முழுவதும் இதன் கீழ் வருகிறது. காட்டுமன்னார்கோவில், மேல் புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, குமாராட்சி வட்டாரங்களுக்கும், அதேபோன்று அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி, திருவரங்குளம், கரம்பக்குடி வட்டாரங்களுக்கு இந்த தடை பொருந்தும். இதற்காக தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்பாட்டு அதிகார அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் எனவும் இந்த அதிகார அமைப்பு முதலமைச்சர் தலைமையில் செயல்படும் என்றும் கூறினார்.

### ஒரே ஆண்டில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி :

தமிழகத்தில் அரியலூர், கள்ளக்குறிச்சி, நீலகிரி, திருப்பூர், நாமக்கல், விருதுநகர், திண்டுக்கல், ராமநாதபுரம், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது. ஒரே ஆண்டில் இத்தனை மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்றது இதுவே முதல் முறையாகும்.

### தமிழ்நாட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் :

- இந்தியா முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 நகரங்களில், உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்தோடு, மத்திய அரசு ஜூன் 2015ஆம் ஆண்டு ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை அறிவித்தது.
- தமிழகத்திற்கு மாநில அரசு நிதியுடன் இணைந்து 12 ஸ்மார்ட் சிட்டிகள் (smart city) ஒதுக்கியுள்ளது. இதன் திட்ட காலம் 5 ஆண்டுகள் (2015-16 லிருந்து 2020வரை) ஆகும்.

- மத்திய அரசு ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ.500 கோடி நிதியுதவி அளிக்கிறது. அதற்கு இணையாக தமிழக அரசும் ரூ.500 கோடி நிதியுதவி அளிக்கிறது.
- ஸ்மார்ட் சிட்டி(smart city) திட்டத்துக்கு முதலாவது சுற்றில் (2015-16) பெருநகர சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளும், 2வது சுற்றில் (2016-17) மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளும், 3ம் சுற்றில் (2017-18) திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டன.
- மேலும், 4ம் கட்ட தேர்வுக்காக, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகள் மத்திய அரசிடம் நவம்பர் 30, 2017ல் கருத்துருக்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

**ஐந்து புதிய மாவட்டங்கள் உருவாக்கம் :**

- **தமிழகத்தின் 33-வது மாவட்டமாக தென்காசி மாவட்டம் 22-11-2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.** இம்மாவட்டம் தென்காசி வருவாய் கோட்டம் மற்றும் சங்கரன்கோவில் வருவாய் கோட்டம் என இரண்டு வருவாய் கோட்டங்களும், கடையநல்லூர், சங்கரன்கோயில், சிவகிரி. ஆலங்குளம் , வீரகேரளம்புதூர், தென்காசி, செங்கோட்டை மற்றும் திருவேங்கடம் ஆகிய 8 வருவாய் வட்டங்களும் கொண்டது.
- **தமிழகத்தின் 34-வது மாவட்டமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் 26-11-2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**
    - விழுப்புரம் மாவட்டத்தை நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரித்து புதிதாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தை தோற்றுவித்து கடந்த 8-1-2019 அன்று சட்டப்பேரவையில் முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அறிவித்திருந்ததையொட்டி, தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
    - கள்ளக்குறிச்சி புதிய மாவட்டமானது கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் ஆகிய 2 வருவாய் கோட்டங்களும், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம் மற்றும் புதிய தாலுகாவான கல்வராயன்மலை ஆகிய 6 தாலுகாக்கள் மற்றும் 558 கிராமங்களை உள்ளடக்கி உதயமாகி உள்ளது.
    - அதுபோல் சங்கராபுரம், ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளும் இடம்பெற்றுள்ளன.
    - கூ.தக. : ஆசியாவின் மிகப்பெரிய கால்நடை பூங்கா கள்ளக்குறிச்சி, சேலம் மாவட்ட எல்லையில் அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது.
- **தமிழகத்தின் 35-வது மாவட்டமாக திருப்பத்தூர் 28-11-2019 அன்று தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது**.
    - தமிழகத்தில் அதிக பரப்பளவு கொண்ட மாவட்டமாக விளங்கும் வேலூர் மாவட்டத்தை வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை என மூன்று மாவட்டங்களாகப் பிரித்து 15.8.2019 அன்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி

அவர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டத்தை தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி 28-11-2019 அன்று முறைப்படி தொடக்கி வைத்துள்ளார்.

- திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி என 2 வருவாய் கோட்டங்களும், 4 வருவாய் வட்டங்களையும், ஆம்பூர் , வாணியம்பாடி , திருப்பத்தூர், நாட்ராம்பள்ளி ஆகிய வருவாய் வட்டங்களையும் கொண்டுள்ளது.
- இம்மாவட்டத்தின் பகுதிகள் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் உள்ளது. மேலும் இம்மாவட்டம் திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி என 4 சட்டமன்றத் தொகுதிகள் கொண்டுள்ளது.
- கூ.தக. : புதிதாக உதயமாகியுள்ள திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம், கடந்த 225 ஆண்டுகளுக்கு முன்பாகவே மாவட்டமாக இருந்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இருந்த ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1790 நவம்பர் 30-ம் தேதி உருவாக்கப்பட்டது திருப்பத்தூர் மாவட்டம். இம்மாவட்டத்தின் முதல் ஆட்சியராக கிண்டர்ஸ்லே நியமிக்கப்பட்டார். அவர், 1792 ஏப்ரல் 3-ஆம் தேதி வரை இப்பொறுப்பில் இருந்தார்.பின்னர், ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன் தலைநகராக திருப்பத்தூர் இருந்தது. கர்னல் அலெக்ஸாண்டர் ரீட் 1792 ஏப்ரல் 4-ஆம் தேதி முதல் 1799 ஜூலை 7-ஆம் தேதி வரை மாவட்ட ஆட்சியராக இருந்தார்.
- ஆங்கிலேயர் காலத்தில் ரயத்துவாரி வரிவசூல் முறையை முதன்முதலில் அமல்படுத்தப்பட்டது இந்த திருப்பத்தூர் மாவட்டத்தில் என்பது தனி சிறப்பாகும்.
    - ரயத்துவாரி முறை பற்றி ... : ஆங்கிலேய ஆட்சியில், நாட்டின் பிற பகுதிகளில் உழுபவர்களிடம் வரிவசூல் செய்யும் அதிகாரம் ஜமீன்தாரர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு ஜமீன்தாரி முறை என்று பெயர். இதை மாற்றி, உழுபவர்களிடம் நேரடியாக வரி வசூல் செய்யும் ரயத்துவாரி முறை திருப்பத்தூர் மாவட்டத்தில்தான் முதன்முதலில் உருவாக்கப்பட்டது. இதற்கான களப்பணி, விரிவான சர்வே பணிகளை மாவட்ட ஆட்சியர் கர்னல் ரீட், சார்-ஆட்சியர்கள் தாமஸ் மன்றோ, கேப்டன் வில்லியம் மெக்லியாட், கேப்டன் கிரஹாம் ஆகியோர் செய்திருந்தனர்.

- **தமிழகத்தின் 36வது மாவட்டமாக ராணிப்பேட்டை மாவட்டம் 28-11-2019 அன்று தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.**
    - இராணிப்பேட்டை மாவட்டம், 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி வேலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டது.
    - இம்மாவட்டத்தின் தலைநகரம் இராணிப்பேட்டை நகரம் ஆகும்.

- ராணிப்பேட்டை மாவட்டம் ராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம் என என 2 வருவாய் கோட்டங்களையும், அரக்கோணம், வாலாஜா , நெமிலி மற்றும் ஆற்காடு ஆகிய வருவாய் வட்டங்களையும் கொண்டுள்ளது.
- இம்மாவட்டப் பகுதிகள் அரக்கோணம் மக்களவைத் தொகுதியில் உள்ளது. மேலும் இம்மாவட்டம் அரக்கோணம், ஆற்காடு, இராணிப்பேட்டை மற்றும் சோளிங்கர் என 4 சட்டமன்றத் தொகுதிகள் கொண்டுள்ளது.

❖ **தமிழகத்தின் 37-ஆவது மாவட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் 29-11-2019 அன்று தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது**.

- செங்கல்பட்டு மாவட்டத்தில் தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகம் என 3 வருவாய் கோட்டங்கள் இடம்பெற்றுள்ளது.
- மேலும், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர், தாம்பரம், திருக்கழுக்குன்றம் பல்லாவரம், வண்டலூர் என 8 தாலுகாக்கள் இடம்பெற்றுள்ளன.
- செங்கல்பட்டு, தாம்பரம், பல்லாவரம், திருப்போரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகள் இடம்பெற்றுள்ளன.

❖ **அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பொருட்கள் தொகுப்புடன் ரூ.1000 வழங்கும் திட்டம்** 2019 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப்பட்டது.

❖ **"நடந்தாய் வாழி காவேரி" திட்டம் :** காவிரி ஆறு மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க, "நடந்தாய் வாழி காவேரி" என்ற திட்டத்தினை செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழக பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் மணிவாசன் தலைமையில் 16 பேர் கொண்ட குழுவை அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

❖ **ரூ.**1652 கோடியில் **அத்திக்கடவு அவினாசி நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டம்** செயல்படுத்தப்பட்டது.

❖ ரூ. 494.60 கோடி செலவில் ஆதனூர் - குமாரமங்கலத்தில் **கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டம்**

❖ **மேட்டூர் அணை – சரபங்கா வடிநில நீரேற்றுத்திட்டம்** ரூ. 565 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

❖ **தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்** ரூ.2962 கோடியில் செயல்படுத்தப்படுகிறது.

❖ **சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட சாலைப் பணிகள்** ரூ.6448 கோடியில் அமைக்கப்படுகிறது.

- **2018-19 கல்வியாண்டு முதல் 11 ஆம் வகுப்பிலேயே மடிக்கணினி** வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- **பாரத்நெட் திட்டம் :** கண்ணாடி ஒளியிழை (ஆப்டிகல் பைபர்) கேபிள் மூலம் அனைத்துக் கிராமங்களுக்கும் தகவல் தொடர்பு வசதி அளிப்பதற்கான பாரத் நெட் திட்டம் ரூ. 1815.31 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- **"ஸ்டார் 2.0"** திட்டம் : எளிமையான மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகத்திற்கு ஸ்டார் 2.0 (Simplified and Transparent Administration of Registration) திட்டம் 2018 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், எளிய முறையில் வீட்டிலிருந்தபடியே பொதுமக்கள் தாங்களாகவே இணையவழி ஆவணங்களை உருவாக்கும் வசதி, உரிய ஆதாரங்களுடன் பதிவுக்கு முன்பே இணையவழியாக அனுப்பி சரிபார்க்கும் முறை, அலுவலக வருகைக்கு முன்பதிவு செய்யும் வசதி, ஆவணங்களை 10 நிமிடத்தில் பதிவு செய்து ஒரே வருகையில் திரும்ப வழங்கும் வசதி, குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக உடனுக்குடன் ஆவண நிலை பற்றிய தகவல் தெரிவிக்கும் வசதி, இணைய வழி கட்டணம் செலுத்தும் முறை, ஆவணப்பதிவின்போது மோசடிப்பத்திரப் பதிவுகளை தவிர்க்க முந்தைய ஆவணதாரருக்கு குறுஞ்செய்தி அனுப்புதல், அவரின் கைரேகையை ஒப்பீடு செய்து ஆள்மாறாட்டத்தை தடுக்கும் புதிய வசதி, கட்டணமில்லா தொலைபேசி வழி பொதுமக்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வசதி, பதிவுக்குப்பின் பட்டாமாறுதல் மனுக்களை இணையவழி உடனுக்குடன் வருவாய்த்துறைக்கு அனுப்பி பொதுமக்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் ஒப்புகை சீட்டு அனுப்பும் புதிய நடைமுறை, இணையவழி கட்டணமில்லா வில்லங்கச்சான்று பதிவிறக்கம் செய்யும் வசதியானது 30 ஆண்டுகளிலிருந்து 42 ஆண்டுகளாக நீட்டிப்பு (1975 முதல்), இணையவழி மின்கையொப்பமிட்ட ஆவண நகல் மற்றும் வில்லங்கச்சான்று பெறும் வசதி போன்ற வசதிகளை பொதுமக்கள் பெற்று பயன்பெற முடியும்
- **காவலன் செயலி :** பெண்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தமிழக காவல்துறை சார்பில் "காவலன் SOS" எனும் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இரவு நேரத்தில் தனக்கு பாதுகாப்பற்ற சூழலை உணரும் பெண், செயலியில் உள்ள SOS எனும் பொத்தானை அழுத்தினால் போதும், அழைப்பவரின் இருப்பிடம் குறித்த தகவல் ஜிபிஎஸ் மூலம் காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு உடனே சென்று விடும். அடுத்த சில நிமிடங்களிலேயே காவல்துறை ரோந்து வாகனம் அந்த பெண் உள்ள இடத்திற்கு வந்து நிற்கும். செயலியில் உள்ள SOS பொத்தானை அழுத்தும் போது, செல்போனில் உள்ள கேமரா தானாகவே 15 விநாடிகளில் வீடியோ எடுத்து கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பி விடும்.
- தமிழகத்தில் ஒருமுறை பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை 1 ஜனவரி 2019 முதல் அமல்படுத்தப்பட்டது.
- **தமிழ்நாடு இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2019** சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள, சென்னை வர்த்தக மையத்தில் வரும் 2019-ம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இதன் மூலம் ரூ.3,00,501 கோடி அளவிலான

முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதுடன், 10.5 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகவுள்ளது.

- **தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2019 :** 23.06-2019 அன்று வான்வழி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு துறைக்கான வானூர்திகள் தயாரிப்பு உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் கொண்டதாக இந்த கொள்கையை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் வெளியிட முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பெற்றுக் கொண்டார். இக்கொள்கையின் மூலம் , வானூர்தி துறையில், முதல் 5 ஆண்டுகளில் ரூ.35 ஆயிரத்து 600 கோடியும், 10 ஆண்டுகளில் ரூ.71 ஆயிரம் கோடியும் முதலீடுகள் ஈர்க்கப்படும். இதன்மூலம், அடுத்த பத்தாண்டுகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் 1 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.
- **தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை 2019** : 16-9-2019 அன்று தமிழக முதலமைச்சர் வெளியிட்ட மின்சார வாகனக் கொள்கையின் படி, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் மின்சார வாகனங்களுக்கு 100 சதவீதம் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த சலுகை 2030ஆம் ஆண்டு வரை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க நிலம் வாங்கும் போது 100 சதவீத முத்திரைத்தாள் கட்டண விலக்கு அளிக்கப்படும். இந்த சலுகை 2022-ஆம் ஆண்டு வரை செய்யப்படும் முதலீடுகளுக்கு பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சார வாகனங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு 100 சதவீத மின்சார வரி விலக்கு, நிறுவனங்கள் மூலம் அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்குவதை உறுதி செய்யும் பொருட்டு தொழிலாளர் சேம நல நிதிக்கு ஈடான தொகை மானியமாக வழங்கப்படும் என மின்சார வாகன கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- **சர்வதேச தரத்தில் நவீன கால்நடைப் பூங்கா , சேலம் மாவட்டம் தலைவாசல் பகுதியில்** ரூ.1022 கோடி செலவில் அமைக்கப்பட்டுவருகிறது.
- **விலையில்லா கறவைப் பசுக்கள் திட்டத்தின் மூலம்,** ரூ.199 கோடியில் 37780 நபர்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- **மீன்பிடி தடைகால நிவாரணம் ரூ. 5000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**
- ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கை தகவல்களை வழங்க Satellite Phone, NAVIC மற்றும் NAVTEX ஆகிய தொலை தொடர்பு கருவிகள் வழங்கும் திட்டம்.
- இலங்கை, ஈரான், கத்தார், அபுதாபி மற்றும் ஓமன் நாடுகளின் சிறைகளிலிருந்து தமிழகத்தைச் சேர்ந்த 932 மீனவர்கள் மீட்கப்பட்டனர்.
- சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 20092 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.583.73 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- புதிதாக 5 மாவட்டங்கள், 7 கோட்டங்கள், 25 வட்டங்கள் , ஒரு குறுவட்டம் மற்றும் 6 வருவாய் கிராமங்கள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்டுள்ளது.

- "இ-அடங்கல்" செயலி அறிமுகம் : விவசாயிகளுக்கு உதவும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட "இ அடங்கல்" செயலியை வருவாய்த்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. உரம், பூச்சி மருந்து, பயிர்கடன் போன்றவற்றை அரசு மூலம் பெறுவதற்கு நிலத்தின் அடங்கல் சான்று அவசியமானது. அதனை உடனடியாகப் பெறும் விதத்தில் இந்த இ அடங்கல் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கம்.
- ஆறு முறை 100 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக உணவு தானிய உற்பத்தி நீடித்த நிலையான மானாவாரித் திட்டத்தின் கீழ், 3746 பண்ணைக் குட்டைகள், 976 தடுப்பணைகள் , 96 கிராம/சமுதாயக் குளங்கள் மற்றும் 332 ஊரணிகள் மேம்பாடு
- 36.44 லட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7,618 கோடி இழப்பீட்டுத் தொகை
- ரூ.1,581.57 கோடியில் 3.18 லட்சம் எக்டரில் நுண்ணீர் பாசனத் திட்டம் ////////////// ரூ.139.73 கோடியில் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் "மின்னணு தேசிய வேளாண் சந்தை" திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பு
- ரூ.482.36 கோடியில் 10 மாவட்டங்களில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்
- திருநங்கைகள் சுய தொழில் தொடங்க மானியம் ரூ.20,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்வு தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ் 304 குழந்தைகள் மீட்பு
- ரூ.76.23 கோடி நிதியில் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்
- அரசுப் ' "பணிக்கான வேலை வாய்ப்பில் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு 3% இட ஒதுக்கீடு
- வண்டலூரில் மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம்.
- அரசு ரப்பர் கழகத்திற்கு புதிய ஐ.எஸ்.ஓ 9001:2015 தரச்சான்றிதழ் கிடைத்துள்ளது.
- ரூ.165.68 கோடியில் பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களில் சுற்றுச்சூழல் மீட்புத் திட்டம்
- 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பாதுகாக்க 23 மாவட்டங்களில் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள்
- பார்வையற்ற மற்றும் கை கால் பாதிக்கப்பட்டு அரசு பணிக்கு செல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பயணப்படி காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம். பயணப்படி ரூ.1,000 லிருந்து ரூ.2,500 ஆக உயர்வு
- மண்பாண்ட.... தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை ரூ.5,000 ஆக உயர்வு. 24,288 நபர்கள் பயன்

- ரூ.12.21 கோடியில் கீழடியில் உலக வாய்ந்த அகழ்வைப்பகம் அமைக்கப்படவுள்ளது.
- ரூ,563.19 கோடி மதிப்பில் மாமல்லபுரம் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை.
- ரூ.1,259.38 கோடியில், நெம்மேலியில் சென்னை குடிநீர் தேவைக்காக கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் விட்டா திறன்கொண்ட, கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் .
- ரூ.348.17 கோடியில் கொடுங்கையூரிலும், ரூ.486.21 கோடியில் கோயம்பேட்டிலும் எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்
- கோவளம் வடிநிலப் பகுதியில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ரூ.1,243.15 கோடியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி
- 5,161 புதிய பேருந்துகள் மற்றும் கூடிய 36 பேருந்துகள், இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் கூடிய 106 குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கம்.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்வு,
- திருநங்கைகள் சுய தொழில் தொடங்க மானியம் ரூ.20,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித்தொகை ரூ.5000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் ரூ.1634 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார திட்டம்.
- மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்தவக் கல்லூரிகளில் தலா ரூ.150 கோடியில் விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகள் .
- **அம்மா விளையாட்டுத் திட்டத்தை** முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் 13-01-2020 அன்று தொடங்கி வைத்தார். கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியம் மற்றும் மன வளத்தை மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மையை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும் 2019-20 ஆண்டில் தமிழகத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் ரூ.64 கோடியே 35 லட்சம் மதிப்பில் 'அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்படவுள்ளது.
- அரசுப் பணிக்கான வேலை வாய்ப்பில் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு 3 % இட ஒதுக்கீடு.
- சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், மறைமலையடிகளார், அயோத்திதாசப் பண்டிதர், அருட்பெருஞ்சோதி வள்ளலார், வீரமாமுனிவர், காரைக்கால் அம்மையார், தேவநேயப்

பாவாணர் மற்றும் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் ஆகியோர் பெயரில் புதிதாக விருதுகள் உருவாக்கம்.

- ரூ.10 கோடி செலவில் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும், ரூ.1 கோடி செலவில் ஹீஸ்டன் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- இராமசாமி படையாச்சியாருக்கு கடலூரில் நினைவு மண்டபம்.
- தருமபுரி, பாப்பாரப்பட்டியில் பாரதமாதா நினைவாலயம்.
- திருச்செந்தூரில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம்.
- லோக் ஆயுக்தா சட்டம், 2018 இயற்றப்பட்டு, 13.11.2018 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.
- **தமிழக அரசின் நான்காவது போலீஸ் கமிஷன் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஷீலா பிரியா தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.** இந்த கமிஷனில், வேடசந்தூர் எம்.எல்.ஏ. டாக்டர் வி.பி.பி.பரமசிவம், அரசின் ஓய்வு பெற்ற இணைச் செயலாளர் எம்.அறச்செல்வி ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள். சைபர் கிரைம் பிரிவு கூடுதல் டி.ஜி.பி. ஜி.வெங்கடராமன் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

  **கூ.தக. :**
  - இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன் முதலாக 1969-ம் ஆண்டில் ஆர்.ஏ.கோபாலசுவாமி தலைமையில் போலீஸ் கமிஷனை அமைத்தது.
  - பின்னர் 1989-ம் ஆண்டு மே மாதம் இரண்டாம் போலீஸ் கமிஷன் பி.சபாநாயகம் தலைமையில் அமைக்கப்பட்டது.
  - மூன்றாவது போலீஸ் கமிஷன், கடந்த 2006-ம் ஆண்டு ஆகஸ்ட்டில் முன்னாள் உள்துறை செயலாளர் ஆர்.பூர்ணலிங்கம் தலைமையில் உருவாக்கப்பட்டது.
- **தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2019** (Tamil Nadu Solar Energy Policy 2019) ஐ 4.2.2019 அன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வெளியிட்டார். 2023 ஆம் ஆண்டு சூரிய எரிசக்தியின் இலக்கான 8,884 மெகா வாட் திறனை அடைவதற்கு ஏதுவாக, சூரிய எரிசக்தி கொள்கை 2012 ஐ மாற்றியமைத்து இந்த புதிய கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.
  - இந்த புதிய கொள்கையின் படி, தமிழகத்தில் 9000 மெகாவாட் சூரிய மின்சக்தி திட்டங்களை நிறுவுவதற்கான இலக்கினை அடைய வழிவகை செய்யப்பட்டுள்ளதுடன் , அனைத்து தாழ்வழுத்த மின் நுகர்வோருக்கு நிகர பயனீட்டளவு வசதியும், சூரிய மின் திட்டங்கள் சார்ந்த வேலைவாய்ப்புகளை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.
  - மேலும், விவசாயிகளின் வருமனத்தை பெருக்கிட சூரிய எரிசக்தி உற்பத்தியில் விவசாயிகளின் பங்களிப்பை ஊக்குவித்தல் , அதிதிறன் பயன்பாடு வகை மற்றும் நுகர்வோர் பயன்பாடு வகை மூலம் சூரிய எரிசக்தி உற்பத்தியினை ஊக்குவிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- **அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி.- யு.கே.ஜி**. வகுப்புகளை, எழும்பூர் மாநில மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலுள்ள அங்கன்வாடி மையத்தில் 21-1-2019

அன்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்தார். பள்ளிக் கல்வித்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஒருங்கிணைப்புடன் 2,381 அங்கன்வாடி மையங்களில் முன்னோடித் திட்டமாக இது செயல்படுத்தப்படவுள்ளது.

**முதல்வர்கள் மற்றும் மக்கள் நலத் திட்டங்கள்**

| திட்டங்கள் | முதல்வர்கள் |
|---|---|
| மது விலக்கு திட்டம் | இராஜாஜி |
| கைத்தொழில் பாதுகாப்பு திட்டம் | இராஜாஜி |
| விற்பனை வரி அறிமுகம் | இராஜாஜி |
| குலக்கல்வி திட்டம் | இராஜாஜி |
| மதிய உணவுத் திட்டம் | காமராஜர் |
| சீருடை வழங்கும் திட்டம் | காமராஜர் |
| உயர்நிலைப் பள்ளி வரை இலவசக்கல்வி | காமராஜர் |
| விதவை மறுமண உதவித்திட்டம் | அண்ணாதுரை |
| புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி | கலைஞர் மு கருணாநிதி |
| மதிய உணவில் முட்டை | கலைஞர் மு கருணாநிதி |
| சமத்துவபுரம் திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| வருமுன் காப்போம் திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| அண்ணா மறுமலர்ச்சி திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| உழவர் சந்தை திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| நமக்கு நாமே திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| 2 ஏக்கர் இலவச நிலத் திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| இலவச கலர் டிவி திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| வேலை இல்லாத மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை | கலைஞர் மு கருணாநிதி |
| மருத்துக் காப்பீடுத் திட்டம் | கலைஞர் மு கருணாநிதி |
| சத்துணவு திட்டம் | எம்.ஜி.ஆர். |
| மேல்நிலைப் பள்ளிக் கல்வி (10+2+3) | எம்.ஜி.ஆர். |
| இலவச காலணி வழங்கும் திட்டம் | எம்.ஜி.ஆர். |
| சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் | எம்.ஜி.ஆர். |
| மதிய உணவில் உருளைக்கிழங்கு திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| தொட்டில் குழந்தை திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| இலவச சைக்கிள் திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| மழைநீர் சேகரிப்புத் திட்டம் | ஜெ.ஜெயலலிதா |

| | |
|---|---|
| கோயில்களில் அன்னதான திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| அம்மா உணவகங்கள் | ஜெ.ஜெயலலிதா |
| விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| பசுமை வீடுகள் திட்டம் | ஜெ.ஜெயலலிதா |
| தாலிக்குத் தங்கம் | ஜெ.ஜெயலலிதா |
| மாணவர்களுக்கு மடிக்கணினி | ஜெ.ஜெயலலிதா |
| அம்மா, உப்பு, அம்மா மருந்தகம், அம்மா குடிதண்ணீர், அம்மா சிமெண்ட் | ஜெ.ஜெயலலிதா |
| அரசுப் பள்ளிகளில் எல்.கே.ஜி.- யு.கே.ஜி. | எடப்பாடி கே. பழனிச்சாமி |
| அம்மா விளையாட்டுத் திட்டம் | எடப்பாடி கே. பழனிச்சாமி |

நன்றி : நக்கீரன் இயர்புக்

www.portalacademy.in

# 4. இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் ( Rationale behind Reservation Policy and access to Social Resources)

### தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளில் பொதுப் பிரிவினருக்கு (OC) 31%ம், பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (BC) 26.5%ம், பிற்படுத்தப்பட்ட இசுலாமியருக்கு (BCM) 3.5% இடஒதுக்கீடும், மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு (MBC) 20%ம், பட்டியல் சாதியினருக்கு (SC) 15%ம், பட்டியல் சாதிகளில் ஒன்றான அருந்ததியருக்கு (SCA) 3% இடஒதுக்கீடும், பட்டியல் பழங்குடியினருக்கு (ST) 1% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.[

### இட ஒதுக்கீடு கடந்து வந்த பாதை

- "விகிதாச்சார உரிமை" என்ற சமூகநீதிக் கருத்தை தென்னிந்தியாவின் முதல் சாதி எதிர்ப்புப் போராளி பண்டிதர் அயோத்திதாசர் 1891 டிசம்பர் 1ஆம் தேதி உதகமண்டலத்தில், அயோத்திதாசர் பண்டிதர் கூட்டிய திராவிட மகாஜன மாநாட்டில் போடப்பட்ட முதல் தீர்மானமே, ' கிராம அலுவலர் உட்படப் பல அரசாங்கப் பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதன் மூலம், அவர்களின் பொருளாதார வாழ்வை உயர்த்துமாறு' கோருகிற இடஒதுக்கீட்டுத் தீர்மானமாகும். அதன் அடிப்படையில் தொடர்ந்துப் போராடி, இரண்டு இடஒதுக்கீட்டு ஆணைகளையும் பண்டிதர் அயோத்திதாசர் பெற்றார்.
- 1892 ஆம் ஆண்டு அனைவருக்கும் வேலைப் பகிர்வு வேண்டும் என்று கூறி, பிராமணரல்லாத பலர் கையொப்பமிட்டு, அன்றைய சென்னைத் தலைமாகாண (Madras Presidency) ஆளுநராக இருந்த வென்லெக்கிடம் மனுக் கொடுத்தனர்.
- "பிராமணர் அல்லாதார் இனங்களும் இந்திய அரசுப் பணியும்" (The Non – Brahmin Races and Indian Public Service) , "பிராமணர் அல்லாதார் இனங்கள் தெளிவு பெறுவதற்கான வழிவகைகள்" (The Ways and Means for the Amelioration of Non – Brahmin Races) ஆகிய இரு நூல்கள் ◻ 1893 ஆம் ஆண்டில் Fair Play என்ற பெயரை நூலாசிரியர் பெயர் என்று அச்சிடப்பட்டு வெளியாகின. உண்மையில் "பிராமணர் அல்லாத இனங்கள்" என இனங்களின் அடையாளங்களை சுட்டிக்காட்டி வந்த இவ்விரு நூல்களில் முதல் நூல் பிராமணர் அல்லாதார் இன மக்களின் பிரச்னைகளை விளக்கும் வகையிலும் இரண்டாம் நூல் அவற்றுக்கான தீர்வுகளைச் சொல்லும் வகையிலும் அமைந்திருந்தன.
- 'முஸ்லீம் லீக்' கட்சி தொடங்கப்பட்ட உடனேயே இட ஒதுக்கீட்டுக் கோரிக்கையையே முதலில் முன்னிறுத்தினர். 1906 அக்டோபர் 1ஆம் நாள் ஆகாகான் தலைமையில் அன்றைய தலைமை ஆளுநர் மிண்டோவைச் சந்தித்து இஸ்லாமியர்கள் இடஒதுக்கீடு கோரினர். ◻ அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு 1909 ஆம் ஆண்டு, மின்மோலிமார்லி சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, இஸ்லாமியர்களுக்குத் தேர்தல்களில் தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.

இந்த இடஒதுக்கீடு அரசியல் தளத்தில் மட்டுமே அமைந்தது, வரலாற்றில் பிரிட்டிஷ் வெள்ளையர் அரசு வழங்கிய முதல் இடஒதுக்கீடு இதுவேயாகும்.

- சென்னை மாகாண பிராமணர் அல்லாதார் சங்கம் - 1909 :  பிராமணர் அல்லாத மக்களின் நலனை உறுதி செய்ய - முன்னேற்றம் குறித்து விவாதித்த பி.சுப்பிரமணியம், எம்.புருஷோத்தம நாயுடு என்ற இரண்டு வழக்கறிஞர்கள் முயற்சியால், The Madras NonBrahmin Association என்ற "சென்னை மாகாண பிராமணர் அல்லாதார் சங்கம்" 1909இல் உருவானது.
- சென்னை ஐக்கியக் கழகம், 1912 : அரசுப் பணியில் இருந்த பிராமணர் அல்லாதவர்கள் ஒருங்கிணைப்பு அவசியம் என்று உணர்ந்த சரவண பிள்ளை, ஜி. வீராசாமி நாயுடு, துரைசாமி முதலியார், என். நாராயணசாமி நாயுடு போன்ற பிரமுகர்கள் இணைப்பால் சென்னையில் 1912 ஆம் ஆண்டில் சென்னை ஐக்கியக் கழகம் (The Madras United League) என்ற புதிய இயக்கம் டாக்டர் சி.நடேசன் முதலியார் செயலாளர் - எஸ்.ஜி. அரங்க ராமானுஜம் துணைச் செயலாளர் பொறுப்புகள் ஏற்று உருவாக்கப்பட்டது.   தமிழ்நாட்டின் அரசியலில் 'கழகம்" என்ற சொல் இடம் பெறுவதற்கான தொடக்கப்புள்ளி இதுதான். இதுவே பின் 1913 முதல் ' திராவிடர் சங்கம்' என்று புதுப் பெயர் பெற்றது.
- 'சென்னைத் தலைமாகாண சங்கம்' : காங்கிரசில் இருந்த பார்ப்பனர் அல்லாதோர் ஒருங்கிணைந்து 'சென்னைத் தலைமாகாண சங்கம்' (Madras presidency Association) என ஒன்றை உருவாக்கினர். பெரியார், திரு.வி.க. போன்றோர் அச்சங்கத்தில் பொறுப்பாளர்களாக இருந்தனர். அச்சங்கமும் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை முன்வைத்தது.
- தென்னிந்திய மக்கள் சங்கம், 1916 :  1916-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் 20 ஆம் நாளன்று 'வெள்ளுடை வேந்தர்' பி.தியாகராயச்செட்டியார் வெளியிட்ட (NON-BRAHMIN MANIFESTO) 'பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை' ஒரு பெரும் கலகக்குரலாக இருந்தது.   அதனை தொடர்ந்து டி.எம்.நாயர் உள்ளிட்டோர் முன்னின்று தொடங்கிய 'தென்னிந்திய மக்கள் சங்க'த்தோடு (South Indian People' s Association Ltd) இணைந்து பிராமணரல்லாத மக்களின் சமூகநீதியையே பிரதான முழக்கமாக கொண்ட பின்னாளில் மக்களால் "JUSTICE PARTY" என்றும் "நீதிக்கட்சி" என்றும் அழைக்கப்பப்படும்படியாக மாறியது.
- திராவிட சங்க விடுதி உருவாக்கம், 1916 :  டாக்டர் சி.நடேசன் முதலியார், பிராமணர் அல்லாத மாணவர்கள் தங்கிப் படிக்கும் மாணவர் விடுதிகளில் கூடப் பாகுபாடுகள் நிறைந்திருந்த நிலையில், அந்நிலையைப் போக்க சென்னையில் திராவிட சங்க விடுதியை (Dravidian Association Hostel) உருவாக்கினார்.  பிற்காலத்தில் இந்திய நிதியமைச்சராக ஆகவிருந்த ஆர்.கே.சண்முகம், பாரிஸ்டர் ரங்கராமானுஜம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர்களாக விளங்கிய டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் மற்றும் சடகோப முதலியார், பிற்காலத்தில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக வந்த சுப்பிரமணிய நாடார் போன்றவர்களெல்லாம் இந்த விடுதியில் தங்கிப் படித்தவர்கள்தான்.

**நீதிக்கட்சியின் ஆட்சியில் இட ஒதுக்கீடு :**

- 1920 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் அக்கட்சியே வெற்றிப் பெற்ற. நீதிக்கட்சி, திவான் பகதூர் கடலூர் சுப்பராயலு ரெட்டியார் தலைமையிலான அரசு, பதவியேற்றவுடனேயே, அரசு வேலைவாய்ப்புகளில் அனைத்து மத-சாதியினருக்கம் இடஒதுக்கீடு வழங்க ஆணை பிறப்பித்தது.
- 1928 இல் வகுப்பு வாரி உரிமை ஆணையை நீதிக்கட்சியின் ஆதரவுடன் ஆண்ட டாக்டர் சுப்பராயன் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் அவர்கள்மூலம் ஆணை பிறப்பிக்கச் செய்து, அதை வரவேற்றார். அதன்படி, அரசு ஆணை (எண் 1129, நாள்:15.12.1928) அமலில் அன்றிருந்த சமூகநீதி அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டது.
- 8.33 சதவிகித இடஒதுக்கீடு ஆணை : அரசின் எல்லா வேலைவாய்ப்புகளிலும், இஸ்லாமியர்களுக்கு 25% இடஒதுக்கீடும், சீக்கியர், பார்சி, கிறித்துவர், ஆங்கிலோ இந்தியர் ஆகிய நால்வருக்குமாகச் சேர்த்து 8.33 சதவிகித இடஒதுக்கீடும் வழங்கும் ஆணை 1933 இறுதியில் வெளியிடப்பட்டது.
- பார்ப்பனர் அல்லாதோர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் : மத்திய அரசுப் பணிகளுக்கும் இதே போல இட ஒதுக்கீடு வேண்டும் எனக் கேட்டுப் போராடியதன் விளைவாய் 1935 -ஆம் ஆண்டில் மத்திய அரசு கொண்டு வந்த "சென்னை மாகாண பார்ப்பனர் அல்லாதோர் இட ஒதுக்கீட்டுச் சட்டம்" மூலம் அப்போதைய இம்பீரியல் வங்கி, தனியார் இயக்கி வந்த தென்னக இரயில்வே நடைமுறைக்கு வந்தது.

**ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார்** தலைமையிலான காங்கிரஸ் அரசில், "பிராமணரால்லாத பிற்படுத்தப்பட்ட இந்துக்களைத் தனியாகச் சேர்த்து இட ஒதுக்கீட்டை" 24.03.1947 அன்று அறிமுகப்படுத்தினார். அவர், 1928-ஆம் ஆண்டுமுதல் பிறப்பிக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவைப் பின்வருமாறு திருத்தி, ' மொத்த உத்தியோகம் 14 என்றால், பிராமணருக்கு 2, கிறிஸ்துவருக்கு 1, முஸ்லிமுக்கு 1, ஆதிதிராவிடருக்கு 2, பிற்பட்டோருக்கு 2, மற்ற பிராமணர் அல்லாதாருக்கு 6 என்ற வீதத்தில் உத்தியோகம் வழங்கப்பட வேண்டும்' என்று உத்தரவிட்டார். ◻ 24.03.1947 அன்று அரசு பிறப்பித்த அந்த ஆணை மூலமாக, நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, 21.11.1947 அன்று 12 என்று கணக்கிடப்பட்ட பணியிடங்களை 14-ஆக உயர்த்தி, உயர்த்தப்பட்ட 2 பணியிடங்களும் பிராமணர் அல்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு ஒதுக்கீடு செய்து, இந்தியாவிலேயே முதன்முறையாகத் தனி ஒதுக்கீடு வழங்கிய அரசு என்ற பெருமையை சென்னை மாகாண அரசுதான் அடைந்தது.

**வகுப்பு வாரி இடஒதுக்கீட்டுக்கு தடை :**

**செண்பகம் துரைராசன் வழக்கு :** சென்னை மாகாணத்தில் நடைமுறையில் இருந்துவந்த "வகுப்புவாரி பிரதிநிதித்துவம்" (இடஒதுக்கீட்டு முறை) கல்வித்துறையில் பின்பற்றப்படுவதால் தனக்கு மருத்துவக்கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த செண்பகம் துரைராசன் என்பவரும் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என அதே பிராமண சமுதாயத்தை சார்ந்த மாணவர் *சி.ஆர்.சீனிவாசன் என்பவரும் சென்னை மாகாண

உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர், இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குழுவில் இடம்பெற்று ஆதிக்கம் செலுத்திய அல்லாடி கிருஷ்ணசாமி அய்யங்கார் என்பவர் தாமாகவே முன்வந்து இவ்வழக்கிற்காக வாதாடினார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 15வது விதி மற்றும் 29(2)வது விதிஎன சில அடிப்படை உரிமைப் பிரிவுகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி, "வகுப்புவாரி உரிமைச் சட்டம் ஆணை" சமத்துவத்திற்கு எதிரானது என்கிற வாதத்தை ஏற்று, விண்ணப்பிக்கிற தகுதியில்லாத பெண் விண்ணப்பிக்காத இடத்திற்காகப் போடப்பட்ட வழக்கில் தான் வகுப்புவாரி இடஒதுக்கீட்டு உரிமைச் சட்டம் செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பைத் துணையாகக் கொண்டு,' வகுப்புவாரி உத்தரவை அமல்படுத்துவது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது; ஆதலால், அதனை அமல்படுத்தக்கூடாது என இந்திய ஒன்றிய அரசு 1950 செப்டம்பர் மாதம் மாகாண அரசுகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியது.

## இட ஒதுக்கீடு காக்க போராட்டம்

உயர்சாதியினரால் ஒடுக்கப்பட்ட அனைத்து மக்கள் சமுதாயத்தினரும் கல்வி-வேலைவாய்ப்பில் பயன்பெறும் வகையில் 1928 முதல் 1950 வரை நடைமுறையிலிருந்த சட்டம் செல்லாது என சென்னை உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததால், பெரியார் தலைமையிலான தி.க, அண்ணா தலைமையிலான திமுக தனித்தனியே போராட்டக் களம் கண்டன. 14.08.1950 அன்று சென்னை மாகாணம் முழுவதிலும் முழுவதிலும் உள்ள கம்யூனல் ஜி.ஓ. காக்க மாணவர்கள் களத்தில் இறங்கினர். கல்வி, அரசியல் உத்தியோகங்களில் பின்தங்கிய மக்களுக்கு ஜனத்தொகை விகிதாச்சாரப்படி இடஒதுக்கீடு செய்யும் வகையில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு இடமளித்து அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்' என்ற பெரியாரின் தீர்மானத்தை மாணவர்கள் மக்களில் முன்னிலையில் நிறைவேற்றினார்.

சமூக நீதிக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை எதிர்த்து நாடெங்கும் 14.09.1950 அன்று வகுப்புரிமை நாள் கொண்டாடுங்கள்!' என தந்தை பெரியார் வேண்டுகோள் விடுத்தார். மாணவர்களும், இளைஞர்களும், பொது மக்களும் கட்சி வேறுபாடின்றி அரசியல் சட்டம் ஒழிக! வகுப்புவாரி உரிமை வேண்டும் என்ற முழக்கத்தை கைக்கொண்டனர்.

## திருச்சியில் கம்யூனல் ஜி.ஓ மாநாடு

வேலைவாய்ப்பில் மட்டுமே ஒதுக்கீடு என்பதை எதிர்த்து அனைத்துக் கட்சியிலும் உள்ள வகுப்புவாரி உரிமை ஆதரவாளர்களின் ஆதரவையும் சேர்த்து தமிழ்நாட்டின் திருச்சியில் 1950 டிசம்பர் முதல் தேதியன்று பெரியார் கூட்டி ' கம்யூனல் ஜி.ஓ. மாநாடு நடத்தினார்.

## முதலாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் , 1951 :

ஜவஹர்லால் நேரு முன்வந்து இந்திய அரசியல் சட்டத்தில் 2.6.1951 அன்று முதலாவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதன் படி, இந்திய அரசியல் சட்டத்தில் 15வது விதியின் உட்பிரிவாகச் சேர்த்து முதல் திருத்தம் செய்யப்பட்டது. அந்தத் திருத்தத்தின் மூலம், அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்ட 15 (4) என்ற புதிய பிரிவில் சமூகரீதியாகவும், கல்வி நிலையிலும் (Socially and Educationally) என்ற சொற்றொடர்தான் இணைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தின் 15(4)

மற்றும் 16(4) ஆகிய பிரிவுகளின்படி சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு என்று தெளிவாக இருக்கிறது. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு என்று எந்த சொற்றொடரும் அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவிலும் இடம்பெறவில்லை. "குடிமக்கள் சமுகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய மக்களுக்கும் அல்லது தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி மக்களுக்கும் அவர்களின் முன்னேற்றங்கருதி, மாகாண (மாநில) அரசாங்கம் தனிச்சலுகை வழங்குவதாகச் செய்யும் எந்த தனி ஏற்பாட்டையும் இந்த 15வது விதியின் ஒரு பிரிவோ அல்லது விதி 29-ன் 2-வது உட்பிரிவோ தடை செய்யாது தடை செய்யாது" என்ற திருத்தம் செய்யப்பட்டது. தமிழகத்தில் மட்டுமல்ல - இந்திய அளவில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் சமூக நீதி மட்டுமே அடிப்படை அம்சம் (Basic Structure) என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்திய அரசியல், சட்டம் இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் பொதிந்திருக்கும் சமூக நீதியை நிலைநாட்ட, முதன்முதலில் திருத்தப்பட்டது என்பதும் - அது தமிழகத்தின் போர்க் குரலால் நிகழ்ந்தது என்பதும் வரலாறு. இந்த வரலாறு தமிழ்நாட்டிற்கு மட்டுமே உரியது. முதல் திருத்தத்தின் மூவர்' பெரியார் -அண்ணா – காமராஜர் என்பது மறுக்க முடியாத உண்மை.

அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பெற்ற முதல் திருத்தத்துக்குப் பிறகு, பி.எஸ். குமாரசாமி ராஜா (6 ஏப்ரல் 1949 - 26 ஜனவரி 1950) தலைமையில் இயங்கிய காங்கிரஸ் அரசு, உத்தியோகங்களிலும், கல்வி நிலையங்களிலும் பிற்பட்ட வகுப்பினருக்கு 25% தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜனத்தொகை விகிதாச்சாரப்படி 15% மொத்தம் 41% இட ஒதுக்கீடு செய்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்தரவை மீண்டும் புதிதாகப் பிறப்பித்துச் செயல்படுத்தியது.

**காகா கலேல்கர் குழு (முதல் பிற்படுத்தப்பட்டோர் கமிஷன்)**

சமூக நீதிக்காக தமிழகத்தில் எழுந்த போராட்டத்தின் விளைவாக பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு தரலாம் என்ற சட்டத்திருத்தம் அளித்த பண்டிதர் நேருவின் அமைச்சரவை அத்தோடு யாருக்கெல்லாம் இடஒதுக்கீடு தரலாம் என ஆய்வு செய்ய அரசியல் சட்ட பிரிவு 340 படி அப்போது எம்.பி.யாக இருந்த காகா கலேல்கர் என்பவர் தலைமையில் குடியரசுத் தலைவரால் நிறுவப்பட்ட ஒரு குழுவை அமைத்தது அரசு. முதல் பிற்படுத்தப்பட்டோர் கமிஷனாக அறியப்படும் காகா கலேகர் குழு 1953 ஆம் ஆண்டில் தொடங்கிய தன்னுடைய ஆய்வை மூன்று ஆண்டுகள் கழித்து 1955 மார்ச் 30 ஆம் தேதியில் அறிக்கையாக அமைச்சரவைக்கு அளித்தது.

1960 ஆம் ஆண்டில் ஆந்திர முதல்வர் நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களின் தலைமையிலான 66%-க்கு இட ஒதுக்கீட்டை விரிவுப்படுத்தியது. 1963-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீடு எப்போதும் 50% விழுக்காட்டுக்கு மேல் போகக்கூடாதென தீர்ப்பளிக்கும் வரை அது நடைமுறையில் இருந்தது.

**தி.மு.க ஆட்சியில் இட ஒதுக்கீடு**

பேரறிஞர் அண்ணா மறைந்திட அவருக்கு பின் அமைந்த மு.கருணாநிதி அரசு பிற்படுத்தப்பட்டோருக்கான தனி அமைச்சர் - அமைச்சகத்தை இந்தியாவிலேயே முதலில் உருவாக்கியது. முன்னாள் சென்னை மாகாண முதல்வர் காமராசர் ஆட்சிக்காலத்தில் பொதுப்பட்டியல் - 59%, பிற்படுத்தப்பட்டோர் - 25%, தாழ்த்தப்பட்டோர் - 16% என்று இருந்ததை 1971

ஆம் ஆண்டில் ஏ.என்.சட்டநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம் தந்த பரிந்துரையின்படி, பொதுப்பட்டியலை 51% என குறைத்து, தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு இருந்த 16 சதவிகிதத்தை 18 ஆகவும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதமாக இருந்ததை 31 சதவிகிதமாக உயர்த்தியதன் மூலம், மூலமாக இட ஒதுக்கீட்டை 49% ஆக்கினார்.

**எம்.ஜி.ஆர் ஆட்சியில் இட ஒதுக்கீடு :**

1979 இல் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆண்டு வருமானம் 9,000 ரூபாய் இருந்தால் அவர்கள் பிற்படுத்தப் பட்டவர்களாக இருக்க முடியாது என்ற "வருமான வரம்பு ஆணை"யை அறிவித்தார். இது அரசமைப்புச் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் எதிரானது என்று திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஜனதாவில் சில தலைவர்கள் குறிப்பாக ரமணிபாய், காங்கிரசில் டி.என்.அனந்தநாயகி, திண்டிவனம் இராமமூர்த்தி, மணிவர்மா போன்றோர் எதிர்த்தனர். பின்னர் ரூ.9,000 வருமான வரம்பு ஆணையை ரத்து செய்ததோடு, பிற்படுத்தப் பட்டோருக்கு ஒதுக்கிய 31 சதவிகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்தினார். அதன்படி, இட ஒதுக்கீடு 68 சதவிகிதமாக உயர்த்தப் பட்டது. மலைவாழ் மக்களுக்குத் தனி ஒதுக்கீடு, பிறகு வந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பால் தி.மு.க. ஆட்சியில் ஒரு சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. 68 சதவிகிதம் 69 சதவிகிதமாக உயர்ந்தது.

**பி.பி. மண்டல் குழு (இரண்டாம் பிற்படுத்தப்பட்டோர் கமிஷன்) :**

இந்திரா காந்தி அறிவித்த அவசரநிலை நெருக்கடி காலக்கட்டத்திற்கு பிறகு 1978 ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் அமைச்சரவையின் உள்துறை அமைச்சராக இருந்த திரு. சரண்சிங் அவர்களால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 பிரிவிற்கிணங்க பீகார் மாநிலத்திற்கான மக்களவையின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நீதியரசர். பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் (பி.பி.மண்டல்) அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட சமூக உரிமைகள் ஆணையத்தை நியமித்தார். இந்தக் குழுவானது, சமூக மற்றும் கல்வி அடைப்படையில் பிற்படுத்தப்பட்டோரை அடையாளம் காண்பதுடன் சாதிப் பாகுபாட்டை களையும் பொருட்டு மக்களுக்கான இட ஒதுக்கீடு பற்றிய கேள்விகளை கருத்தில் கொண்டு "சமூக ரீதியாக - கல்வி ரீதியாக - பொருளாதார ரீதியாக" மூன்று பெரும் தலைப்பின் கீழ் பதினொரு வரைகூறுகளை ஏற்றுக் கொண்டது பி.பி. மண்டல் குழு கொடுத்த ஆறு பரிந்துரைகள் வருமாறு,

1. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு. 2. வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு. 3. கடன் கொடுப்பதில் 27% (தொழிற்பயிற்சிக்கு) இட ஒதுக்கீடு. 4. நில உடைமை என்பது இந்த நாட்டில் உற்பத்தி சக்திகள் எல்லாம் ஆதிக்க சாதிகள் கையில் இருப்பதால் தான் இவர்களுக்கு பொருளாதார வளர்ச்சியில்லை, எனவே உற்பத்தி உறவுகளைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டும். 5. அரசு உதவி பெறும் தனியார் துறைகளிலும் இட ஒதுக்கீடு. 6. மீனவர் போன்ற மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை தாழ்த்தப்பட்ட பட்டியலுக்கு மாற்றியமைத்து அவர்களுக்குத் தனித் தொகுதி ஒதுக்கவேண்டும்.

**சமூக நீதிக்கான வன்னியர் போராட்டம் 1987 :**

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் வன்னியர்களுக்கு 20 விழுக்காடும், மத்திய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 2 விழுக்காடும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நடைபெற்ற தொடர் சாலை மறியல் போராட்டத்தின் முதல் நாளிலேயே திண்டிவனத்தில் தலைமையேற்றிருந்த மரு. ராமதாஸ் உள்ளிட்ட மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டு, சென்னை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டனர். இப்போராட்டத்தின் போது தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் சாலைகளின் இரு கரையிலும் இருந்த மரங்களை வெட்டி சாலைகளின் குறுக்கே போட்டு போக்குவரத்து மறிக்கப்பட்டது. இப்போராட்டம் தொடர்ச்சியாக 7 நாட்கள் வன்னியர்களால் தொடர்சாலை மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. எம். ஜி. ஆர் மறைவுக்குப் பின் மூன்றாம் முறையாக 1989 ஆம் ஆண்டில் திமுக தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன் டாக்டர் ராமதாஸ் உள்ளிட்ட பல்வேறு சமூகங்களின் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) என்ற புதிய பிரிவை ஏற்படுத்தி 108 பின்தங்கிய சமூகங்களை அதில் இணைத்து கல்வி, வேலைவாய்ப்பில் 20 % இடஒதுக்கீட்டை அறிவித்தார்.

**"மண்டல் கமிசன்" பரிந்துரைகளை நிறைவேற்றிய வி.பி.சிங்**

1980 தொடங்கி 1990 வரை 10 ஆண்டுகளாக காங்கிரஸ் கட்சி ஆட்சியில் தடைகள், எதிர்ப்புகள் என உயர் சாதியினர் போட்ட முட்டுக்கட்டைகளால் புறக்கணிக்கப்பட்டு மண்டல் அறிக்கையானது, ஜனதா தளம் கட்சியின் தலைவரான வி.பி. சிங் அவர்களின் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த அரசானது 1990ஆம் ஆண்டு ஆகஸ்டு 7 ஆம் தேதியன்று, சமூகம் & கல்வி ரீதியில் பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு மத்திய அரசுப் பணிகள் மற்றும் பொது நிறுவனங்களில் 27 % இடஒதுக்கீடு அளிப்பதாக அறிவித்தது. ஆகஸ்ட் 13 ஆம் தேதி அரசாங்க ஆணை வெளியிட்டிருந்த போதும், வி.பி.சிங் அவர்கள், அந்த அறிக்கையை சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்துதலை இரண்டு நாட்கள் கழித்து அவரது சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

**நரசிம்மராவ் கொண்டு வந்த புதிய குறிப்பாணை**

திரு.வி.பி.சிங் அவர்களின் ஒன்றிய அரசாங்கம் கவிழ்ந்தவுடன் அடுத்து நடைபெற்ற 1991 ஆம் ஆண்டில் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க அந்த அமைச்சரவையில் அரசியலைவிட்டே ஒதுக்கிப் போவதாக சொன்ன P.V. நரசிம்மராவ் பிரதமரானார். ஆட்சி கவிழ்ப்பிற்கு பின் நின்று போயிருந்த மண்டல் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உள்ளதாக சொன்ன நரசிம்மராவ் மண்டல் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த புதிய குறிப்பாணை ஒன்றை போடுகிறார்.திரு.வி.பி.சிங் போட்ட மண்டல் ஆணையில் இருந்த வார்த்தைகளை மாற்றிப் கொடுக்கப்பட்ட 27% ஒதுக்கீட்டில் " poorer section of the backward class" என்ற சொல்லை இணைத்தும், அந்த இட ஒதுக்கீட்டிலும் இடம் பெறாத சமூகத்தைச் சேர்ந்த (அதாவது வர்ணாஸ்ரம உயர்சாதி ஏழைகளுக்கு) " ஏழைகளுக்கு" 10% ஒதுக்கீட்டைக் கொடுக்கவும் புதிய சட்ட ஆணையை பிறப்பித்தார். மண்டல் அறிக்கையின் படி, பிற்படுத்தபட்டோர் 27%, பட்டியலின + பழங்குடியினர் = 22.5 % மொத்தம் 49.5 % பொதுப் பிரிவு 50.5%. பிரதமர் நரசிம்ம ராவ் இன்னொரு 10% பொதுப் பிரிவில் சேர்க்க செய்தார். அப்படி 10% சேர்த்தால் ஏற்கனவே உச்ச நீதிமன்றம் கூறிய

50% மேல் செல்லும் என்று தெரியாமல் அவர் செய்திருக்க வாய்ப்பில்லை என்றே சட்ட ஆர்வலர்கள் அன்றைக்கு குற்றசாட்டி உள்ளனர்.

**இந்திரா சஹாணி Vs இந்திய ஒன்றிய அரசு 1992 (மண்டல் வழக்கு)**

இட ஒதுக்கீட்டுக்கு எதிரான மிகமுக்கியமான வழக்காக இந்திரா சஹாணி வழக்கானது கருதப்படுகிறது. மண்டல் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்க ஆணையின் எதிர்த்து தொடுக்கப்பட்டதாகும் இந்திரா சஹாணி வழக்கை உச்சநீதிமன்றத்தின் நீதிபதி ஜீவன் ரெட்டி தலைமையிலான ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட அமர்வு விசாரித்து, தீர்ப்பு எழுதியது.முதலில் நரசிம்மராவ் கொண்டு வந்த அரசாங்க ஆணையை செயல்படுத்துவதற்கு தடையை விதித்து, பின் 1992 ஆம் ஆண்டு நவம்பர் 16 அன்று அதன் தீர்ப்பில் மண்டல் ஆணையத்தின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்த வி.பி. சிங் கொண்டு வந்த சட்டமும், இட ஒதுக்கீடு அரசாங்க ஆணையையும் செல்லுமென உறுதி செய்தது. இந்திரா சஹாணி Vs ஒன்றிய அரசு வழக்கின் விளைவாக தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம். அமைக்கப்பட்டது.

**69 % இட ஒதுக்கீட்டை பாதுகாத்த செல்வி ஜெ. ஜெயலலிதா**

எம்.ஜி.ஆர் அவர்களுக்கு பின்னர் அஇஅதிமுக வின் தலைவராக பொறுப்பேற்று 1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முதல்வராக ஆட்சியில் செல்வி. ஜெ.ஜெயலலிதா அமர்ந்த சில மாதங்களிலேயே 16.11.1992 அன்று மண்டல் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட இந்திரா சகானி வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது.அதில், இட ஒதுக்கீட்டின் அளவு 50 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது என்ற தீர்ப்பானது, தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள மிகவும் போராடிப் பெற்ற உரிமையான 69 % இடஒதுக்கீட்டுக்கு ஆபத்தாக வந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டது. தமிழ்நாட்டின் முதல்வராக ஆட்சியில் இருந்த செல்வி. ஜெ.ஜெயலலிதா அவர்கள் 69% இட ஒதுக்கீட்டை தமிழக அரசின் கொள்கை முடிவாக சட்டமன்றத்தில் அறிவித்தார்.

உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பு, தமிழகத்தில் நடைமுறையில் இருந்த 69 % இட ஒதுக்கீட்டு முறைக்கு எதிராக இருந்ததால், அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, 1993 நவம்பர் 9ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில், தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 69 % இடஒதுக்கீட்டு முறை தொடர்வதற்கு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினார்.

இந்திரா சஹாணி வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பால் பாதிப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசின் தீர்மானம் சட்ட முன்வடிவாக அறிமுகம் செய்யப்பட்டு, 1993 டிசம்பர் 31 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. 76ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டி, அன்றைய பிரதமராக இருந்த பி.வி.நரசிம்மராவுடன் பல சந்திப்புகள், பிறகு அது நாடாளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேறி, குடியரசுத் தலைவராக இருந்த சங்கர்தயாள் சர்மா அவர்களின் ஒப்புதல் பெற்று, அரசியலமைப்புச் சட்டம் 31பி, 31சி ஆகிய பிரிவுகளின் அடிப்படையில் 9 ஆவது அட்டவணையில் வரிசை எண் 257ஏவில் சேர்க்கப்பட்டு பாதுகாப்புடன் உள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில்

நீதிக்கட்சி அரசு காலம் தொட்டு நடைமுறையில் இருந்து வரும் சமூக நீதி உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் இருந்து பாதிக்காமல் நடைமுறைக்கு கொண்டுவர வழி வகுக்கப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மொத்த இடஒதுக்கீடு 69 சதவிகிதம் அதுவும் அரசு ஆணையாக இல்லாமல், சட்டமாக உள்ளது. இதைச் செய்த செல்வி ஜெயலலிதா அவர் களுக்கு, திராவிடர் கழகம் "சமூகநீதி காத்த வீராங் கனை" என்று பட்டம் கொடுத்துப் பாராட்டியது.

தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் கலைஞர் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ள இடஒதுக்கீட்டில் முஸ்லீம் களுக்கு 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு செய்வதை உறுதிப் படுத்தினார். அதேபோல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள பிரிவில், அருந்ததியினருக்கு 3 சதவிகிதம் தனியே மாநில அரசில் ஒதுக்கீடு செய்தார்.

2005ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டுவந்த 93ஆவது அரசமைப்பு திருத்த சட்டத்தின்படி மத்திய கல்வி நிறுவனங்களில் (தனியார் நிறு வனங்கள் உட்பட) ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது.

**தகவல் ஆதாரங்கள் :**


- கூர்மை இணையதளம் , https://www.koormai.com/pathivu.html?vakai=5&therivu=350
- தமிழ்நாட்டில் சமூகநீதி வரலாறு - ஒரு பார்வை, கி.வீரமணி. http://www.viduthalai.in/e-paper/157636.html

## 5. தமிழகத்தின் பொருளாதார போக்குகள் – தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும். ( Economic trends in Tamil Nadu – Role and impact of social welfare schemes in the Socio - economic development of Tamil Nadu. )

**தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் சிறப்புகள்**

- பூகோள ரீதியாக தமிழ்நாடு, இந்தியாவில் 11-வது பெரிய மாநிலமாகும்.
- மக்கள் தொகைஅடிப்படையில் 6-வது பெரிய மாநிலமாகும்.
- இந்திய மாநிலங்களில், தமிழ்நாடு பல்வேறு சாதனைகளுடன் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பில் இரண்டாவது இடத்திலும், தலா வருமான முதலீடு, நேரடி அந்திய முதலீடு மற்றும் தொழிற் துறை உற்பத்தி ஆகியவற்றில் 3-வது இடத்திலும் உள்ளது.
- சமூக மற்றும் நலத்துறைகளில் ஏனைய மாநிலங்களை விட சிறப்பான நிலையில் உள்ளது. உடல் நலம், உயர் கல்வி, குழந்தை இறப்பு விகிதம் , மகப்பேறு இறைப்பு விகிதம் ஆகியவற்றில் தமிழ்நாட்டின் செயல்பாடு தேசிய சராசரியைவிட சிறப்பாக உள்ளது.
- 2005 ஆம் அண்டிலிருந்து இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டின் வளர்ச்சியானது விரைவாக உள்ளது. தமிழ்நாடு வறுமை ஒழிப்பு செயல்பாடுகளில் மற்ற மாநிலங்களைவிட சிறப்பாக உள்ளது. இந்திய அளவில் ஏழைகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் ஏழை மக்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களைவிட மிகக் குறைவாக உள்ளது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மனித வளர்ச்சி குறியீட்டில் மூன்றாவது இடம் வகிக்கிறது. (பொருளியல் 11 ஆம் வகுப்பு)
- மூலதன முதலீட்டிலும் (2.92 இலட்சம் கோடி), மொத்த தொழில் துறை உற்பத்தியிலும் (6.19 இலட்சம் கோடி) மூன்றாவது இடம் வகிக்கிறது.
- தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 17% பங்களிப்புடன் (37000 அலகுகள்) முதலிடம் வகிக்கிறது. மேலும் தொழில் துறையில் உள்ள வேலை வாய்ப்பில்16% பங்களிப்பு உள்ளது.
- நிதிஆயோக் அறிக்கையின் படி சுகாதாரக் குறியீட்டில் மூன்றாவது இடம் வகிக்கிறது. கூ.தக. : தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடானது கேரளம் பஞ்சாப் மாநிலங்களின் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்பு வீதம்

14 ஆகும். இது பிற மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறைவு. மேலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு ஷீமம் 2014-ல் 21 ஆகவும், 2015-ல் 20 ஆகவும் குறைந்துள்ளது.(ஆதாரம்: சுகாதார மாநிலம் - முற்போக்கு இந்திய அறிக்கை- 2018 -நிதிஆயோக்)

- உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் அதிகம் உள்ள மாநிலமாக உள்ளது. மிக அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் உள்ளன.
- வணிக வங்கிகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் உள்ள கடன் வைப்பு விகிதம் மிகச் சிறப்பாக உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) முதலீட்டுத் திட்டங்களில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.
- மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில், மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்கள் சில பொருளாதாரக் குறியீடுகளில் சிறந்து விளங்குகிறது. கேரளா கல்வியறிவு, குழந்தை இறைப்பு விகிதம், மகப்பேறு இறப்பு விகிதம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ளது. ஆனால் தமிழ்நாடானது சுகாதாரம், உயர்கல்வி, சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, வேலையின்மை ஒழிப்பு போன்றவற்றில் மிகச் சிறப்பாகவும் பிற மாநிலங்களைவிட மேலானதாகவும் உள்ளது.
- தமிழ்நாட்டின் 2017-2018 நிதி ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தித் திறன் 215.81 பில்லியன் டாலர், இந்திய மதிப்பில் 15,347 கோடி ரூபாய்.
- தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி (மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி) 2018-19 ஆம் நிதியாண்டில் 8.17% ஆக இருந்தது. அதே நிதியாண்டில் இந்தியாவின் ஜி.டி.பி. வளர்ச்சி 6.81% ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது. 2018-19 ஆம் நிதியாண்டில், இரண்டாம் நிலைத் தொழிகள் 6.59% வளர்ச்சியையும், சேவைத் துறை 8.24% வளர்ச்சியையும் பெற்றுள்ளன.
- தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 51.86 % சேவைத் துறையின் பங்களிப்பிலிருந்து கிடைக்கிறது. (பட்ஜெட் 2019-20)
- தனிநபர் வருமானம் : 2011-2012 ஆம் ஆண்டில் 1,03,600 ரூபாயாக இருந்த தனி நபர் வருமானம் 2017-2018 ஆம் ஆண்டில் நிலையான விலைகளின் அடிப்படையில் 1,42,267 ரூபாயாக உயர்ந்துள்ளது.
- சுமார் 72.2 மில்லியன் மக்கள் தொகையுடன், இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 6% த்தைக் கொண்டு, 6 வது அதிக மக்கள்தொகையைக் கொண்டுள்ள மாநிலமாக தமிழகம் உள்ளது.
- இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான (37) 'சிறப்பு பொருளாதார மண்டலங்களை' (Special Economic Zones) க் கொண்டுள்ளது.
- காற்றாலை மின் உற்பத்தியில் உலகளவில் 9 வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் மிக அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் (37,220) கொண்ட மாநிலம்.

- 1076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையுடன் இந்தியாவின் இரண்டாவது நீளமான கடற்கரையைக் கொண்ட மாநிலமான தமிழ்நாடு, நான்கு பெரிய துறைமுகங்களையும், 22 சிறிய துறைமுகங்களையும் கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டிலுள்ள 68% மக்கள் தொகை 15-59 வயதினராக உள்ளனர்.
- இந்தியாவில் மூன்றாவது அதிக பாலின விகிதத்தைக் கொண்டுள்ள மாநிலம்.
- தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் ஏறத்தாழ 21 % பங்கு வேளாண்மையிலிருந்து வருகிறது. பெரும்பான்மையான மக்களுக்கான சமூக நலக் கொள்கைகளைக் கொண்டிருப்பதே முன்னேற்றத்திற்குக் காரணமாகும். எடுத்துக்காட்டாக பெரும்பான்மை மக்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ள பொது விநியோகத்திட்டம், மதிய உணவுத் திட்டம், பொது சுகாதாரக் கட்டமைப்பு போன்றவற்றின் மூலம் நலத்தை மேம்படுத்துவதை இங்கு குறிப்பிடலாம்.
- ஜி.எஸ்.டி. வரியினை வெற்றிகரமாக செயல்படுத்தியதால், குறைந்த அளவிலேயே இழப்பீடு பெறும் மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

**தமிழகப் பொருளாதாரத்தின் தற்போதைய நிலை**

| Component | 2018-19 | 2019-20* |
|---|---|---|
| GSDP | ₹15,96,253 cr. | ₹17,26,681 cr. |
| Debt | ₹3,45,752 cr. | ₹3,97,496 cr. |
| Proportion of debt in GSDP | 21.66% | 23.02% |
| Revenue deficit | ₹23,459 cr. | ₹14,315 cr. |
| Fiscal deficit | ₹47,335 cr. | ₹44,176 cr. |
| Proportion of fiscal deficit in GSDP | 2.97% | 2.56% |
| SOTR | ₹1,05,534 cr. | ₹1,24,813 cr. |
| Growth rate of SOTR | 12.59% | 18.27% |
| Proportion of SOTR in total revenue receipts | 60.74% | 63.13% |

GSDP: Gross State Domestic Product | SOTR: State Own Tax Revenue
* Budget estimates

ஆதாரம் : The Hindu, 13-2-2020

**நீர்வளம்**

பிற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாட்டின் இயற்கை வளம் குறைவாகும். இந்திய மாநிலங்களுக்கிடையில் மக்கள் தொகையில் 6-சதவீதமாக இருந்த போதிலும், நீர் வளத்தில் 3-சதவீதமும், நில பரப்பளவில் 4-சதவீதமும் உள்ளது

தென்மேற்கு பருவக் காற்றைத் தொடர்ந்து வரும், வட கிழக்குப் பருவக்காற்று மழைப் பொழிவுக்கான மிகப்பெரிய ஆதாரமாகும். தமிழ்நாட்டில் 17 அறுகள்

உள்ளன.பாலாறு,செய்யாறு,பெண்ணையாறு. காவேரி, பவானி, வைகை, சித்தாறு, தாமிரபரணி, வெள்ளாறு, சிறுவாணி, நொய்யல், வைப்பார், குண்டாறு போன்றவை முக்கிய ஆறுகள் ஆகும். தமிழகத்தில் கிணற்று பாசனம் அதிக அளவில் உள்ளது (56%).

**தமிழ்நாட்டில் நீர்வளங்கள்**

| பாசன விவரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அணைக்கட்டுகள் | 81 |
| கால்வாய்கள் | 2239 |
| குளங்கள் | 41262 |
| குழாய் கிணறுகள் | 3,20,707 |
| திறந்தவெளி கிணறுகள் | 14,92,359 |

Source: Tamil Nadu Government Season & Crop Report 2012-13

பாசனத்திற்கான ஆதாரங்கள்

**கனிமவளங்கள்**

| கனிமம் | இருப்பு (டன்களில் | நாட்டின் இருப்பில் தமிழகத்தின் பங்கு |
|---|---|---|
| லிக்னைட் | 30,275,000 | 87% |
| வேர்மிகுலைட் | 2,000,000 | 66% |
| கார்னெட் | 23,000,000 | 42% |
| ஜேர்கான் | 8,000,000 | 38% |
| கிராபைட் | 2,000,000 | 33% |
| லெமனைட் | 98,000,000 | 28% |
| ரூட்டைல் | 5,000,000 | 27% |
| மோனசைட் | 2,000,000 | 25% |
| மேக்னசைட் | 73,000,000 | 17% |

(ஆதாரம்: நிலவியல் மற்றும் சுரங்கத்துறை)

கனிம வளங்கள்

டைட்டானியம். லிக்னைட், மேக்னசைட். கிராபைட், லைம்ஸ்டோன். கிரானைட். பாக்சைட் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன. இவற்றில் முன்னோடித் திட்டமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை குறிப்பிடலாம் (NLC). இதன் வளர்ச்சியினால் அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன. இதே போல் சேலத்தில் மாங்கனிசு சுரங்கமும், ஏற்காட்டில் பாக்சைட் சுரங்கமும், கஞ்சமலையில் இரும்புத்தாது சுரங்கமும் அமைந்துள்ளன மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்தில் உள்ள கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது.

**மக்கள் தொகை**

மக்கள் தொகை 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவிலுள்ள 121 கோடி மக்கள் தொகையில் 7.21 கோடி மக்கள் தொகையுடன் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது. ஐக்கிய நாடுகள் அறிக்கையின் படி தனித்த தேசிய இனமாக இயங்க கூடிய நாடுகளின் மக்கள் தொகையை விட தமிழ்நாட்டின் மக்கள் தொகை கூடுதலாக உள்ளது.

| மாநிலம் / நாடு | மக்கள் தொகை (கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு | 7.2 |
| இங்கிலாந்து | 6.5 |
| பிரான்ஸ் | 6.5 |
| இத்தாலி | 5.9 |
| தென் ஆப்பிரிக்கா | 5.6 |
| ஸ்பெயின் | 4.7 |
| இலங்கை | 2.1 |

*(ஆதாரம்: 2017–ல் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு வெளியிட்ட உலக மக்கள் தொகை பட்டியல்)*

**மக்கள் அடர்த்தி**

மக்கள் தொகை அடர்த்தியானது ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 2001-ல் 480 ஆகவும், 2011-ல் 555 ஆகவும் உள்ளது. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகைஅடர்த்தியில் தமிழ்நாடு 12-வது இடத்தில் உள்ளது. மக்கள் தொகை அடர்த்தியில் தேசிய சராசரி 382 ஆகும்.

**நகரமயமாதல்**

இந்திய அளவில் நதகரமயமாதலின் சராசரி அளவு 31.5% ஆக உள்ளது. ஆனால் தமிழகத்தில் 48.45 ஆக உள்ளது. இந்திய அளவில் மொத்த மக்கள் தொகையில் 6-சவீதத்தைக் கொண்டுள்ள தமிழகம், நகரமக்கள் மொத்த மக்கள் தொகையில் 9.61- சதவீதமாக உள்ளது.

**பாலின விகிதம்** (1000 ஆண்களுக்கான பெண்களின் எண்ணிக்கை) சமச்சீர் பாலினவிதிதம் என்பது பெண்களின் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதைக் குறிக்கிறது. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும். பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போதும் இந்திய அளவிலும் இந்த விகிதம் மிக அதிகமாகும். பாலின விதிதத்தில் கேரளம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அடுத்தப்படியாக தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

| வ. எண் | குறியீடு | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|---|
| 1 | IMR | 17 | 34 |
| 2 | MMR | 79 | 159 |
| 3 | வாழ்நாள் எதிர்பார்ப்பு (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 70.6<br>68.6<br>72.7 | 67.9<br>66.4<br>69.6 |
| 4 | கல்வியறிவு வீதம் (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 80.33 %<br>86.81 %<br>73.86 % | 74.04%<br>82.14%<br>65.46% |
| 5 | பாலின விகிதம் | 995 | 940 |

சுகாதாரம் மற்றும் சமூகக் குறியீடுகள்

**குழந்தை இறப்பு விகிதம் (1வயதுக்குள்)**

தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் மற்ற மாநிலங்களை விட குறைவாகவுள்ளது. நிதி ஆயோக் அறிக்கையின் படி 2016-ம் அண்டில் தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விதிதம் 17 ஆகும். இது தேசிய சராசரி 34-ல் பாதி அளவாகும்.

**மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) (1 லட்சம் மகப்பேறில்)**

நிதி ஆயோக் அறிக்கையின் படி மகப்பேறு காலத்தில் தாயின் இறைப்பு விகிதத்தைக் கட்டுபடுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு 79 எண்ணிக்கையுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இது தேசிய சராசரியான 159 -ல் சரிபாதி அளவாகும். மகப்பேறு இறப்பு விகிதத்தில் கேரளம் 51 (முதலிடம்) மகாராஷ்டிரா 67-ஆகவும் (இரண்டாம் இடம்) உள்ளது.

### வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம்

சராசரியாக ஒரு நபரின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே ஆயுட்காலம் என்று அழைக்கப்படுகிறது. வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும் போது இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவு. இந்தியாவின் சராசரி ஆயுட்காலம் 67.9 ஆண்டுகள் (ஆண் - 66.4 ஆண்டுகள் பெண் - 69.6 ஆண்டுகள்) ஆகும். ஆனால் தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகளாக (ஆண் - 68.6 ஆண்டுகள், பெண் - 72.7 ஆண்டுகள்) ஆக உள்ளது.

### எழுத்தறிவு நிலை

தமிழ்நாட்டின் எழுத்தறிவு நிலையில் மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடும் போது முன்னேறிய நிலையில் உள்ளது. /

### மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP - Gross State Domestic Product)

மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் போன்றதே மாநில உள்நாட்டு உற்பத்தியாகும். மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு மாநிலத்தின், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பாகும். தமிழ்நாடு பொருளாதார மற்றும் புள்ளியியல் இயக்கத்தின் ஆய்வின் படி, நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது (GDSP) 2016-17 நிதியாண்டில் 207.8 பில்லியன் டாலராக உள்ளது. தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உலக அளவில் குவைத் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகவும், வாங்கும் சத்தியின் அடிப்படையில் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளின் (UAE) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் சமமாக உள்ளது. பிற நாடுகளுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடும் போது தமிழ்நாப்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகமாக உள்ளது.

| மாநிலம் / தேசம் | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|
| *தமிழ்நாடு (GSDP)* | $ 207.8 |
| *ஈராக் (GDP)* | $ 171 |
| *நியுசிலாந்து (GDP)* | $ 184 |
| *இலங்கை (GDP)* | $ 81 |

*(ஆதாரம்: IMF அவுட்லுக் ஏப்ரல் 2017)*

உலக நாடுகளுடன் தமிழ்நாட்டு GDSP ஓர் ஒப்பீடு

### GSDP - துறைவாரியாகப் பங்களிப்பு

தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சேவைத் துறையானது 63.70% பங்களிப்புடன் முதலிடத்திலும், தொழில் துறை 28.5% பங்களிப்புடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. வேலை வாய்ப்பைப் பொருத்த மட்டில் வேளாண்மை முக்கியப் பங்கு வகித்தாலும் அதனுடைய மாநில உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பானது 7.76% ஆக குறைந்துள்ளது. சேவைத்துறை மற்றும் தொழில்துறை வேகமாக வளர்கிறது. இந்திய அளவிலும், தமிழ்நாட்டளவிலும், வேளாண்மை பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் உணவும் வழங்குகிறது. ஆனால் குறைந்த வேகத்திலேயே அதன் வளர்ச்சி உள்ளது. இந்த நிலையினால் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான வாய்ப்பைக் குறைவாக உள்ளது.

### தனிநபர் வருமானம்

தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் 2200 டாலர்களுடன், இந்தியாவில் உள்ள பல மாநிலங்களைக் காட்டிலும் உயர்வாக உள்ளது. தமிழ்நாட்டின் தலாவருமானம், 2018-ல் உள்ள புள்ளிவிபரங்களின்படி இந்திய சராசரி அளவை விட 1.75 மடங்கு அதிகமாக உள்ளது. அதே போல் பல நாடுகளுடன் ஒப்படும் போது அந்நாடுகளை விட அதிகமாகவும் உளளது. ரூபாயின் அடிப்படையில் 2010-11 ல் தமிழ்நாட்டின் தலாவருமானம் ரூபாய் 1,03,600 - ஆக இருந்தது. 2017-18 -ல் ரூபாய் 1,88,492 - ஆக உயர்ந்துள்ளது (வரவு செலவு அறிக்கையின்படி)

| மாநிலம் / தேசம் | தனிநபர் வருமானம் (டாலர்களில்) |
|---|---|
| தமிழ்நாடு | 2200 |
| இந்தியா | 1670 |
| நைஜீரியா | 2175 |
| நிகரகுவா | 2151 |
| பாகிஸ்தான் | 1443 |
| வங்காளதேசம் | 1358 |
| ஜிம்பாப்வே | 1029 |
| நேபாளம் | 729 |

**(ஆதாரம்: உலக வங்கியின் தேசிய கணக்குகள் OECD தேசிய கணக்குகள்)**

தமிழக தலாவருமானம் பிற நாடுகளுடன் ஒப்பீடு

தமிழ்நாட்டின் தலா வருமானம் மற்ற தென்மாநிலங்களுடன் கீழ் உள்ளவாறு ஒப்பீடு செய்யப்படுகிறது.

| மாநிலம் | தனிநபர் வருமானம் (ரூபாயில்) |
|---|---|
| தமிழ்நாடு | 1,57,116 |
| கேரளா | 1,55,516 |
| கர்நாடகா | 1,46,416 |
| தெலுங்கானா | 1,58,360 |
| ஆந்திரபிரதேசம் | 1,37,000 |

(ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி நியூடெல்லி 17 பிப்ரவரி 2017)

தலா வருமானம் (ரூபாயில்) (2015-16) பிற மாநிலங்களுடன் ஒப்பீடு

**வேளாண்மை**

வரலாற்று ரீதியாக தமிழகம் ஒரு வேளாண் மாநிலமாகும். தற்போது தமிழகத்தில் ஏழு வேளாண் காலநிலை மண்டலம் (Agro Climatic Zones) உள்ளது. இங்கு பல்வேறு வகையான மண் வளம் இருப்பதால் பழங்கள், காய்கறிகள், மசாலா பொருட்கள், தோட்டக்கலைப் பயிர், மலர்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் போன்றவை பயிரிட ஏதுவாக உள்ளளது. தமிழகம் , இந்திய அளவில் உதிரி பூக்கள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் மூன்றாமிடத்தில் உள்ளது. தமிழகத்தில் வேளாண்மையானது மிக அதிக அளவில் ஆற்றுநீர் மற்றும் பருவமழையை நம்பியுள்ளது.

தற்போது இந்தியாவின் நெல் உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக மேற்கு வங்கத்திற்கு அடுத்ததாக உள்ளது. மிகப்பெரிய அளவில் மஞ்சள் உற்பத்தி செய்யும் மாநிலமாகவும் உள்ளது. கம்பு சோளம் நிலக்கடலை எண்ணெய் வித்துகள் கரும்பு போன்றவை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது. தோட்டக்கலைப் பயிர் வாழை, தேங்காய் உற்பத்தியில் முதலிடத்திலும, இரப்பர் உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும், மிளகு உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், கரும்பு உற்பத்தியில் நான்காவது இடத்திலும் உள்ளது.

அனைத்து வகைப் பயிர்களுக்கான மொத்த உற்பத்திப் பரப்பு 2013-14 -ல் 58.97 இலட்சம் ஹெக்டேர்களாக உள்ளது. உணவு தானிய உற்பத்திப் பரப்பு 72.9 % ஆகவும் பிற பயிர்களுக்கான உற்பத்திப் பரப்பு 27.1% ஆகவும் உள்ளது. உணவுப் பயிர்களில் நெல் முக்கியப் பங்கு வகிக்கிறது. பிற பயிர்களில் கடலை மற்றும் தேங்காய் முக்கியப்பங்கு வகிக்கிறது

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை நாட்டிலே மிகச் சிறப்பாக செயல்படுத்தும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இதன் காரணமாக, 2016-2017ஆம் ஆண்டில் அதிக அளவிலான காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றதில், இந்தியாவிலேயே தமிழ்நநாடு முதலிடத்தைப் பெற்றது.

### உணவுதானிய உற்பத்தி

உணவு தானிய உற்பத்தியில் நெல் உற்பத்தி 79.49 இலட்சம் டன் (2014-15) உற்பத்தியோடு முதலிடம் பெற்றுள்ளது. சிறு தானியங்கள் 40.79 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பருப்பு உற்பத்தியில் 2011-12 -ல் 3.59 இலட்சம் டன்னிலிருந்து 2014-15 -ல் 7.67 இலட்சம் டன்னாக குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. 2015-16 -ல் பருவ மழை பொய்த்ததால் உற்பத்தி சிறிதளவு குறைந்தது.

### இந்தியஅளவில் உற்பத்தித் திறனில் தமிழகத்தின் நிலை

தமிழக அரசு வேளாண் விளை பொருள் உற்பத்திக்கும், உற்பத்தித் திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இதன் காரணமாக தமிழகம் உணவு தானியங்கள் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தித் திறனில் முதன்மை மாநிலமாக உள்ளது. மக்காச் சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றில் உற்பத்தியில் முதலிடத்திலும் நெய், தேங்காய் ஆகியவற்றில் இரண்டாவது இடத்திலும், கரும்பு, சூரியகாந்தி, சோளம் ஆதியவற்றில் மூன்றாவது இடத்திலும் மிளிர்கிறது.

| தானிய வகை | தேசிய அளவில் தமிழக நிலை |
|---|---|
| மக்காச் சோளம் | 1 |
| கம்பு | 1 |
| கடலை | 1 |
| எண்ணெய் வித்துக்கள் | 1 |
| பருத்தி | 1 |
| தேங்காய் | 2 |
| நெல் | 2 |
| கரும்பு (மெட்ரிக் டன்) | 3 |
| சூரியகாந்தி | 3 |
| சோளம் | 3 |
| திடமான தானியங்கள் | 4 |
| மொத்த தானியங்கள் | 8 |

**(ஆதாரம்: தமிழக அரசின் வேளாண்மைத் துறை கொள்கை விளக்க குறிப்பு 2017–18)**

தேசிய அளவில் தமிழ்நாட்டின் உற்பத்தித்திறன் நிலை

**தொழில்துறை**

சென்னை, இந்தியாவின் மருத்துவத் தலைநகரம் எனவும், வங்கித் தலைநகரம் எனவும் அழைக்கப்படுகிறது. இது உலக வங்கி மற்றும்பன்னாட்டு நிதிநிறுவனங்களிலிருந்து அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்துள்ளது. இது ஆசியாவின் டெட்ராய்ட் எனவும் அழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 110 தொழிற் பூங்காக்கள் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளோடு செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழக அரசு இரப்பர் பூங்கா, ஆயத்த ஆடைகள் பூங்கா, புக்கள் பூங்கா, உயிரி தொழில்நுட்பப் பூங்கா, சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் வேளாண் ஏற்றுமதிப் பூங்கா போன்ற பல துறைகளையும் முன்னேற்றியுள்ளது.

மாநிலத்தின் பெரிய அளவிலான பொறியியல் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மையமிட்டுள்ளன. சென்னை பன்னாட்டு அளவில் கார் உற்பத்தி ஜாம்பவான்களின் நகரமாக உள்ளது.

பேருந்து கட்டுமானத் தொழிலுக்குப் பெயர் பெற்ற கரூர், தென்னிந்திய பேருந்து கட்டுமானத் தொழிலுக்கான பங்களிப்பில் 80% மாக உள்ளது. கரூரில் உள்ள தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம் ஆசியாவிலேயே மிகப் பெரிய சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனங்களுள் ஒன்றாக செயல்பட்டு வருகிறது. 'எஃகு நகரம்' என்றழைக்கப்படும் சேலத்தில் பல பெரிய ஜவ்வரிசி தயாரிப்பு நிறுவனங்களும் கனிமச் செல்வங்களும் உள்ளன. சிவகாசியில் அச்சுத் தொழில், பட்டாசு நிறுவனங்கள், தீப்பெட்டித் தயாரிப்பில் முன்னோடியாக உள்ளது. இந்தியாவின்மொத்தத் தீப்பெட்டி உற்பத்தியில் 90% பங்கும் சிவகாசியில் உற்பத்தியாகிறது. தமிழகத்தின் நுழைவாயில் தூத்துக்குடி ஆகும். சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப்பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**ஜவுளித்துறை**

தமிழ்நாடு இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும். தமிழ்நாடு இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுகிறது. இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் 41 சதவீத நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறை மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% பங்களிப்பையும், மொத்த ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளித் துறையிலிருந்து கிடைக்கிறது. உற்பத்தித்துறையில் 14% பங்களிப்பு ஜவுளித்துறை மூலமாக கிடைக்கப் பெறுகிறது. நூல் நூற்பிலிருந்து ஆடைத் தயாரிப்பு ஜவுளிகளுக்கான உற்பத்தித் தொடர்புடைய அனைத்து வசதிகளும் தமிழ்நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளான கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் கரூர் போன்ற மாவட்டங்களில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா நூற்பாலைகளில் பயன்படுத்தப்படும் பருத்தி பாலியஸ்டர் கலப்பு நூல் , பட்டு நூல் உற்பத்தி செய்யும் ஆலைகள் பெருமளவில் அமைந்துள்ளன. இங்கிருந்து சீனா வங்கதேசம் போன்ற பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

'பின்னலாடைகளின் நகரம்' என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பளவில் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்கிறது. திரைச் சீலைகள், படுக்கை விரிப்புகள், சமையலறை விரிப்புகள், கழிவறை விரிப்புகள், மேஜை விரிப்புகள, சுவர் அலங்காரங்கள் போன்ற உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. ஈரோடு மாவட்டம் தென்னிந்தியாவின் மொத்த மற்றும் சில்லறை ஆயத்த ஆடைகளுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ளது.

### தோல்பொருட்கள்

இந்தியாவின் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 30% -யும், தோல் பொருட்கள் தயாரிப்பில் 70 சதவீதத்தையும் தமிழகம் கொண்டுள்ளது. நூற்றுக்கணக்கான தோல் பொருட்கள் மற்றும் பதனிடும் தொழிற்சாலைகள் வேலூர், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி சென்னையில் நடைபெறுகிறது.

### மின்னணு சாதனங்கள்

மின்னணு சாதனங்கள் உற்பத்தியானது தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக உள்ளது. பல பன்னாட்டு நிறுவனங்கள், தெற்காசியாவின் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையமாக சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன. ///////// வாகன உற்பத்தி 'ஆசியாவின் டெட்ராய்ட்' என்றழைக்கப்படும் சென்னை மிகப்பெரிய அளவிலான வாகன உதிரி பாகங்கள் தயாரிப்புக்கான இடமாக விளங்குகிறது. தமிழ்நாடு, இந்திய அளவில் வாகன மற்றும் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தியில் 28 சதவீதமும்,லாரிகளுக்கான உற்பத்தியில் 19 சதவீதமும், பயணியர் கார் மற்றும் இருசக்கர வாகன உற்பத்தியில் 18 சதவீதமும் கொண்டுள்ளது.

### சிமெண்ட் தொழிற்சாலை

சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் 3 இடத்தில் உள்ளது (ஆந்திர பிரதேசம் -முதலிடம், ராஜஸ்தான் -இரண்டாமிடம்). 2018-ல் இந்தியாவில் உள்ள 10 மிகப்பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த ராம்கோ சிமெண்ட் மற்றும் இந்தியா சிமெண்ட் ஆகிய நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. மொத்த சிமெண்ட் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் 21 அலகுகளுடன் தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், 35 அலகுடன் ஆந்திர பிரதேசம் முதலிடத்திலும் உள்ளது.

### பட்டாசுப் பொருட்கள்

சிவகாசி நகரம் அச்சுத் தொழில், பட்டாசுப் பொருட்கள் மற்றும் தீப்பெட்டி உற்பத்தியில் தலைமையாகச் செயல்படுகிறது. ஜவஹர்லால் நேரு அவர்களால் குட்டி ஜப்பான்' என்று சிவகாசி அழைக்கப்பட்டது. இந்திய பட்டாசு உற்பத்தியில் 80% சிவகாசியில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவின் அச்சுத் துறைத் தீர்வுகளில் 60% சிவகாசியிலிருந்தே பெறப்படுகிறது.

### பிறதொழிற்சாலைகள்

உலக அளவில் மின்பொருட்கள் தயாரிப்பில் மிகப் பெரிய ஒன்றான BHEL நிறுவனம் திருச்சி மற்றும் ராணிப்பேட்டையில் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. கரூரில்

அமைந்துள்ள தமிழக அரசின் தமிழ்நாடு காதிதத் தயாரிப்பு நிறுவனம் உலகின் மிகப் பெரிய காகிதத் தயாரிப்பு நிறுவனமாகும். இந்தியாவின் சிமெண்ட் உற்பத்தியில் அரியலூர், விருதுநகர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் தயாரிப்பு நிறுவனங்களைக் கொண்டு தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. சேலத்தைச்சுற்றியுள்ள பகுதிகள் செழிப்பான கனிமவளம் கொண்டுள்ளன. இந்தியாவின் மிகப் பெரிய எஃகு உருக்காலை நிறுவனமான SAIL தனது எஃகு ஆலையை சேலத்தில் நிறுவியுள்ளது.

இந்தியாவின் மோட்டார் மற்றும் பம்புகளுக்கான தேவையில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்குவதால் கோயம்புத்தூர் 'காற்றமுத்த விசைக் குழாய் நகரம்' (Pump City) என்றழைக்கப்படுகிறது. தங்க ஆபரணங்கள், மாவு அரைப்பான் இயந்திரம் மற்றும் வாகன உதிரிப்பாகம் ஏற்றுமதியில் முக்கியப் பங்கு வகிப்பதால் "கோயம்புத்தூர் மாவு அரைப்பான் இயந்திரத்திற்கான' புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.

தூத்துக்குடி தமிழ்நாட்டின் நுழைவு வாயில் என்று அழைக்கப்படுகிறது. மாநிலத்தில் வேதிப்பொருள் உற்பத்தியில் தூத்துக்குடி முதலிடம் வகிக்கிறது. இந்திய உப்பு உற்பத்தியில் 30 சதவீதமும், மாநிலத்தின் உப்பு உற்பத்தியில் 70) சதவீதமும் தூத்துக்குடியில் உற்பத்தியாகிறது.

குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் MSMED-2006 சட்டத்தின்படி, குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை, கட்டமைப்பு மற்றும் தளவாடப் பொருட்கள் மீதான முதலீட்டின் அடிப்படையில் (நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக) உற்பத்தி நிறுவனம், பணிகள் நிறுவனம் என வகைப்படுத்தப்படுகின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில், தமிழ்நாடு 15.07 சதவீதத்துடன் தேசியளவில் முதலிடத்தில் உள்ளது. 6.89 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உள்ளன. இவை 8000 வகையான பொருட்களை 32,008 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தி செய்கின்றன. இவை அனைத்து துறைகளைச் சார்ந்த பெரும்பாலான பொருட்களை உற்பத்தி செய்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பொறியியல் பொருட்கள், மின் சாதன பொருட்கள், வேதிப் பொருட்கள், இரும்பு, காகிதம், தீப்பெட்டி, நெசவு மற்றும் ஆடைகள் போன்றவையாகும். ரூபாய்1,68,331 கோடி முதலீட்டில், பதிவு செய்யப்பட்ட 15.61 இலட்சம் தொழிலமுனைவோருடன் 99.7 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறது. ///(ஆதாரம் - MSME திட்ட குறிப்பு 2017-18) ///

**ஆற்றல்**

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிற தென் மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது.

| மாநிலம் | அலகுகள் | தரம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 26,865 MW | I |
| கர்நாடகா | 18,641 MW | II |
| ஆந்திரா | 17,289 MW | III |
| தெலுங்கானா | 12,691 MW | IV |
| கேரளா | 4,141 MW | V |
| மொத்தம் | 79,627 MW | |

தென் மாநிலங்களில் நிறுவப்பட்ட மின் பயன்பாட்டுத்திறன்

பசுமை எரிசக்தி முயற்சியில் 11,750 மெகாவாட் எரிசக்தி மின் நிறுவு திறனுடன் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. நிறுவப்பட்ட திறன் அளவில் தமிழ்நாடு பிற மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது. முப்பந்தல் காற்றாலை மையம், கிராம மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக உள்ளது. கோயம்புத்தூர், பொள்ளாச்சி, தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காற்றாலைகள் தவிர நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆதிய இடங்களில் புதிதாக காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது இந்தியாவின் 2 % மின் தேவைகளை நிறைவு செய்கிறது. இது இந்தியாவின் காற்றாலை உற்பத்தியில் பாதியளவு ஆகும். (2000 மெகாவட்கள்).

## அணுமின் ஆற்றல்

கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்.

| அலகு | ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள திறன் அளவு |
|---|---|
| கூடங்குளம் | 1834 MW (2 x 917) |
| கல்பாக்கம் | 470 MW (2 x 235) |

(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் -ஜனவரி-2017 அறிக்கை)

## வெப்பஆற்றல்

| ஆதாரம் | மில்லியன் அலகுகள் | சதவீதம் |
|---|---|---|
| அனல் | 13304 | 49.52 |
| புனல் | 2203 | 8.20 |
| அணு | 986 | 3.67 |
| பிற (காற்று சூரிய ஒளி) | 10372 | 38.61 |
| மொத்தம் | 26865 | 100.00 |

*(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் -ஜனவரி-2017 அறிக்கை)*

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றலில் அதிக அளவு அத்திப்பட்டு (வட சென்னை), எண்ணூர், மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆதிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது. டீசலை அடிப்படையாகக் கொண்ட அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34% க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது. பல்வேறு முறைகளில் தயாரிக்கப்படும் ஆற்றல் அளவுகள் கீழேயுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**புனல் மின்சாரம்**

தமிழ்நாட்டில் 20-க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது. அவற்றுள் முக்கியமானவையாக குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமானவையாகும்.

**சூரியசக்திமின்சாரம்**

கீழ்க்கண்ட அட்டவணையிலுள்ளபடி தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது. தென்தமிழகம் சூரிய திட்டங்களைச் செயல்படுத்த மண்டலமாகக் கருதப்படுகிறது.

| தர வரிசை | மாநிலம் | மொத்த திறன் 31 ஜனவரி 2017 (மெகாவாட்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 1590.97 |
| 2 | ராஜஸ்தான் | 1317.64 |
| 3 | குஜராத் | 1159.76 |
| 4 | தெலுங்கானா | 1073.41 |
| 5 | ஆந்திரா | 979.65 |

(ஆதாரம்: MNRE லிருந்து பெறப்பட்ட விபரம்)

**காற்றாலைமின்சாரம்**

இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக உள்ளது. மேலும் கடற்கரை காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி.தூத்துக்குடியின்தெற்குப்பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.

**பணிகள் துறை**

ங்கியியல், காப்பீடு, சக்தி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ஆகியவை முதன்மைத் துறையான பணிகள் துறையாகும் /

## வங்கியியல்

தமிழ்நாட்டில் உள்ள மொத்த வங்கிச் சேவையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் 52 சதவீத பங்குகளுடன் (5337 கிளைகள்) பணியாற்றுகின்றன. தனியார் வணிக வங்கிகள் 30% (3060 கிளைகள்), பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் 19%. (1364 கிளைகள) வட்டார கிராமிய வங்கிகள் 5% (537 கிளைகள்) மற்றும் 2 அயல்நாட்டு வங்கிக் கிளைகளும் சேவையில் உள்ளன.

தமிழ்நாட்டு வங்களின் மொத்த வைப்பு ,நிதியானது ஒவ்வொரு ஆண்டும் 14.32% உயர்வுடன் மார்ச் 2017-ல் ,65,068.50 கோடியை எட்டியுள்ளது. கடன் தொகை ஒவ்வொரு ஆண்டும் 13.5% அதிகரித்து மார்ச் -2017- ல் ரூ.6,95,500.31 கோடியாக எட்டியுள்ளது

முதன்மைத் துறைகளுக்கான கடன் தெகையானது 45.5 சதவீதமும் (தேசிய சராசரி 40%) வேளாண்மைத் துறைகளுக்கான கடன் வழங்கல் அளவு மார்ச்-2017-ல் 19.81% (தேசிய சராசரி 18) உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வங்கிகள் இந்தியாவிலேயே அதிக கடன் - வைப்பு வீதமாக 119.15 விழுக்காட்டைக் கொண்டுள்ளது. இந்திய அளவில் இதன் வீதம் 77.5 விழுக்காடு மட்டுமே உள்ளது.

## கல்வி

பள்ளிக் கல்வி நிகர மாணவர் சேர்க்கை வீதம் தமிழகத்தில் அதிகரித்துள்ளது. நிதி ஆயோக் அறிக்கையின்படி 2015-16-ல் துவக்க .'நிலையளவில் நிகர மாணவர் சேர்க்கை வீதம் தமிழ்நாடு (89.24-சதவீதம்) கேரளாவை (79.94-சதவீதம்) மற்றும் தேசிய சராசரியைவிட (24.74-சதவீதம்) இது உலக அளவில் 59 சதவீதமாகவும் உள்ளது

**தமிழ்நாடு தொடக்கக் கல்வி புள்ளிவிபரம்**
**2014–15**

| | | |
|---|---|---|
| பள்ளிகளின் எண்ணிக்கை | துவக்கப் பள்ளிகள் | 35,414 |
| | நடுநிலைப் பள்ளிகள் | 9,708 |
| | உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | 12,911 |

(ஆதாரம்: தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் 2016–17)

தொடக்கப் பள்ளிக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 118.8% (வகுப்பு 1-5) ஆகவும். நடுநிலைப் பள்ளிகளுக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 112.3% (வகுப்பு 6-8) ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளுக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 62.7% (வகுப்பு 9-10) ஆகவும், மேல்நிலை பள்ளிகளுக்கான மொத்த மாணவர் சேர்க்கை வீதம் 49.26% (வகுப்பு 11-12) ஆகவும் உள்ளது.

## உயர்கல்வி

உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு தொடர்ந்து பிற மாநிலங்களைக் காட்டிலும் முதன்மை பெற்று முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் மொத்த சேர்க்கை வீதமான (GER) 46% அனைத்து மாநிலங்களின் தேசிய சராசரியை விட அதிகமாகவுள்ளது.

**அட்டவணை 11.14 உயர்கல்வியில் மொத்த சேர்க்கை வீதம்**

| மாநிலம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| தமிழ்நாடு | 44.3 | 46.9 |
| மகாராஷ்டிரா | 29.9 | 30.2 |
| உத்திரப்பிரதேசம் | 24.5 | 24.9 |
| ஒடிசா | 19.6 | 21.0 |
| பீகார் | 14.3 | 14.4 |
| மொத்த இந்தியா | 24.5 | 25.2 |

(ஆதாரம்: அனைத்து இந்திய உயர் கல்விக்கான விபரம் – மனித வள மேம்பாட்டு மந்திரிசபையின் ஜனவரி –2018 அறிக்கை)

தமிழ்நாட்டில் 59 பல்கலைக் கழகங்களும், 40 மருத்துவக் கல்லூரிகளும், 517 பொறியியல் கல்லூரிகளும், 2260 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 447 பல் தொழில்நுட்ப கல்லூரிகளும், 20 பல் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்திலிருந்து 4 இலட்சம் பொறியியல் மற்றும் பல் தொழில்நுட்பம் பயின்ற மாணவர்கள் வெளியேறுகின்றனர், இது இந்திய அளவில் உச்சபட்ச அளவாகும்.

## கல்விக்கடன்கள்

2013-14 லிருந்து 2015-16 வரை பொதுத்துறை வங்கிகள் முக்கியத் துறைகளுக்கு வழங்கும் கடன்களின் அளவுகளில் 20.8 சதவீதத்தை கல்விக் கடனாக வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் தான் இந்திய அளவில் அதிக கல்விக்கடன் பயனாளிகள் உள்ளனர். ஆந்திர பிரதேசம் 11.2 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், 10.2 சதவீதத்துடன் மகாராஷ்டிரா மூன்றாமிடத்திலும் உள்ளது. 18 மாநிலங்களில் மொத்த கடன்களில் 1 சதவீத கடனையே கல்விக்கு அளித்துள்ளது.

இதே காலகட்டத்தில் தனியார் வங்கிகள் கேரளாவில் 37.8 சதவீதமும், தமிழ்நாட்டில் 24.8 சதவீதமும் வழங்கியுள்ளது. மொத்த தனியார் வங்கி வழங்கியுள்ள கல்வி கடன்களில் கர்நாடகம் மற்றும் கேரளா 60 சதவீத அளவிற்கு வழங்கியுள்ளது. நாடு முழுமைக்கும் மாநிலங்கள் மற்றும்

யூனியன் பிரதேசங்கள் உள்ள தனியார் வங்கிகள் மொத்த கல்விக் கடனில் 1 சதவீத அளவே வழங்கியுள்ளது.

**உடல்நலம்**

தமிழ்நாடு மூன்றடுக்கு உடல்நல அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. அவை மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நல மையங்கள் ஆகியனவாகும். மார்ச் 2015 -ல் தமிழகத்தில் 34 மாவட்ட மருத்துவமனைகளும், 229 துணை மருத்துவமனைகளும், 1254 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 7555 துணை நிலையங்களும், 313 சமூக நல மையங்களும் உள்ளன.

**தொலை தொடர்பு**

இந்தியாவில் இணையக்தின் பயன்பாட்டின் மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அம்மாநிலத்தில் 29.47 பில்லியன் இணையத்தில் பயன்பாட்டாளர்கள் உள்ளனர். இதனைக் தொடர்ந்து தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்கள் உள்ளன. மார்ச 2016 ம் ஆண்டு அரசு புள்ளி விவரப்படி இந்தியாவில் மொத்தம் 342.65 மில்லியன் இணையதள சந்தாதாரர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் 28.01 மில்லியன் சந்தாதாரர்களும் அண்டை மாநிலங்களான ஆந்திராவில் 24.87 மில்லியன், கர்நாடகாவில் 22.63 மில்லியன் சந்தாதாரர்கள் உள்ளனர்.

**போக்குவரத்து**

தமிழ்நாடு மிகச்சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது. அதன் மூலம் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கிறது. நாட்டிலுள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடிப் பகுதிகளை இணைக்ககூடியத் குரிமான விரிவுபடுத்தப்பட்ட சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது. மாநில முதலீட்டிற்கு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

**சாலை வசதி**

மாநிலத்தில் 28 தேசியநெடுஞ்சாலைகள் 5036 கி.மீ தொலைவினை இணைக்கின்றன. தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது. சென்னையிலுள்ள கோயம்பேடு மற்றும் ஈரோடு மத்தியப் பேருந்து நிலையங்கள் நம் மாநிலத்திலுள்ள மிகப்பெரியமற்றும் இரண்டாவது மிகப்பெரிய பேருந்து நிலையங்களாகும். தமிழநாட்டின் மொத்த சாலை நீளம் 1,67,000 கி.மீ. ஆகும். இதில் 60,628 கி.மீ. தொலைவு தேசிய நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது. பொது மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் 20% திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.

**இரயில் போக்குவரத்து**

தமிழ்நாடு நன்கு மேம்படுத்தப்பட்ட இருப்புப் பாதை அமைப்பைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் தென்னக இரயில்வே தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி மற்றும் கர்நாடகா ஆந்திராவின் சில பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் 6693 கி.மீ. ஆகும். 690 இரயில் நிலையங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் இந்தியாவின் முக்கிய நகரங்களை

இணைக்கின்றது. சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகியவை முக்கிய தொடர் வண்டி நிலையங்களாகும். சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதி விரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து மே 2017 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**வான்வழிப் போக்குவரத்து**

தமிழ்நாட்டில் நான்கு முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. மும்பை மற்றும் தில்லிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது. கோயம்புத்தூர் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. தூத்துக்குடி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களிலுள்ள உள்நாட்டு விமான நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. இத்துறையின் தொடர் நடவடிக்கையின் மூலம் பயணிகள் போக்குவரத்தும், சரக்கு போக்குவரத்தும் உன்னத வளர்ச்சி அடைந்து உள்ளது.ஒவ்வொருஆண்டும் 18% வளர்கிறது.

**துறைமுகங்கள்**

சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினம் நடுத்தர துறைமுகமாகும். மேலும் 23 சிறு துறைமுகங்களும் உள்ளன. இவை தற்போது ஆண்டுதோறும் 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாளக் கூடிய திறன் கொண்டவை. (இந்திய அளவில் 24 சதவீதம்). அனைத்து சிறிய துறைமுகங்களும், தமிழ்நாடு கடல்சார் மையத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சென்னை துறைமுகம் கன்டெயினர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கைத் துறைமுகமாகும்.இது 4,00,000 வாகனங்களைக் கையாளக்கூடிய அர்ப்பணிப்பு முனையமாக தற்போது மேம்படுத்தப்பட்டு அனைத்து விதமான நிலக்கரி மற்றும் கனிமப் போக்குவரத்துகளைக் கையாள்கிறது

**சுற்றுலா**

முற்காலத்திலிருந்தே தமிழ்நாடு ஒரு சிறந்த சுற்றுலா மையமாகத் திகழ்ந்து வருகிறது. நவீன காலங்களில் நமது மாநிலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் முதன்மைப் புகலிடமாக விளங்குகிறது. தமிழ்நாடு அரசு மேற்பார்வையில் இயங்கும் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத்துறை தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது. இந்திய மாநிலங்களில் 25- கோடிக்கு மேல் சுற்றுலாப் பயணிகளுடன் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இத்துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி 16 சதவீதமாக உள்ளது. தோராயமாக 28 இலட்சம் வெளிநாட்டுபயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிகின்றனர்.

'Enchanting தமிழ்நநாடு' என்ற தமிழ்நநாடு சுற்றுலாத் துறையின் தாரக மந்திரம், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளையும் ஒட்டுமொத்தமாக ஈர்த்ததன் காரணமாக, நாட்டிலேயே அதிக அளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிந்த முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

## வறுமை மற்றும் வேலையின்மை

தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவின் சராசரி 50 (1000-ம் பேருக்கு) ஆக உள்ளது. தமிழ்நாட்டில் 1000-க்கு 42 பேர் வேலையில்லாமல் உள்ளனர். தேசிய அளவில் 22 வது இடத்திலுள்ளது.

| தமிழ்நாட்டு மக்கள் தொகை வளர்ச்சி (2011 கணக்கெடுப்பின் படி) | |
|---|---|
| • மொத்த மக்கள் தொகை | 72138958 |
| • ஆண்கள் | 36158871 |
| • பெண்கள் | 35980087 |
| • தோராய பிறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | 15.7 |
| • தோராய இறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு) | 7.4 |
| • வளர்ச்சி விகிதம் (ஆயிரத்துக்கு) | 8.3 |
| • அதிக மக்கள் தொகையுடைய மாவட்டங்கள் | சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருவாரூர் |
| • குறைவான மக்கள் தொகையுடைய மாவட்டங்கள் | பெரம்பலூர், நீலகிரி, அரியலூர், தேனி |
| • மக்கள் தொகை அடர்த்தி (சதுர கிலோ மீட்டருக்கு) | 555 (2011) – 480(2001) |
| • மிக அதிக அடர்த்தி | சென்னை (26903), கன்னியாகுமரி (1106) |
| • குறைவான அடர்த்தி உள்ள மாவட்டம் | நீலகிரி (288), திருச்சிராப்பள்ளி (602) |
| • பாலின விகிதம் (1000 ஆண்டுகளுக்கு) | 995 பெண்கள் (2011), 987 பெண்கள் (2001) |
| • அதிக பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள் | நீலகிரி (1041 பெண்கள்)<br>கன்னியாகுமரி (1031 பெண்கள்)<br>நாகப்பட்டினம் (1025 பெண்கள்) |
| • குறைவான பாலின விகிதம் உடைய மாவட்டங்கள் | தேனி (900 பெண்கள்) தர்மபுரி (946 பெண்கள்) |
| • குழந்தை பாலின விகிதம் (0–6 வயதுக்குட்பட்ட) | 946 பெண் குழந்தைகள் (2011)<br>942 பெண் குழந்தைகள் (2001) |
| • அதிக குழந்தை பாலின விகிதம் கொண்ட மாவட்டங்கள் | நீலகிரி (985), கன்னியாகுமரி (964) |
| • குறைவான குழந்தை பாலின விகிதம் கொண்டமாவட்டங்கள் | கடலூர் (896), அரியலூர் (897) |
| • எழுத்தறிவு விகிதம் | 80.33% – 73.45% |
| • ஆண் எழுத்தறிவு விகிதம் | 86.81% – 82.33% |
| • பெண் எழுத்தறிவு விகிதம் | 73.86% – 64.55% |
| • அதிக எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள் | கன்னியாகுமரி (92.14%) சென்னை (90.33%) |
| • அதிக எழுத்தறிவு விகிதம் கொண்ட மாவட்டங்கள் | தருமபுரி (64.71%), அரியலூர் (71.99%) |

### தமிழகத்தில் தொழில் வளர்ச்சி

சுதந்திரத்திற்குப் பிறகு மத்திய மற்றும் மாநில அரசுகளால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பல பெரிய நிறுவனங்கள் நிறுவப்பட்டன. சென்னையில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும் ரயில் பெட்டித் தொழிற்சாலையும் திருச்சிராப்பள்ளியில்கொதிகலன் மற்றும் விசையாழிகள் தயாரிப்பதற்காக பாரத கனரக மின்சாதன நிறுவனத்தை (Bharat Heavy Electricals Limited - BHEL) மத்திய அரசு நிறுவியது. BHEL நிறுவனம் அதனுடைய உள்ளீட்டுப்பொருட்கள் தேவைகள் தொடர்பாக பல சிறிய நிறுவனங்களின் தொழில் தொகுப்புகளின் தோற்றத்திற்கு வழிவகை செய்தது. சென்னை புறநகரில் உள்ள ஆவடியில் போர் களவாடங்கள் தயாரிக்க கனாக வாகனத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனமும் சென்னையில் மகிழுந்துகளை உற்பத்திச் செய்யத் தொடங்கியது. அசோக் மோட்டார்ஸ் (பின்னர் அசோக் லேலண்ட்) ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் இணைந்து சென்னை வட்டாரத்தில் வாகனத்தொழில்துறை தொகுப்புகள் வளர்ச்சிக்கு உதவியது. மேலும் இது வாகன உதிரி பாகங்களின் நகரமாக மாறியது 1950 களில் இப்பகுதியில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வாகன கூறுகளை வழங்குவதற்கு சிறிய மற்றும் நருத்தர அளவிலான நிறுவனங்களுக்கு உதவியாக ஆவடியில் தொழில் தோட்டங்கள் நிறுவப்பட்டது. மாநிலத்தில் அதிக நீர் மின்சக்தி திட்டங்கள் மூலம் மின்மயமாதலை பரவலாக அதிகரிக்க வலியுறுத்தப்பட்டது. இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு பெரும் பங்கு வகித்தது. 1973 ஆம் ஆண்டில் எஃகு உற்பத்தி செய்வதற்காக சேலத்தில் இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்டது.

### கோயம்புத்தூர் பகுதியில், ஜவுளி, ஜவுளி இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள் மற்றும் நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கான பம்ப் குழாய்கள்

1970 மற்றும் 1950 களில் கோயம்புத்தூர் பகுதியில் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் அதேபோல் திருப்பூரில் பின்னலாடைத் தொழில் தொகுப்புகள் விரிவாக்கம் மற்றும் கரூரில் வீட்டு அலங்காரப் பொருட்கள் தொழில் தொகுப்புகள் இக்காலகட்டத்தில் உருவாகியது. மாநில அரசின் மூலம் பல்வேறு பகுதிகளில் தொழில்துறை தோட்டங்கள் அமைக்கப்பட்ரு அதன் மூலம் சிறு மற்றும் நடுத்தா நிறுவனங்கள் ஊக்கப்பருத்தபட்டது. ///5.4.3 தமிழ்நாட்டில் தொழில் மயமாதல் - தாராளமயமாதல் கட்டம்: 1990ககளின் முற்பகுதியில் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற தொழில் மயமாதலின் இறுதி கட்டம் ஆகும். இந்த சீர்திருத்தங்கள் மாநில அரசாங்கங்கள் வளங்களை திரட்ருவதற்கு பொறுப்பேற்கச் செய்தன. மேலும் அவை தொழில் மயமாதலுக்கு தனியார் முதலீருகளை ஈர்ப்பதற்காக ஒருவருக்கொருவர் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மலிவான நிலம், வரிச்சலுகைகள் மற்றும் மானியங்கள் போன்ற சலுகைகள், ஆனால்தரமான சக்திகள் மூலம் முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்க ஊக்கப்பருத்தின. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் நாணய மதிப்பிறக்கம் ஆகியவை ஏற்றுமதி சந்தைகளைத் திறக்க உதவியது. இது இரண்டு பெரிய முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.

முதலாவதாக, வர்த்தக தாராளமயமாக்கலின் நடவடிக்கைகள் காரணமாக ஜவுளி, வீட்டு அலங்கார பொருட்கள் மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி விரைவாக வளரத் தொடங்கியது. இரண்டாவதாக, முதலீடுகளை ஈர்ப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பன்னாட்டு

நிறுவனங்கள் தமிழகத்தில் குறிப்பாக வாகனத்துறையில் நுழைவதற்கு வழிவகுத்தன. வாகனத் தொழில்துறை வாகன பொருட்கள் தயாரிப்பவர்களையே பெரிதும் நம்பி இருந்தன. பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவு மற்ற பன்னாட்டு நிறுவன வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பவர்களை கொண்டு வரவில்லை. நகரின் புற நகரில் நோக்கியா, பாக்ஸ்கான், சாம்சங், மற்றும் பிலக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற ஆலைகள் பன்னாட்டு நிறுவனங்களுடன் சென்னை வட்டாரத்திலும் மின்னணுத் துறையின் மையமாக உருவவருத்தது. ஆனால் உள்நாட்டு உதிரிபாக பொருட்கள் தயாரிப்பாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கத் திறந்தது. ஒரு குறிப்பிடத்தக்க பங்கு முதலீட்டினணால் சென்னை எல்லையில் உள்ள மாவட்டங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டன. உற்பத்தி முதலீருகளை ஈர்ப்பதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் ) வழிகளைப் பயன்படுத்தி வெற்றியடைந்ததில் ஒரு முன் மாதிரியாக விளங்கிய தமிழ்நாடு பெரிதும் பாராட்டத்தக்கது.

தமிழகத்தில் மிக நீண்ட காலமாக உருவாகிய முக்கிய தொழில்களான சர்க்கரை, உரங்கள், , இரும்பு மற்றும் எஃகு, ரசாயனங்கள், மின்மாற்றிகள் மற்றும் காகிதங்கள் போன்றவைகளாகும்.

தானியங்கி தொகுப்புகள் சென்னை பெரிய அளவிலான வாகனக் தொழில்துறை தளமாக இருப்பதால் "ஆசியாவின் டெட்ராய்ட்" என்று அழைக்கப்பருகிறது.சென்னையானது தானியங்கி மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மர்றும் உதிரிபாகங்கள் செய்யௌம் தலைமை இடமாகத் திகழ்கிறது. சில உள்நாட்டு நிறுவனங்களான TVS , TI சைக்கிளஸ், அசோக் லேலண்ட் மற்றும் ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் ஆகியன இதற்கு முன்னர் இருந்தன. பொருளாதார சீர்திருத்தத்திற்கு பின்னர் ஹீண்டாய், ஃபோர்டு, டைம்லரென்ஸ் மற்றும் ரெனால்ட் நிசான் போன்ற பல பன்னாட்டு நிறுவனங்கள் சென்னையில் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளன.

ஒசூர் மற்றொரு தானியங்கி தொகுப்பாகும். இங்கு TVS மற்றும் அசோக்லேலண்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளை இயக்கி வருகின்றன. கோயம்புத்தூர் பகுதி ஒரு தானியாங்கிகள் தொகுப்பாக வளர்ந்து வருகிறது.

வாகன மற்றும் பேருந்து கட்டுமானத் தொழில் தொகுப்புகள் தமிழகத்தின் மேற்குபகுதியில் உள்ள நாமக்கல் மற்றும் திருச்சங்கோடு பகுதிகள் சுமை தூக்கும் வாகன முழுபாக கட்டமைமப்பிற்கான தொழிற்சாலைகளுக்குப் பெயர்பெற்ற இடங்களாகும். சுமை தூக்கும் வாகனக் கட்டுமானத் துறையில் 150 தொழில்களில் 250 அலகுகளில் இந்த தொகுப்பில் 12 பெரிய அளவிலான சுமை காக்கும் வாகனக் கட்டுமான துறைகள் உள்ளன.

50 க்கும் மேற்பட்ட அலகுகளைக் கொண்டு கரூர் மற்றாரு முக்கிய மையமாகத் திகழ்கிறது. பல தொழில் முனைவோர்கள் பெரிய அளவிலான வாகனக் கட்டுமானத் துறையில் பணி புரிந்து தற்போது தங்கள் சொந்த அலகுகளை அமைக்க முன்வந்துள்ளனர்.

நெசவத் தொழிற்சாலை இந்தியாவில் மிகப்பரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது. காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத்தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என அழைக்கப்பருகிறது. தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச்

சுற்றியுள்ள சிறு நகரங்கள் கிராமங்களுக்கு நகர்ந்துள்ளன. அவைகள் கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும். எனவே நமது நாட்டின் மிகப் பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.

கோயம்புத்தூரைச் சுற்றி பல்லடம் மற்றும் சோமனூர் சுற்றி சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் நன்கு கணித செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீருகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்கின்றன. ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத்தறித் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.

திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் எராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ் பெற்ற இடமாகும். இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 80% பங்கினைக் கொண்டுள்ளது. 1980 களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இது உள்நாட்டுச் சந்தையில் ஒரு மிகப்பரிய உற்பத்தியாளராகத் திகழ்கிறது. இந்த மிகப்பெபரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்கு அரைக் கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது. ஆரம்பத்தில் உள்ளூர் தொழில்முனைவோரால் பெரும்பாலான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. தற்போது இந்தியாவின் மிகப்பபரிய முன்னணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர்.

தோல் மற்றும் தோல் பொருட்களின் தொகுப்பு இந்தியாவின் 60% தோல் பதனிரும் உற்பத்தித்திறனையும் 35% தோல் காலணிகள் மற்றும் தோல் தொழிற்சாலை தோல் உதிரி பாகங்கள் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தியையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. வேலூர் அதனைச் சுற்றியள்ள ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் உற்பத்தி மற்றும் பதனிடும் வசதியைக் கொண்டுள்ளது. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக வேலூர் திகழ்கிறது. சென்னையிலும் பல தோல் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிற்சாலை நிறுவனங்கள் உள்ளன. திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் தோல் பதனிடுதல் மற்றும் உற்பத்தித் தொழிற்சாலைகளின் தொகுப்பு காணப்படுகிறது. தோல் உற்பத்தித் தொழிற்சாலையும் வேலைவாய்ப்பை அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சிடுதல் தொகுப்பு தீப்பெட்டி உற்பத்தித் தொழிற்சாலையில் புகழ்பெற்று விளங்கும். சிவகாசி பகுதியானது தற்பொழுது பட்டாசு மற்றும் அச்சிடும் தொழிலில் நாட்டின் சிறந்த நகரமாகத் திகழ்கிறது. இந்தியா 90% பட்டாசு உற்பத்தி 80% பாதுகாப்பான தீப்பெட்டி உற்பத்தி மற்றும் 60% அச்சுப்பணி தேர்வுகளுக்கு முக்கிய பங்காக இதனையே சார்ந்துள்ளது. அச்சிரும் தொழிற்சாலை ஒவ்வொன்றும் அவற்றின் பணிகளில் தனித்துவம் பெற்று மேலோங்கி விளங்குகிறது. காலனித்துவ காலத்தில் தொடங்கப்பட்ட இத்தொாழிலானது தற்பொழுது அதிகளவில் வேலை வாய்ப்பை அளிக்கிறது.

மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொகுப்புகள் 1990-களில் எற்பட்ட பொருளாதார சீர்திருத்தத்திற்கப் பின் வந்த நோக்கியா, ஃபாக்ஸ்கான், மோட்டோரோலா, சோனி எரிக்ஸன், சாம்சங் மற்றும் டெல் போன்ற வன் பொருள் மற்றும் மின்னணு பொருள் தயாரிப்பு

நிறுவனங்கள் கைபேசி கருவிகள், சுழல் பலகைகள், நுகர்வோர் மின் சாதனப் பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தன. இந்நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிறுவனங்களை நிறுவின.

அதே போல் மென்பொருள் உற்பத்தித்துறை விரிவாக்கம் சென்னையிலும் குறிப்பிட்ட அளவு கோயம்புத்தூரிலும் மென்பொருள் உற்பத்தி சேவையில் சிறந்த மையங்களாக விளங்குகிறது.

குறிப்பிட்ட சில தகவல்தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள் வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier - II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஒசூர் மற்றும் சேலம் தகவல் தொழில் நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSEZs (தகவல் தொழில்நுட்ப பொருளாதார சிறப்புமண்டலங்கள்) ஐ நிறுவியுள்ளது. சென்னை - சோழிங்கநல்லூர் கோயம்புத்தூர் - விளாங்குறிச்சி மதுரை - இலந்தைகுளம் மதுரை - வடபாலஞ்சி, கிண்ணிமங்கலம் திருச்சிராப்பள்ளி - நாவல்பட்டு , திருநெல்வேலி - கங்கைகொண்டான் சேலம் - ஜாகீர் அம்மாபாளையம் ஒசூர்- விஸ்வநாதபுரம்

புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் தொழில் விரிவாக்கத்திற்கு திறவுகோலாக செயல்படும் முகமைகள் தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT - State Industries Promotion Corporation of Tamilnadu) , 1971 தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் என்பது 1970 ல் தமிழக அரசால் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். சிறு தொழிற்பிரிவின் புதிய நிறுவனங்களுக்கு மானியம் மற்றும் தொழிற் நுட்ப உதவிகளையும் இந்த நிறுவனம் வழங்குகிறது.

தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டு கழகம் ( TIDCO - Tamil Nadu Industrial Development Corporation) 1965 தமிழ்நாட்டில் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றுமொரு அரசு நிறுவனமாகும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் - வரையறுக்கப்பட்டது (TIIC - Tamil Nadu Industrial Investment Corporation Ltd) 1949 புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில்பிரிவுகளைபெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது குறைந்த அளவிலான நிதி உதவியைச் செய்கிறது. அனைத்து வகையான தொழில் நிறுவனங்களுக்கும் உதவும் என்றாலும் குறிப்பாக 90% மிகச்சிறு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இது உதவுகிறது.

தமிழ்நாடு சிறுதொழில் கழகம் - வரையறுக்கப்பட்டது (TANSI - Tami Nadu Small Industries Corporation Ltd.) 1965 தொழில் மற்றும் வணிக நிறுவனங்களால் அமைப்புத் துறையில் நிறுவப்பட்டு, செயல்பருத்தப்படு, வரும் சிறுதொழில் அமைப்புகளை 1965இல் தமிழ்நாடு சிறுதொழில் கழகமானது தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டது. சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில்துறை நிறுவனமாகும்.

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் (தொடங்கப்பட்டது: ஜனவரி 16, 2016) ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல்.

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம்(தொடங்கப்பட்டது: எப்ரல் 5, 2016) ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வவளி (Greenfield Enterprise) நிறுவனம் அமைப்பதற்காக குறைந்த பட்சம் 10 இலட்சத்திற்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் அல்லது பட்டியல் பழங்குடியினர் மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் எனக் கடன் வழங்கி வங்கிக் கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones -SEZs)**

நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000 ஆம் ஆண்டு அறிமுகப்பருத்தப்பட்டது. SEZ அலகுகளில் சுய சான்றிதழ் அடிப்படையில் அலகுகள் அமைக்கப்படலாம். பொதுத் துறை, தனியார் துறை அல்லது கூட்டுத் துறை அல்லது மாநிலங்களில் SEZ அமைப்பதற்கான கொள்கை வழங்கப்படுகிறது. தற்போதுள்ள சில ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள் சிறப்புப் பாருளாதார மண்டலங்களாக மாற்றப்படும். அதன்படி, பின்வரும் இடங்களில் அமைந்துள்ள ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைத்துள்ளது.

நாங்குநேரி SEZ - பல் நோக்கு உற்பத்தி SEZ திருநல்வேலி எண்ணூர் SEZ - அனல் மின் திட்டம், வயலூர் கோயம்புத்தூர் SEZ - தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள் ஒகர் SEZ - தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு பெரம்பலூர் SEZ - பல்நோக்கு உற்பத்தி SEZ தானியங்கி (Auto city) SEZ - தானியங்கிகள்/ தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர் இந்தியா - சிங்கப்பூர் SEZ - தகவல் தொழில்நுட்ப சேவைகள், மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள் - திருவள்ளூர் மாவட்டங்கள் உயிரி - மருந்துகள் SEZ - மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மைய மீழ் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone) மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் எழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

**TN-SMART செயலி**

இயற்கை பேரிடர்களை முன்னதாகவே அறிந்து கொள்ள தாய்லாந்தில் உள்ள ஆசிய மண்டலத்தின் ஒருங்கிணைந்த பல்வகை பேரிடர் முன்னறிவிப்பு மையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட இணையதள புவியியல் தகவல் முறை (GIS) அமைப்பு மற்றும் TN-SMART என்ற

செயலி அக்டோபர் 2018 மாதம் தமிழக அரசால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இது, இந்தியாவிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இச்செயலி மூலம் குறுகிய காலத்தில் பேரிடர் எச்சரிக்கைகள் தெரிவிக்கப்பட்டு, பெருமளவிலான உயிர்ச் சேதத்தை தவிர்க்க இயலும்.

**குறிப்பு :** சமூக நலத்திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும் தொடர்பான தகவல்கள் அலகு எண். 3 . அரசியல் கட்சிகளும் மக்களுக்குமான நலத்திட்டங்குள் பகுதியில் வழங்கப்பட்டுள்ளன.

**தகவல் ஆதாரம் :** 11 ஆம் வகுப்பு புதிய பொருளியல் புத்தகம் - அத்தியாயம் 11 - தமிழ்நாட்டுப் பொருளாதாரம்.)

www.portalacademy.in

# 6. சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள். (Social Justice and Social Harmony as the Cornerstones of Socio - Economic development.)

தமிழ் நாட்டில் சமூக நீதியை பேணிப் பாதுகாக்க பல்வேறு திட்டங்களை தமிழ அரசு செயல்படுத்தி வருகிறது. அவற்றில் முக்கியமான திட்டங்களை தொகுத்துள்ளோம். (மேலும் பல திட்டங்களை, மூன்றாம் அத்தியாயத்திலுள்ள அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் பகுதியில் காணலாம்)

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

குழந்தைகள்தான் தேசத்தின் எதிர்காலம் என்பதாலும் பின்தங்கிய சூழ்நிலையில் வளாந்து வரும் குழந்தைகள் அறிவாற்றலுடன் கூடிய நாட்டின் குடிமகனாக வளாந்திட வழிவகுத்திட வேண்டும் என்று உணாந்ததாலும், அப்போதைய முதலமைச்சராக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் "சத்துணவுத் திட்டத்தை" 1982ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார் .இத்திட்டத்தை துவக்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குழந்தைகளின் கல்வி மேம்பட வேண்டும் என்பதுடன் பசி இதற்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பது தான் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

1991ஆம் ஆண்டில் இத்திட்டம், "புரட்சித் தலைவா எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2013ஆம் ஆண்டில் புரட்சித்தலைவி டாக்டா ஜெ.ஜெயலலிதா அவர்களால் குழந்தைகளின் விருப்பத்திற்கேற்றவாறு சத்துணவில் வழங்கப்படும் உணவினை மாற்றியமைத்து, தற்போது 13 வகையான கலவை உணவ வகைகளுடன் மசாலா முட்டைகளும் வழங்கப்படுகிறது.

### திட்டத்தின் சிறப்புக் கூறுகள்

5 முதல் 9 வயதிற்குட்பட்ட தொடக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திறகுள்ளேயே, சூடான, ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் சமைத்து வழங்கப்படுகிறது.

### தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தின் கால முறை வளர்ச்சி

சத்துணவுத் திட்டமானது ஊரக பகுதிகளில் 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும், 5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு தொடக்கப்பள்ளிகளிலும் முதலில் துவங்கப்பட்டது. பின்னர் 15.09.1982 முதல் நகாப்புறங்களுக்கும் அதன் தொடாச்சியாக 10 முதல் 15 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 15.09.1984-ல் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

### தேசிய மதிய உணவுத் திட்டம்

தொடக்கக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற "தேசிய மதிய உணவுத் திட்டம் மத்திய அரசால் 15.8.1995ல் தொடங்கி 1997-98-ல் தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. உயாதொடக்கப் பள்ளிகளில் அக்டோபா் 2007-ல் விரிவுபடுத்தப்பட்டது. உணவூட்டுச் செலவினம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியம், மத்திய மாநில அரசுகளால் 60:40 என்ற விகித அடிப்படையில் பகிரப்படுகின்றன.

**பள்ளி மாணவர்களுக்கு "இலவச சீருடைகள் வழங்கும் ' திட்டம்**

25.11.1985 அன்று ஆரம்பிக்கப்பட்ட "இலவச சீருடைகள் வழங்கும் ' திட்டத்தின் வாயிலாக பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பதற்காக தற்போது 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறையின் கீழ் இச்ச்ருடைகள் 98 பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகிறது இதன் மூலம் பெண்கள் நீட்டித்த வாழ்வாதாரம் பெற வழிவகை செய்கிறது. மேலும் விதவைகள்,

**திருநங்களைகளுக்கான நலத்திட்டங்கள்**

2006-ல் அப்போதைய முதல்வர் கருணாநிதி, அவர்களுக்கு 'திருநங்கை', 'திருநம்பி' எனப் பெயரிட்டு சட்டம் இயற்றினார். முன்னாள் முதல்வர் கருணாநிதியால் 2008-ம் ஆண்டு திருநங்கைகள் நல வாரியம் அமைக்கப்பட்ட ஏப்.15-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் 'திருநங்கைகள் தினமாக' கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு அரசு மூன்றாம் பாலினர்களை உறுப்பினாகளாக கொண்ட "மூன்றாம் பாலினருக்கான நல வாரியம்" அமைத்து அவர்களின் சமூக உட்சோக்கைக்கான வழிவகையினை செய்து நாட்டிலேயே முதன் மாநிலமாக திகழ்கிறது

**பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பிற்கான சட்டங்கள்**

- வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 : இச்சட்டமானது 1989 ல் திருத்தம் செய்யப்பட்டு, தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள் 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் மூலம், மாவட்ட சமூக நல அலுவலர்கர் வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம் தேதி வரதட்சணைத் தடுப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986
- குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2006
- குழந்தை திருமணம் தடுப்புச் சட்டம், 2006
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009
- பாலியல் வன்கொடுமையிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012
- பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2013
- இளைஞர் நீதிச் சட்டம், 2015

- தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம் 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும் ) விதிகள் 2015

## தொட்டில் குழந்தைத் திட்டம் :

"தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992-ல் சேலம் மாவட்டத்தில், பெண் சிசுக்கொலை வழக்கத்தை தடுக்கும் நோக்கில் நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. இந்த புதுமையான திட்டத்தின் மூலம் பதிவு பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் தத்து நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு சிசுக்கொலையிலிருந்து மீட்கப்பட்டு, அக்குழந்தைகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டது.

## முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

பெண் குழந்தைகளுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது சிறு குடும்ப நெறியை ஊக்குவிக்கவும், பாலின வேறுபாட்டை களையவும், ஏழைக் குடும்பங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு பயன் அளிக்கும் விதமாக அரசால் நேரடியாக உதவி புரியும் திட்டமாகும்.

## தமிழக அரசின் திருமண நிதியுதவித் திட்டங்கள்

தமிழக அரசின் மூலம் ஐந்து விதமான திருமண நிதியுதவி நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

| திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு | வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| மூவலூர் இராமாமிர்தம் – ஏழைப்பெண்கள் | ரூ.72000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி பழங்குடியினர்– 5ஆம் வகுப்பு | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| ஈ.வெ.ரா. மணியம்மையார் – விதவை மகள் | ரூ.72000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| அன்னை தெரசா– ஆதரவற்ற பெண் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| டாக்டர் தர்மாம்பாள் – விதவை மறுமணம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாத காலத்திற்குள் |
| டாக்டர் முத்துலெட்சுமி – கலப்பு திருமணம் ** திட்டம் I & II | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது | இல்லை | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குள் |

## பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்

"பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற திட்டம் கடந்த 2015ஆம் ஆண்டு, உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில், குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரி அளவான 918 விட குறைவாக இருந்த மாவட்டங்களில் மத்திய அரசால் துவக்கப்பட்டது.

2011ல் இந்திய மக்கள் தமிழ்நாட்டில், முதன் முதலில் குழந்தை பாலின விகிதம் தேசிய அளவை விட மிக குறைவாக இருந்த கடலூர் மாவட்டத்தில், "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் துவக்கப்பட்டது. திட்டத்தின் 3 வருட வெற்றிகரமான செயல்பாடு மாவட்டத்தின் பிறப்பு பாலின விகிதத்தை 886ல் இருந்து 956ஆக, உயாத்தியதுடன், 2017ல் இத்திட்டத்திற்கான தேசிய விருதினையும் பெற்று தந்தது. 08.03.2018 அன்று இத்திட்டம் நாட்டின் 640 மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது.

"பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்கு அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்து, வழிநடத்தி, கண்காணித்து, திட்ட இலக்குகளை எய்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு திட்டத்திற்கான தேசிய விருது-2019 ஐ தமிழகத்திற்கு வழங்கி சிறப்பித்தது.

திருவண்ணாமலை மாவட்டம் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக "சிறந்த சமூக ஈடுபாட்டிற்காக" தேர்வு செய்யப்பட்டு மாவட்டத்திற்கான தேசிய விருதினை பெற்றது.

**மாநில பெண்கள் வள மையம் (State Resource Centre for Women)**

தமிழ்நாட்டில் மாநில பெண்கள் வள மையம் 2014 ஆம் ஆண்டு மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டிற்கான தேசிய குழுமம் வாயிலாக துவங்கப்பட்டது. இம்மையமானது மத்திய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற விகிதாச்சாரத்திலான நிதியுதவியுடன் பெண்களுக்கான முன்னோடித் திட்டங்களை இணைந்து ஆய்வு செய்வதற்கும், மேற்பாவையிடுவதற்கும் தற்போதுள்ள துறையின் கீழுள்ள அமைப்புகளின் நிர்வாகத்திற்கு பங்காற்றி வருகிறது.

**மகளிர் உதவி எண்.181 (Women Help Line)**

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24/7 மணி நேரமும், உடனடி உதவிகள் வழங்குவதற்கு மத்திய அரசால் குறுகிய குறியீடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மகளிர் உதவி எண் .181-ன வாயிலாக அவசரகால அழைப்பை ஏற்பதே உலகலாவிய மகளிர் உதவி எண் திட்டத்தின் நோக்கமாகும். இம்மகளிர் உதவி எண் வாயிலாக பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன.

100% மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும், இத்திட்டம் 10.12.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.

**பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007**

மூத்த குடிமக்கள் நமது நாட்டின் விலைமதிப்பில்லா சொத்துக்கள். நாட்டின் வளர்ச்சிக்கான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வரையறை செய்ப்பட்டுள்ளபடி மூத்த குடிமக்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு அதற்கேற்ப விதிகளும் வகுக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச்சட்டம், 2007-னை சிறப்பாக செயல்படுத்தவும், ஆலோசனை வழங்கவும், கண்காணிக்கவும் மாநில அளவில் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினாகளையும் உள்ளடக்கிய ஒரா உயர் மட்ட ஆலோசனைக் குழுவான மாநில அளவிலான முதியோர் ஆலோசனைக் குழு ஒன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு ஒருங்கிணைந்த வளாகங்கள்**

முதியோர்கள் மறறும் ஆதரவற்ற குழந்தைகளை ஒரே வளாகத்தில் தங்கும் விதத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக இந்த ஒருங்கிணைந்த வளாகங்களை கடந்த 2011-12ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மாநில அரசின் மானிய உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்தில் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர்கள் தங்கும்படி செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடாபான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பான தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அரசாணை எண். 88, சமூக நலம் மற்றும்

**தமிழ்நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாட்டில் 1954ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மறறும் குழந்தைகளின் முன்னேற்றத்திறகாகவும், மாநில மறறும் மத்திய சமூக நல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது.

**சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள் :**

இடர்பாடான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 1887ஆம் ஆண்டிலேயே சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிறகாகவும், அதற்கான நிறுவனங்களின் செயல்பாட்டிற்காகவும், 1920 ஆம் ஆண்டில், “மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்” இயற்றப்பட்டது. 1947-ல் இத்துறை சிறைத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புபபணி துறை என்று ஒரு தனித்துறையாக “முதன்மை ஆய்வாளர்

ஒருவரை தலைவராக கொண்டு செயல்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு சட்டம் 1956 சட்டம் இயறறப்பட்டவுடன் அப்போதைய சென்னை விழிப்புப்பணி சங்கம் என்ற அமைப்பின் கீழ் செயல்பட்டு வந்த அனைத்து நிறுவனங்களையும் இத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டதால், இத்துறை "சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை" என அழைக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் இத்துறையின் பெயர் கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றப்பட்டது

- 1958 சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை
- 1975 நல்வழிப்படுத்தும் நிர்வாகத் துறை
- 1981 சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை
- 1990 சமூகப் பாதுகாப்புத் துறை

சமூகப் பாதுகாப்புத் துறை, குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான கீழ்க்காணும் இரண்டு முக்கிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது: (1) இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

(II) ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

**குழந்தைகள் இல்லங்கள் :**

மாநிலத்தில் 1,212 குழந்தைகள் இல்லங்கள், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம், 2015-இன் கீழ் பதிவு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், உடல்நலம் / மனநலம் குன்றிய மாறறுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்களையும் சேர்த்து, 145 குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் இயங்கி வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மறறும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**திறந்தவெளிப் புகலிடங்கள் :**

திறந்தவெளிப் புகலிடங்கள், பாதுகாப்பு மறறும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் குறிப்பாக வீடற்ற குழந்தைகள், தெருவோர குழந்தைகள், வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்புக்குள்ளான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்கான சேவைகளை வழங்குகிறது. இவை, மேற்படி குழந்தைகள் தத்தம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் வரையிலோ அல்லது குழந்தைகள் இல்லங்களில் சேர்க்கும் வரையிலோ, தற்காலிக புகலிடம் வழங்கி வருகிறது. தற்போது, தமிழ்நாட்டில் 11 திறந்தவெளிப் புகலிடங்கள் சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒன்றும் மற்றும் சென்னையில் 7 இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

**குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி சைல்ட்லைன் "பத்து ஒன்பது எட்டு" (1098)**

1098 என்பது, இடாபாடான சூழலில் உதவி தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகளுக்கான 24 மணி நேர தேசிய அளவிலான இலவச தொலைபேசி சேவையாகும். துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள், உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது இத்தகைய குழந்தைகளை காணும் எந்த நபரும், இக்குழந்தைகளை காப்பாற்றுவதறகாகவும், உதவுவதறகாகவும் இந்த தொலைபேசி சேவையை பயன்படுத்தலாம். இந்திய அரசின் நிதியுதவி மூலம் சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின் கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சைல்ட்லைன் சேவை செயல்படுத்தப்படுகின்றன.

### ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956ஆனது பெண்களை வஸிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் மற்றும் குடும்பத்தாருடன் ஒப்படைக்கவும் மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களை அரசு ஏற்படுத்தி நடத்தி வருகிறது.

### மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

மாநிலத்தில் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை இரசு நடத்தி வருகிறது. அச்சுறுத்தலுக்குள்ளான அல்லது பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற ஆணையின்படி மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனார். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 'பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து" ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படுகிறது

### மீட்புப் புகலிடங்கள்

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956--இன் கீழ் மீட்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களது வழக்குகள் முடிக்கப்படும் வரை தற்காலிகமாக மீட்புப் புகலிடங்களில் தங்க வைக்கப்படுகின்றனா. இந்தப் புகலிடங்கள் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களிலும் மற்றும் வேலூர் பிறகாப்பு நிறுவனத்திலுமென மாநிலத்தில் 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவவில்லங்களில் 2018-2019 ஆம் ஆண்டில் 780 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

### தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்

நடைமுறையில் உள்ள குழந்தை நலன் சாந்த சட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிக்கவும், மீளாய்வு செய்யவும், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005ன் பிரிவு 17(1-ன் படி தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு, தலைவர் மறறும் 6 உறுப்பினர்களைக் கொண்டு 18.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போதைய ஆணையம் ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினாகள் கொண்டு அரசால் நியமிக்கப்பட்டு 05.05.2017 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த மாநில

ஆணையத்தின் முக்கிய நோக்கமே குழந்தைகளின் உச்சபட்ச நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய தற்சமயம் அமுலில் இருக்கும் குழந்தைகள் சார்ந்த பல்வேறு சட்டங்களின் செயலாக்கத்தினை மேற்பார்வை செய்தலேயாகும்.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012** :

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சுகாதார சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக, "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" 2012-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆண்டு வருமானம் ரூ.7/2,000/-க்கு குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுகள் முடிந்த பின்னர்,

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம் மற்றும் அம்மா தாய்சேய் நல பெட்டகம்:**

இந்தியாவிலேயே கருவுற்ற தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தை 2011 முதல் செயல்படுத்தி வரும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கருவுற்ற பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், சத்தான உணவை உட்கொள்ளவும், இந்த திட்டத்தில் இதுவரை வழங்கப்பட்ட நிதி உதவி 12,000 ரூபாயிலிருந்து, 01.04.2018 முதல் 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

# 7. தமிழகத்தின் கல்வி (Education in Tamil Nadu)

## தமிழகத்தில் கல்வி

தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் 2011 கணக்கெடுப்பின்படி 80.33% ஆகும். இவ்வீதம் தேசிய சராசரியை விட அதிகமாகும்.

**எழுத்தறிவு வீதம் - இந்தியா – தமிழ்நாடு ஓர் ஒப்பீடு (1901-2011)**

| | இந்தியாவில் எழுத்தறிவு | | | தமிழ்நாட்டில் எழுத்தறிவு | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தமாக | ஆண் | பெண் | மொத்தமாக |
| **1901** | 9.80 | 0.60 | 5.30 | 14.10 | 1.00 | 7.60 |
| **1911** | 10.60 | 1.10 | 5.90 | 17.10 | 1.50 | 9.20 |
| **1921** | 12.20 | 1.80 | 7.20 | 18.60 | 2.40 | 10.40 |
| **1931** | 15.60 | 2.90 | 9.50 | 20.00 | 2.90 | 11.30 |
| **1941** | 24.90 | 7.30 | 16.10 | 25.60 | 6.90 | 16.20 |
| **1951** | 27.16 | 8.86 | 18.33 | 31.70 | 10.10 | 20.80 |
| **1961** | 40.40 | 15.34 | 28.31 | 51.59 | 21.06 | 36.39 |
| **1971** | 45.95 | 21.97 | 34.45 | 59.54 | 30.92 | 45.40 |
| **1981** | 56.37 | 29.75 | 43.56 | 68.05 | 40.43 | 54.39 |
| **1991** | 64.13 | 39.29 | 52.21 | 73.05 | 51.33 | 62.66 |
| **2001** | 79.56 | 54.28 | 65.38 | 82.33 | 64.55 | 73.47 |
| 2011 | 82.14 | 65.46 | 74.04 | 86.81 | 73.86 | 80.33 |

**குறிப்பு:** 1961 மற்றும் 1971 ஆண்டுகளில் ஐந்து வயதிற்கு மேலுள்ள நபர்களின் எழுத்தறிவு வீதம் கணக்கிடப்பட்டது. 1981 ஆம் ஆண்டிலிருந்து 7 வயதிற்கு மேலுள்ளவர்களின் எழுத்தறிவு வீதம் கணக்கிடப்பட்டு வருகிறது.

ஆதாரம்: https://www.tn.gov.in/schedu/statistics/table4-lit.htm

### தமிழகத்தில் கல்வியறிவு விகிதம்

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் கல்வியறிவு விகிதம் 80.09% ஆகும். இது 2001இல் 73.45 சதவீதமாக இருந்தது. தற்போதைய ஆண்களின் கல்வியறிவு விகிதம் 86.77

சதவீதமாகவும், பெண்களின் கல்வியறிவு 73.44% ஆகவும் உள்ளது. 2001 நிலவரப்படி ஆண்களின் கல்வியறிவு 82.42% ஆகவும், பெண்களின் கல்வியறிவு விகிதம் 64.43% ஆகவும் இருந்தது.

தர்மபுரி தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலுள்ள ஆண்களில் நான்கில் மூன்று பகுதியினர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். அதேபோல் 8 மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். அந்த மாவட்டங்கள் தர்மபுரி (60.03%), கிருஷ்ணகிரி (64.86%), திருவண்ணாமலை (65.71), விழுப்புரம் (63.51%), சேலம் (65.43), ஈரோடு (65.07%) பெரம்பலூர் (66.11%) மற்றும் அரியலூர் (62.2%) ஆகும்.

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் கல்வியறிவு விகிதம் 74.04% ஆகும். இதில் ஆண்களின் கல்வியறிவு விகிதம் 52.14% ஆகவும் பெண்களின் கல்வியறிவு விகிதம் 65.46% ஆகவும் உள்ளது. 2001 இல் இந்தியாவில் கல்வியறிவு விகிதம் 64.8% இருந்தது. இதில் ஆண் பெண் முறையே 75.3% மற்றும் 53.7% ஆக இருந்தது. கன்னியாகுமரி மாவட்டம் அதிக அளவில் கல்வியறிவு விகிதம் (91.75%) கொண்ட மாவட்டமாகவும், தர்மபுரி மாவட்டம் மிகக் குறைந்த கல்வியறிவு (68.54%) கொண்ட மாவட்டமாகவும் உள்ளது. மேலும் அதிக கல்வியறிவு கொண்ட மாவட்டங்களாக சென்னை (90.18%), தூத்துக்குடி (86.16%), நீலகிரி (85.20%) மற்றும் காஞ்சிபுரம் (5.4.49%) மாவட்டங்கள் உள்ளன.

### பள்ளிக் கல்வி


தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு தேசிய அளவுத் திட்டமான 12 ஆண்டு பள்ளிப் படிப்பைப் (10+2+3) பின்பற்றுகிறது. இதில் 8 ஆண்டுகள் இடைநிலைக் கல்வி கற்றுத்தரப்படுகிறது. இதில் 5 ஆண்டுகள் தொடக்கக் கல்வியும் 3 ஆண்டுகள் நடுநிலைக் கல்வியும் அடங்கும். இதில் 6-11 வயது வரையுள்ளோர்க்கும் 11-14 வயது வரையுள்ளோர்க்கும் கல்வி அளிக்கப்படுகிறது. பின்னர் உயர்நிலைக் கல்வி 2 ஆண்டும் மேல்நிலைக் கல்வி 2 ஆண்டும் கற்றுத் தரப்படுகிறது. பள்ளியில் நுழைவதற்கான வயது (முதல் வகுப்பு) 5+ ஆக உள்ளது. மேல்நிலைக் கல்வி இறுதி வகுப்புச் சான்றிதழ் (Higher secondary school leaving certificate) மாணவர்களை அவர்களது உயர்கல்வியைப் பல்கலைக்கழகங்களிலோ கல்லூரிகளிலோ படிக்க வகை செய்கிறது. இந்த உயர்கல்வியானது பொதுக் கல்வியாகவோ தொழில்நுட்பப் படிப்பாகவோ தொழில்நிலைக் கல்வியாகவோ (professional) இருக்கும்.

### தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம்

தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் 1910ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கல்வித் துறையினால் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு பள்ளித் தேர்வுகளுக்கான மாநில வாரியம் மாணவர்களின் முன்னேற்றத்தை மூன்று பொதுத் தேர்வுகளை நடத்துவதன் மூலம் கணக்கிடுகிறது. இதில் ஒன்று 10ஆம் வகுப்பின் இறுதியிலும் (இடைநிலைக் கல்வி இறுதி வகுப்புச் சான்றிதழ்; Secondary school leaving certificate; SSLC) , 11 ஆம் மற்றும் 12ஆம் வகுப்பின் இறுதியிலும் (மேல்நிலைக் கல்வி முதல் மற்றும் இறுதி வகுப்புச் சான்றிதழ்) நடத்துகிறது. இதில் 12ஆம் வகுப்பில் நடத்தப்படும் தேர்வு மதிப்பெண்கள் மாணவர்கள் உயர்கல்வியில் நுழைவதற்கு உதவுகின்றன.

### பயிற்று மொழி

அதிக அளவிலான தனியார் பள்ளிகள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ளன. அதே வேளையில் அரசுப் பள்ளிகள் தமிழை முதன்மைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ளன. மேலும், நடுவண் அரசால் நடத்தப்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் ஆங்கிலத்தையும் இந்தியையும் பயிற்றும் மொழியாகக் கொண்டுள்ளன.




ஆதாரம் : https://www.tn.gov.in/schedu/statistics/picture1-edn.gif

**இயக்ககங்கள்**

கல்வித் துறை அமைச்சரே மாநிலத்தின் ஒட்டுமொத்த கல்வி நிலைகளுக்கும் உறுப்பினர் ஆவார். பள்ளிக் கல்வித் துறையின் கீழ் பின்வரும் இயக்ககங்கள் உள்ளன.

- தொடக்கக் கல்வி இயக்ககம்
- சமக்ர சிக்ஷா : அனைவருக்குமான ஒருங்கிணைந்த கல்வித் திட்ட இயக்ககம்
- பள்ளிக் கல்வி இயக்ககம்
- அரசுத் தேர்வு இயக்ககம்
- மாநிலக் கல்வியியில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
- முறைசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்
- பொது நூலகங்கள் இயக்ககம்
- ஆசிரியர் தேர்வு வாரியம்
- தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

**அங்கன்வாடித் திட்டம் (ECCE)**

அங்கன்வாடி (Anganwadi) என்பது இந்திய அரசால் நடத்தப்படும் தாய் சேய் நல மையம் ஆகும். இங்கு பிறந்தது முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கான சேவைகள் வழங்கப்படுகின்றன. 1975 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள் திட்டத்தின் (ICDS) கீழ் குழந்தைகள் பசியால் வாடி நலமற்றவர்களாக மாறுவதைத் தடுக்கவும் அவர்களிடையே பெருமளவில் காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கவும் இம் மையங்கள் துவங்கப்பட்டன. தமிழ்நாட்டில் இம்மையங்கள் பொதுவாக பால்வாடி என்ற பெயரில் அறியப்படுகின்றன. தமிழகத்தில் 54 ஆயிரத்து 439 அங்கன்வாடி மையங்கள் செயல்படுகின்றன. இங்கு பயிலும் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து, அரம்ப கால கல்வி கற்பதற்கான சூழல், குழந்தைகள் பாதுகாப்பாக, ஆரோக்கியமாக வளர்வதற்கு தேவையான பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. அங்கன்வாடி மையங்களில் 5 வயது நிறைவு செய்து, தொடக்கப் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளுக்கு முன்பருவ கல்வி நிறைவு சான்றிதழ் வழங்கும் திட்டத்தை 2017 ஜீன் மாதம் தமிழக முதல்வர் கே.பழனிசாமி தொடங்கி வைத்தார்.

**சமக்ர சிக்ஷா : அனைவருக்குமான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்**

முன்பு அமலில் இருந்த அனைவருக்கும் கல்வித் திட்டம் (Sarva Shiksha Abhiyan), ராஷ்ட்ரீய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA), ஆசிரியர் கல்வி (Teacher Education) ஆகியவற்றை உள்ளடக்கி, மழலையர் கல்வி, தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி அனைத்து நிலைகளிலும் தொடர் கல்வி முறைக்கு ஏதுவாக மத்திய அரசு பள்ளிக் கல்வியில் சமக்ர சிக்ஷா என்ற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. 2018-19ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் மழலையர் பள்ளி முதல் மேல்நிலைப் படிப்பு வரையில் செயல்படுத்தப்படும்.

கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை (Unified District Information System for Education) தகவல் மற்றும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு இத்திட்டம்

மூலம் வலுப்படுத்தப்படும். அத்துடன், ஆண்டுதோறும் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு மேற்கொள்ளவும் வசதிகளை மேம்படுத்தவும் இத்திட்டம் வகை செய்யும்.

சமக்ர சிக்ஷா திட்டம் கல்வியின் தரத்திலும் கவனம் செலுத்தும். ஆசிரியர்கள், பள்ளிகளின் தலைவர்களுக்கான பயிற்சிகள், மாநில அளவிலும், தேசிய அளவிலும் சாதனைகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளவும், ஒவ்வொரு பள்ளிக்கும் நிதியுதவி அளிக்கவும் இத்திட்டம் வகை செய்யும். மேலும், கற்றலுக்கு ஏற்ற சூழல், நூலகங்கள், விளையாட்டு உபகரணங்களுக்கான மானியங்கள் ஆகியவற்றுக்கும் துணை புரியும்.

**இலவச மதிய உணவுத் திட்டம்**

நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் அப்போதைய சென்னை மாகாணத்தின் சில பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. காமராஜர் ஆட்சிக் காலத்தில் மதிய உணவுத் திட்டமாக மாறியது.

1956 ஆம் ஆண்டு பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில், முதன் முதலாக மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் சத்துணவுத் திட்டமாக விரிவடைந்தது. திமுக ஆட்சியில் சத்துணவில் முட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர், அதிமுக ஆட்சியில் சத்துணவில் புதிய உணவுப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**தமிழகத்தில் சத்துணவுத் திட்டத்தின் வரலாறு**

- 1925ம் ஆண்டு பள்ளிகளில் பசியோடு வரும் குழந்தைகள் படிப்பில் ஆர்வம் இல்லாமல் இருந்து விடக்கூடாது. அவர்கள் பசியோடு செல்லக் கூடாது என்பதற்காக சர் பி.டி. தியாகராஜர் சென்னை மேயராக இருந்த போது மிட்டே மீல்ஸ் ஸ்கீம் என்கிற பகல் உணவுத் திட்டம் உருவானது. முதற்கட்டமாக சென்னை ஆயிரம்விளக்கில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் பகல் உணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஒரு மாணவனுக்கான உணவுச்செலவு ஓர் அணாவைத் தாண்டக்கூடாது என்ற நிபந்தனையுடன் பகல் உணவுத் திட்டம் அமலுக்கு வந்திருந்தது. ஆயிரம் விளக்கில் ஆரம்பிக்கப்பட்ட பகல் உணவுத் திட்டம் சென்னை ஒரப்பாளையம், மீர்சாகிப் பேட்டை, சேத்துப்பட்டு என்று மெல்ல மெல்ல விரிவுபடுத்தப்பட்டது. அதன் பலனாகப் பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரத் தொடங்கியது. இதன் காரணமாக, பிட்டி தியாகராய செட்டியார் கொண்டுவந்த பகல் உணவுத் திட்டம் 1925 ஏப்ரல் முதல் தேதியன்று நிறுத்தப்பட்டது.
- காமராஜரின் மதிய உணவுத் திட்டம் : 1955 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதி சென்னை பூங்கா நகர் மெமோரியல் மண்டபத்தில், நடைபெற்ற சென்னை மாகாண தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் கல்வித்துறை இயக்குனர் நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் ஏழைக்குழந்தைகள் அனைவருக்கும் பள்ளிக்கூடத்தில் மாலை நேரத்தில் இலவச மதிய உணவு வழங்குவது பற்றி அப்பொழுதைய முதல்வர் காமராஜரிடம் ஆலோசிக்க அதுவே தமிழ்நாட்டின் கல்விச் சூழலை விரிவுப்படுத்திய மேம்படுத்திய மதிய உணவுத் திட்டமாக மாறியது. உலகளாவிய புதுமை திட்டமான மாணவர்களுக்கு வழங்க

அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவு திட்டமானது சமூகநீதியின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்ற இளம் பெண்களின் விகிதமானது உயர்ந்ததற்கான ஒரு காரணமாக இருந்தது பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில், முதன் முதலாக மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் காமராஜர் கூறியதாவது: "அன்னதானம் நமக்குப் புதிதல்ல. இதுவரை வீட்டுக்கு வந்தவர்களுக்கு உணவு அளித்தோம். இப்போது பள்ளிக்கூடத்தைத் தேடிச்சென்று சோறு போடுகிறோம். இதன் மூலம் உயிர் காத்த புண்ணியம், படிப்பு கொடுத்த புண்ணியம் இரண்டும் சேரும். எல்லோருக்கும் கல்விக் கண்ணைத் திறப்பதை விட, எனக்கு முக்கியமான வேலை வேறு இல்லை. எனவே, மற்ற எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஊர்வலமாக வந்து பகல் உணவு திட்டத்திற்கு ஒவ்வொருவரிடமும் பிச்சை எடுக்கச் சித்தமாக இருக்கிறேன்." என்றார் . காமராஜரின் முயற்சியில் அந்த திட்டம் இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

- தமிழகத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்களால் ஊரக பகுதிகளில் 01.07.1982 அன்றும் நகர்புறங்களில் 15.09.1982 அன்றும் உருவாக்கப்பட்டது.
- எம்ஜிஆரின் மறைவுக்குப் பிறகு, ஆட்சியமைத்த திமுக சத்துணவுத் திட்டத்துக்குச் செறிவூட்டும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு முட்டை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். பருப்பு, காய்கறியைத் தாண்டி முட்டை என்பது பொருளாதார ரீதியில் எல்லோருக்கும் கிடைக்காத ஒன்றாக அப்போது இருந்தது. அந்த வகையில் சத்துணவோடு கோழி முட்டை தரப்பட்டது மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அந்தத் திட்டத்துக்கு பெற்றோர்கள், குழந்தைகள் மத்தியில் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து 15 நாள்களுக்கு ஒருமுறை முட்டை என்பது வாரம் ஒருமுறை முட்டை என்று விரிவுபடுத்தப்பட்டது.
- ஜெயலலிதா ஆட்சிகாலத்தில் பயிறு, சுண்டல், என்று விரிவுபடுத்தப்பட்டது.
- தற்போது, சத்துணவுத்திட்டமானது தமிழகம் முழுவதும் உள்ள அரசுப்பள்ளிகள், உள்ளாட்சி பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலம், சிறுபான்மையினர் மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் கீழ் உள்ள பள்ளிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி மாநில மற்றும் மத்திய அரசுகளால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**சத்துணவுத்திட்டம் துவங்கப்பட்ட முதல் நாளது வரை செயல்படுத்திய துறைகள்**

- பள்ளிக்கல்வித்துறை 1982 முதல் மே 1990 வரை
- ஊரக வளர்ச்சித்துறை ஜீன் 1990 முதல் செப்டம்பர் 1992 வரை
- சமூக நலத்துறை அக்டோபர் 1992 முதல் செப்டம்பர் 1997 ஊரக வளர்ச்சித்துறை அக்டோபர் 1997 முதல் 19 ஜீலை 2006 வரை
- சமூக நலத்துறை 20 ஜீலை 2006 முதல் நாளது வரை (ஊரகம்),23 ஆகஸ்டு 2007 முதல் தற்போது வரை (நகர்புறம்)

தமிழ்நாட்டில் முதன்முறையாக அரசு பள்ளிகளில் பாடப் புத்தகங்கள் QR-Code மற்றும் காணொலிக் காட்சியுடன் இணைக்கப்பட்டு ஆற்றல் மிகு பாடப் புத்தகங்களாக (Energized Text Books) உருவாக்கப்பட்டுள்ளதால், பாடக் கருத்துக்களை மாணவர்கள்

தேவைப்படும்பொழுதெல்லாம் எளிதாக கற்றிட இயல்கிறது. இதனால் அவர்களின் கற்றல் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் சமச்சீர் கல்வித் திட்டம்**

தமிழக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் பள்ளிக்கல்வியில், அரசு பாடத்திட்டம், மெட்ரிக் பாடத்திட்டம், ஓரியண்டல் பாடத்திட்டம், ஆங்கிலோ-இந்தியன் பாடத்திட்டம்  என நான்கு வகையான பாடத்திட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவ்வேறுபட்ட பாடத்திட்டங்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வை உருவாக்கி வந்ததால், ஒரே சீரான பாடத்திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள் நீண்ட காலமாகக் கோரி வந்ததைத்தான், நாட்டின் ஆகப்பெரும்பான்மை மாநிலங்களில் இருந்து வருவதைப் போன்ற பொதுப் பாடத்திட்ட முறையைத்தான் கடந்த தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்த முன்வந்தது.

**முத்துக்குமரன் குழு, 2006**

2006-இல் தி.மு.க. அரசு பதவியேற்றவுடன், "சமச்சீர் கல்வி முறையைக் கொண்டு வரலாமா, வேண்டாமா?" என்பது குறித்து ஆராய பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முத்துக்குமரன் தலைமையில், கல்வியாளர்கள் எஸ்.எஸ். ராஜகோபாலன், ஜார்ஜ் ஆகியோரையும் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. இக்குழு தமிழகத்தில் நடைமுறையில் இருந்துவரும் பல்வேறு பாடத்திட்டங்களையும், கர்நாடகம், குஜராத், கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் இருந்துவரும் பாடத்திட்டங்களையும் ஆராந்து, சமச்சீர் கல்விமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக 109 பரிந்துரைகளை அரசிடம் அளித்தது.

**சமச்சீர் கல்வி அமலாக்கம்**

அதன்படி, ஸ்டேட் போர்டு எனப்படும் மாநில கல்வி வாரியம், மெட்ரிகுலேஷன் வாரியம், ஆங்கிலோ இந்தியன் கல்வி வாரியம் மற்றும் ஓ.எஸ்.எல்.சி. வாரியம் ஆகியவற்றை இணைத்து, ஒரே வாரியமாக்கி, சமச்சீர் கல்வியை வழங்கும் திட்டத்தை முந்தைய அரசு(தி.மு.க) முன்வைத்து, அதன்பொருட்டு, பாடத்திட்டங்களை தயாரிக்க ஒரு நிபுணர் குழுவையும் தமிழக அரசு அமைத்து, பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, 1 மற்றும் 6 ம் வகுப்புகளுக்கு கடந்த 2010-2011 ம் ஆண்டுகளில் சமச்சீர் கல்வித்திட்டம் முதல்முறையாக அமல் செய்யப்பட்டது.அதனையடுத்து, 10 ம் வகுப்புவரை உள்ள இதர வகுப்புகளுக்கும்(2,3,4,5,7,8,9,10) 2011-2012 ம் ஆண்டு முதல் சமச்சீர் கல்வி அறிமுகப்படுத்தப்படும் என்று தி.மு.க அரசு அறிவித்திருந்தது.

ஆனால், தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து, சமச்சீர் கல்வித் திட்டம் ஆட்டம் கண்டது. சமச்சீர் கல்வியை புதிய அரசு தற்போதைக்கு நிறுத்தி வைப்பது என்று முடிவுசெய்தவுடன், அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட, சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஆணையிட, அதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றமோ, ஏற்கனவே நடைமுறையில் இருந்த 1 மற்றும் 6 ம் வகுப்புகளுக்கான சமச்சீர் கல்வித் திட்டம் தொடர வேண்டும் என்றும், இதர வகுப்புகளுக்கு சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவது பற்றி

ஆராய, தமிழக அரசு ஒரு நிபுணர் குழுவை அமைத்து, அதன் பரிந்துரைகளின்படி, முடிவெடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

**தமிழக அரசின் பள்ளி மாணவர்களுக்கான நலத்திட்டங்கள் :**

- தமிழ் நாட்டில் பள்ளி மாணவர்களது புத்தக சுமையினை குறைக்கும் நோக்கத்தோடு 2012-13 கல்வியாண்டு முதல் முப்பருவ முறை அறிமுகம் செய்யப்பட்டது.
- விலையில்லா நோட்டுப்புத்தகங்கள் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன்படி, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1-10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா நோட்டுப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.
- மேல்நிலை வகுப்பு பயிலும் மாணாக்கருக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.
- விலையில்லா காலணி 2012-13 கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1-10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- புத்தகப்பை வழங்கும் திட்டம் 2012-13 கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1-12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு செயல்படுத்தப்பட்டுவருகிறது.
- கிரையான்ஸ் வழங்கும் திட்டம் 2012-13 முதல் 1 மற்றும் 2 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- வண்ணப் பென்சில் வழங்கும் திட்டம் 2012-13 ஆம் கல்வியாண்டு முதல் 3 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்காக அமலாக்கப்பட்டுள்ளது.
- கணித உபகரணப்பெட்டி வழங்கும் திட்டம் 2012-13 கல்வியாண்டு முதல் 6-8 ஆம் வகுப்புகளின் மாணவர்கள் பயன்பெற அமலாக்கப்பட்டுள்ளது.
- நில வரைபட புத்தகம் வழங்கும் திட்டம் 2012-2013 கல்வியாண்டு முதல், 6-10 வகுப்பு மாணவர்களுக்கு அமலாக்கப்பட்டுள்ளது.
- கம்பளிச் சட்டை வழங்கும் திட்டம் : மலைப்பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் , புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1-8 ஆம் வகுப்பு மாணாக்கர் பயன்பெறும் வகையில் 2013-14 ஆம் கல்வியாண்டு முதல் அமலாக்கப்பட்டுள்ளது.
- மழைக்கால ஆடை, உறை காலணி மற்றும் காலுறை வழங்கும் திட்டம், 2016-17 ஆம் கல்வியாண்டு முதல் அமலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மலைப்பகுதிகளிலுள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவிப் பெறும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறும் 1-8 ஆம் வகுப்பு மாணாக்கர் பயன்பெறுகிறார்கள்.

- வருவாய் ஈட்டும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி திட்டத்தின் மூலம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1-12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, அவர்களின் வருவாய் ஈட்டும் பெற்றோர் (தாய் / தந்தை) மரணமடைந்தாலோ, விபத்து காரணமாக நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, பாதிக்கப்பட்ட மாணாக்கர் பெயரில் ரூ.75,000 அரசு நிதி நிறுவனங்களில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது.
- மாணாக்கர் விபத்து நிவாரண நிதியுதவித் திட்டம் : பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின் போது எதிர்பாராது நிகழும் விபத்துகளினால் பாதிப்புக்கு உள்ளாகும் மாணாக்கர்களுக்கு, இறப்பு நேரிடின், ரூ. 1.00 இலட்சமும், பெரிய காயங்களுக்கு ரூ.50,000 மற்றும் சிறிய காயங்களுக்கு ரூ.25,000 மாணாக்கரின் குடும்பத்திற்கு நிவாரண நிதியாக வழங்கப்படுகிறது.
- புவியியல் தகவல் முறைமையில் பள்ளிசார் விவரங்களை அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் 2012-13 கல்வியாண்டு முதல் இணைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.
- **கல்வி தொலைக்காட்சி** : இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்காக தமிழக அரசின் பல்ளிக்கல்வித் துறையின் சார்பாக கல்வி தொலைக்காட்சி 26-08-2019 அன்று தொடங்கப்பட்டது.

ஆதாரங்கள் :


- https://roar.media/tamil/main/features/the-greatest-noon-meal-scheme/
- https://vellore.nic.in/ta/சத்துணவுத்-திட்டம்
- http://tnschools.gov.in/
- https://ta.wikipedia.org/wiki/தமிழ்நாட்டில்_கல்வி


## இதர தகவல்கள்

- மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் திட்டம் ( Integrated Child Development Services Scheme (ICDS)) சோதனை முயற்சியாக 1976 ல் தொடங்கப்பட்டது. "தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்" (TN Integrated Nutrition Project (TINP)) முதல் கட்டமாக 1980 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னர் இவ்விரு திட்டங்களும் "மதிய உணவு திட்டத்துடன்" ஒரே திட்டமாக இணைக்கப்பட்டு அங்கன்வாடி குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டமாக மாற்றப்பட்டன.
- இந்தியாவிலேயே முதல் முறையாக சத்துணவுத் திட்டத்திற்கான மாநில கொள்கை (State Policy on Nutrition) தமிழ்நாட்டில் 1994 ஆம் ஆண்டு ஐ.நாவின் "யுனிசெஃப்" ( UNICEF) அமைப்பின் உதவியுடன் உருவாக்கப்பட்டது.
    - கூ.தக. : தேசிய ஊட்டச்சத்துக் கொள்கை ( National Nutrition Policy) 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- மாணவர்களின் சந்தேகங்கள் மற்றும் குறைகளைத் தீர்க்கும் வகையில் '14417' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் பொது நூலகங்கள்

"தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948" –இன் படி, தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்பட்டன. பொது நூலகங்களின் சேவையை மேம்படுத்தும் நோக்கில் 1972-ஆம் ஆண்டில் பொது நூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. பொது நூலக இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழ் தமிழகமெங்கும் 4634 நூலகங்கள் செயல்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | கன்னிமாரா பொது நூலகம் | 1 |
| 2. | அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| 3. | மாவட்ட மைய நூலகங்கள் | 32 |
| 4. | கிளை நூலகங்கள் | 1926 |
| 5. | நடமாடும் நூலகங்கள் | 14 |
| 6. | ஊர்ப்புற நூலகங்கள் | 1915 |
| 7. | பகுதி நேர நூலகங்கள் | 745 |
| | **மொத்தம்** | **4634** |

## கன்னிமாரா பொது நூலகம்

அன்றைய மெட்ராஸ் மாகாணத்தின் ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு, மாகாணத்துக்கான பொது நூலகம் அமைக்கும் தேவையை உணர்ந்து 1890 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் நாள் அடிக்கல் நாட்டினார். 1896 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் நாள் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டபோது அவர் ஆட்சியில் இல்லாவிடினும் அவருடைய பெயரே நூலகத்துக்கும் சூட்டப்பட்டது.

1948-ஆம் ஆண்டு மதராஸ் பொது நூலகச் சட்டத்தின்படி, கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாயிற்று.[2] கட்டமைப்புக் கலைகளின் ஒருங்குமையைக் குறிக்குமாறு அமைந்த கட்டிடங்களோடு 1973-இல் மேலும் ஒரு கட்டிடம் கட்டப்பட்டது. இவற்றில், வார இதழ்கள்-நாளிதழ்கள் பிரிவு, பாடப்புத்தகப் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, இந்திய மொழிகள் பிரிவு, வேற்றுமொழி இலக்கியங்கள் பிரிவு, காணொளி பிரிவு ஆகியவற்றோடு இந்திய ஆட்சிப் பணி தேர்வு ஆயத்தத்துக்கான தனித்துவ பிரிவு ஆகியவை இருக்கின்றன. இங்கு மொத்தம் ஆறு இலட்சத்துக்கும் மேலான புத்தகங்கள் உள்ளன.

1981-ஆம் ஆண்டு இந்திய நடுவண் அரசின் ஆணைப்படி கன்னிமாரா பொது நூலகம் நாட்டின் களஞ்சிய நூலகமானது.

**அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை**

அண்ணா நூற்றாண்டு நூலகம், தமிழக மக்களால் அன்புடன் "அண்ணா" என்றழைக்கப்படும் முன்னாள் தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாதுரையின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு, 2010ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் தேதியன்று அந்நாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். மு.கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்டது. 3.75 லட்சம் சதுர அடி பரப்பில் அமைந்துள்ள நூலகம் தரைத்தளம் நீங்கலாக 8 தளங்களைக் கொண்டது. தற்சமயம் பல்வேறு துறை சார்ந்த 6 லட்சம் புத்தகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு அருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**தமிழகத்திலுள்ள பிற முக்கிய நூலகங்கள்**

**அரசு கீழ்த்திசை நூலகம், சென்னை**

1869 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடா, மராத்தி, பாலி, உருது, அரேபிய, பாரசீக மற்றும் சிங்கள் மொழிகளைச் சேர்ந்த 50,180 ஓலைச்சுவடிகள், 22134 கைப்பிரதிகள் மற்றும் 26,556 அரிய நூல்கள் காணப்படுகின்றன. இந்நூலகத்தில் காணப்படும் கணிதம், வானியல், சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவங்கள், வேதங்கள்,ஆகமங்கள், இசை, சிலை வடிவமைப்பு, வரலாறு, இலக்கணம், இலக்கியம் மற்றும் பல்வேறு துறை சார் நூல்களை இந்தியா மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது , சென்னையிலுள்ள, அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் ஏழாவது தளத்தில் செயல்பட்டு வருகிறது.

**ரோஜா முத்தையா நூலகம், சென்னை**

ரோஜா முத்தையா செட்டியாரால் 1950களிலிருந்து 1990கள் வரை சேர்க்கப்பட்ட அரிய தமிழ் நூல்களைக்கொண்டு, ரோஜா முத்தையா நூலகம் 1994 ஆம் ஆண்டு சென்னையில் துவங்கப்பட்டது. தமிழ் மொழி வாயிலாக மானுடவியல், சமூக அறிவியல் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள இந்நூலகம் உலகிலுள்ள மிக முக்கியமான தனியார் நூலகங்களிலொன்றாக கருதப்படுகிறது. தமிழ் மொழியின் பல அரிய அச்சு நூல்களைக் கொண்டுள்ள இந்நூலகத்தில் சுமார் 3 இல்டசம் புத்தகங்கள், பருவ இதழ்கள், நாளிதள்கள், கையெழுத்துப்பிரதிகள் ஆகியவை காணப்படுகின்றன.

**உ. வே. சாமிநாதையர் நூலகம்**

உ. வே. சாமிநாதையர் நூலகம் என்பது தமிழ் இலக்கியங்களை பதிப்பதில் ஈடுபட்ட உ. வே. சாமிநாதையர் அவர்கள் சேகரித்த நூல்களைக் கொண்ட நூலகம் ஆகும். உ. வே. சாமிநாதய்யர் நினைவாக, 1943-இல் சென்னை பெசண்ட் நகர், அருண்டேல் கடற்கரை சாலையில் நிறுவப்பட்ட பொது நூலகம் ஆகும். இங்கு 1,832 நூல்களும்; 939 அரிய தமிழ்ச் சுவடிகளும், உவேசா தம் கைப்பட பிற தமிழ் அறிஞர்களுக்கு எழுதிய 3,000 கடிதங்களும் மற்றும் அவரின் நாட்குறிப்புகளும் உள்ளது. மேலும் பல அச்சுப் பதிக்கப்படாத சுவடிகளும் இங்கு உள்ளன.

**அரசு அருங்காட்சியகம், சென்னை**

சென்னை அரசு அருங்காட்சியகம் (Government Museum) சென்னையின் எழும்பூர்ப் பகுதியில் அமைந்துள்ளது. 1851 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த அருங்காட்சியகத் தொகுதி இன்று, 16.25 ஏக்கர் (66,000 சதுர மீட்டர்) பரப்பளவுள்ள நிலத்தில் அமைந்த ஆறு கட்டிடங்களுடனும் அவற்றில் அடங்கிய 46 காட்சிக்கூடங்களுடனும் விளங்குகிறது. தொல்லியல், நாணயவியல், விலங்கியல், இயற்கை அறிவியல், சிற்பம் ஆகிய துறைகளைச் சேர்ந்த ஏராளமான பொருட்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## தமிழ் நாட்டில் உயர் கல்வி

**தமிழ்நாட்டிலுள்ள தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை ( 2018-19)**

| பொறியியல் கல்லூரிகளின் வகைபாடு | பட்டப் படிப்பு கல்லூரிகள் | | பட்டயப் படிப்பு கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | பொறியியல் கல்லூரிகள் | கட்டடக் கலை கல்லூரிகள் | பலவகை தொழில் நுட்ப கல்லூரிகள் | உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில் நுட்ப பயிலகங்கள் | |
| அரசு கல்லூரிகள் | 10 | - | 51 | - | 61 |
| அரசு உதவிபெறும் கல்லூரிகள் | 3 | - | 34 | - | 37 |
| சுயநிதி கல்லூரிகள் | 503 | 49 | 416 | 15 | 983 |
| இணைப்பு கல்லூரிகள் | - | - | 4 | - | 4 |
| அண்ணா பல்கலைக் கழக துறை மற்றும் உறுப்பு கல்லூரிகள் | 20 | - | - | - | 20 |
| **மொத்தம்** | **585** | | **520** | | **1,105** |

**ஆதாரம் :** தமிழக அரசின் உயர்கல்வித்துறை கொள்கை விளக்க குறிப்பு 2019-20

## தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் அவை தொடங்கப்பட்ட ஆண்டு

| வ.எண். | பல்கலைக்கழகம் | துவங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1 | சென்னை பல்கலைக்கழகம் | 1857 |
| 2 | அண்ணாமலை பல்கலைக்கழகம் (2013 ல் அண்ணாமலைச் சட்டத்தின் கீழ் இந்த பல்கலைக்கழகம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.) | 1929 |
| 3 | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 1965 |
| 4 | அண்ணா பல்கலைக்கழகம் | 1978 |
| 5 | பாரதியார் பல்கலைக்கழகம் | 1982 |
| 6 | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 1982 |
| 7 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் | 1984 |
| 8 | அழகப்பா பல்கலைக்கழகம் | 1985 |
| 9 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 1990 |
| 10 | பெரியார் பல்கலைக்கழகம் | 1997 |
| 11 | தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் | 2002 |
| 12 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம் | 2002 |
| 13 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | 2008 |

## தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை

| கல்லூரிகள் வகை | அரசு கல்லூரி கள் | உதவி பெறும் கல்லூரி கள் | சுயநிதி கல்லூரி கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| கலை மற்றும் அறிவியல் | 105 | 139 | 541 | 785 |
| உடற்கல்வி | - | 3 | 8 | 11 |
| கீழ்த்திசை | - | 4 | - | 4 |
| சமூகப்பணி பள்ளி | - | 2 | - | 2 |
| கல்வியியல் | 7 | 14 | 697 | 718 |
| பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் | 27 | - | - | 27 |
| மொத்தம் | 139 | 162 | 1246 | 1547 |

### பிற முக்கிய உயர்க்கல்வி நிறுவனங்கள்

- **தமிழ்நாடு ஆவனக் காப்பகம்,** 'மதராஸ் ரெகார்ட் ஆபிஸ்' என்ற பெயரில் 1909 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட அளவிலான பல்வேறு அரசுத் துறைகளின் வரலாற்று மற்றும் நிர்வாக முக்கியம் வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டி தஞ்சாவூர், கோயம்புத்தூர், கடலூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி என 6 இடங்களிலும் மாவட்ட ஆவணக் காப்பகம் இயங்கி வருகிறது.
- **தமிழ்நாடு மாநில உயர்க்கல்வி மன்றம்** 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையின் சட்டமொன்றின் வாயிலாக தோற்றுவிக்கப்பட்டது.
- **தேசிய உயர்க்கல்வி திட்டம் (RUSA - Rashtriya Uchchatar Shiksha Abhiyan)** என்பது நாடுமுழுவதும் உயர்க்கல்வியின் தரத்தை உயர்த்த மத்திய அரசினால் 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் மத்திய அரசின் பங்கு 60 % மற்றும் மாநில அரசின் பங்கு 40% த்துடன் நிறைவேற்றப்பட்டுவருகிறது.
- **அறிவியல் நகரம்** 1998 ஆம் ஆண்டு தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரி மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களுக்கு கொண்டு செல்வது இதன் முக்கிய நோக்கமாகும்.
- **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பொதுமக்களிடையே பரவலாக்குவது இதன் முக்கிய நோக்கமாகும். இம்மையம் , தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் அறிவியல் அமையங்களை நடத்தி வருகிறது. வானவியல் கல்வியை வழங்கும் வண்ணம் திருச்சிராப்பள்ளி அண்ணா அறிவியல் மையட்திலும், சென்னை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்திலும் அறிவியல் காட்சிக்கூடங்கள், அறிவியல் பூங்காக்கள் ஆகியவற்றுடன் கோளரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.
- **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** 1984 ஆம் ஆண்டு ஒரு தன்னாட்சி பெற்ற தலைமை நிறுவனமாக அமைக்கப்பட்டது. இம்மன்றம் தமிழ்நாட்டில், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்ச்சியை ஊக்குவிக்க ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, களப்பணிகள் சார்ந்த பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.
- **தமிழ்நாடு மாநில தொழில்நுட்பக் கல்வி மன்றம்** 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தின் சட்டத்தின் படி அமைக்கப்பட்டது. தொழில்நுட்பக் கல்வியில் கல்லூரிகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சியின் தரத்தினை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

# 8. தமிழகத்தின் நலவாழ்வு முறைமைகள் (Health systems in Tamil Nadu)

மக்கள் நலவாழ்வைப் பொறுத்தவரையில், ஐக்கிய நாடுகள் மில்லினியம் வளர்ச்சி இலக்குகள் - 2015 – இல் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகள் மற்றும் தேசிய அளவிலான குறியீடுகளை, தமிழ்நாடு ஏற்கனவே அடைந்துள்ள நிலையில், நிலையான அபிவிருத்தி இலக்கினை (Sustainable Development Goals-SDG) 2030-க்குள் அடைய தமிழகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

**தமிழகத்தில் சுகாதர சேவைகளின் வரலாறு**

- 1639-ஆம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனியின் நோயுற்ற படை வீரர்களை குணப்படுத்துவதற்காக, முதல் ஆங்கிலேய மருத்துவமனை, ஏற்படுத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.
- 1644-ஆம் ஆண்டு நவீன மருத்துவமனையின் துவக்கம் என்று அறியப்படுகிறது. (ஒரு சிறிய மருத்துவமனையாகத் துவங்கப்பட்டு, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த புகழ் வாய்ந்த அரசு பொது மருத்துவமனையாக வளர்ந்துள்ளது.)
- 1835-ஆம் ஆண்டு நம் மாநிலத்தின் முதல் மருத்துவ கல்லூரியான சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.
- 1883-ஆம் ஆண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, அரசு மருத்துவமனையில் ஒரு பல் மருத்துவ பிரிவு தொடங்கப்பட்டது.
- 1885-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை (கோஷா மருத்துவமனை) தொடங்கப்பட்டது.
- 1923-ஆம் ஆண்டில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் தொடங்கப்பட்டது.
- 1954-ஆம் ஆண்டு அடையார் புற்றுநோய் நிலையம் தொடங்கப்பட்டது.
- 1966-ஆம் ஆண்டில் மருத்துவக் கல்வித் துறை உருவாக்கப்பட்டது.
- 1981-ஆம் ஆண்டில் மருந்து கட்டுப்பாடு துறை உருவாக்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டில் மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை உருவாக்கப்பட்டது.
- 1983-ஆம் ஆண்டு குடும்ப நலத் துறை உருவாக்கப்பட்டது.
- 1986-ஆம் ஆண்டில் பார்வை இழப்பு தடுப்பு சங்கம் உருவாக்கப்பட்டது. • 1994-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் உருவாக்கப்பட்டது.
- 1994-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1999-ஆம் ஆண்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை உருவாக்கப்பட்டது.
- 2002-ஆம் ஆண்டில் திருத்திய தேசிய காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது.

- 2005–ஆம் ஆண்டில் மாநில நலவாழ்வு சங்கம் உருவாக்கப்பட்டது.
- 2008–ஆம் ஆண்டில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் தொடங்கப்பட்டது. 2011-ஆம் ஆண்டு உணவு பாதுகாப்பு துறை உருவாக்கப்பட்டது.
- 2013-ஆம் ஆண்டில் இந்திய அரசால் தேசிய நலவாடிநவு குழுமம் தொடங்கப்பட்டது.
- 2016– தமிடிநநாடு உறுப்பு மாற்று ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

**தனிச்சிறப்புகள்:**

- அதிக எண்ணிக்கையிலான அரசு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற தனித்துவத்தைக் கொண்டதோடு மட்டுமல்லாமல், அவைகளை தொடங்கிய முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக தமிடிநநாடு திகடிநகிறது.
- இம்மாநிலத்தின் முதல் மருத்துவக் கல்லூரியான சென்னை மருத்துவக் கல்லூரி இந்தியாவில் இரண்டாவதாக தொடங்கப்பட்ட மருத்துவக் கல்லூரி என்ற தனித்தன்மையை பெற்றுள்ளது.
- சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட எழும்பூர் கண் மருத்துவமனை, உலகத்தில் துவக்கப்பட்ட இரண்டாவது கண் மருத்துவமனை என்ற தனித்தன்மையை பெற்றுள்ளது. இந்தியாவில் இரண்டாவது பெரிய நிலையமாகவும் தமிழநாட்டில் பெரும்பாலான மக்களுக்கு மன நல சேவையை வழங்கும் நிலையமாகவும் சென்னை, மனநல காப்பகம் விளங்குகிறது.
- உலகிலேயே, 1878 ஆம் ஆண்டு, மேரி ஆன் டாகோம்ப் ஸ்கார்லீப் என்ற ஒரு பெண்மணியை முதன்முதலாக மருத்துவக் கல்லூரி மாணவியாக சேர்த்த பெருமை மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியைச் சாரும்.
- 1903-ஆம் ஆண்டு, சார்லஸ் டினோவன் என்பவரும், இங்கிலாந்து, நெட்லே-வைச் சார்ந்த திரு.வில்லியம் பூக் லெடீநுஸ்மேன் என்பவரும் இணைந்து மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் காலா-அஸார் நோயை உருவாக்கும் லெயிஷ்மானியா டினோவனி ஒட்டுயிரியை கண்டுபிடித்த பெருமை உள்ளது
- மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியிலிருந்து 1912-ஆம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார்.

**தமிழகத்தில் மக்கள் நலவாழ்விற்கான முக்கிய திட்டங்கள் :**

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டம் மற்றும் அம்மா தாய் சேய் நல பெட்டகம்**: இந்தியாவிலேயே கருவுற்ற தாய்நுமார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தை 2011 முதல் செயல்படுத்தி வரும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. கருவுற்ற பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், சத்தான உணவை உட்கொள்ளவும், இந்த திட்டத்தில் இதுவரை வழங்கப்பட்ட நிதி உதவி 12,000 ரூபாயிலிருந்து, 01.04.2018 முதல் 18,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்கு உள்ள இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின்

எடையளவை உயர்த்தவும், இரும்புச்சத்து மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய **அம்மா தாய் சேய் நல பெட்டகங்கள்** இரண்டு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 04.03.2019 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**"நடமாடும் மருத்துவமனை திட்டத்தின்" கீழ் தற்போது 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள் செயல்படுகின்றன.** ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு மாதமும் 40 முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**அம்மா குழந்தை நல பரிசு பெட்டக திட்டம் :** அரசு மருத்துவ நிலையங்களில் பிறக்கும் சுமார் 6.7 இலட்சம் குழந்தைகளின் தாய்மார்களுக்கு, பேறுகாலத்திற்கு பின், தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உயர்த்தும் பொருட்டு, 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், ஆண்டொன்றுக்கு 67 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அப்போதைய முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் 08.09.2015-ல் துவங்கப்பட்டது.

**"அம்மா ஆரோக்கிய திட்டம்"** என்பது ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்வதாகும். இதனால் நோய் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் அடிப்படை பரிசோதனை வசதிகள் கட்டணமின்றி எளிதில் கிடைக்கவும் வகை செய்யப்படுகிறது. இத்திட்டம் தமிழகத்தில் 501 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களில் துவங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் 25 பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இத்திட்டம் தொடங்கப்பட்ட மார்ச், 2016 முதல் மார்ச் 2019 வரை, 49.14 இலட்சம் பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**"அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்"** , முதல் கட்டமாக சென்னை அரசு பொது மருத்துவமனையில் 01.03.2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 33,631 நபர்கள் முழு உடல் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ் நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 08.06.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, இதுவரை 6,323 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். மேலும், இத்திட்டம் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தப் படவுள்ளது

**"104" மருத்துவ தகவல் சேவை மற்றும் தொலை மருத்துவ சேவை** : மருத்துவ தகவல், ஆலோசனை, சுகாதாரம் சார்ந்த பொதுமக்கள் குறைகளுக்கு உரிய நேரத்தில் தீர்வு காண 30.12.2013 அன்று "104" மருத்துவ தகவல் சேவை மற்றும் தொலை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது.

**தாய்ப்பால் வங்கிகள்** 25 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் துவங்கப்பட்டுள்ளன. 352 பேருந்து நிலையங்கள் மற்றும் முனையங்களில், பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தனிமையில் பாலூட்டுவதற்காக பாதுகாப்பான தனி அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**அனைவருக்கும் நலவாழ்வு திட்டம் :** அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் மூலம் ஒருங்கிணைந்த முதல்நிலை சுகாதார பராமரிப்பு சேவைகள் பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 3 சுகாதார மாவட்டங்களிலும் முறையே வேப்பூர், சூளகிரி, விராலிமலை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 67 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் 17 ஆரம்ப சுகாதார நிலையங்களில் (வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட) 2016 ஆம் ஆண்டு முதல் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டது.

**சாலைவிபத்தில் சிக்கியவர்களை முழுமையாகக் காக்கும் `தாய் திட்டம்' ((Tamilnadu Accident and Emergency Care Initiative - TAEI) )**

2017ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தமிழகத்தில் நடைமுறைப்படுத்த இந்த திட்டம், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் பின்பற்றப்பட்டுவரும் விபத்து சிகிச்சைப் பிரிவுகளின் நடைமுறைகளைப் பின்பற்றி கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வலுப்படுத்துவதற்காக, தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தலைமையிலான ஒரு குழு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. விபத்து சிகிச்சைகளின் தரத்தை உயர்த்துவது தொடர்பாக விக்டோரியா மாநில அரசுடன் தமிழக சுகாதாரத் துறை புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளது.

**குடற்புழு நீக்குதல் திட்டம்:**

இந்த திட்டத்தில், 1 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மருந்து (அல்பெண்டசோல் மாத்திரைகள்) பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

**மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம்:**

இத்திட்டம் 27.3.2012 அன்று துவங்கப்பட்டது. வளரிளம் பெண்களிடையே மாதவிடாய் கால சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தன்னம்பிக்கையுடன் சமுதாயத்தில் வலம் வரவும், தரம் வாய்ந்த 'சானிடரி நாப்கின்' களை பயன்படுத்த அதிகமான வாய்ப்பை ஏற்படுத்தி தருவதும் இந்த திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் வசிக்கும் 10 முதல் 19 வயது வரையுள்ள பள்ளி செல்லும் மற்றும் பள்ளி செல்லாத வளரிளம் பெண்கள் ஒவ்வொருவருக்கும் விலையில்லா ஆறு 'சானிடரி நாப்கின்' கள் அடங்கிய பையொன்று இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மூன்று பைகள் வீதம் வருடத்திற்கு 18 பைகள் (ஞயஉம) வழங்கப்படுகிறது. பள்ளியிலும், அதற்கான ஒருங்கிணைப்பு ஆசிரியைகள், பள்ளி மாணவிகளுக்கு 'சானிடரி நாப்கின்களை' வழங்குகிறார்கள்.கிராம சுகாதார செவிலியர், அங்கன்வாடி பணியாளர்களுடன் இணைந்து, பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு இந்த 'சானிடரி நாப்கின்' களை வழங்குகின்றனர். அரசு மருத்துவ நிலையங்களில் மகப்பேறு பெற்ற தாய்மார்களுக்கு ஏழு பைகள் (ஒவ்வொரு பையிலும் ஆறு 'நாப்கின்' கள்) வழங்கப்படுகிறது. கூடுதலாக இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக பெண் சிறைக் கைதிகள் மற்றும் சென்னை மனநல மருத்துவமனையில் உள்ள பெண் உள்நோயாளிகளுக்கும் ஓர் ஆண்டில் 18 பைகள் (ஒவ்வொரு பையிலும் ஆறு 'நாப்கின்' கள்) வீதம் வழங்கப்படுகிறது.

**பாலூட்டும் தாய்மார்களுக்கு வசதிகள்:**

பாலூட்டும் தாய்மார்கள், பயணத்தின் போது அவர்களின் குழந்தைகளுக்கு தனிமையில் பாலூட்ட முடிவதால், தாய்ப்பால் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் அவர்கள் குழந்தைகளுக்கு கிடைக்கும். பயணம் செய்யும் தாய்மார்கள், தனிமையில் பாலூட்டுவதற்காக 352 பேருந்து நிலையங்கள் மற்றும் முனையங்களில் தனியாக பாலூட்டும் அறைகள் 03.08.2015 முதல் செயல்படுகின்றன.

**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம்** , 2012

- தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு, நவீன மருத்துவ வசதிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும் அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், தமிழ்நாடு அரசால் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் ஒன்றாகும். குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.72,000/- ரூபாய்க்கும் குறைவாக உள்ள 1.58 கோடி குடும்பங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இத்திட்டம் சிறப்பாக ஐந்து ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டு பொது மக்களுக்கு மகத்தான நன்மை அளித்து கொண்டு இருப்பதால் இத்திட்டம் மேலும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை தற்போது செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் 23.09.2018-ல் ஒருங்கிணைத்துள்ளது. யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- 11.01.2017 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் **முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:**
    - சிகிச்சை முறைகள் - அனுமதிக்கப்பட்ட 1027- மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் 154 – சிறப்பு சிகிச்சை முறைகள் - 154 – தொடர் சிகிச்சை முறைகள் - 38 – முழுமையான பரிசோதனை முறைகள் –424 பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டசிகிச்சை முறைகள் மற்றும் 8 உயர் சிறப்பு சிகிச்சை முறைகள் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
    - காப்பீட்டுத் தொகை –பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா திட்டத்தை ஒருங்கிணைத்த பின்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை காப்பீடு உள்ளது.
    - இம்மாநிலத்தில் 6 மாதங்களுக்கும் மேலாக வசிக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் , தொழிலாளர் நலத்துறை மூலம் சான்றளிக்கப்பட்டு இத்திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள்.

- o மாநில அரசாங்கத்தால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள்.

**இலவச அமரர் ஊர்தி சேவை:**

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் இலவச அமரர் ஊர்தி சேவையை தமிழ்நாடு சுகாதார திட்டத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிப்படையில் வழங்கி வருகிறது. அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் இறக்க நேரிட்டால், அவர்கள் உடலை தமிழகத்தில் உள்ள எந்த மாவட்டமாக இருந்தாலும் இலவசமாக அவர்களின் இருப்பிடத்திற்கோ அல்லது இடுகாட்டிற்கோ இத்திட்டம் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இச்சேவையை இலவசமாக பெறுவதற்கு அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலரோ அல்லது இறந்தவரின் உறவினரோ 155377 என்ற தொலைபேசி எண் மூலம் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். இச்சேவையின் மூலம் விபத்து, இயற்கை பேரிடர் மற்றும் பேரழிவு காலங்களில் இறந்தோரது உடல்கள் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு செல்லப்படுவதோடு, அதற்கு பின்னர் அவர்களின் இல்லத்திற்கும் கொண்டு சேர்க்கப்படுகிறது.

**"அம்மா ஆரோக்கிய திட்டம்"** என்பது ஆண்டிற்கு ஒருமுறை 30 வயதும் அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் அடிப்படையான முழு உடல் பரிசோதனை செய்வதாகும். இதனால் நோய் ஏற்படாமல் தடுக்கவும் மற்றும் அடிப்படை பரிசோதனை வசதிகள் கட்டணமின்றி எளிதில் கிடைக்கவும் வகை செய்யப்படுகிறது. இத்திட்டம் தமிழகத்தில் 501 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களில் துவங்கப்பட்டது.

**"அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம்",** முதல் கட்டமாக சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 01.03.2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 33,631 நபர்கள் முழு உடல் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் 08.06.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, இதுவரை 6,323 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். மேலும், இத்திட்டம் கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு விரிவுபடுத்தப் படவுள்ளது.

**சென்னை அடையார் புற்றுநோய் மையம், மாநில அளவில், புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் உயர் சிகிச்சை மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது.** இந்த மையம் ஒப்புயர்வு மையமாக 120 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் மண்டல புற்றுநோய் மையங்கள் மொத்தம் 58.69 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டு வருகின்றன .

**குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டம் :** மத்திய அரசு, குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சை ஏற்பாளர்கள் மற்றும் இச்சேவை வழங்குபவர்களுக்கு பின்வரும் காப்பீடு பயன்களை, அளிக்க குடும்ப நல அறுவை சிகிச்சை இழப்பீட்டுத் திட்டத்தை 01.04.2013 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

**குடும்ப நலத் திட்டம்** : குடும்ப நல திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. குடும்ப நலத் திட்டம் 1956-ஆம் ஆண்டு முதல், நமது மாநிலத்தில் மக்கள் பங்கேற்பு திட்டமாக 100 விழுக்காடு மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேவையான அளவிற்கு பிறப்பு விகிதத்தை குறைத்து மக்கள் தொகைப் பெருக்கத்தை சமநிலைபடுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். அரசு மருத்துவ நிலையங்களிலும், அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிலையங்களிலும் குடும்ப நலத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுவதால் மாநிலத்தின் மக்கள்தொகை பெருக்கம் நிலைப்படுத்தப்பட்டு வருகிறது.

**ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்தய கார்யக்ரம் :** வளரிளம் பருவத்தினரின் சுகாதாரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்தை முழுமையான அளவில் பூர்த்தி செய்யும் பொருட்டு, தேசிய வளரிளம் பருவத்தினர் நலப் பாதுகாப்புத் திட்டம் எனும் திட்டம் ஜனவரி 2014-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஊட்டச்சத்து, பாலினம் மற்றும் பேறுசார் நலம், தொற்றா நோய்கள், தவறான பழக்கம், காயங்கள் மற்றும் வன்முறைகள் மற்றும் மன நலம் ஆகிய ஆறு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**“ராஷ்டிரிய பால் ஸ்வஸ்த்ய கார்யக்ரம்”** : 0-18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் நான்கு வகை நோய்கள் – பிறப்பின் போது குறைபாடு, சீர்குலைவுகள், குறைபாடுகள் மற்றும் ஊனம் உள்ளடக்கிய வளர்ச்சிக் குறைவு போன்றவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் குழந்தை நல பரிசோதனை மற்றும் ஆரம்ப நிலை சிகிச்சை வழங்கும் திட்டம் ‘ராஷ்டிரிய பால் ஸ்வஸ்த்ய கார்யக்ரம்’ ஆகும்.

**‘108’அவசரகால ஊர்தி சேவை:** தமிழ்நாட்டில் கட்டணமில்லா ‘108’ தொலைபேசி எண் மூலம் அவசரகால ஊர்தி சேவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சேவை வாரத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் பொதுமக்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. ‘108’ அவசரகால ஊர்தி சேவையை வழங்க 940 அவசரகால ஊர்திகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. அவசர கால ஊர்தி வந்தடைவதற்கான காலம் குறைப்பு: பல்வேறு தொடர் நடவடிக்கைகள் வாயிலாக அவசர கால 108 ஊர்திகள் பாதிக்கப்பட்ட இடத்திற்கு, வருவதற்கான காலம் முன்பிருந்தைவிட குறைக்கப்பட்டுள்ளது. 2017-ல் சராசரியாக 15.04 நிமிடமாக இருந்த நேரம் தற்போது 13.48 நிமிடமாக குறைந்துள்ளது. மேலும், இது நகர்ப்புறங்களில் 11 நிமிடங்களிலிருந்து 8.36 நிமிடங்களாக குறைந்துள்ளது.

**இரு சக்கர அவசரகால ஊர்தி திட்டம்** , 41 இரு சக்கர வாகனங்களுடன் சென்னை மாநகரத்தில் 08.02.2016 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, இதர பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**‘102’ இலவச வாகன வசதி திட்டம்:** “ஜனனி சிசு சுரக்ஷா கார்யக்ரம்” திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிகிச்சை பெற்ற சிசுக்கள், மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு இலவசமாக அழைத்துச் செல்லும் சேவை வழங்கப்படுகிறது. நூறு விழுக்காடு கட்டணமில்லா வாகன சேவை வழங்கும் பொருட்டு, முதற்கட்டமாக சென்னை, எழும்பூர் மகப்பேறு மற்றும் நோயியல் நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில், இந்திய செஞ்சிலுவை சங்கம் மூலம் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது இச்சேவை அனைத்து மாவட்டங்களுக்கும்

விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இச்சேவையை கட்டணமில்லா தொலைபேசி எண் '102' மூலம் பயன்படுத்தலாம்.

**'நமது மருத்துவமனை' திட்டம்** என்பது குறுஞ்செயதிகள், வலைதளம், கைபேசி ஆகியவற்றின் மூலமாக மருத்துவமனைகளிலிருந்து பெறும் சேவைகள் சம்பந்தமாக நோயாளிகளின் கருத்தினை (கநநன யெஉம) பெறும் ஒரு முயற்சியாகும். நோயாளிகளின் மனநிறைவு அளவீட்டில் தமிழ்நநாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

**பிரதம மந்திரி ஸ்வஸ்திய சுரக்ஷா யோஜனா** திட்டத்தின் கீழ், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிகளில், விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய உயர்சிறப்பு மருத்துவமனை தலா 150 கோடி ரூபாடீறு மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு பாரதப் பிரதமர் அவர்களால் 04.01.2019 அன்று திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**பிரசவிக்கும் தாய்மார்களுடன் உறவினர் உடனிருத்தல் திட்டம்:** தமிடிநநாட்டில் பிரசவத்தின் போது, பிரசவ அறையில் பிரசவிக்கும் தாய்மார்களுடன் ஒரு உறவினர் உடனிருத்தல் திட்டம் 2004-ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவ நிகழ்வை அதிகரிப்பதற்கான சூழலை உருவாக்கியுள்ளது.

**தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம்** : தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் 2005 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ரூ.1300 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் என்னும் திட்டத்தின் மூலமாக அரசு மருத்துவமனைகளில் அதி நவீன தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன் தொற்றா நோய் தடுப்பு கண்டறிதல் மற்றும் சிகிச்சை, பேறுகால அவசர சிகிச்சை, சுகாதார தகவல் மேலாண்மை உள்ளிட்டவைகளை செயல்படுத்தி வந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக தமிடிநநாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த உள்ளது. செயல்படுத்த வேண்டிய நிதியினை நல்க 04.06.2019 அன்று கடன் உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது.

**தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி:** தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம் 2017 பிப்ரவரி 6ல் தொடங்கப்பட்டது. இந்த முகாமில் 9 மாதம் முடிந்த குழந்தை முதல் 15 வயதிற்குட்பட்ட 1.7 கோடி குழந்தைகளுக்கு தட்டம்மை-ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்பட்டது.

**ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்து திட்டம் :** இந்தியா மற்றும் உலக அளவில், குழந்தைகள் இறப்புக்கு வயிற்றுப்போக்கு நோய்கள் ஒரு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.09.2017 அன்று சேலத்தில் ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்து திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்து குழந்தைகளுக்கு 6-வது வாரம், 10-வது வாரம் மற்றும் 14-வது வாரங்களில் மூன்று தவணையாக வழங்கப்படுகிறது.

**தேசிய யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் தமிழகத்தில் 1957-ஆம்** ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாட்டில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் 1983-இல் துவக்கப்பட்டது**. தொழுநோயினை ஆரம்ப காலத்திலேயே கண்டறிந்து கூட்டு மருந்து சிசிச்கையின் மூலம் குணப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1983ல் 10,000 மக்கள் தொகைக்கு 118

நபர்களுக்கு தொழுநோய் இருந்ததாக கண்டறியப்பட்டது. 2005-இல் இந்த நோடீநுத் தாக்கம் 10,000 மக்கள் தொகைக்கு ஒன்றுக்கும் கீழாக குறைந்து, தொழுநோய் தாக்கமற்ற நிலையை மாநிலம் அடைந்தது. மார்ச், 2019-இல், இந்த நோய்த் தாக்க விகிதம் 10,000 மக்களுக்கு 0.39 ஆகும்.

**தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தில் குறிப்பிட்ட நிகழ்கள்**

- 1955 – தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது
- 1983 – தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது
- 1983 – கூட்டு மருந்து சிகிச்சைத் திட்டம் படிப்படியாக அமல்ப்படுத்தபட்டது
- 2005 – தேசிய அளவில் தொழுநோய் நீக்கம்
- 2012 – பதினாறு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில், அதிக நோயாளிகள் உள்ள 209 மாவட்டங்களில் சிறப்பு திட்டம்.

**பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறைகள் (2005):** உலக அளவில் நோய் பரவுவதை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் மூலம் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் போக்குவரத்தில் ஏற்படும் தேவையற்ற தடைகளை தவிர்ப்பதே பன்னாட்டு சுகாதார ஒழுங்குமுறைகளின் (2005) நோக்கமாகும்.

**திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம்** திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் 1997-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தமிழ் நாட்டில் 2002-ஆம் ஆண்டு முதல், மாநிலம் முழுவதும் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம்** மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சகம், 11-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் புகையிலை கட்டுப்பாட்டு சட்டங்கள் பற்றி அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புகையிலை கட்டுப்பாடு சட்டங்களை திறம்பட செயல்படுத்த உதவுதல் ஆகிய காரணங்களுக்காக தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டத்தை 2007-2008-ஆம் ஆண்டில் கொண்டு வந்தது. தேசிய புகையிலை கட்டுப்பாட்டு திட்டம், 2003-ஆம் ஆண்டு முதல் தமிடிழ்நாட்டில் தொடங்கப்பட்டு, மாநில புகையிலை தடுப்பு பிரிவு, 2007-ஆம் ஆண்டு முதல் பொது சுகாதாரம் மற்றும் நோடீநுத் தடுப்பு மருந்து துறை இயக்குநரின் கீடிந செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட புகையிலை கட்டுப்பாடு பிரிவுகள் அமைக்கப்பட்டு, அவை துணை இயக்குநர் சுகாதார நலப்பணிகள் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன.

இந்தியாவில், 2003-ஆம் ஆண்டு சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை மீறியவர்களிடமிருந்து அபராதம் வசூல் செய்நுவதில் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

**ஒருங்கிணைந்த நோய்கள் நோய்கள் கண்காணிப்புத் திட்டம்:**

ஒருங்கிணைந்த நோய்கள் கண்காணிப்புத்திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், தொற்றுநோய் பரவலை முன்கூட்டியே கண்டறியவும், கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும்,

நவம்பர் 2004-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டம் மார்ச் 2012 வரை நீட்டிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்புத்திட்டம் தற்போது, மையஅரசு நிதி உதவியுடன், தேசிய நலவாழ்வு குழுமத்தின் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. மாநில / மாவட்ட அளவில் தீவிர நோய்கண்காணிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவைகள் புதுதில்லியில் உள்ள தேசிய நோய்கள் தடுப்பு மையத்தில் அமைந்துள்ள மத்திய தீவிர நோய் கண்காணிப்பு மையத்துடன் இணைந்து செயல்படுகிறது. இந்திய அரசு 2019ம் ஆண்டு ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்திற்கு மாற்றாக ஒருங்கிணைந்த சுகாதார தகவல் வலைதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. ஒருங்கிணைந்த சுகாதார தகவல் வலைதளம் என்பது இணையதளம் மூலமாக தகவல் பரிமாற்றம் செய்ய ஏதுவாக மத்திய அரசின் மின்ஆளுகை தரங்களுடன் தகவல் தொழில் நுட்பம், தரவு கட்டுப்பாடுகளுடன் இயங்கும் ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பு தொற்று நோய் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான நவீன ஒன்றிணைக்கப்பட்ட புவிசார் தகவல்களுடன் கூடிய வசதிகளைக் கொண்டது.

**தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மற்றும் சுகாதார உட்கட்டமைப்புகள்**

**துணை சுகாதார நிலையங்கள்:**

துணை சுகாதார நிலையம் பொது சுகாதார துறைக்கும் சமுதாயத்திற்கும் முதல் தொடர்பு மையமாக இருந்து வருகிறது. சமவெளிப் பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதிகளில் 3,000 மக்கள் தொகைக்கும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு துணை சுகாதார நிலையத்திலும் தாய்மை துணை செவிலியர் எனப்படும் கிராம சுகாதார செவிலியர் பணிபுரிகின்றனர். 3 துணை சுகாதார நிலையத்திற்கு ஒரு ஆண் சுகாதார பணியாளரும் பணிபுரிந்து வருகின்றனர். ஒரு துணை சுகாதார நிலையம் சராசரியாக 13.49 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் 8,713 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

**ஆரம்ப சுகாதார நிலையங்கள்:**

சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கும், மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு சேவை வழங்கிட கிராமப்புறங்களில் 1,806 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் சென்னை மாநகராட்சி உட்பட 460 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் சராசரியாக 86.29 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.

**சமுதாய சுகாதார நிலையங்கள் (மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்):**

மாநிலத்தின் அனைத்து 385 வட்டாரங்களிலும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, அறுவை அரங்கம், 'அல்ட்ரா சோனாகிராம் ', 'இ.சி.ஜி' , 'செமி ஆட்டோ அனலைசர்' , ஊடுகதிர் சாதனம், செல் கவுண்ட்டர் போன்ற நவீன ஆய்வுக் கருவிகள் மற்றும் அவசரகால ஊர்தி போன்ற வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது 422 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட

ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஐந்து மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு 24ஓ7 மணிநேர மருத்துவசேவை மேற்கொண்டு வருகின்றனர்.

### மக்கள் தொகை குறியீடுகள்

2011-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21 கோடியாகும். தமிடிநநாட்டில் மக்கள்தொகை பத்தாண்டு வளர்ச்சி விகிதம் 15.6 விழுக்காடு ஆகும். நாட்டின் மொத்த மக்கள்தொகையில் இது 6 விழுக்காடு ஆகும். தமிழ்நாடு, இந்தியாவில் ஏழாவது பெரிய மக்கள்தொகை கொண்ட மாநிலமாகும். மாதிரி பதிவு முறைப்படி, மாநிலத்தின் மக்கள்தொகை குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | சுகாதாரக் குறியீடுகள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1 | பிறப்பு விகிதம் (2017) | 14.9 / 1,000 மக்கள் தொகைக்கு |
| 2 | இறப்பு விகிதம் (2017) | 6.7 / 1,000 மக்கள் தொகைக்கு |
| 3 | மொத்த கருவள விகிதம் (2016) | 1.6 |
| 4 | சிசு மரண விகிதம் (2017) | 16.0 / 1,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 5 | தாய்மார்கள் இறப்பு விகிதம் (2016-17 HMIS) | 60 / 1,00,000 உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கு |
| 6 | இயற்கையான வளர்ச்சி விகிதம் (2017) | 0.83 விழுக்காடு |

***தமிழகத்தில் மருத்துவமனைகள்***

| வ. எண் | விவரம் | அலகுகள் |
|---|---|---|
| 1 | அரசு மருத்துவக் கல்லூரிகள் | 24 |
| 2 | மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள் | 50 |
| 3 | தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை | 1 |
| 4 | தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை | 1 |
| 5 | மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் | 29 |
| 6 | வட்டம் / வட்டம் சாரா மருத்துவமனைகள் | 273 |
| 7 | ஆரம்ப சுகாதார நிலையங்கள் | 1,806 |
| 8 | துணை சுகாதார நிலையங்கள் | 8,713 |
| 9 | நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் (சென்னை மாநகராட்சி உட்பட) | 460 |
| 10 | சென்னை மாநகராட்சியில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் புதிய நகர்ப்புற சமுதாய மையங்கள் | 15 |
| 11 | தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகள் | 10 |
| 12 | தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள் | 216 |
| 13 | இந்திய முறை மருத்துவ மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 1,534 |

ஆதாரம் : மக்கள் நல்வாழ்வுத்துறை கொள்கை விளக்க குறிப்பு, 2019-2020

## தமிழக நல்வாழ்வுத்துறையின் கீழுள்ள முக்கிய நிறுவனங்கள்

### மருத்துவ கல்வி இயக்ககம்

மருத்துவக் கல்வி இயக்ககமானது ஒரு தனி இயக்ககமாக 1966 ஜூலை முதல் மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்திலிருந்து பிரிந்து பொது மக்கள் அனைவருக்கும் உயர் நிலை மருத்துவமனைகளில் உலக தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை அளிப்பதோடு மருத்துவ கல்லூரிகள் மற்றும் அம்மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவமனைகளை நிர்வகிப்பதுடன் படிப்பு, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த முக்கிய கவனம் செலுத்துகிறது. இம்மருத்துவ கல்வி இயக்குநரகத்தால் தமிழ்நாட்டிலுள்ள 24 மருத்துவக் கல்லூரி

மற்றும் மருத்துவமனைகளில் திறன் வாயந்த மனித வளம் மற்றும் உட்கட்டமைப்புடன் கூடிய உயர் தர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**மருத்துவ கல்லூரி இயக்ககத்தின் கீழ் செயல்படும் மருத்துவ கல்லூரிகள்**

| | |
|---|---|
| அரசு மருத்துவக் கல்லூரிகள் | 24 |
| அரசு பல் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை | 1 |
| மருத்துவமனைகள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் | 36 |
| பன் நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் | 1 |
| மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகள் | 4 |
| குழந்தைகள் மருத்துவமனை | 1 |
| கண் மருத்துவமனை | 1 |
| காசநோய் மருத்துவமனை | 5 |
| மனநல மருத்துவமனை | 1 |
| புனர் வாழ்வு மருந்துகள் | 1 |
| கிங் நிறுவனம் | 1 |
| மருந்தகங்கள் | 13 |
| **மொத்தம்** | 89 |

**மருத்துவம் மற்றும் ஊரகப் பணிகள் இயக்ககத்தின் கீழ் செயல்படும் மருத்துவமனைகள்**

| | |
|---|---|
| மாவட்ட தலைமை மருத்துவமனைகள் | 29 |
| வட்ட மருத்துவமனைகள் | 206 |
| வட்டம் சாரா மருத்துவமனைகள் | 68 * |
| மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைகள் | 7 |
| காசநோய் மருத்துவமனைகள் | 2 |
| தொழுநோய் மருத்துவமனைகள் | 7 |
| மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு மனநலம் காப்பகம் | 1 |
| மருந்தகங்கள் | 11 |
| மொத்தம் | 331 |

* நீலகிரி மாவட்டம் எமரால்டில் புதிதாக 1 வட்டம் சாரா மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு தேசிய தடுப்பூசி திட்டத்தில் நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 1978-ஆம் ஆண்டில் விரிவான தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டது.** 1985-ஆம் ஆண்டில் அனைவருக்குமான தடுப்பூசி திட்டமாக இத்திட்டம் தட்டம்மை தடுப்பூசியுடன் சேர்க்கப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 1992-ஆம் ஆண்டில் இத்திட்டம் பாதுகாப்பான தாய்மை மற்றும்

குழந்தை நலம் என்ற திட்டமாக ஒருங்கிணைக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டு முதல் தமிடிநநாடு போலியோ இல்லாத மாநிலமாக திகடிநந்து வருகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்: ஏழைத்தாய்மார்களுக்கு இத்திட்டத்தின் கீடிந ரூ.18,000/- ஏப்ரல் 2018 முதல் 5 தவணைகளில் வழங்கப்படுகிறது.

**சித்தா, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளின் விவரங்கள்**

**தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் தமிழ்நாடு மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (TAMPCOL)**

தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் (டாம்ப்கால்) இந்திய முறை மருத்துவ சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகளை தயார் செய்து விநியோகம் செய்யும் முக்கிய நோக்கத்திற்காக 1983ம் வருடம் செப்டம்பர் திங்கள் 27ம் நாள் துவக்கப்பட்டது.இதன் தலைமை அலுவலகம் அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை என்ற முகவரியில் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் அருகில் ஆலத்தூரில் உள்ள சிட்கோ மருந்து செய்யும் வளாகத்தில் உள்ள இதன் தொழிற்சாலையில் 124 வகையான மருந்துகள் (சித்தா-77, ஆயூர்வேதா-39, யுனானி-8) தயார் செய்யப்படுகின்றன.

| வ.எண். | மருத்துவமுறை | அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை | தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சித்தா | 2 | 7 |
| 2 | ஆயுர்வேதா | 1 | 4 |
| 3 | யுனானி | 1 | - |
| 4 | யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | 1 | 7 |
| 5 | ஓமியோபதி | 1 | 9 |
| | **மொத்தம்** | **6** | **27** |

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையில் செயல்படும் அரசு கல்லூரிகள் பின்வருமாறு:**

- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி
- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி
- அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், சென்னை
- அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை

**தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை** 22.12.2011 முதல் ஏற்படுத்தப்பட்டு உணவு பாதுகாப்பு தர நிர்ணய சட்டம் 2006 மற்றும் விதிகளை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தி வருகிறது. உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011 மற்றும் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் அவ்வப்போது வழங்கும் விதிமுறைகள் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்டப் பாதுகாப்புத் தரங்களின்படி அனைவருக்கும் உணவுக் கிடைப்பதை உறுதி செய்வதே இத்துறையின் பிரதான நோக்கமாகும்.

- **கூ.தக. : உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006** ஆனது உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம் 1954 மற்றும் உணவுத் தொடர்பான ஏழு சட்டங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் இயற்றப்பட்டது. இச்சட்டம் இந்திய உணவுப் பாதுகாப்பு தரநிர்ணய ஆணையம் உருவாக வழிவகுத்தது. உணவுப் பொருட்களுக்கான அறிவியல் அடிப்படையிலான தரங்களை நிர்ணயம் செஉறுயவும், உற்பத்தி, சேமிப்பு, விநியோகம், விற்பனை மற்றும் நாட்டில் மனித நுகர்வுக்குப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவுக் கிடைப்பதை உறுதி செய்வதற்கான இறக்குமதி, போன்றவற்றை கண்காணிக்கும் அதிகாரம்மிக்க தேசிய நிறுவனமாக இந்திய உணவுப் பாதுகாப்புத் தரநிர்ணய ஆணையம் உள்ளது. இந்தச் சட்டம் 2011 ஆகஸ்ட் 5 முதல் இந்தியா முழுவதும் நடைமுறைக்கு வந்தது.

**தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம் :**

தேசிய பார்வை இழப்பு தடுப்பு திட்டம், 1976 ம் ஆண்டு, மத்திய அரசின் நூறு விழுக்காடு நிதி உதவியுடன் தடுக்கக் கூடிய பார்வை இழப்பை 1.4 விழுக்காட்டிலிருந்து 0.3 விழுக்காடாக குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் துவக்கப்பட்டது. பின்னர் இத்திட்டத்தின் செயலாக்கம் 1994-1995-ம் ஆண்டில் பரவலாக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம்' நிறுவப்பட்டது. மாநில அளவிலான 'பார்வை இழப்பு தடுப்பு சங்கம்' 1.4.1996 அன்று தனி அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. தமிழ் நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் மாவட்ட அளவிலான பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இயங்குகிறது. இச்சங்கம் மாவட்ட தலைமை மருத்துவமனை அல்லது மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றும் ஒரு முதுநிலை கண் சிகிச்சை நிபுணரை மாவட்ட திட்ட மேலாளராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறை :**

இந்தியாவில் உணவு கலப்பட தடைச்சட்டம், 1954 மற்றும் உணவு தொடர்பான 7 பிற சட்டங்களையும் ரத்து செய்து, உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச்சட்டம், 2006 நாடு முழுவதும் 05.08.2011 முதல் அமல்படுத்தப்பட்டது. இதனை தமிழகத்தில் அமலாக்கம் செய்யும் வகையில் 22.12.2011 முதல் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 2012 – ல் துவக்கப்பட்டு**, மக்கள் நல்வாழ் மற்றும் குடும்ப நலத்துறையின் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான மனிதவளத்தை ஏற்படுத்தித் தருவதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

**தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் :**

நிறுவனங்கள் சட்டம் 1956-ன் படி 1994-1995 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் (TNMSC), முழுவதும் தமிழக அரசுக்கு உடன்பட்ட ஒரு நிறுவனமாகும். தமிடிநநாடு மருத்துவப் பணிகள் கழகம் தற்போது இந்திய தரச் சான்றிதழ் 9001:2015 பெற்ற நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் அனைத்து அரசு மருத்துவ நிறுவனங்களுக்கும் மருந்துகள், மாத்திரைகள், அறுவை சிகிச்சை நுகர் பொருட்கள் மற்றும் தையல் பொருட்கள் கொள்முதல் செய்து, சேமித்து, மருந்துகளை ஆய்வுக்குட்படுத்தி வழங்குவது இக்கழகத்தின் முக்கிய பணியாகும்.

**தமிழ்நாடு தேசிய ஊரக நலவாழ்வு குழுமம் (Tamil Nadu National Rural Health Mission)**

ஏப்ரல் 2005–ல் உருவாக்கப்பட்ட இத்தேசிய நலவாழ்வு குழுமம், பொதுமக்களுக்கு குறிப்பாக நோய்த் தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய மக்களுக்கு, எளிதில் அணுகத்தக்க மற்றும் தரமான சுகாதார சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது. நகர்புற ஏழை மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்குவதற்கு, குறிப்பாக அவர்களது மருத்துவ சிகிச்சைகளுக்கான சொந்த செலவினங்களை குறைக்கும் நோக்கத்தில் துணை குழுமமாக தேசிய நகர்ப்புற சுகாதார குழுமம் 2013-ல் ஏற்படுத்தப்பட்டது. தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் (National Health Mission) தேசிய ஊரக நலவாழ்வு மற்றும் தேசிய நகர்ப்புற சுகாதாரம் ஆகிய இரு குழுமங்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன. இதன் கீழ், தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்ட சங்கம், திருத்திய தேசிய காசநோய் தடுப்பு திட்ட சங்கம், தமிழ்நாடு மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கம் போன்ற அனைத்து சங்கங்களையும் ஒன்றிணைத்து மாநில அளவிலான ஒரே நலழ்வு சங்கமாக (State Health Society) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**

- தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் திட்ட பிரிவு 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 1994 ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கமாக சங்கங்களின் விதியின் கீழ் பதிவு செய்யப்பட்டது.
- தேசிய அளவில் முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட சங்கமாகும். மா
- நிலத்தில் தொடர்ச்சியாக எச்.ஐ.வி /எய்ட்ஸ் பரவுதலைக் குறைக்கும் மகத்தான நோக்கத்தோடு தமிடிநநாடு மாநில எடீநுட்ஸ் கட்டுப்பாடு சங்கம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நாட்டிலேயே எச்.ஐ.வி / எய்ட்ஸ் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு பணியில் தமிழ்நாடு மாநிலம் முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது.
- தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைத்து இலக்குத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையம், எச்.ஐ.வி-காசநோய்க்கான பரிந்துரை சேவைகள், எச்.ஐ.வி நுண்கிருமிக்கு எதிரான சிகிக்சை மையங்கள், சமூக நல மையம், பாதுகாப்பான இரத்தம் மற்றும் தன்னார்வ இரத்ததானம் வழங்கும் திட்டம் மற்றும் பால்வினை நோய் சிகிச்சை பராமரிப்பு சேவைகள்

போன்றவைகள் எச்.ஐ.வி / எடீநுட்ஸ் தொற்றை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துதல் இச்சங்கத்தின் முக்கிய செயல்பாடுகள்.

- எச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோடீநு தொற்று மீதான தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் 2017-2024 ஆண்டிற்கான தேசிய மேலாண்மை திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 2030 ஆம் ஆண்டுக்குள் எய்ட்ஸ் நோயை பொதுநல அபாய நோயிலிருந்து நீக்கும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.
- **மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு** : தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு அமைப்பின் திட்டங்களை முழுமையாக செயல்படுத்திட மாவட்ட அளவில் 29 மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகுகள் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் அவர்களின் மேற்பார்வையிலும் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலுவலர் அல்லாத 3 மாவட்டங்களில் துணை இயக்குநர் (காசநோய்) அவர்களின் மேற்பார்வையிலும், சீரான நடைமுறை மற்றும் சரியான தொடர்பில் தேசிய சுகாதார திட்டம் மற்றும் தொடர்புடைய மாநிலத் துறைகளுடன் செயல்படுகிறது.
- **செஞ்சுருள் சங்கம்:** நாட்டிலேயே முன்னோடியாக, இளைஞர்களிடையே எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எண்ணங்கள் மற்றும் நடத்தை மாற்றத்தை கொண்டு வரவும், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், 2005-ஆம் ஆண்டில் செஞ்சுருள் சங்கத்தை துவக்கியது.
- **ஹலோ + உதவி எண் - 1800 419 1800** - எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை தொற்று குறித்த தேவையான தகவல்களை வழங்கவும், எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை தொற்று குறித்த சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் தொடங்கப்பட்டுள்ளது.
- **தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு தாயிடமிருந்து குழந்தைக்கு தடுக்கும் பணிக்கான, தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி தொற்று பரவுதலை முற்றிலும் நீக்குதல் சாதனைக்கான விருது** தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தால் நடத்தப்பட்ட, "தேசிய கருத்தரங்கு 2018" – ல் வழங்கப்பட்டுள்ளது.

### மக்கள் நல்வாழ்வுடன் தொடர்புடைய சில முக்கியச் சட்டங்கள்

### தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், 1997:

தமிழ்நாடு அரசு, மத்திய அரசு மற்றும் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக, இம்மாநிலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைகள், மருத்துவ இல்லங்கள் மற்றும் பிற மருத்துவ நிறுவனங்களை பதிவு செடீநுவதன் மூலமாக முறைப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் 1997-ஆம் ஆண்டு தமிடிநநாடு தனியார் மருத்துவமனை நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தை இயற்றியது.

### கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும்தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வை தடை செடீநுடீநுடீநுடீநுதல்) சட்டம், 1994:

பாதகமாக உள்ள ஆண் பெண் விகிதாச்சாரத்தைக் கட்டுப்படுத்தவும், பெண் சிசுக் கொலையைத் தடுக்கவும், தமிழ்நாட்டில் கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய

கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலின தேர்வு தடை செய்தல்) சட்டம், 1994 செயல்படுத்தப்படுகிறது. இந்த சட்டத்தை திறம்பட செயல்படுத்த, மாநில அளவிலும் மாவட்ட மற்றும் வட்ட அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைச் சட்டம், 1994:**

மனித உடல் உறுப்பு விற்பனை அச்சுறுத்தலை ஒழிப்பதற்காகவும், சிகிச்சைக்காக மனித உறுப்புகளை நீக்குதல், சேமித்து வைத்தல் மற்றும் உறுப்பு மாற்றம் செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்காகவும், மத்திய அரசால் மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைச் சட்டம், 1994 இயற்றப்பட்டது.

**இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம்:**

நாட்டிலேயே உடல் உறுப்பு தானம் வழங்குவதில் தமிடிநநாடு தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. 1995ஆம் ஆண்டில், தமிடிநநாடு சட்டமன்ற பேரவையில் மத்திய அரசின் சட்டத்தை ஏற்றுக்கொள்ளலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், இந்த திட்டம் தொடங்கப்பட்ட முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக திகழ்கிறது. 2000-ஆம் ஆண்டு முதல் உறுப்புகள் பிரித்துக் கொடுக்கும் அமைப்பு உள்ளது. தற்போதுள்ள இறந்தவர் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டம் தமிழ்நாட்டில் 16.09.2008 முதல் செயல்படத் தொடங்கி நாட்டிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

**தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939 :**

இந்தியாவிலேயே, பொது சுகாதாரத்திற்காக தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939 என்ற ஒரு சட்டத்தை இயற்றிய முதல் மாநிலம் தமிடிநநாடு ஆகும். 1939ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1941, 1944 மற்றும் 1958-ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு, 1970-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. பொது சுகாதார சட்டம், 1939ன் முக்கியக் குறிக்கோள்கள், சுற்றுப்புற சுகாதாரம் பேணுதல், தொற்றுநோய் தடுத்தல், தூய உணவு மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தை நல நடவடிக்கைகள் ஆகியனவாகும்.

**உணவு கலப்படத்தை தடைசெய்ய முதன்முதலாக உணவு கலப்படத் தடைச் சட்டம், 1918-ஐ** இயற்றிய பெருமையும் தமிடிநநாட்டைச் சாரும். இச்சட்டம் மத்திய அரசின் உணவு கலப்படத் தடுப்புச் சட்டம், 1954 இயற்றப்படும் வரை செயல்பாட்டில் இருந்தது. மத்திய அரசு தற்போது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம் சட்டம், 2006 மற்றும் அதன் கீடிந வகுக்கப்பட்ட விதிகள், 2011-ஐ இயற்றி, உணவு கலப்படத் தடுப்புச் சட்டம், 1954-ஐ ரத்து செய்துள்ளது.

**சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் தடுப்புச் சட்டம், , 2003:**

புகையிலைப் பொருட்களின் பயன்பாட்டை குறைப்பதற்காகவும், புகையிலைப் பொருட்கள் உபயோகிப்பதினால் விளையும் தீமைகளிலிருந்து இளைஞர்கள் மற்றும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவும், புகைப்பிடிப்பவரின் அருகில் இருப்பவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கவும், சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள் (விளம்பரம் தடை செய்தல் மற்றும் தொழில் வணிக ஒழுங்கு முறை விதிகள், உற்பத்தி, வழங்குதல் மற்றும் பகிர்வு) தடைச் சட்டம், 2003 மத்திய அரசால் இயற்றப்பட்டது.

**மக்கள் நல்வாழ்வுத் துறையின் சாதனைகள்**

**தடுப்பூசிகளால் தடுக்கப்படக்கூடிய நோய்கள் மற்றும் இதர தொற்று நோய்கள் ஒழிக்கப்பட்ட/நீக்கப்பட்ட விவரம்:**

1. 1977-ஆம் ஆண்டில் பெரியம்மை ஒழிக்கப்பட்டது.

2. பிப்ரவரி 2004-ல் போலியோ இல்லா தமிழகம் மற்றும் 2014-ல் போலியோ இல்லா இந்தியா.

3. தமிழகத்தில் இளம்பிள்ளை ரண ஜன்னி 2006-ம் ஆண்டில் நீக்கப்பட்டது மற்றும் மத்திய அரசு 2016-ம் ஆண்டில் உறுதி செய்தது.

4. தமிழகத்தில் 1983-ஆம் ஆண்டு முதல் நரம்பு சிலந்தி நோய் பதிவாகவில்லை மற்றும் 1995-ஆம் ஆண்டில் அது முற்றிலும் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

5. பரங்கிப்புண் (Yaws) 2006-ஆம் ஆண்டு முதல் பதிவாகவில்லை மற்றும் 2015-ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

6. தொழுநோய்க்கான ஒழிப்பு இலக்கு 2005-ஆம் ஆண்டு எட்டப்பட்டது.

7. மலேரியா நோய் வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் ஒழிக்கப்படும்.

**கடந்த எட்டு ஆண்டுகளில் இந்திய அளவில் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் பெற்றுள்ள விருதுகள் :**

- மருத்துவ தகவல் மேலாண்மை திட்டத்திற்கு "தன்னிகரில்லாத மறு சுழற்சியின்படி தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தீர்விற்கான" பிரிவில் இந்திய அரசிடமிருந்து 2011-12 ஆம் ஆண்டிற்கான தேசிய மின் ஆளுமை (தங்கம்) விருது-புவனேஷ்வரில் பெறப்பட்டுள்ளது .
- தேசிய நல்வாழ்வு இயக்க விருது - பொது சுகாதாரத்தின் கீழ் சிறப்பு முயற்சிகளுக்கான ஜூலை 3-5, 2013ல் நடைபெற்ற தேசிய அளவிலான மாநாட்டில் குழந்தைகளின் உயிர்காக்கும் செயல்பாடுகளுக்கு தமிழ்நாட்டிற்கு (வளர்ந்த மாநிலங்களில் ) முதல் பரிசு வழங்கப்பட்டது. தேசிய நல்வாழ்வு இயக்க விருது - பொது சுகாதார அமைப்பில் சிறப்பு முயற்சிகளுக்கான ஜுலை 3-5, 2013ல் நடைபெற்ற தேசிய அளவிலான மாநாட்டில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயர்காக்கும் செயல்பாடுகளுக்கு தமிழ்நாட்டிற்கு (வளர்ந்த மாநிலங்களில் ) முதல்பரிசு வழங்கப்பட்டது.
- 2013-ஆம் ஆண்டுக்கான தெற்காசிய மற்றும் ஆசிய பசிபிக் "மந்த்தன் நடுவர்" சிறப்பு விருது- மருத்துவ தகவல் மேலாண்மை திட்டத்திற்காக புதுடெல்லி டிஜிட்டல் வளர்ச்சிக்கான அமைப்பிடமிருந்து பெறப்பட்டது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், தகவல் தொழில் நுட்ப சேவையை சிறந்த முறையில் பயன்படுத்தியதற்காக இ-இந்தியா பப்ளிகேஷன் ஆந்திர அரசுடன் இணைந்து 2012 மற்றும் 2013-ம் ஆண்டிற்கான "இ-இந்தியா விருது சான்றிதழ் வடிவில் தமிழ்நாட்டிற்கு வழங்கியது.

- இ-இந்திய (மருத்துவ மின் ஆளுமை) விருது மருத்துவ தகவல் மேலாண்மை திட்டத்திற்கு 2013-14-ம் ஆண்டுக்கு இ-லெட்ச்சிடமிருந்து திருவனந்தபுரத்தில் பெறப்பட்டது.
- இ-இந்திய (மருத்துவ மின் ஆளுமை) விருது மருத்துவ தகவல் மேலாண்மை திட்டத்திற்கு 2013-14-வம் ஆண்டுக்கு இ-லெட்ச்சிடமிருந்து திருவனந்தபுரத்தில் பெறப்பட்டது.
- உலக சுகாதார நிறுவன விருது :- இந்தியாவில் போலியோ நோயை ஒழிப்பதில் தமிழ்நாட்டின் பங்களிப்புக்கு தேசிய விருது 20%4 உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது. 2014-ம் ஆண்டு தெற்காசிய மற்றும் ஆசிய பசிபிக் *மந்த்தன் சிறப்பு' குறிப்பீடு விருது- மருத்துவ தகவல் மேலாண்மை திட்டத்திற்கு பெறப்பட்டுள்ளது.
- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், தகவல் தொழில் நுட்ப சேவை தரத்தை புதுமையான முறையில் செயல்படுத்தியதற்காக 2014-ம் ஆண்டின் "தெற்காசிய இ-சுகாதார உச்சிமாநாடு விருது" சான்றிதம் வடிவில் வழங்கப்பட்டது (தனியார் அமைப்பு).
- குழந்தை இறப்பு விகிதத்தை அதிக எண்ணிக்கையில் குறைத்ததற்காக தேசிய அளவிலான மாநாட்டில் தமிழ்நாட்டிற்கு பெரிய மாநிலங்களுக்கான , முதலிடத்திற்கான விருது 2015ல் வழங்கப்பட்டது.
- கேபம் விருது - கருப்பைவாய் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதை விரிவுபடுத்தி செயல்படுத்தி வருவதற்காக கேபம் என்னும் சர்வதேச அமைப்பு மலேசியாவில் 2016 அம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு தங்கப் பதக்கம் வழங்கியது.
- பேறுகாலத்தின் போது செய்யப்படும் குடும்பநல அறுவை சிகிச்சையில் சிறப்பான பங்களிப்பிற்காக தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு 2016 ஆம் ஆண்டு விருது வழங்கியுள்ளது.
- அரசு மருத்துவமனைகளில் பிரசவம் மற்றும் குழந்தை பிறப்பிற்கு குறைவான அளவில் செலவீட்டுபடி செலவிட வைத்தமைக்கு, தமிழ்நாட்டிற்கு முதலிடத்திற்கான விருது, திருப்பதியில் நடந்த தேசிய மாநாட்டில் வழங்கப்பட்டது. (2016).
- அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளின் சேவையை மேம்படுத்தியதற்காக பெரிய மாநிலங்களில்
- தமிழ்நாட்டிற்கு முதலிடத்திற்கான விருது, திருப்பதியில் நடந்த தேசிய மாநாட்டில் வழங்கப்பட்டது. (2016).

- o மத்திய அரசின் தேசிய விருது: இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக கடந்த 2015, 2016, 2017 மற்றும் 2018 அகிய நான்கு ஆண்டுகளாக தொடாந்து விருது பெறப்பட்டது .
- o மத்திய அரசின் தேசிய விருது: தமிழ்நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக வெகுவாக குறைத்ததற்காக மத்திய அரசின் விருது 29.06.2018 அன்று புதுடெல்லியில் நடந்த விழாவில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெறப்பட்டது.
- o எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சிறப்பு விருது: தமிழக அரசின் தாய் சேய் நல சேவை சாதனைகளை பாராட்டி 05.10.2018 அன்று புது டில்லியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது

**இதர தகவல்கள்**

- ❖ பல்ஸ் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 1995-96-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு வழக்கமான தடுப்பூசி திட்டத்தோடு இணைந்து செயல்படுத்தப்பட்டதால், போலியோ நோய் தமிழ்நாட்டில் அறவே ஒழிக்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டு 332 முதல் போலியோ நோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.
- ❖ இந்தியாவிலுள்ள மிகப் பெரிய மருத்துவ பல்கலைக்கழகங்களில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகமும் ஒன்றாகும். இந்த பல்கலைக்கழகம் 1987-ஆம் ஆண்டைய தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக (சென்னை) சட்டத்தின்படி நிறுவப்பட்டு, 1988-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.
- ❖ கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பதற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில் நுட்ப முறைகள் (பாலின தேர்வு செய்யும் தடை) சட்டம், 1994

# 9. தமிழகப் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும். (Geography of Tamil Nadu and its impact on Economic growth. )

**தமிழ் நாடு அமைவிடம் மற்றும் பரப்பளவு**

- இந்தியாவின் 29 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. இது இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு 8*4 ' வட அட்சம் முதல் 13*35' வட அட்சம் வரையிலும், 76* 18' கிழக்கு தீர்க்கம் முதல் 80"20' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது.
- தமிழ்நாட்டின் கிழக்கு கோடியாக கோடியக்கரையும், மேற்கு கோடியாக ஆனைமலையும் அமைந்துள்ளன. பழவேற்காடு ஏரி வட கோடியாகவும் குமரிமுனை தென் கோடியாகவும் அமைந்துள்ளன.
- தமிழகத்தின் பரப்பளவு 130,058 சதுர கிலோமீட்டர்களாகும். இது இந்தியாவின் பதினோராவது பெரிய மாநிலமாகும். இந்தியப் பரப்பில் சுமார் 4 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

**தமிழ்நாட்டின் எல்லைகள் / அண்டை மாநிலங்கள்**

- இந்தியாவின் தென் கோடியில் அமைந்துள்ள கடலோர மாநிலமான தமிழ்நாடு, கிழக்கில் வங்காளவிரிகுடா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தையும், தெற்கில் இந்தியப் பெருங்கடலையும், மேற்கில் கேரளாவையும், வடமேற்கில் கர்நாடகா, வடக்கில் ஆந்திரப்பிரதேசத்தையும் கொண்டுள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்ச்சந்தி தமிழ்நாட்டையும் இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள இலங்கையையும் பிரிக்கின்றன.
- 1958ஆம் அண்டு ஜனவரி 14ஆம் நாள் தமிழ், தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டது.
- இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் தமிழ் நாடு ஏழாவது இடத்தையும் பரப்பளவில் பதினொன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

Source : www.tn.gov.in/tamilnadustate

## 15-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011 - முக்கிய தகவல்கள்

| | |
|---|---|
| மொத்த மக்கள் தொகை | **72,147,030** |
| ஆண்கள் | 36,137,975 |
| பெண்கள் | 36,009,055 |
| மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் (2001-2011) | 15.61% |

| | |
|---|---|
| **மொத்த மக்கள் தொகையில் தமிழகத்தின் சதவீதம்** | 5.96% |
| **பாலின விகிதம் (Sex Ratio)** | 996 |
| **குழந்தை பாலின விகிதம் (Child Sex Ratio)** | 943 |
| **மக்கள் தொகை பரவல் (Density/km2)** | 555 |
| **பரப்பளவு (Area(Km²))** | 130,060 |
| **மொத்த குழந்தைகள் எண்ணிக்கை ( (0-6 வயது வரை)** | 7,423,832 |
| **ஆண் குழந்தைகள் எண்ணிக்கை (0-6 வயது வரை)** | 3,820,276 |
| **பெண் குழந்தைகள் எண்ணிக்கை (0-6 வயது வரை)** | 3,603,556 |
| **எழுத்தறிவு (Literacy) சதவீதம்** | 80.09 % |
| **ஆண்கள் எழுத்தறிவு (Male Literacy) சதவீதம்** | 86.77 % |
| **பெண்கள் எழுத்தறிவு (Female Literacy) சதவீதம்** | 73.44 % |
| **மொத்த எழுத்தறிவு (Total Literate)** | 51,837,507 |
| **ஆண்கள் எழுத்தறிவு (Male Literate)** | 28,040,491 |
| **பெண்கள் எழுத்தறிவு (Female Literate)** | 23,797,016 |

## தமிழ்நாடு - மதங்கள் (Religions)

| மதம் | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| இந்துக்கள் | 63,188,168 | 87.58 % |
| கிறிஸ்தவர்கள் | 4,418,331 | 6.12 % |

www.portalacademy.in

| | | |
|---|---|---|
| இஸ்லாமியர்கள் | 4,229,479 | 5.86 % |
| தெரியவில்லை<br><br>(Not available) | 188,586 | 0.26 % |
| சமணர்கள் | 89,265 | 0.12 % |
| சீக்கியர்கள் | 14,601 | 0.02 % |
| புத்தர்கள் | 11,186 | 0.02 % |
| இதர மதத்தவர் | 7,414 | 0.01 % |

**தமிழ்நாடு – கிராம மற்றும் நகர்ப்புற மக்கள் தொகை / எழுத்தறிவு விவரம்**

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| மக்கள்தொகை (%) | 51.60 % | 48.40 % |
| மொத்த மக்கள் தொகை | 37,229,590 | 34,917,440 |
| ஆண்கள் மக்கள்தொகை<br><br>(Male Population) | 18,679,065 | 17,458,910 |
| பெண்கள் மக்கள்தொகை<br><br>(Female Population) | 18,550,525 | 17,458,530 |

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| மக்கள் தொகை வளர்ச்சி (Population Growth) | 6.49% | 27.16% |
| பாலின விகதம் (Sex Ratio) | 993 | 1000 |
| குழந்தை பாலின விகிதம்<br><br>(Child Sex Ratio (0-6)) | 936 | 952 |
| குழந்தைகள் எண்ணிக்கை<br><br>(Child Population (0-6)) | 3,911,302 | 3,512,530 |
| குழந்தைகள் சதவீதம்<br><br>(Child Percentage (0-6)) | 10.51 % | 10.06 % |
| எழுத்தறிவுற்றோர் (Literates) | 24,502,195 | 27,335,312 |
| எழுத்தறிவு சதவீதம்<br><br>(Average Literacy) | 73.54 % | 87.04 % |
| ஆண்கள் எழுத்தறிவு சதவீதம்<br><br>(Male Literacy) | 82.04 % | 91.80 % |
| பெண்கள் எழுத்தறிவு சதவீதம் | 64.55 % | 82.31 % |

| | கிராமப்புறம் | நகர்ப்புறம் |
|---|---|---|
| (Female Literacy) | | |

**பெரிய நகரங்கள் மற்றும் மக்கள் தொகை**

| வ.எண். | பெரிய நகரங்கள் (2011) | மக்கள் தொகை |
|---|---|---|
| 1 | சென்னை (Municipal Corporation) | 4,646,732 |
| 2 | கோயம்பத்தூர் (Municipal Corporation) | 1,050,721 |
| 3 | மதுரை (Municipal Corporation) | 1,017,865 |
| 4 | திருச்சி (Municipal Corporation) | 847,387 |
| 5 | சேலம் (Municipal Corporation) | 829,267 |
| 6 | திருநெல்வேலி (Municipal Corporation) | 473,637 |
| 7 | அம்பத்தூர் (Municipality) | 466,205 |
| 8 | திருப்பூர் (Municipal Corporation) | 444,352 |
| 9 | ஆவடி (Municipality) | 345,996 |
| 10 | திருவொற்றியூர் (Municipality) | 249,446 |

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றிய இதர முக்கிய தகவல்கள்**

- மக்கள் தொகை எண்ணிக்கையில் தமிழகம், இந்திய அளவில் 7-வது இடத்தைப் பெற்றுள்ளது.
- மக்கள் தொகை எண்ணிக்கையில் சென்னை 46,46,732 முதல் இடத்திலும் பெரம்பலூர் 5,65,223 கடைசி இடத்திலும் உள்ளது.
- மக்கள் தொகை வளர்ச்சியில் காஞ்சிபுரம் முதல் இடத்திலும் நீலகிரி கடைசி இடத்திலும் இருக்கிறது.
- மக்கள் தொகை அடர்த்தியில் ஒரு சதுர கிலோமீட்டருக்கு 26,553 என்று சென்னை முதல் இடத்திலும் 287 பேருடன் நீலகிரி கடைசி இடத்திலும் உள்ளது.
- ஆயிரம் ஆண்களுக்கு 1,042 பெண்கள் என்று நீலகிரி முதல் இடத்திலும் 946 பெண்கள் என்று தர்மபுரி கடைசி இடத்திலும் இருக்கிறது.
- தமிழகத்தில் 6 வயதுக்குள்பட்ட குழந்தைகளின் மக்கள் தொகை கடந்த 10 ஆண்டுகளில் 9.56 சதவீதம் குறைந்துள்ளது. இது தமிழக அரசு மேற்கொண்ட குடும்ப நலத் திட்டங்கள் பயனளித்துள்ளது என்பதையே காட்டுகிறது.தமிழகத்தில் தேனி, தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை பிறப்பு வீதம் கணிசமாக அதிகரித்துள்ளது. அரியலூர், கடலூர், பெரம்பலூர், கோவை, விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் பெண் குழந்தைகள் பிறப்பு வீதம் கணிசமாகக் குறைந்துள்ளது.
- பாலின விகிதம் 1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள் என்ற ரீதியில் கணக்கிடப்படுகிறது. தமிழகத்தில் 1000 ஆண்களுக்கு 995 பெண்கள் என்ற நிலை காணப்படுகிறது. தேசிய அளவில் 1000 ஆண்களுக்கு 940 பெண்களே உள்ளனர்.
- தமிழக மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குழந்தைகளின் பாலின விகிதம் 1000 ஆண் குழந்தைகளுக்கு 946 பெண் குழந்தைகள் என்ற மேம்பட்ட நிலை காணப்படுகிறது. அதே சமயம் தேசிய அளவில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 914 பெண் குழந்தைகளே உள்ளனர்.
- தமிழகத்தின் மக்கள் தொகை அடர்த்தி 1 சதுர கிலோ மீட்டருக்கு 555 நபர்கள் என உள்ளது. இது, 2001-ம் ஆண்டு 480 ஆக இருந்தது. நாடு முழுமைக்குமான மக்கள் தொகை அடர்த்தி 2011-ல் 382 ஆக உயர்ந்துள்ளது. அதுவே 2001-ல் 325 ஆக இருந்தது.
- தமிழகத்திலேயே சென்னையில்தான் மக்கள் தொகை அதிகம். சென்னையில் 1 சதுர கிலோ மீட்டருக்கு 26 ஆயிரத்து 903 பேர் வசிக்கிறார்கள். இந்தியாவில் தில்லிக்கு அடுத்து சென்னையில்தான் மக்கள் தொகை நெரிசல் அதிகம்.
- மக்கள் தொகையில் சென்னைக்கு அடுத்தபடியாக காஞ்சிபுரம் (39 லட்சத்து 90 ஆயிரம்) இரண்டாவது இடத்தையும், வேலூர் (39 லட்சத்து 28 ஆயிரம்) மூன்றாவது இடத்தையும், திருவள்ளூர் (37 லட்சத்து 25 ஆயிரம்) நான்காவது இடத்தையும் பிடித்துள்ளது. தமிழக

அளவில் நீலகிரி மாட்டம் 7 லட்சத்து 35 ஆயிரம் பேருடன் மக்கள் தொகையில் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

- எஸ்.சி. மக்கள் தொகையில் விழுப்புரம், காஞ்சிபுரம், வேலூர் ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களிலும் கன்னியாகுமரி மாவட்டம் கடைசி இடத்திலும் இருக்கிறது.
- பழங்குடியினர் மக்கள் தொகையில் சேலம் முதல் இடத்திலும் கரூர் கடைசி இடத்திலும் உள்ளது.
- எழுத்தறிவு விகிதத்தில் 91.7 சதவீதத்துடன் கன்னியாகுமரி முதல் இடத்திலும் சென்னை 90.02 சதவீதத்துடன் இரண்டாது இடத்திலும் தர்மபுரி 68.5 சதவீதத்துடன் கடைசி இடத்தில் இருக்கிறது
- இந்தியாவிலேயே நகர்மயமான பெரிய மாநிலங்களின் (most urbanised large State) பட்டியலில் தமிழகம் முதலிடத்திலுள்ளது. அதாவது தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.45 சதவீதம் நகர்ப்புறத்தில் வசிக்கின்றனர்.
- தமிழ்நாட்டில், சேரிகளில் வசிக்கும் மக்கள் தொகை (2011) 2.8 மில்லியனாக உள்ளது. இது மொத்த நகர்ப்புற மக்கள் தொகையில் 8 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.
- சென்னை மாநகரின் மொத்த மக்கள் தொகையில் 18.88 சதவீதம் மக்கள் சேரிப்புறங்களில் வசிக்கின்றனர்.
- மிகப் பெரிய பரப்பு கொண்ட மாவட்டம் - ஈரோடு.
- மிகக் குறைந்த பரப்பு கொண்ட மாவட்டம் - சென்னை.
- மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட மாவட்டம் - சென்னை.
- மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட மாவட்டம் - பெரம்பலூர்.

தமிழ்நாடு மாவட்டவாரியாக மக்கள் அடர்த்தி பரவல் – 2011

| எண்ணிக்கை / ஒரு சதுர கி.மீ | மக்கள் அடர்த்தி தன்மை | மாவட்டங்கள் |
|---|---|---|
| 400க்கும் குறைவாக | குறைந்த மக்கள் அடர்த்தி | நீலகிரி (288), இராமநாதபுரம் (320), பெரம்பலூர் (323), சிவகங்கை (324), தருமபுரி (332), புதுக்கோட்டை (348), திண்டுக்கல் (357), கிருஷ்ணகிரி (370), கரூர் (371), தூத்துக்குடி (378), அரியலூர் (317), ஈரோடு (397), திருவண்ணாமலை (399) |
| 400 முதல் 800 வரை | மிதமான மக்கள் அடர்த்தி | தேனீ (433), விருதுநகர் (454), திருநெல்வேலி (458), திருப்பூர் (476), விழுப்புரம் (482), நாமக்கல் (506), திருவாரூர் (533), திருச்சிராப்பள்ளி (602), வேலூர் (646), சேலம் (663), நாகப்பட்டினம் (668), தஞ்சாவூர் (691), கடலூர் (702), கோயம்புத்தூர் (748) |
| 800க்கு மேல் | அதிக மக்கள் அடர்த்தி | மதுரை (823), காஞ்சிபுரம் (927), திருவள்ளூர் (1049), கன்னியாகுமரி (1106), சென்னை (26903) |

- மிகப் பெரிய மக்கள் தொகை அடர்த்தி கொண்ட மாவட்டம் -சென்னை
- மிகக் குறைந்த மக்கள் தொகை அடர்த்தி கொண்ட மாவட்டம் -ராமநாதபுரம்.
- ஆண்-பெண் விகிதம் அதிகம் கொண்டுள்ள மாவட்டம் - நீலகிரி.
- ஆண்-பெண் விகிதம் குறைந்த கொண்டுள்ள மாவட்டம் - தர்மபுரி
- கல்வியறிவு அதிகம் கொண்டுள்ள மாவட்டம் – கன்னியாகுமரி

**தமிழ்நாடு - அரசியல் பிரிவுகள்**

- ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ்நாடு மெட்ராஸ் மாகாணம் என்று அழைக்கப்பட்ட து.
- 1872-இல் மெட்ராஸ் மாகாணத்தில் 21 மாவட்டங்களும் 5 மன்னராட்சிப் பகுதிகளும் இருந்தன. 1881-இல் 23 மாவட்டங்களும் 5 மன்னராட்சிப் பகுதிகளும் இருந்தன. 1941-இல் 25 மாவட்டங்களும் 5 மன்னராட்சிப் பகுதிகளும் இருந்தன.
- சுதந்திரத்திற்குப் பிறகு 1951-இல் மெட்ராஸ் மாநிலத்தில் 26 மாவட்டங்கள் இருந்தன.
- மார்ச் 1956-இல் மெட்ராஸ் மாகாண சட்டமன்றத்தில் மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரை மீது நடைபெற்ற விவாதத்தில், மெட்ராஸ் மாகாணத்தின் பெயரைத் தமிழ்நாடு என மாற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மெட்ராஸ் மாகாணத்திற்குத் தமிழ்நாடு என் று பெயர் சூட்டக்.கோரி உண்ணாவிரதமிருந்து க.பெ.சங்காலிங்களார் உயிர் துறந்தார்.
- மாநில மறுசீரமைப்புச் சட்டம் (அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் திருத்தச் சட்டம்) 6-9-1956 அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 1 நவம்பர் 1956 முதல் அமலுக்கு வந்தது. இந்த சட்டத்தின் படி , இந்தியாவில் 18 மாநிலங்களும், 6 மத்திய ஆட்சிப் பகுதிகளும் உருவாக்கப்பட்டன.
- மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் படி, 1956-ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் தேதி தமிழ்மொழி பேசும் மாநிலமாக "புதிய மெட்ராஸ் மாநிலம்" உருவானது. இதனால் 1961-இல் மெட்ராஸ் மாநிலத்தின் மாவட்டங்களின் எண்ணிக்கை 19-ஆகக் குறைந்தது.
- 1967-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் மெட்ராஸ் மாநிலத்தைத் "தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யும் மசோதா மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இதுவே மெட்ராஸ் மாநில
- (பெயர் மாற்ற) சட்டம், 1968 எனப்பட்டது. இதன்படி அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதல்வராக இருந்தபோது.1969-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் நாள் தமிழ்நாடு என்ற பெயர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.
- 1971-இல் தமிழ்நாட்டில் இருந்த மாவட்டங்களின் எண்ணிக்கை 14 .
- இதுவே 1981-இல் 16 ஆகவும், 1991-இல் 21 ஆகவும், 2001-இல் 30 ஆகவும் உயர்ந்தது. 2009-இல் தமிழக மாவட்டங்களின் எண்ணிக்கை 32 ஆகவும் உயர்ந்தது. தற்போது 2019 ஆம்

ஆண்டில் உருவாக்கப்பட்ட தென்காசி (33) , கள்ளக்குறிச்சி (34), திருப்பத்தூர் (35), ராணிப்பேட்டை (36), செங்கல்பட்டு (37) மாவட்டங்களுடன் மொத்தம் 37 மாவட்டங்கள் தமிழ் நாட்டில் உள்ளன.

| ஆண்டு | உருவான மாவட்டம் | பிரிக்கப்பட்ட மாவட்டம் |
|---|---|---|
| 1966 | தருமபுரி | சேலம் |
| 1974 | புதுக்கோட்டை | திருச்சிராப்பள்ளி |
| 1979 | ஈரோடு | கோயம்புத்தூர் |
| 1985 | சிவகங்கை, விருதுநகர் | இராமநாதபுரம் |
| 1985 | திண்டுக்கல் | மதுரை |
| 1986 | தூத்துக்குடி | திருநெல்வேலி |
| 1989 | வேலூர், திருவண்ணாமலை | வட ஆற்காடு |
| 1991 | நாகப்பட்டினம் | தஞ்சாவூர் |
| 1993 | விழுப்புரம், கடலூர் | தென் ஆற்காடு |
| 1995 | கரூர், பெரம்பலூர் | திருச்சிராப்பள்ளி |
| 1996 | தேனி | மதுரை |
| 1997 (ஜனவரி) | திருவாரூர் | தஞ்சாவூர் |
| 1997 (ஜனவரி) | நாமக்கல் | சேலம் |
| 1997 (ஜீலை) | காஞ்சிபுரம், திருவள்ளூர் | செங்கல்பட்டு |
| 2004 | கிருஸ்ணகிரி | தர்மபுரி |
| 2007 | அரியலூர் | பெரம்பலூர் |
| 2009 | திருப்பூர் | கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு |
| 22-11-2019 | தென்காசி | திருநெல்வேலி |
| 26-11-2019 | கள்ளக்குறிச்சி | விழுப்புரம் |
| 28-11-2019 | திருப்பத்தூர் | வேலூர் |
| 28-11-2019 | ராணிப்பேட்டை | வேலூர் |
| 29-11-2019 | செங்கல்பட்டு | காஞ்சிபுரம் |

## தமிழ்நாட்டின் நிர்வாக அலகுகள் (Administrative units of state)

| | |
|---|---|
| மாவட்டங்கள் | 37 |
| வருவாய் பிரிவுகள் (Revenue Divisions) | 87 |

| | |
|---|---|
| வருவாய் வட்டம் (Taluks) | 301 |
| வருவாய் குறுவட்டம் (Firkas) | 1,349 |
| வருவாய் கிராமங்கள் (Revenue Villages) | 17,680 |
| மாநகராட்சிகள் (Municipal Corporations) | 15 |
| நகராட்சிகள் (Municipalities) | 121 |
| பஞ்சாயத்து ஒன்றியங்கள் (Panchayat Unions (Blocks)) | 385 |
| டவுண் பஞ்சாயத்துக்கள் (Town Panchayats) | 528 |
| கிராம பஞ்சாயத்துக்கள் (Village Panchayats) | 12,618 |
| மக்களவைத் தொகுதிகள் (Lok Sabha Constituencies) | 39 |
| சட்டமன்ற தொகுதிகள் (Assembly Constituencies) | 234 |

**தமிழக அரசு அடையாளங்கள்**

- தமிழக அரசு சின்னம் : ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் கோபுரம்.
- தமிழக அரசு வாசகம் : "வாய்மையே வெல்லும்" (தமிழக அரசின் சின்னத்திலுள்ள 'வாய்மையே வெல்லும்' என்ற வாசகம், 'சத்யமேவ ஜயதே' என்ற சமஸ்கிருத வாக்கியம் தேவநாகரியிலிருந்து வந்தது. இத்தியாவின் தேசிய சின்னத்தில் இடம் பெற்றுள்ள இவ்வாக்கியம் த.மிழக அரசின் சின்னத்திலும் இடம் பெற்றுள்ளது. இது முண்டக உபநிடதத்தின் புகழ் பெற்ற மந்திரங்களில் ஒன்றாகும்.)
- தமிழ்த்தாய் வாழ்த்து : நீராருங் கடலுடுத்த... (தமிழ் மொழியை வாழ்த்தி வணக்கம் செலுத்துவதாக அமைந்துள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை எழுதியவர் மனோன்மணீயம் பெ. சுந்தரனார். மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய புகழ்பெற்ற நாடகமான மனோன்மணீயம் நூலில் இடம்பெற்ற இப்பாடல் ஜூன் 1970ஆம் ஆண்டு தமிழக அரசால் தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)
- மாநில விலங்கு : நீலகிரி வரையாடு (Nilgiri Tahr)
- மாநிலம் பறவை : மரகதப்புறா (Emarald Dove | அறிவியல் பெயர் - Chalcophaps indica)

- மாநில மரம் : பனை ( பனை தமிழகத்தின் மாநில மரம் ஆகும். இதன் தாவரவியற் பெயர் பொராசஸ் பிலபெலிபேரா(Borassus flabellifera) என்பதாகும். பொதுவாக தமிழில் பனை ஒரு மரம் என்று வழங்கம்படினும் தொல்காப்பியம் காட்டும் தாவர மரபு படியும், தாவரவியல் அடிப்படையிலும் பனை புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரமாகும். )
- மாநில மலர் : செங்காந்தள் (கார்த்திகைப் பூ / Gloriosa / தாவரவியல் பெயர் - Gloria Superba) (இது கொடி வகையைச் சார்ந்தது. கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப் பூ என்றும் அழைக்கம் படுகின்றது. பத்துப்பாட்டுநூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் அதன் ஆசிரியர் கபிலர் 99 மலர்களை பட்டியலிடுகிறார். அதில் முதலாவதாக இடம் பெறும் மலர் செங்காந்தள் என்பது குறிப்.பிடதகக்கது. தமிழ் நாட்டின் மாநில மலரான செங்காந்தள் ஜிம்பாவே நாட்டின் தேசிய மலராகும்.)
- மாநில பட்டாம்பூச்சி - 'தமிழ் மறவன்' பட்டாம் பூச்சி (அறிவியல் பெயர்: கிற்றோ சோர்ரா தைஸ்)
- மாநில விளையாட்டு : கபடி
- மாநில ஆடல் : பரதநாட்டியம்

**தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பு**

தீபகற்ப பீடபூமி எனப்படும் தக்காண பீடபூமியில் தமிழ்நாடு அமைந்துள்ளது. இப்பகுதி கிரெட்டேசியஸ் காலத்தில் 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்ற கோண்டுவானா நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும். இது உயரமான அரிக்கப்பட்ட குன்றுகள், அழமற்ற பள்ளத்தாக்குகள் மற்றும் சமவெளிகள் போன்ற தனித்துவமிக்க பல நிலத்தோற்றங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழ்நாட்டின் நிலத்தோற்ற அமைப்பானது, கிழக்கு நோக்கிய சரிவைக் கொண்டுள்ளது. தமிழ்நாடானது நிலத்தோற்றத்தின் அடிப்படையில் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிறிக்கப்படுகிறது. அவையாவன,

1. மேற்கு தொடர்ச்சி மலை
2. கிழக்கு தொடர்ச்சி மலை
3. பீட்பூமிகள்
4. கடற்கரைச் சமவெளிகள்
5. உள்நாட்டு சமவெளிகள்

**1. மேற்கு தொடர்ச்சி மலை**

மேற்கு தொடர்ச்சி மலை வடக்கே நீலகிரி முதல் தெற்கே கன்னியாகுமரி மாவட்ட சுவாமிதோப்பில் உள்ள மருதமலை வரை நீண்டுள்ளது. இம்மலைத்தொடரின் உயரம் 2,000 மீட்டர் முதல் 3,000 மீட்டர் வரை வேறுபட்டுள்ளது. இது 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உடையது.

இம்மலைத்தொடர் தொடர்ச்சியாக இருந்தாலும் சில கணவாய்கள் காணப்பருகின்றன பாலக்காட்டு கணவாய், செங்கோட்டைக் கணவாய், ஆரல்வாய்மொழி கணவாய் மற்றும் அச்சன்கோவில் கணவாய் ஆகியன இத்தொடரின் முக்கிய கணவாய்களாகும்.நீலகிரி, ஆனைமலை,பழனிமலை, ஏலக்காய் மலை, வருசநாரு, ஆண்டிப்பட்டி மற்றும் அகத்தியர் மலைகள் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முக்கிய மலைகளாகும்.

**(i).நீலகிரி மலை நீலகிரி**

மலை தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இம்மலையில் 2,000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்ட 24 சிகரங்கள் காணப்படுகின்றன. இம்மலையின் உயரமான சிகரம் தொட்டபெட்டா (2,637 மீட்டர்) ஆகும். முக்குருத்தி 2,554 மீட்டர் உயரம் கொண்ட மற்றுமொரு சிகரமாகும். ஊட்டி, குன்னூர் ஆகியவை இம்மலையில் அமைந்துள்ள முக்கிய மலை வாழிடங்களாகும். 2,700 க்கும் அதிகமான பூக்கும் தாவர வகைகள் மற்றும் மாநில விலங்கான நீலகிரி வரையாரு இங்கு காணப்பருகின்றன. நீலகிரி மலையில் காணப்பரும் மேட்டுநில புல்வெளிகளும் புதர் நிலங்களும் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் கால்நடை மேய்ச்சலுக்காக அழிக்கப்பட்டுவிட்டன.

**(ii) ஆனைமலை**

ஆனைமலை தமிழ்நாடு மற்றும் கேரள மாநில எல்லைப்பகுதியில் பாலக்காட்டு கணவாய்க்கு தெற்கே அமைந்துள்ளது. ஆனைமலை புலிகள் காப்பகம், ஆழியாறு பாதுகாக்கப்பட்ட காடுகள், வால்பாறை மலைவாழிடம், காடம்பாறை நீர்மின் நிலையம் போன்றவை இம்மலைப்பகுதியில் அமைந்துள்ளன. ஆழியாறு மற்றும் திருமூர்த்தி அணைகள் இம்மலையின் அடிவாரத்தில் கட்டப்பட்டுள்ளன .

**(iii).பழனி மலை**

பழனி மலை, மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதியாகும். இம்மலையின் மேற்கு பகுதியைத் தவிர மற்றவை திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளன. பழனி மலையின் மிக உயரமான சிகரம் வந்தராவ் (2,533 மீ) ஆகும். வேம்படிசோலை (2,505 மீ) இதன் இரண்டாவது உயர்ந்த சிகரமாகும். மலைவாழிடமான கொடைக்கானல் (2,150 மீ) பழனிமலையின் தென் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளது.

**(iv) . எலக்காய் மலை**

தமிழ்நாட்டின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள இம்மலைகள் ஏலமலைக் குன்றுகள் எனவும் அழைக்கப்பருகின்றன. இங்கு அதிகமான ஏலக்காய் பயிரிடப்படுவதால் இப்பெயர் பெற்றது. மிளகு மற்றும் காபி ஆகியன இம்மலைப்பகுதியில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களாகும். இவை வடமேற்கில் ஆனைமலையோரும் வடகிழக்கில் பழனி மலையோரும், தென்கிழக்கில் ஆண்டிப்பட்டி மற்றும் வருச நாடு குன்றுகளோரும் இணைகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள சிகரங்கள் மற்றும் அவற்றின் உயரம் (மீட்டரில்)

- தொட்டபெட்டா - 2,637

- முக்குருத்தி - 2,554
- வேம்படி சோலை - 2,505
- பெருமாள் மலை - 2,234
- கோட்டை மலை - 2,019
- பகாசுரா - 1,918

**(v) வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி மலைக்குன்றுகள்**

மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்கு நோக்கிய நீட்சி வருசநாடு மற்றும் ஆண்டிப்பட்டி குன்றுகள் ஆகும். மேகமலை, கழுகுமலை, குரங்கனி மலை, சுருளி மற்றும் கும்பக்கரை நீர்வீழ்ச்சிகள் ஆகியவை இம்மலைகளில் காணப்படுகின்றன. இம்மலையின் தெற்கு சரிவுகளில் ஸ்ரீ வில்லிப்புத்தூர் மலை அணில் சாணாலயம்' விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. வைகை மற்றும் அதன் துணை ஆறுகள் இப்பகுதியில் உருவாகின்றன.

**(vi) பொதிகை மலை**

இம்மலையின் பெரும்பகுதி திருநெல்வேலி மாவட்டத்திலும் இதன் தென்சரிவு கன்னியாகுமரி மாவட்டத்திலும் அமைந்துள்ளது. சிவஜோதி பர்வத், அகத்தியர் மலைகள் மற்றும் தெற்கு கைலாயம் என பல்வேறு பெயர்களில் இவை அழைக்கப்பருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையின் உயிர்ப்பன்மை செறிந்த ஒன்றாகத் திகழ்கிறது. இப்பகுதி வளமான பசுமை மாறா காடுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் பழமையான கோயில்கள் ஆகியவற்றுக்கு புகழ்பெற்றதாகும். களக்காடு - முண்டந்துறை 'புலிகள் காப்பகம்' இப்பகுதியில் அமைந்துள்ளது.

**(vii)** மகேந்திரகிரி மலைக்குன்றுகள்

இம் மலைத்தொடர் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் எல்லை பகுதிகளாகவும் மேற்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியாகவும் அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் (1645 மீ) ஆகும். இந்திய விண்வளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சோதனை உந்துவிசை செயற்கைக்கோள் எவுதளம் இம்மலையின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது.

**2. கிழக்கு தொடர்ச்சி மலை**

மேற்கு தொடர்ச்சி மலையைப் போலன்றி கிழக்கு தொடர்ச்சி மலையானது ஒருதொடர்ச்சியற்ற குன்றுகளாகும். இம்மலையானது பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மலையின் உயரம் 1100 மீட்டர் முதல் 1,600 மீட்டர் வரை மாறுபருகிறது. இக்குன்றுகள் பீடபூமியை சமவெளியிலிருந்து பிரிக்கின்றன. ஜவ்வாது, சேர்வராயன், கல்வராயன், கொல்லி மலை மற்றும் பச்சை மலை தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலையின் முக்கிய குன்றுகளாகும். இவைகள் மாநிலத்தின் வட மாவட்டங்களில் அமைந்துள்ளன

**(i) ஜவ்வாது மலை**

கிழக்கு தொடர்ச்சி மலையின் நீட்சியான இம்மலைகள் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் பரவியுள்ளன. இம்மலை இவ்விரண்டு மாவட்டங்களையும் பிரிக்கிறது. சுமார் 1100 முதல் 1,150 மீட்டர் உயரம் கொண்ட பல்வேறு சிகரங்கள் இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன. இம்மலையின் மிக உயரமான சிகரம் மேல்பட்டு ஆகும். 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காவலூர் வானவியல் தொலைநோக்கி மையம் இங்கு அமைந்துள்ளது. ஜவ்வாது மலையின் பல பகுதிகள் நீல நிற சாம்பல் கிரானைட் பாறைகளால் உருவானது. பல்வேறு பழ மரங்கள், மருத்துவ மூலிகைகள் மற்றும் சந்தன மரங்கள் போன்றவற்றிற்கு இப்பகுதி பெயர் பெற்றது ஆகும். சட்டவிரோத மரம் வெட்டுதலால் தற்பொழுது இப்பகுதியின் சந்தன மரங்கள் அழிந்துவிட்டன.

**(ii) கல்வராயன் மலை**

"கல்வராயன்" என்ற சொல் தற்போதுள்ள பழங்குடியினரின் பண்டைய கால பெயரான 'கரலர்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள கிழக்கு தொடர்ச்சி மலைகளில் ஒரு முக்கிய மலை கல்வராயன் மலையாகும். இம்மலை ஜவ்வாது மற்றும் சேர்வராயன் மலைகளுடன் இணைந்து காவிரி மற்றும் பாலாறு ஆகியவற்றின் ஆற்று வடிநிலப் பகுதியைப் பிரிக்கிறது. இம்மலைத் தொடரின் உயரம் 600 மீ முதல் 1,220 மீ வரை காணப்படுகிறது. இது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வட பகுதி சின்ன கல்வராயன் எனவும் தென்பகுதி பெரிய கல்வராயன் எனவும் குறிப்பிடப்படுகிறது. சின்ன கல்வராயன் மலைப் பகுதியின் சராசரி உயரம் 825 மீட்டராகவும் பெரிய கல்வராயன் மலையின் சராசரி உயரம் 1,220 மீட்டராகவும் உள்ளது.

**(iii) சேர்வராயன் மலை**

1200 முதல் 1,620 மீட்டர் வரையிலான உயரம் கொண்ட சேர்வராயன் மலைத் தொடர் சேலம் நகருக்கு அருகே அமைந்துள்ளது. இம்மலைத்தொடரின் பெயரானது உள்ளூர் தெய்வமான 'சேர்வராயன்' என்ற பெயரில் இருந்து வந்ததாகும். இவற்றில் அமைந்துள்ள 1,620 மீட்டர் உயரம் கொண்ட 'சோலைக்கரடு' என்பது கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் அமைந்துள்ள உயரமான சிகரமாகும். 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படும் ஏற்காடு மலைவாழிடம் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளது. இங்குள்ள சேர்வராயன் கோவில் இப்பகுதியின் உயரமான பகுதி ஆகும் (1,623 மீட்டர்).

கிழக்குத்தொடர்ச்சி மலையிலுள்ள சிகரங்கள் மற்றும் அவற்றின் உயரங்கள் (மீட்டரில்)

- சேர்வராயன் மலை - 1,623
- பழமலை - 1,500
- உருகமலை - 1,486
- குட்டிராயன் - 1,395
- முகனூர் - 1,279

- வலசமலை - 1,034

## தமிழ்நாட்டில் அமைந்துள்ள முக்கிய மலைகள்

| மாவட்டங்கள் | மலைகள் |
|---|---|
| கோயம்புத்தூர் | மருதமலை, வெள்ளியங்கிரி மற்றும் ஆனைமலை |
| தர்மபுரி | தீர்த்த மலை, சித்தேரி மற்றும் வத்தல் மலை |
| திண்டுக்கல் | பழனிமலை மற்றும் கொடைக்கானல் |
| ஈரோடு | சென்னிமலை மற்றும் சிவன் மலை |
| வேலூர் | ஜவ்வாது, ஏலகிரி மற்றும் இரத்தினமலை |
| நாமக்கல் | கொல்லிமலை |
| சேலம் | சேர்வராயன், கஞ்சமலை மற்றும் சுண்ணாம்புக் குன்றுகள் |
| விழுப்புரம் | கல்வராயன் மற்றும் செஞ்சிமலை |
| பெரம்பலூர் | பச்சை மலை |
| கன்னியாகுமரி | மருதுவாழ் மலை |
| திருநெல்வேலி | மகேந்திரகிரி மற்றும் அகத்திய மலை |
| நீலகிரி | நீலகிரி மலை |

### (iv) கொல்லி மலை

கொல்லி மலை நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய மலைத்தொடராகும். இது சுமார் 2,800 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. 1,300 மீட்டர் வரை உயரம் கொண்ட இம்மலைத் தொடரானது, தென்னிந்தியாவின் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. அரப்பளீஸ்வரர் கோவில் இந்த மலைத்தொடரில் அமைந்துள்ள முக்கியமான புனிதத் தலமாகும். கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் பிற பகுதிகளை ஒப்பிடுகையில் இங்கு பசுமைமாறாகாருகள் அல்லது சோலை காருகள் அதிகம் காணப்பருகின்றன. பல காபி தோட்டங்கள், பழங்கள், பூக்கள் மற்றும் மலை சவுக்குப் பண்ணைகள் இம்மலைப் பகுதியில் காணப்பருகின்றன.

**(v) பச்சை மலை**

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் உயரம்குறைந்த குன்றுத்தொடராக இது காணப்படுகின்றது. தமிழ் மொழியில் 'பச்சை' என்பது பசுமையைக் குறிக்கிறது. இம்மலைகளில் காணப்படும் தாவரங்கள் மற்ற பகுதியை விட பசுமையாக காணப்படுவதால் இது பச்சைமலை என அழைக்கப்படுகிறது. இம்மலைகளில் பலாப்பழம் ஒரு குறிப்பிடத்தக்க வேளாண் பருவ விளைபொருளாக உள்ளது.

**3. பீடபூமிகள்**

தமிழ்நாட்டிலுள்ள பீடபூமி மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடையே அமைந்துள்ளது. ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் சுமார் 60,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதன் உயரம் கிழக்கிலிருந்து மேற்காக உயர்ந்து செல்கிறது. இது கடல் மட்டத்திலிருந்து 150 மீட்டர் முதல் 600 மீட்டர் உயரம் வரை வேறுபட்டுக் காணப்படுகிறது. இதுவடக்கே அகன்றும் தெற்கே குறுகியும் பல உட்பிரிவுகளைக் கொண்டும் உள்ளது.

தமிழ்நாட்டின் வடமேற்கு பகுதியில் அமைந்திருக்கும் பாரமஹால் பீடபூமியானது மைசூர் பீடபூமியின் ஒரு பகுதியாகும். இதன் உயரம் சுமார் 350 மீட்டர் முதல் 710 மீட்டர் வரை காணப்படுகிறது. இந்தப் பீடபூமியில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் அமைந்துள்ளன.

கோயம்புத்தூர் பீடபூமியானது நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ளது. இதன் உயரம் 150 மீட்டர் முதல் 450 மீட்டர் வரை மாறுபடுகிறது. இப்பீடபூமி சேலம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் பரப்பளவு சுமார் 2560 சதுர கிலோமீட்டர்களாகும். மோயர் ஆறு இப்பீடபூமியை மைசூர் பீடபூமியில் இருந்து பிரிக்கிறது.

மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் பவானி, நொய்யல் மற்றும் அமராவதி ஆறுகள் இப்பீடபூமியில் பள்ளத்தாக்குகளை உருவாக்கி உள்ளன. நீலகிரி பகுதிகளில் பல மலையிடைபீடபூமிகள் காணப்படுகின்றன. சிகூர் பீடபூமி அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மதுரை பீடபூமி, மதுரை மாவட்டத்தில் காணப்படுகிறது. இது மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரம் வரை நீண்டுள்ளது. வைகை மற்றும் தாமிரபரணி வடிநிலப் பகுதிகள் இப்பகுதியில் அமைந்துள்ளன

**4. சமவெளிகள்**

தமிழ்நாட்டில் காணப்படும் சமவளிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. உள்நாட்டு சமவெளிகள்

2. கடற்கரை சமவெளிகள்

பாலாறு, பெண்ணையாறு, காவிரி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகள் உள்நாட்டு சமவெளிகளை உருவாக்கியுள்ளது. காவிரியாற்றுச் சமவெளி தமிழ்நாட்டிலுள்ள வளமான சமவெளிகளுள் ஒன்றாகும். காவிரி சமவெளியானது சேலம், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளது.

தமிழ்நாட்டின் கடற்கரைச் சமலவெளியானது கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) எனவும் அழைக்கப்படுகிறது. இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இச்சமவெளி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இவை 80 கிலோ மீட்டருக்கும் அதிகமான அகலத்துடன் காணப்பருகிறது. இது ஒரு உயரமான கடற்கரை என்றாலும் சில பகுதிகள் கடலில் மூழ்கி உள்ளன. இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் 'தேரி' என்று அழைக்கப்பருகிறது. கிழக்குக் கடற்கரைச் சமவெளிப் பகுதியில் உள்ள மன்னார்வளைகுடாவில் பவளப்பாறைகள் காணப்படுகின்றன .

**5. கடற்கரைகள்**

வங்காள விரிகுடாக் கடலையொட்டிய சோழமண்டலக் கடற்கரை பல அழகான மற்றும் சிறப்புவாய்ந்த கடற்கரைகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தங்க மணல் கடற்கரை பகுதியில் பனைமரங்களும், சவுக்குத்தோப்புகளும் பரவலாகக் காணப்படுகின்றன. சென்னையின் மெரினா மற்றும் எலியட் கடற்கரைகளும் கன்னியாகுமரியின் கோவளம் மற்றும் வெள்ளி கடற்கரைகளும் புகழ்பெற்ற தமிழக கடற்கரைகளாகும்.

**6. ஆறுகள்**

ஆறுகள் தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாகும். தமிழ்நாட்டில் பல ஆறுகள் காணப்பட்டாலும் காவிரி, பாலாறு, பெண்ணை, வைகை மற்றும் தாமிரபரணி போன்ற ஆறுகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். தமிழ்நாட்டின் பெரும்பாலான ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றன. தாமிரபரணி ஆற்றைத் தவிர மற்ற ஆறுகள் அனைத்தும் வற்றும் ஆறுகளாகும். தாமிரபரணி தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவமழை காலங்களிலும் மழைபெறுவதால் வற்றாத ஆறாக உள்ளது.

**(i) காவிரி**

காவிரி ஆறு கர்நாடகா மாநிலத்தில் கூர்க் மாவட்டத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரம்மகிரி குன்றுகளில் தலைக்காவிரி என்னும் இடத்தில் உற்பத்தியாகி தமிழ்நாட்டில் சுமார் 416 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாய்கிறது. இது கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றிற்கு இடையே சுமார் 64 கிலோ மீட்டர் தூரத்திற்கு எல்லையாக உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் என்னும் இடத்தில் நீர்வீழ்ச்சியை உருவாக்குகிறது. ஸ்டான்லி நீர்த்தேக்கம் என்று அழைக்கப்பரும் மேட்டூர் அணை சேலம் மாவட்டத்தில் இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் இருந்து சுமார் 45 கிலோமீட்டர்

தொலைவில் பவானி ஆறு இதன் துணையாறாக வலதுகரையில் காவிரியுடன் இணைகிறது. பின்னர் கிழக்கு நோக்கிப் பாய்ந்து தமிழ்நாட்டின் சமவெளிப்பகுதிக்குள் நுழைகிறது. கரூரில் இருந்து 10 கி.மீ தொலைவிலுள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் வலதுகரையில் மேலும் இரண்டு துணை ஆறுகளான அமராவதி மற்றும் நொய்யல் ஆறுகள் இணைகின்றன. இப்பகுதியில் ஆற்றின் அகலம் அதிகமாக இருப்பதால், இது "அகன்ற காவிரி' என அழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. வடகிளை கொலேருன் அல்லது கொள்ளிடம் என்றும் தென்கிளை காவிரியாகவும் தொடர்கிறது. இவ்விடத்திலிருந்து காவிரி டெல்டா சமவெளி தொடங்குகிறது.சுமார் 16கிலோமீட்டர்தொலைவிற்கு பாய்ந்த பின் மீண்டும் இவ்விரு கிளைகள் இணைந்து 'ஸ்ரீரங்கம் தீவை' உருவாக்குகின்றன. 'கிராண்ட் அணைகட்' என்றழைக்கப்படும் கல்லணை காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த ஆறு கல்லணையைக் கடந்த பின் பல கிளைகளாகப் பிரிந்து டெல்டா பகுதி முழுவதற்கும் ஒரு வலைப்பின்னல் அமைப்பை உருவாக்கி உள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் கிளை ஆறுகளால் உண்டாகியுள்ள இவ்வலைப்பின்னல் அமைப்பு 'தென்னிந்தியாவின் தோட்டம்' என்று அழைக்கப்படுகிறது. பின்னர் கடலூருக்கு தெற்கே வங்க கடலில் கலக்கிறது.

**(ii) பாலாறு**

பாலாறு கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் தலகவரா கிராமத்திற்கு அப்பால் உற்பத்தி ஆகிறது. இது சுமார் 17,871 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பாய்கிறது. இதில் 57% தமிழகத்திலும் மீதமுள்ள பகுதிகள் கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் உள்ளன. பொன்னி, கவுண்டினியா நதி, மலட்டாறு, செய்யாறு மற்றும் கிளியாறு ஆகியன பாலாற்றின் துணை ஆறுகளாகும். இவ்வாற்றின் மொத்த நீளம் 348 கிலோமீட்டர் ஆகும். இதில் 222 கி.மீ. தொலைவு தமிழ்நாட்டில் பாய்கிறது. இது வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாகப்பாய்ந்து, கூவத்தூருக்கு அருகே வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

**(iii) தென்பெண்ணையாறு / தென்பொருணையாறு**

இது கிழக்கு கர்நாடகாவின் நந்தி துர்கா மலைகளின் கிழக்கு சரிவுகளிலிருந்து உருவாகிறது. இதன் வடிநிலப்பரப்பு சுமார் 16019 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 77% தமிழ்நாட்டில் உள்ளது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, வேலூர், திருவண்ணாமலை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் வழியாக தென்கிழக்கு திசையில் சுமார் 247 கிலோ மீட்டர் நீளத்திற்கு இந்நதி பாய்கிறது.

கெடிலம் மற்றும் பெண்ணையாறு என இரண்டு கிளைகளாக திருக்கோவிலூர் அணைக்கட்டிற்கு அருகில் பிரிகிறது. கெடிலம் ஆறு கடலூருக்கு அருகிலும் பெண்ணையாறுபுதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு அருகிலும் வங்கக் கடலில் கலக்கின்றன. சின்னாறு, மார்க்கண்ட நதி, வாணியாறு மற்றும் பாம்பன் ஆறு ஆகியன முக்கிய துணை ஆறுகளாகும். இந்த ஆறு உற்பத்தியாகும் இடங்களில் கனமழை காரணமாக திடீர், குறுகியகால வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்துகிறது. இது தமிழ்நாட்டின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாக உள்ளது. ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி மற்றும் சாத்தனூர் நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பெண்ணையாறு இந்து சமய மக்களால் புனித நதியாகக்

கருதப்படுகிறது. மேலும் தமிழ் மாதமான தை மாதத்தில் இந்த ஆற்றுப் பகுதியில் (ஜனவரி, பிப்ரவரி) பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பருகின்றன.

**(iv)** வைகை வைகையாறு தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள வருச நாட்டு குன்றுகளின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகிறது. இதன் வடிநிலம் சுமார் 7741 ச. கி. மீ பரப்பளவைக் கொண்டது. இப்பரப்பளவு முழுவதும் தமிழகத்தில் அமைந்துள்ளது. இது மதுரை சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வழியாகப் பாய்கிறது. இதன் மொத்த நீளம் சுமார் 258 கிலோ மீட்டராகும். இவ்வாற்றின் நீரானது இராமநாதபுரத்தின் பெரிய ஏரி மற்றும் பல சிறிய ஏரிகளில் நிரப்பப்பட்டு பின் எரிகளிலிருந்து வெளியேறும் உபரி நீரானது இராமநாதபுரம் அருகில் உள்ள பாக் நீர்ச்சந்தியில் கலக்கிறது.

**(v)** தாமிரபரணி தாமிரபரணி எனும் பெயர் தாமிரம் (காப்பர்) மற்றும் வருணி (சிற்றோடைகள்) என்பதிலிருந்து பெறப்பட்டது. இவ்வாறுகளில் கரைந்திருக்கும் செம்மண் துகள்கள் காரணமாக இந்நதியின் நீரானது செந்நிறத் தோற்றத்துடன் காணப்படுகிறது.

தாமிரபரணி, அம்பாசமுத்திரம் வட்டம் பாபநாசத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையின் பொதிகை மலை முகருகளில் தோன்றுகிறது. இவ்வாற்றின் தோற்றம் அகத்திய முனிவரோடு தொடர்புடையதாகக் கருதப்பருகிறது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் வழியே பாய்ந்து இறுதியில் வங்கக் கடலில் கலக்கிறது. காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு, கடனா நதி, பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராமநதி ஆகியன இதன் முக்கிய துணை ஆறுகளாகும்.

**தமிழ்நாட்டின் மாவட்டங்கள் மற்றும் பாயும் முக்கிய ஆறுகள்**

| **மாவட்டம்** | **பாயும் ஆறு (கள்)** |
|---|---|
| சென்னை | கூவம், அடையாறு |
| திருவள்ளூர் | கூவம், ஆரணியாறு, கொடுதலையாறு |
| காஞ்சிபுரம் | பாலாறு, அடையாறு, செய்யாறு |
| திருவண்ணாமலை | தென்பெண்ணை, செய்யாறு |
| வேலூர் | பாலாறு, டொன்னியாறு |
| விழுப்புரம் | கோமுகி ஆறு, பெண்ணாறு |
| கடலூர் | தென்பெண்ணை, கெடில ஆறு |
| நாகப்பட்டினம் | வெண்ணாறு, காவிரி, வெட்டாறு |
| திருவாரூர் | காவிரி, குடமுருட்டி, பாமணியாறு |
| தஞ்சாவூர் | காவிரி, கொள்ளிடம், குடமுருட்டி பாமணியாறு |
| பெரம்பலூர் | கொள்ளிடம் |
| திருச்சிராப்பள்ளி | காவிரி, கொள்ளிடம் |
| நாமக்கல் | காவிரி, நொய்யல், உப்பாறு |
| சேலம் | காவிரி, வசிட்டா நதி |

| | |
|---|---|
| தர்மபுரி | காவிரி, தென்பெண்ணை, தொப்பையாறு |
| கிருஷ்ணகிரி | தென்பெண்ணை, தொப்பையாறு |
| ஈரோடு | காவிரி, நொய்யல், பவானி, அமராவதி |
| கோயம்புத்தூர் | அமராவதி, சிறுவாணி |
| கரூர் | அமராவதி, நொய்யல் |
| திண்டுக்கல் | மருதா ஆறு, சண்முகா ஆறு |
| மதுரை | வைகை, பெரியாறு |
| தேனி | வைகை, சுருளியாறு, மஞ்சளாறு, பெரியாறு |
| விருதுநகர் | கௌசிக ஆறு, குண்டாறு, வைப்டாறு, அர்ஜுனா |

நன்றி : நக்கீரன் இயர்புக்

**தமிழ்நாட்டின் முக்கிய நீர்விழ்ச்சிகள்**

| மாவட்டங்கள் | நீர்விழ்ச்சிகள் |
|---|---|
| தர்மபுரி | ஒகேனக்கல் |
| திருநெல்வேலி | கல்யாண தீர்த்தம் மற்றும் குற்றாலம் |
| தேனி | கும்பக்கரை மற்றும் சுருளி |
| நாமக்கல் | ஆகாய கங்கை |
| நீலகிரி | கேத்தரின், பைக்காரா |
| சேலம் | கிள்ளியூர் |
| விருதுநகர் | ஐயனார் |
| கோயம்புத்தூர் | வைதேகி, செங்குபதி, சிறுவாணி மற்றும் கோவை குற்றாலம் |
| திருப்பூர் | திருமூர்த்தி |
| மதுரை | குட்லாடம்பட்டி |
| கன்னியாகுமரி | திருப்பரப்பு, காளிகேசம், உலக்கை மற்றும் வட்டப்பாறை |

### 7. காலநிலை

தமிழ்நாடு கடகரேகைக்கு தெற்கேயும் பூமத்தியரேகைக்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. சூரியனின் செங்குத்து கதிர்களினால் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் அதிக அளவில் காணப்படுகிறது.

தமிழகம் வெப்பமண்டல காலநிலை மண்டலத்தில் அமைந்திருந்தாலும் கிழக்கு கடற்கரைப்பகுதி வெப்பமண்டல கடல் காலநிலையைப் பெறுகிறது. இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக்கடல் இரண்டும் கடற்கரையோர காலநிலையில் தாக்கத்தினை ஏற்பருத்துகின்றன. தமிழ்நாட்டின் வெப்பநிலை 18" 0 முதல் 43 0 வரையிலும் அதன் சராஜி மழை அளவு 958.5 மி. மீட்டராகவும் உள்ளது. கிழக்கு கடற்கரை பகுதியில் வவப்பமண்டலக் கடல் ஆதிக்க காலநிலையும் அதேவேளையில் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் மலைப்பாங்கான காலநிலையும் நிலவுகிறது. இக்காலநிலை நீலகிரி மலை, ஆனைமலை மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் நிலவுகிறது.

அடர்ந்த காடுகள் மற்றும் உயரம் ஆகியவை இப்பகுதிகளில் இதமான குளிர் காலநிலையைத் தருகிறது. இக்காலநிலை நிலவும் மலை வாழிடங்கள் கோடை பருவத்தில் ஆயிரக்கணக்கான மக்களை ஈர்க்கின்றன. ஆனால் தமிழகத்தின் மத்திய பகுதிகள் குறைந்த உயரமும் கடலிலிருந்து விலகியும் இருப்பதால் அதிக வெப்பநிலை மற்றும் வறண்ட காலநிலை நிலவுகிறது.

**தமிழ்நாட்டின் பருவ காலங்கள்**

| பருவம் | தமிழ் பருவம் | தமிழ் மாதங்கள் |
|---|---|---|
| கோடை காலம்<br>(ஏப்ரல் – ஆகஸ்டு) | இளவேனில் காலம்,<br>முதுவேனில் காலம் | சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி |
| மழைக்காலம்<br>(ஆகஸ்டு – டிசம்பர்) | கார்காலம்<br>குளிர்காலம் | ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை |
| குளிர்காலம்<br>(டிசம்பர் – ஏப்ரல்) | முன்பனி காலம்<br>பின்பனி காலம் | மார்கழி, தை, மாசி, பங்குனி |

**பருவகாலம் மற்றும் ஆண்டு மழைப்பொழிவு விகிதம்**

| **பருவகாலம்** | **ஆண்டு மழைப்பொழிவு விகிதம்** |
|---|---|
| தென் மேற்கு பருவக் காற்றுக்காலம்<br>(ஜீன் – செப்டம்பர்) | 22 % |
| வடகிழக்கு பருவக்காற்றுக் காலம்<br>(அக்டோபர் – நவம்பர்) | 57% |
| சூறாவளி மழைப்பொழிவு காலம்<br>(நவம்பர்) | 21% |

### பகுதி வாரியாக பருவகாலங்களில் வெப்பத்தின் அளவு

| வ. எண் | புவியியல் அமைவிடம் | வானிலை நிலையங்கள் | வெப்பத்தின் அளவு செல்சியஸில் | | |
|---|---|---|---|---|---|
| | | | கோடை காலம் | குளிர் காலம் | மழைக் காலம் |
| 1 | கடலோரப்பகுதி | சென்னை | 40°செ | 22°செ | 25°செ |
| 2 | உள்நாட்டுச் சமவெளி | வேலூர் | 42°செ | 21°செ | 22°செ |
| 3 | உள்நாட்டுப் பகுதி | திருச்சி | 42°செ | 20°செ | 23°செ |
| 4 | மலைப் பகுதி | கொடைக்கானல் | 11°செ | 6°செ | 14°செ |
| 5 | பீட பூமி | கோயம்புத்தூர் | 32°செ | 26°செ | 21°செ |

**(i) குளிர்காலம்**

ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சூரியனின் செங்குத்துக்கதிர்கள் பூமத்திய ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே விழுகிறது. இக்காலத்தில் தமிழ்நாரு உள்பட இந்தியா முழுவதும் சாய்வான கூரியக்கதிர்களைப் பெறுகிறன்றன. ஆதலால் இம்மாதங்களில் காலநிலை சற்று குளிராகக்காணப்பருகிறது. கோடைக்காலம்மற்றும் குளிர்காலத்திற்கு இடையேயான வெப்பநிலை வேறுபாருகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. தமிழகத்தில் குளிர்கால வெப்பநிலையானது 15*c முதல் 25*c வரை மாறுபடுகிறது. இருந்தபோதிலும் மலைவாழிடங்களில் குளிர்கால வெப்பநிலையானது சில நேரங்களில் 55*c க்கும் குறைவாக உள்ளது. நீலகிரியில் சில பள்ளத்தாக்குகளில் வெப்பம் 0*c ஆகவும் பதிவாகிறது. இக்குறைந்த வெப்பநிலை அடர் மூருபனி மற்றும் மூரபனி உருவாகக் காரணமாகிறது. இப்பருவத்தில் வறண்ட வானிலையே நிலவுகிறது

**(ii) கோடைக்காலம்**

சூரியனின் வடக்கு நோக்கிய நகர்வு மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிகழ்வதால் சூரியனின் செங்குத்துக் கதிரானது தென்னிந்தியாவில் விழுகிறது. ஆகையால் பூமத்திய ரேகையிலிருந்து வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிக்கிறது. தமிழகம், கடகரேகைக்கு தென்பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வவெப்பநிலையைப் பெறுகின்றது. பொதுவாக வெப்பநிலையானது 30% லிருந்து 40% வரை வேவறுபருகிறது. இப்பருவத்தில் குறிப்பாக மே மாதத்தில் தமிழகத்தின் தென்பகுதி முன் பருவமழை மூலமும், வெப்பச்சலனம் மூலமும் மழையைப் பெறுகிறது.

**(iii) தென்மேற்கு பருவக்காற்று**

மார்ச் முதல் மே மாதம் வரை சூரியனின் செங்குத்து கதிர்களால் வட இந்திய நிலப்பரப்பு அதிக வெப்பத்தைப் பெறுகிறது. இதனால் வட இந்திய பகுதிகளில் குறைந்த அழுத்தம் உருவாகுகிறது. இச்சமயத்தில் காற்றானது அதிக காற்றழுத்தம் உள்ள இந்தியப் பெருங்கடலிலிருந்து வடக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்கு பருவக்காற்று உருவாக

காரணமாகிறது. இப்பருவத்தில் அரபிக் கடலிலிருந்து வீசும் தென்மேற்கு பருவக்காற்றின் மழைமறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால் மிகக் குறைவான மழைப்பொழிவையேப் பெறுகிறது . இப்பருவத்தின் மழைப் பதிவு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறைகிறது. கோயம்புத்தூர் பீடபூமி சராசரியாக 50 செமீ மழையைப் பெறுகிறது. எனினும் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. மாநிலத்தின் கிழக்குப் பகுதிகள் மிகக் குறைவான மழைஅளவைப் பெறுகின்றன.

**(iv) வடகிழக்கு பருவக்காற்று**

வட கிழக்கு பருவக்காற்று அக்டோபர் முதல் டிசம்பர் மாதத்தின் முதல் பாதி வரை நீடிக்கிறது. மத்திய ஆசியா மற்றும் வட இந்திய பகுதிகளில் உருவாகும் அதிக அழுத்தம், வடகிழக்கு பருவக்காற்று உருவாக காரணமாகிறது. இப்பருவத்தில் சூரியன் கடகரேகையிலிருந்து மகர ரேகைக்குச் செல்வதால் வெப்பநிலை மற்றும் காற்றழுத்தத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் வட இந்தியாவிலிருந்து வங்கக் கடலை நோக்கி காற்று வீசுகிறது. வங்கக் கடலை வந்தடையும் போது இக்காற்று கொரியாலிஸ் விசை காரணமாக மஸ்மியின் சுழற்சியால் ஏற்படும் விசை) திசை விலக்கப்பட்ரு வடகிழக்கு திசையிலிருந்து வீசுகிறது. ஆகையால் இக்காற்று வடகிழக்கு பருவக் காற்று என்று அழைக்கப்பருகிறது. வடகிழக்கு பருவக் காற்றானது திரும்பிவரும் தென் மேற்கு பருவக் காற்றின் ஒரு பகுதியாதலால் இக்காற்றைப் 'பின்னடையும் பருவக்காற்று' என்றும் அழைப்பர். இப்பருவம் தமிழ்நாட்டின் மழைக்காலமாகும். தமிழ்நாட்டின் வருடாந்திர மழையளவில் 48% இப்பருவத்தில் கிடைக்கிறது. இப்பருவத்தில் கடற்கரை மாவட்டங்கள் 60 சதவீதமும் உள்மாவட்டங்கள் 40 முதல் 50 சதவீதம் வரையிலான வருடாந்திர மழையையும் பெறுகின்றன.

பொதுவாக இப்பருவத்தில் வெப்ப மண்டல சூறாவளிகள் உருவாகின்றன. வங்கக் கடலில் உருவாகின்ற சூறாவளிகள் தமிழ்நாட்டின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் மிக கனத்த மழையைத் தோற்றுவிக்கின்றன. தமிழ்நாட்டின் 50 சதவிகித மழை வெப்ப மண்டல சூறாவளி மூலம் கிடைக்கிறது இப்பருவத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் 100 முதல் 200 செ.மீ. வரை மழையைப் பெறுகின்றன. மத்திய மற்றும் வடமேற்கு தமிழகம் 50 முதல் 100 செ.மீ வரை மழையைப் பெறுகின்றன. இச்சூறாவளி காற்றுகள் சில நேரங்களில் பயிர்கள், உயிர் மற்றும் உடமைகளுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துகின்றன.

**தமிழகத்தின் வெப்பநிலை**

| பகுதி | குறைந்த பட்சம் | அதிகபட்சம் |
|---|---|---|
| மலைப்பகுதிகள் | 11*C | 26*C |
| சமவெளிப்பகுதிகள் | 21*C | 36*C |
| கடலோரப்பகுதிகள் | 22*C | 42*C |

www.portalacademy.in

தமிழ்நாட்டில் மழைப்பொழிவின் பரவல் (2007-2008)

| வ.எண் | மழைப் பொழிவின் பரவல் | மழைப் பொழிவின் அளவு | மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மிக குறைவான மழைப் பொழிவு | 800 மி. மீக்கு கீழ் | கோயம்புத்தூர் |
| 2 | குறைவான மழைப் பொழிவு | 800 மி. மீ முதல் 1000 மி. மீ. வரை | நாமக்கல், கரூர், தூத்துக்குடி, ஈரோடு, தருமபுரி, மதுரை, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி |
| 3 | மிதமான மழைப் பொழிவு | 1000 மி. மீ. முதல் 1200 மி. மீ. வரை | புதுக்கோட்டை, விருதுநகர், சிவகங்கை, தஞ்சாவூர், சேலம், இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி, வேலூர். |
| 4 | அதிக மழைப் பொழிவு | 1200 மி. மீ. முதல் 1400 மி. மீ. வரை | திருநெல்வேலி, திருவண்ணாமலை, கன்னியாகுமரி |
| 5 | மிக அதிக மழைப் பொழிவு | 1400 மி. மீ.க்கு மேல் | காஞ்சிபுரம், சென்னை, விழுப்புரம், திருவள்ளூர், திருவாரூர், கடலூர், நாகப்பட்டினம், நீலகிரி |

## தமிழ்நாட்டின் நிலப்பயன்பாடு

| வ.எண் | வகைப்பாடு | பரப்பு/ஹெக்டேர் | % |
|---|---|---|---|
| 1 | காடுகள் | 21,10,703 | 16.2 |
| 2 | உபயோகமற்ற நிலங்கள் | 5,03,255 | 3.9 |
| 3 | விவசாயம் அல்லாத நிலங்கள் | 21,38,679 | 16.4 |
| 4 | உபயோகத்திலுள்ள நிலங்கள் | 3,68,661 | 2.8 |
| 5 | நிரந்தர மேய்ச்சல் நிலங்கள் | 1,10,309 | 0.8 |
| 6 | நிரக விளை நிலத்தோடு சேர்க்கள்படாத மரங்கள், பயிர்கள், மற்றும் புதர்ச் செடிகள் | 2,74,351 | 2.1 |
| 7 | நடப்பு தரிசு நிலம் | 7,58,840 | 5.8 |
| 8 | மற்ற தரிசு நிலம் | 15,18,008 | 11.7 |
| 9 | நிகர விளை நிலம் | 52,43,839 | 40.3 |
| | புவியியல் பரப்பு | 1,30,26,645 | 100.0 |

## தமிழ்நாட்டில் மண் வகைகள் மற்றும் பரவல்

| வ.எண் | மண்வகை | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | வண்டல் மண் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், கடலூர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி. |
| 2 | கரிசல் மண் | கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி |
| 3 | செம்மண் | சிவகங்கை, இராமநாதபுரம் |
| 4 | லேட்டரைட் | காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்கு தொடர்ச்சியின் மலை உச்சி |
| 5 | உவர் மண் | வேதாரண்யத்தின் பெரும்பான்மைப் பகுதி, சோழமண்டலக் கடற்கரை மற்றும் ஒவ்வொரு கடலோர மாவட்டங்களில் சுமார் 10 கி. மீ. பரப்பிலான கடலோரப் பகுதி. |

### தமிழ்நாட்டில் வேளாண்மை

தமிழ்நாட்டில் வேளாண் வகை மற்றும் பயிரிடப்படும் பகுதிகள்

- தீவிர தன்னிறைவு பகுதிகள் - தமிழ்நாட்டில் சிலபகுதிகள் தவிர்த்து அனைத்து பகுதிகளிலும்
- தோட்ட வேளாண்மை - மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைச்சரிவுகள்
- கலப்பு வேளாண்மை - காவிரி மற்றும் தென்பெண்ணை ஆற்றுப்படுகைகள்

### தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் " செயல்பட்டுவரும் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் நெல் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் ஓர் இந்திய நிறுவனமாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை என்னுமிடத்தில் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் இப்பகுதியிலுள்ள கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நெல் சாகுபடி மற்றும் உற்பத்தி முறை குறித்த ஆராய்ச்சிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

### தமிழ்நாட்டின் வேளாண் பருவகாலங்கள்

வெப்பநிலை மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் பருவகாலத்திற்கு ஏற்ற பல்வேறு வகையான பயிர்களைப் பயிரிருகிறார்கள். மாநிலத்தின் வேளாண் பருவகாலங்கள் பின்வருமாறு:

| பருவம் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் | முக்கிய பயிர்கள் |
|---|---|---|---|
| சொர்ணவாரி (சித்திரைப் பட்டம்) | ஏப்ரல் – மே | ஆகஸ்டு – செப்டம்பர் | பருத்தி மற்றும் தினை வகைகள் |
| சம்பா (ஆடிபட்டம்) | ஜூலை – ஆகஸ்டு | ஜனவரி – பிப்ரவரி | நெல் மற்றும் கரும்பு |
| நவரை | நவம்பர் – டிசம்பர் | பிப்ரவரி – மார்ச் | பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி |

### நெல் பயிர் சாகுபடி

தமிழ்நாட்டின் முக்கியமான உணவுப்பயிர் நெல் ஆகும். பொன்னி மற்றும் கிச்சடி சம்பா தமிழகத்தில் பயிரிடப்படும் முக்கிய நெல் வகைகளாகும். மாநிலத்தில் ஏறத்தாழ 3 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்படுகிறது, இப்பயிர் தமிழகம் முழுவதும் பயிரிடப்பட்டாலும் தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்பருகிறது. நெல் உற்பத்தி செய்யும் இந்திய

மாநிலங்களில் தமிழகம் மூன்றாம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதி அதிக நெல் உற்பத்தி செய்யும் பகுதியாகும். (பிரிக்கப்படாத தஞ்சாவூர்) எனவே இப்பகுதி தமிழ்நாட்டின் "நெற்களஞ்சியம்" என்றழைக்கப்படுகிறது.

**தினை வகைகள்**

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு பகுதியினரின் முக்கியமான உணவு தினை வகைளாகும். சோளம், கேழ்வரகு மற்றும் கம்பு ஆகியன முக்கிய தினைப் பயிர்களாகும். இவ்வகை பயிர்கள் வறண்ட பிரதேசங்களில் மட்டுமல்லாமல் கடற்கரைச் சமவெளிகளிலும் விளைகின்றன. கோயம்புத்தூர் பீடபூமியிலும், கம்பம் பள்ளத்தாக்கிலும் சோளம் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கம்பு பயிரிடப்படுகிறது.

**பருப்பு வகைகள்**

பருப்பு வகைகள் புரதச்சத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளன. கொண்டைக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு, துவரம்பருப்பு, தட்டைப்பயறு மற்றும் கொள்ளு ஆகியன தமிழ் நாட்டில் விளையும் முக்கிய பருப்பு வகைகளாகும். பருப்பு வகைகள் காலநிலைக்கு ஏற்றாற் போல் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. வறண்ட நிலப்பகுதிகளில் நீர்ப்பாசன வசதியுடனோ அல்லது நீர்பாசனமின்றியோ பயிரிடப்படுகின்றன. மிதமான குளிர்கால நிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு இங்கு பயிரிட உகந்த சூழல்களாகும். பருப்பு வகைகள் கால்நடைகளுக்கு மிகச்சிறந்த தீவனமாக உள்ளன. சென்னை, நீலகிரி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைக் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் கொண்டக்கடலை உற்பத்தியில் மாநிலத்தில் முதன்நிலை வகிக்கிறது வேலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் துவரம் பருப்பை கூருதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் அதிக அளவில் பச்சைப் பயறு மற்றும் உளுந்து ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கொள்ளுப் பயிர் கூருதலாக பயிரிடப்படுகிறது.

**எண்ணெய் வித்துக்கள்**

நிலக்கடலை, எள், ஆமணக்கு, தென்னை, சூரியகாந்தி மற்றும் கருகு ஆகியன தமிழ் நாட்டில் பயிரிடப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் ஆகும். உணவுப் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல் தொழிலகங்களில் மசகு எண்ணெய், மெருகு எண்ணெய் பொருட்கள், சோப்பு, மெழுகுவர்த்தி, அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும் இவைப் பயன்படுகின்றன.நிலக்கடலை, மாநிலத்தின் முக்கிய எண்ணம் வித்துப் பயிராகும். வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலக்கடலை உற்பத்தியானது செறிந்து காணப்படுகிறது. தர்மபுரி, கடலூர், பெரம்பலூர், மதுரை, ஈரோடு, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இவை சிறிய அளவில் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர்

### கரும்பு

கரும்பு தமிழ்நாட்டின் முக்கியமான வாணிபப் பயிராகும். இது ஓராண்டு பயிராகும். இதற்கு அதிக வெப்பநிலை மற்றும் அதிகமழைப் பொழிவும் தேவைப்படுகிறது. இது வெப்பமண்டல பிரதேசங்களில் நன்கு வளரக்கூடியவை. திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு ஆகியன கரும்பு பயிரிடும் மாவட்டங்களாகும்.

### பருத்தி

பருத்தி ஓர் இழைப்பயிர் மற்றும் வாணிபப் பயிராகும். கரிசல்மண், நீண்ட பனிப்பொழிவற்ற காலம், மித வெப்பம் மற்றும் ஈரப்பத வானிலை ஆகியவை பருத்தி பயிரிடுவதற்கு உகந்தவையாகும். பருத்தி வளரும் காலத்தில் ஈரப்பத காலநிலையும், அறுவடை காலத்தில் வறண்ட காலநிலையும் பயிருக்கு ஏற்றதாகும். கோயம்புத்தூர் பீடபூமி பகுதியிலும், வைகை மற்றும் வைப்பாறு ஆற்றுவடிநிலப் பகுதிகளிலும் பருத்தி பயிரிடப்பருகின்றது. மதுரை, இராமநாதடரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களிலும் இவைப் பயிரிடப்படுகின்றது.

### தோட்டப்பயிர்கள்

தேயிலை, காபி, இரப்பர், முந்திரி மற்றும் சின்கோனா ஆகியன மாநிலத்தின் முக்கிய தோட்ட முக்கிய தோட்டப் பயிர்களாகும். இந்தியாவில் அசாம் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது. நீலகிரிமலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்பருகின்றன. மேற்குதொடர்ச்சிமலைகள்மற்றும் கிழக்குதொடர்ச்சி மலைகளில் காபிபயிரிடப்படுகின்றது நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சவுகளில் காபி குறிப்பிடத்தகுந்த அளவில்பயிரிடப்படுகிறது திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள மலைச் சரிவுகளிலும் காபி பயிரிடப்படுகின்றது காபி உற்பத்தியில் கர்நாடகா மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது. இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிக அளவில் காணப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலைகளின் சரிவுகள் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது. கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகிறது.

ஏறத்தாழ 1,060 மீட்டர் முதல் 14,280 மீட்டர் உயரம் வரை உள்ள ஆனைமலைப் பகுதிகளில் சின்கோனா பயிரிடப்படுகின்றது. ஏறத்தாழ 915 மீட்டர் முதல் 1,525 மீட்டர் வரை உள்ள மதுரையைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் ஏலக்காய் தோட்டங்கள் காணப்படுகின்றன.

### தமிழ் நாட்டில் கால்நடை வளப்பு

கால்நடை வளர்ப்பு என்பது ஊரக மக்களின் சமூக பொருளாதாரத்தின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 88,92,473 கால்நடைகள் உள்ளன. மேலும்

47,86,6650 செம்மறியாருகள், 81,43,341 வெள்ளாடுகள் மற்றும் 11,73,28,894 பண்ணை வளர்ப்புப் பிராணிகள் வளர்க்கப்படுகின்றன.

**கடல் மீன் பிடிப்பு**

தமிழ்நாட்டு கடற்கரையின் நீளம் 1,076 கிலோமீட்டராகும் (நாட்டின் கடற்கரையில் 13 சதவீதம்) மாநிலத்தின் கடற்கரை பகுதி 019 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவை உடையது. ஏறத்தாழ 41,412 சதுர கிலோமீட்டர் பரப்பளவு 'கண்டத்திட்டு' உள்ளதால் கடற்கரை மீன்பிடிப்புக்கு சாதகமாக உள்ளது. தமிழ்நாடு 'கடல் மீன்' உற்பத்தியில் முதன்மையான மாநிலங்களுள் ஒன்றாக உள்ளது. மீன்பிடித்தலுக்கு பெரிய மற்றும் இயந்திரப் படகுகள் பயன்படுத்தப்பருகின்றன.

பெருங்கடல் அல்லது கடற்கரையில் இருந்து சில கிலோமீட்டர் தூரம் வரை மீன்பிடித்தல் 'கடலோர மீன்பிடிப்பு என அழைக்கப்படுகிறது. கடற்கரையில் இருந்து பொதுவாக 20 முதல் 30 மைல்கள் தூரம் வரையிலும், பல 100 அல்லது 1000க்கும் மேற்பட்ட அடிகள் ஆழத்தில் மீன்பிடித்தல் நடக்கிறது இது ஆழ்கடல் மீன்பிடிப்பு என அழைக்கப்பருகிறது. சுறா, பறவை மீன், சங்கு மீன், கெளுத்தி, வெள்ளி வயிறு மீன் போன்ற மீன் வகைகள் மற்றும் நண்டு வகைகள் இங்குப் பிடிக்கப்படுகின்றன. சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 40% சதவீதம் பங்களிப்பைத்தருகின்றன. கடற்கரையின் அமைவிடம் இப்பகுதிகளில் மீன் பிடித்தலுக்கு சாதகமாக உள்ளன.தமிழ்நாடானது மூன்று முக்கிய மீன்பிடித் துறைமுகங்கள், மூன்று இடைநிலை மீன்பிடித்துறைமுகம் மற்றும் 363 மீன்பிடித் தளங்களைக் கொண்ருள்ளது. 2017 - 2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் கடல் பொருட்களின் ஏற்றுமதி 72,644 மெட்ரிக் டன்கள் ஆகும்.

**உள்நாட்டு மீன்பிடிப்பு**

ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சதுப்புநிலப்பகுதி போன்ற நீர் நிலைகளில் உள்நாட்ரு மீன் பிடித்தல் நடைபெறுகிறது. சிப்பிகள் மற்றும் இறால்கள் மீன் பண்ணைகளில் வளர்க்கப்பருகின்றன. கட்ருமரம், டீசல் படகுகள் மற்றும் மீன் வலைகளைப் பயன்பருத்தி மீன்பிடித்தல் நடைபெறுகிறது. மீன்பிடித்தலை மேம்படுத்துவதற்காக தமிழ்நாரு மீன் வளத்துறை பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. பண்ணைக் குளங்கள் மற்றும் நீர்பாசன ஏரிகளில் மீன் வளர்ப்பு, மீன்குஞ்சுகள் பொறிப்பகம், மீன் குளவு வளர்ப்பகம், அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மீன் வேளாண்மேம்பாட்டு நிறுவனம் போன்றவை இந்நிறுவனத்தின் முக்கிய திட்டங்களாகும். மாநில உள்நாட்டு மீன் உற்பத்தியில் வேலூர் மாவட்டம் 10 சதவீத உற்பத்தியுடன் முன்னிலையில் உள்ளது. கடலூர், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் தலா 9 சதவீத உள்நாட்ரு மீன் உற்பத்தி செய்து மாநிலத்தில் இண்டாம் இடத்தில் உள்ளன. மாநிலப் பொருளாதாரத்தில் மீன் பிடித் துறையானது 1.25% சதவீதம் பங்களிப்பைச் செய்கிறது.

**தமிழ்நாட்டின் நீர் வளங்கள்**

இந்தியப் பரப்பளவில் 4 சதவீதத்தையும் மக்கள் தொகையில் 6 சதவீதத்தையும் கொண்ருள்ள தமிழ்நாடு, இந்திய நீர் வளத்தில் 2.5 சதவீதத்தை மட்டுமே பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீரில் 95 சதவீதத்திற்கு அதிகமாகவும் மற்றும் நிலத்தடி நீரில் 80 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் ஏற்கனவே பயன்பாட்டிலிருந்து வருகிறது.

## தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்கள்

| மேற்பரப்பு நீர்வள ஆதாரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| ஆற்று வடிநிலம் | 17 |
| நீர்த்தேக்கங்கள் | 81 |
| ஏரிகள் | 41,127 |
| ஆழ்துளை கிணறுகள் மற்றும் மற்ற கிணறுகள் | 4,98,644 |
| திறந்தவெளி கிணறுகள் | 15,06,919 |
| மொத்தம் | 20,46,788 மி.க.மீ |
| (ஆதாரம்–2017 தமிழ்நாடு புள்ளியியல் கையேடு) | |

அதிகளவு நீரானது மக்கள் மற்றும் விலங்குகளின் நுகர்வு, நீர்ப்பாசனம் மற்றும் தொழிலகப் பயன்பாருகளுக்கு பயன்பருத்தப்பருகிறது. தமிழகம் பருவமழையைச் சார்ந்தே உள்ளது. தமிழகத்தின் ஆண்ரு சராசரி மழையளவு ஏறத்தாழ 930 மில்லி மீட்டர் ஆகும். (வடகிழக்கு பருவக்காற்று காலத்தில் 47%மும், தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் 35%மும், கோடைகாலத்தில் 14%மும், குளிர் காலத்தில் 4%மும் மழைப்பொழிவு பெறுகின்றது).

### மேட்டூர் அணை

காவிரி ஆறு சமவெளியில் நுழையும் இடத்திற்கு முன்னுள்ள மலையிருக்குப் பகுதியில் மேட்டூர் அணை கட்டப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மிகப் பழமையான அணைகளில் ஒன்றாகும். இது சேலம், ஈரோரு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 2,71000 ஏக்கர் விளை நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கிறது. மேலும் இவ்வணையின் அமைப்பு பூங்கா, நீர் மின் நிலையம் மற்றும் இவ்வணையைச் கழ்ந்துள்ள மலைப்பகுதிகள் ஆகியவை ஒரு முக்கிய சுற்றுலாத்தலமாகும்.

### பவானி சாகர் அணை

ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள பவானி சாகர் அணை, கோயம்புத்தூர் நகரிலிருந்து ஏறத்தாழ 80 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணை நாட்டின் மண்-கல் கலவையால் கட்டப்பட்ட மிகப்பெரிய அணைகளுள் ஒன்றாகும்.

அமராவதி அணை அமராவதி அணை, திருப்பூர் மாவட்டத்தில் உருமலைப் பேட்டையில் இருந்து ஏறத்தாழ 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வணை காவிரி யின் துணையாறான அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இவ்வணை நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டை முதன்மை நோக்கமாகக் கொண்டது. அண்மையில் ஒரு சிறிய நீர் மின் நிலையமும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்தில் பெரும் எண்ணிக்கையிலான சதுப்பு நில (சீங்கன்னி) முதலைகள் காணப்படுகின்றன. இது ஒரு பிரபலமான சுற்றுலாத்தலமாகும்.

கிருஷ்ணகிரி அணை கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரியிலிருந்து 7 கி.மீ தொலைவில் தர்மபுரிக்கு செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் 5,428 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்குப் பாசனவசதியை அளிக்கிறது. இதுவும் ஒரு பிரசித்திபெற்ற சுற்றுலாத்தலமாகும். இவ்வணை வார இறுதி நாட்களில் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி காணப்படுகிறது.

**சாத்தனூர் அணை**

சாத்தனூர் அணை செங்கம் தாலுகாவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ளது. இது சென்னகேசவ மலையின் நடுவே அமைந்துள்ளது. இவ்வணையின் நீர்க்கொள்ளளவு திறன் 7,321 மில்லியன் கன அடிகள் (முழு அளவு 119 அடிகள்) ஆகும். ஏறத்தாழ 7183 ஹெக்டேர் விளைநிலங்கள் இடதுகரை கால்வாய்கள் மூலமும், 905 ஹெக்டேர் நிலப் பகுதி வலதுகரைக் கால்வாய்கள் மூலமும் பாசன வசதியைப் பெறுகின்றன. தண்டராம்பட்டு மற்றும் திருவண்ணாமலை ஒன்றியங்கள் இதன்மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெறுகின்றன. இங்குப் பெரிய முதலைப்பண்ணையும் வண்ணமீன் பண்ணையும் அமைந்துள்ளன. சுற்றுலா பயணிகளுக்காக அணையின் உள்ளே பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்குள்ள பூங்காக்கள் திரைப்படப் படப்பிடிப்புக்குப் பயன்படுத்தப்பருகின்றன.

**முல்லைப்பெரியாறு அணை**

முல்லைப்பெரியாறு அணை 1895 ஆம் ஆண்ரு ஆங்கிலேயர்கள் நிர்வாகத்தால் கட்டப்பட்டது. கோளாவில், தேக்கடி மலையில் உருவாகும் பெரியாறு ஆற்றின் குறுக்கேக் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிரந்தரமாக வறட்சிக்குள்ளாகும் சில வேளாண் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் அளிப்பதற்காக இவை கட்டப்பட்டது. இவ்வணை கேரள மாநிலத்தில் அமைந்திருந்தாலும் இதன் நீர் அதிகமாக தமிழ்நாட்டிற்குப் பயன்பருகிறது. இவ்வணை 175 அடி உயரம் மற்றும் 1,200 அடி நீளம் கொண்டதாகும். 7.6.8 வைகை அணை ஆண்டிப்பட்டிக்கு அருகே வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. 111 அடி உயரம் கொண்ட இவ்வணையில் 71 அடி உயரம் மட்டுமே நீரை சேமிக்க முடியும். இவ்வணை மதுரையிலிருந்து 70 கி.மீ தூரத்திலும் ஆண்டிப்பட்டியிலிருந்து 7 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. இவ்வணை 1959 ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் நாள் திறக்கப்பட்டது. இங்கு அமைந்துள்ள தோட்டம் "சிறிய பிருந்தாவனம்" என்ற பெயரில் அழைக்கப்பருகிறது. தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த அணை ஒரு பிரபலமான சுற்றுலாத் தலமாகும். 7.6.9 மணிமுத்தாறு அணை திருநெல்வேலி நகரிலிருந்து ஏறத்தாழ 47கி.மீ தொலைவில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்டுள்ளது. இவ்வணையிலிருந்து ஏறத்தாழ 5கி.மீ தூரத்தில் அழகிய வண்ணமயமான பூங்கா அமைக்கப்பட்ருள்ளது. இந்த அணைக்கு வளைந்து

நெளிந்து செல்லும் மலைப்பாதை வழியாக செல்லும் படகு சவாரி மற்றும் நீர்விழ்ச்சிகள் இவ்வணை அருகே காணப்படும் சுற்றுலா சார்ந்த சிறப்பம்சங்களாகும்.

**பாபநாசம் அணை**

திருநெல்வேலியிலிருந்து 49கிமீ தொலைவில் அமைந்துள்ள பாபநாசம் அணை 'கரையார் அணை என்றும் அழைக்கப்பருகிறது. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 34861 ஹெக்டேர் நிலங்கள் இதன் மூலம் பாசன வசதியைப் பெறுகின்றன. இந்த அணையில் ஏறத்தாழ 28 மெகாவாட் நீர் மின்சக்தி உற்பத்தி செய்யப்பருகிறது.

**பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்**

இது தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது. பரம்பிக்குளம் மற்றும் ஆழியாறு பகுதியில் உள்ள எழு ஆறுகளின் நீரினைப் பெற்று அங்குள்ள எழு நீர்த்தேக்கங்களையும் ஒன்றோடொன்று இணைக்கும் எதிர்கால நோக்கத்தின் விளைவாக உருவானத் திட்டமாகும். பரப்பலாறு திட்டம் ஒட்டஞ்சத்திரம் அருகே அமைந்துள்ளது. இதன் நீர் கொள்ளளவுத் திறன் 167 மில்லியன் கன அடிகளாகும். பழனி தாலுகாவில் அமைந்துள்ள இவ்வணை மதுரையிலிருந்து 75 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

**மேற்பரப்பு நீர் வளஆதாரங்கள்**

தமிழ்நாட்டின் மொத்த மேற்பரப்பு நீரின் அளவு ஏறத்தாழ 24,864 மில்லியன் கனமீட்டராகும். மாநிலத்தில் 17 பெரிய ஆற்று வடிநிலப்பகுதிகள், 81 நீர்த்தேக்கங்கள் மற்றும் 41,262 ஏரிகள் உள்ளன. ஏற்கனவே பெரும்பகுதி மேற்பரப்புநீர் பாசனத்திற்காக அதிக அளவில் பயன்பருத்தப்பட்ரு வருகிறது. ஏறத்தாழ 24 இலட்சம் ஹெக்டேர் விளைநிலம் மேற்பரப்பு நீர் மூலம் பெரிய, நருத்தா மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் பாசன வசதியைப் பெறுகின்றன.

**தமிழ்நாட்டின் நிலத்தடி நீர்வள ஆதாரங்கள்**

மாநிலத்தில் பயன்பருத்திக்கொள்ளத்தக்க ஆகும். நீரின் தற்போதைய பயன்பாட்டின் அளவு 13,558 மில்லியன் கன மீட்டர் ஆகும். இது மறுவூட்டம் மூலம் கிடைக்கும் நீரில் 60 சதவீதமாகும். மீத இருப்பு நீரானது ஏறத்தாழ 8,875 மில்லியன் கன மீட்டராகும் (40%).

**நீர்வள மேலாண்மை**

நீர்வள மேலாண்மை என்பது திட்டமிடல், செயல்படுத்துதல், நீர்வளத்தைப் பெருக்குதல், விநியோகித்தல் மற்றும் நீர்வளங்களின் உகந்த பயன்பாட்டை நிர்வகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகும். தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தனிநபரின் நுகர்வு காரணமாக நீரின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் தனிநபர் நீர்நுகர்வின் அளவு 900 கன மீட்டர் ஆகும். இது தேசிய சராசரியான 2,200 கனமீட்டரை ஒப்பிரும் பொழுது குறைவானதாகும். மாநிலத்தில் உள்ள நீர்வளத்தில் 75 சதவீதம் வேளாண்மைக்காக நுகரப்பருகிறது. மக்களின் நீர்ப் பயன்பாடு, தொழில் துறைக்கான தேவைகள் மற்றும் இதர தேவைகளுக்கான பயன்பாரு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து வருகின்றது. மாநிலமானது நீர் தேவைக்கு பருவமழையைப் பெரிதும் சார்ந்துள்ளது; நீர்

வளங்களைப் புதுப்பித்துக்கொள்ள மழையையே முழுமையாகச் சார்ந்துள்ளது. பருவ மழை பொய்ப்பதால் கருமையான நீர் பற்றாக்குறை ஏற்பட்டு, வறட்சிக்கு வழி வகுக்கின்றது. எனவே நீர் சேமிப்பது நமக்கும் வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக அமையும்.

**தமிழ்நாட்டின் கனிம வளங்கள்**

வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டைல், செம்மலரிக்கல், மாலிப்படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. பழுப்பு நிலக்கரி 55.3%, வெர்மிகுலைட் 75%, டுனைட் 59%, செம்மணிக்கல் 59%, மாலிப்டீனம் 52% மற்றும் டைட்டானியம் 30% தாதுக்கள் நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும். மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்கள் பின்வருமாறு: நெய்வேலி, மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன. காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு படிவுகள் காணப்படுகிறன.

சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன. சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது. சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம், பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுகள் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.

கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ரூட்டைல் காணப்படுகிறது. கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்பு கிடைக்கிறது. கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது. பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

**தமிழ்நாட்டின் கனிம வளங்கள்**

வெர்மிகுலைட், மேக்னடைட், டுனைட், ரூட்டைல், செம்மணிக்கல், மாலிப்படினம் மற்றும் இல்மனைட் ஆகிய வளங்களில் தமிழ்நாடு முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. பழுப்பு நிலக்கரி 55.3%, வெர்மிகுலைட் 75%, டுனைட் 59%, செம்மணிக்கல் 59%, மாலிப்டீனம் 52% மற்றும் டைட்டானியம் 30% தாதுக்கள் நாட்டின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்களிப்பாகும்.

மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்கள் பின்வருமாறு:

நெய்வேலி, மிகப்பெரிய பழுப்பு நிலக்கரி வளங்களைக் கொண்டுள்ளது. இராமநாதபாம் பகுதிகளில் நிலக்கரி படிமங்கள் காணப்படுகின்றன. காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு படிவுகள் காணப்படுகிறன.

சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் இரும்புத்தாது படிவுகள் காணப்படுகின்றன. சேலம் அருகே மேக்னசைட் தாது கிடைக்கின்றது. சேர்வராயன் குன்றுகள், கோத்தகிரி, உதகமண்டலம், பழனிமலை மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் பாக்சைட் தாதுகள் காணப்பருகின்றன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஜிப்சம் கிடைக்கிறது.

கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் இல்மனைட் மற்றும் ரூட்டைல் காணப்பருகிறது. கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுண்ணாம்பு கிடைக்கிறது. கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் மேக்னசைட் கிடைக்கிறது. பெல்ட்ஸ்பார்க், படிகக்கல், தாமிரம் மற்றும் காரீயம் ஆகியவை மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்பருகின்றன.

### தமிழ்நாட்டிலுள்ள உலோகக் கனிமங்களின் பரவல்

| கனிமங்கள் | மாவட்டங்கள் |
|---|---|
| இரும்பு தாது | சேலம், நாமக்கல், திருவண்ணாமலை |
| செம்பு | சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் மாமண்டூர் |
| பாக்ஸைட் | சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, தருமபுரி, விழுப்புரம் |
| தங்கம் | கோயம்புத்தூர், நீலகிரி |
| குரோமைட் | சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு |
| பைரைட் | விழுப்புரம் |

### தமிழ்நாட்டிலுள்ள அலோகக் கனிமங்களின் பரவல்

| கனிமங்கள் | மாவட்டங்கள் |
|---|---|
| சுண்ணாம்புக் கல் | விருதுநகர் தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், சேலம் |
| மைக்கா | திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், இராமநாதபுரம் |
| மாக்னசைட் | சேலம், நாமக்கல், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு |
| ஸ்டீயடைட் | வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி |
| உப்பு | சென்னை, தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |

### தமிழ்நாட்டிலுள்ள கனிம எரிபொருட்கள்

| கனிமங்கள் | மாவட்டங்கள் |
|---|---|
| பெட்ரோலியம் | திருவாரூர் (பணங்குடி), நரிமணம்(காவிரி டெல்டா பகுதி) |
| லிக்னைட் | கடலூர் (நெய்வேலி) |

தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்கள்

| நிலையத்தின் பெயர் | மாவட்டம் |
|---|---|
| நெய்வேலி அனல் மின் நிலையம் | கடலூர் |
| வட சென்னை அனல் மின் நிலையம் | திருவள்ளூர் |
| தூத்துக்குடி அனல் மின் நிலையம் | தூத்துக்குடி |
| மேட்டூர் அனல் மின் நிலையம் | சேலம் |

தமிழ்நாட்டிலுள்ள நீர் மின் நிலையங்கள்

| வ.எண் | நீர் மின் நிலையங்கள் | ஆறுகள் | மில்லியன் வாட்கள் |
|---|---|---|---|
| 1 | குந்தா – I to V | பவானி | 500 |
| 2 | மேட்டூர் | காவிரி | 840 |
| 3 | ஆழியார் | ஆழியார் | 60 |
| 4 | கோதையார்– I மற்றும் II | கோதையார் | 100 |
| 5 | சோலையார் –I மற்றும் II | சோலையார் | 95 |
| 6 | காடம்பாறை | காடம்பாறை | 400 |
| 7 | கீழ் மேட்டூர் | காவிரி | 120 |
| 8 | பாபனாசம் நீர் மின் சக்தி | பாபனாசம் | 32 |
| 9 | பைகரா | பைகரா | 150 |
| மொத்தம் | | | 2,297 |

தமிழகத்திலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள்

| வ.எண் | தளங்கள் | உற்பத்தி மில்லியன் வாட்கள் |
|---|---|---|
| 1 | ஆரல்வாய் மொழி கணவாய் (முப்பந்தல் பகுதி), கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் | 1,658 |
| 2 | செங்கோட்டை கணவாய் (கயத்தாறு பகுதி) திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டம் | 1,105 |
| 3 | பாலக்காட்டு கணவாய்(கீத்தனூர் பகுதி) கோயம்புத்தூர் | 1,995 |
| 4 | சென்னையின் கடலோரப் பகுதி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேசுவரம் பிறப் பகுதிகள் (தேனி, பழனி) | 450 |
| | மொத்தம் | 5,208 |

### தமிழ்நாட்டில் தொழிலகங்கள்

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 % பங்களிப்பையும் தமிழ்நாடு அளிக்கிறது.
- இந்தியாவில் தொழிற்சாலைப் பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் என்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடத்திலுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 37,220 தொழிற்சாலைகள் உள்ளன.
- தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட மூலதன முதலீட்டில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது.
- தேசிய அளவில் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது.
- **தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்** (தொழில் வழிகாட்டி நிறுவனம்), தமிழகத்திற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 15.07.1992 அன்று இலாப நோக்கமற்ற சங்கமாக தொடங்கப்பட்டது.
- **தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)** மாநிலத்தில் தொழிற்பூங்காக்களை நிறுவி விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1971-ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. இது பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் சீரான தொழில் வளர்ச்சியினை கொண்டு வருவதை ஓர் முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.
- **தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ),** கூட்டுத்துறை நிறுவனங்கள் மூலம் முதலீடுகளை எர்த்து, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மற்றும் தொழில் மூலதன முதலீட்டை மேம்படுத்தவும், தமிழக அரசால் 1965-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தொழில் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை கண்டறியவும் மற்றும் அதனை செயல்படுத்தவும், டிட்கோ நிறுவனம் வழிவகை செய்து வருகின்றது.

- **தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்** : 1949-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (1110) தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் சர்க்கரை, சிமெண்ட், ஜவுளி, ஜவுளி இயந்திரம், பொறியியல், காகிதம் மற்றும் அலுமினியம் போன்ற பல முக்கிய தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக இந்நிறுவனம் விளங்குகிறது. நாட்டில் மாநில நிதி கழகங்களின் (5105 முன்னோடியான இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் மற்றும் சேவை நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகிறது.
- **தமிழ்நாடு உப்பு நிறுவனம்** இந்தியாவில் உப்பு உற்பத்தியில் முதன்மையாக திகழும் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாடு உப்பு நிறுவனம், இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கம் கிராமத்தில், தொழில் ரீதியாக பின் தங்கிய இம்மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில், 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம், வாலிநோக்கம் மற்றும் மாரியூர் ஆகிய கிராமங்களில் அடங்கியுள்ள 5,236 ஏக்கர் அரசு குத்தகைக்கு வழங்கியுள்ள நிலத்தில் உப்பு உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனம், 1978 ஆம் ஆண்டு அதன் வணிக ரீதியிலான தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தியைத் துவங்கியது.

பருத்தி நெசவாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தோல் தொழிலகம், சிமெண்ட் ஆலை, மின்சாதனப் பொருட்கள் உற்பத்தி ஆலை, வாகன உதிரிபாகங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறை ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தொழிலங்கள் ஆகும்.

### பருத்தி நெசவாலைகள்

பருத்தி நெசவாலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க நன்கு வளர்ந்த ஒரு தொழிலகமாகும். பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், பல்லடம், கரூர், திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் பருத்தி ஆடைகள் உற்பத்தி செய்ய ஏறத்தாழ 3 லட்சத்து 50 ஆயிரம் விசைத்தறிகள் உள்ளன. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 30 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள ஈரோரு கைத்தறி, விசைத்தறி மற்றும் ஆயத்த ஆடைகளின் விற்பனைக்கு புகழ்பெற்றது. 'கோயம்புத்தூர் தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோரு மாவட்டங்கள் நெசவுத்தொழில் மூலம் மாநில பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன. எனவே இப்பகுதி 'தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு எனக் குறிப்பிடப்படுகிறது. கரூர் 'தமிழ்நாட்டின் நெசவுத்தலைநகரம்' என்றழைக்கப்படுகிறது.

### பட்டு நெசவுஆலைகள்

நாட்டின் பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது. 'காஞ்சிபுரம் பட்டு' என்பது அதன் தனித்தன்மை, தரம் மற்றும் பாரம்பரிய மதிப்பு ஆகியவற்றால் உலகம் முழுவதும் அறியப்படுகிறது. தமிழ்நாட்டின் ஆண்டு பட்டு உற்பத்தி ஏறத்தாழ 1200 மெட்ரிக் டன்கள் ஆகும். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும்

திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய பட்டு நெசவு மையங்களாகும். இராமநாதபுதத்தின் சில பகுதிகளில் செயற்கைப் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பருகின்றன.

### தோல் பதனிடும் தொழிலகங்கள்

இந்தியாவில், தோல் பதனிடும் தொழிலகங்களில் தமிழ்நாடு 60% உற்பத்தியையும் காலணிகள், தோல் ஆடைகள், மற்றும் தோல் உபபொருட்கள் உற்பத்தியில் 38% பங்களிப்பையும் அளிக்கிறது. வேலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணிப்பேட்டை, ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி நகரங்களில் நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ளன. உற்பத்தி செய்யப்பட்ட தோல் மற்றும் தோல் சார்ந்த பொருட்கள் (தோல் ஆடைகள், கையுறைகள் மற்றும் தோல் காலணிகள்) ஏற்றுமதியில் 37% பங்களிப்புடன் வேலூர் முதன்மை மாவட்டமாக விளங்குகிறது. அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR) கீழ்மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆய்வகம் (CLRI), சென்னையில் அமைந்துள்ளது.

### காகித தொழிலகம்

தமிழ்நாட்டில் பல காகித தொழிலகங்கள் அமைந்துள்ளன. கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் தமிழக அரசு நிறுவனமான தமிழ்நாரு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) அமைந்துள்ளன. இது செய்தித்தாள், அச்சுக் காகிதம் மற்றும் எழுதப் பயன்படும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது. 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிலகம் ஆண்டுக்கு 2.45 லட்சம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யும் திறன் பெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள புக்காதுரை, பவானிசாகர், பள்ளிபாளையம், பரமத்தி வேலூர், கோயம்புத்தூர், உருமலைப்பேட்டை, தொப்பம்பட்டி, நிலக்கோட்டை மற்றும் சேரன்மாதேவி ஆகியன மாநிலத்தில் உள்ள மற்ற காகித ஆலைகளாகும்.

### சிமெண்ட் தொழிலகம்

சிமெண்ட் தொழிலகம் பொருளாதார மந்த நிலையிலும் உற்பத்தி மற்றும் நுகர்வில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. இந்தியா மிகப்பெரிய சிமெண்டு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாகவும், 181 மில்லியன் டன்கள் வருடாந்திர உற்பத்தியுடன் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நாடாகவும் உள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில், தமிழ்நாடு சிமெண்ட் கழகமும் (TANCEM) ஒன்றாக உள்ளது. அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் சிமெண்ட் உற்பத்தி ஆலைகள் இயங்குகின்றன. ஆலங்குளத்தில் உள்ள கல்நார் சிமெண்ட் அட்டை அலகும், விருத்தாசலத்தில் உள்ள கற்கலன் குழாய் அலகு ஆகியன மாநிலத்தின் மற்ற அலகுகளாகும். சங்கர் சிமெண்ட், ஜூவாரி சிமெண்ட், அல்ட்ராடெக் சிமெண்ட், மதராஸ் சிமெண்ட் மற்றும் டால்மியா சிமெண்ட் ஆகியன தமிழ்நாட்டின் முக்கிய தனியார் சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களாகும்.

### தகவல் தொழில்நுட்பம்

தேசிய மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவன கூட்டமைப்பின்படி (NAASCOM) இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் தென் மாநிலங்கள் தொடர்ந்து மேலானப் பங்களிப்பை செய்துவருகின்றன.தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்கள் இணைந்து

இந்தியாவின் மொத்த மென்பொருள் ஏற்றுமதியில் 59.6% ஐ செய்கின்றன. நாட்டின் மென் பொருள் ஏற்றுமதியில் கர்நாடகாவுக்கு அருத்ததாக தமிழ்நாடு இரண்டாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக உள்ளது.

### சிறப்புப் பொருளாதார மண்டலம்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சர்வதேச அளவில் மிகச்சிறந்த பகுதிகளாகவும் ஏற்றுமதியை ஊக்குவிக்கக்கூடிய கூழலைப் பெற்றதாகவும் உள்ளது. இம்மண்டலம் பல உற்பத்திப் பெருட்களை அளிப்பதுடன் பல்வேறு சேவைகளையும் அளிக்கிறது. நாங்குநேரி, எண்ணூர், ஒகர் மற்றும் பெரம்பலூரில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைந்துள்ளன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களான; டைடல் பூங்கா அசெண்டாஸ், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மகேந்திரா உலக நகரம், சிறப்பு பொருளாதார மண்டலம்-டைடல் பூங்கா II மற்றும் டைடல் பூங்கா II, கோயம்புத்தூர் சிறப்பு பொருளாதார மண்டலம்-டைடல் பூங்கா ஆகியனவாகும்.

### பொறியியல் உற்பத்தி தொழிலகங்கள்

உற்பத்தித் தொழில் என்பது மாநிலப் பொருளாதாரத்தின் துடிப்பான துறைகளில் ஒன்றாகும். இது பொறியியல் உற்பத்தி தொழில்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கிறது. வாகனங்கள் மற்றும் இதர பாகங்கள் உற்பத்தி, வாகன உற்பத்தி, மூல உலோகம் மற்றும் உலோகக் கலவைத் தொழில்கள், உலோகப் பொருட்கள் மற்றும் பழுதுபார்க்கும் கருவிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தொழில்துறை உற்பத்தியில், தமிழ்நாட்டின் பங்கு நாட்டின் உற்பத்தியில் ஏறத்தாழ 11 முதல் 12% வரையிலும், மென்பொருளை தவிர்த்து நாட்டின் ஏற்றுமதியில் 15% பங்களிப்பு செய்கின்றன. இந்தியாவின் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 17% சதவீதமாகும்.

### வாகனத் தொழிலகங்கள்

வாகன உற்பத்தி மற்றும் கனரகவாகன உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு குறிப்பிடத்தக்க அளவிலுள்ளது. வாகனத் தொழிலகம் மாநிலப் பொருளாதாரத்தில் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கின்றது. மாநிலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீத பங்களிப்பினை அளிப்பதுடன் 2 லட்சத்து 20 ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் வழங்குகிறது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனத் தொழில்களில் 21% பயணிகள் மகிழுந்து, 33% வணிக வாகனங்கள் மற்றும் 35% வாகன உதிரிபாகங்கள் ஆகியன தமிழ்நாட்டின் அதிகமான பங்களிப்பாகும். போர்டு, ஹூண்டாய், எச் எம் மிட்சுபிவி, அசோக் லைலாண்ட் மற்றும் வேளாண் கருவிகள் நிறுவனம் (TAFE) (இழுவை இயந்திரம்) (Tractor) , ஆகியவற்றின் உற்பத்திக் தளங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

### இரசாயன மற்றும் வார்ப்புப் பொருள் தொழிலகம்

இரசாயன தொழிலகம், பொருளாதாரம் மற்றும் தொழிற்துறையில் வேகமாக வளர்ந்து வரும் ஒன்றாகும். இது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 8 சதவீதமும் பங்களிப்பு செய்கின்றன.

### கைத்தறி மற்றும் விசைத்தறி

கைத்தறித் துறையானது மாநிலத்தில் மிகப்பெரிய குடிசைத் தொழிலாகும். இது கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரத்தையும் ஏற்றுமதி வருவாயையும் அளிக்கின்றன. கைத்தறித் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளில் 4.29 இலட்சம் நெசவாளர் குரும்பங்கள் மற்றும் 1.64 இலட்சம் நெசவாளர்களுக்கு நல்ல வருவாயுள்ள வேலைவாய்ப்பினையும் அளிக்கின்றது. நெசவாளர் சங்கங்கள், 'பள்ளிக் குழந்தைகளுக்கு விலையில்லா சீருடையும், விலையில்லா வேட்டி மற்றும் சேலை. திட்டத்திற்கு தேவையான துணிகளையும் உற்பத்தி செய்கின்றன.

### சர்க்கரைத் தொழிலகம்

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலகம் ஒரு வேளாண் சார்ந்த தொழிலகமாகும். கிராமப்புற பகுதிகள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப் பங்கினை வகிக்கிறது. சர்க்கரைத் தொழிலகங்கள் பல ஆயிரம் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், கரும்பு பயிர் சாகுபடி, அறுவடை, போக்குவரத்து மற்றும் இதரப் பணிகளில் ஈருபட்டுள்ள விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் போன்ற பல இலட்சம் மக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்குகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 34 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில் 16 கூட்டுறவுத் துறையாலும் 18 தனியார் துறையாலும் நிர்வகிக்கப்பருகின்றன.

| வ. எண் | சர்க்கரை ஆலைகள் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | கடலூர் |
| 2 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை | திருவண்ணாமலை |
| 3 | தரணி சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம் | திருநெல்வேலி |
| 4 | இராஜஸ்ரீ சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம் | தேனி |
| 5 | கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம் | தேனி |
| 6 | டெரி எனர்ஜி நிறுவனம் | கடலூர் |
| 7 | S.V. சர்க்கரை ஆலை நிறுவனம் | காஞ்சிபுரம் |
| 8 | சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | தர்மபுரி |
| 9 | டெரி எனர்ஜி நிறுவனம் | தஞ்சாவூர் |
| 10 | EID பாரி இந்தியா நிறுவனம் | கடலூர் |
| 11 | சக்தி சர்க்கரை ஆலை | சிவகங்கை |
| 12 | அருணாச்சலம் சர்க்கரை ஆலை நிறுவனம் | திருவண்ணாமலை |
| 13 | பன்னாரி அம்மன் சர்க்கரை நிறுவனம் | ஈரோடு |
| 14 | ஆரோ சக்தி நிறுவனம் | நாகப்பட்டினம் |

| | | |
|---|---|---|
| 15 | ஸ்ரீ அம்பிகா சர்க்கரை ஆலை | கடலூர் |
| 16 | சக்தி சர்க்கரை ஆலை தனியார் நிறுவனம் | ஈரோடு |
| 17 | இராஜஸ்ரீ சர்க்கரை இரசாயன நிறுவனம் | விழுப்புரம் |
| 18 | இ.ஐ.டி பாரி இந்தியா நிறுவனம் | புதுக்கோட்டை |
| 19 | கோத்தாரி சர்க்கரை மற்றும் இரசாயன நிறுவனம் | அரியலூர் |

### சுற்றுலாத்துறை

சுற்றுலாத்துறை ஒரு தொழிலகமாகக் கருதப்படுகிறது. எனெனில் இதில் எராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. சமீப காலங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்ரு சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னணித் தலங்களில் ஒன்றாக தமிழகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தால் (TTDC) ஊக்குவிக்கப்பருகிறது. இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ரூபாய் 25 கோடி (2013) வருவாயை ஈட்டி, முதன்மை மாநிலமாக திகழ்கின்றது. இத்தொழிலின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 16% ஆகும். ஆண்டிற்கு ஏறத்தாழ 28 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழகத்திற்கு வருகை தந்துள்ளனர். பழங்கால நினைவுச் சின்னங்கள், புனிதத்தலங்கள், மலைவாழிடங்கள், பலவகையான இயற்கை நிலத்தோற்றங்கள், நீண்ட கடற்கரை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றுடன் தமிழ்நாரு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகச் சிறந்த மாநிலமாக உள்ளது.

### தமிழ்நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7,21,47,030 அல்லது 7.21 கோடி ஆகும். 2001 ஆம் ஆண்டு 6.24 கோடியாக இருந்த மக்கள் தொகை 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு கோடி மக்கள் தொகை அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் மாநிலத்தில் ஆண், பெண் மக்கள் தொகை முறையே 3,61,37,575 மற்றும் 3,60,09,055 ஆகும். இதில் 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி முறையே 314,00,509 மற்றும் 310,04,770 ஆகும். இது மாநிலத்தின் மக்கள் தொகையில் ஆணும் பெண்ணும் கிட்டத்தட்ட சமமாக இருப்பதைக் காட்டுகிறது. 2001 - 2011, 10 ஆண்டு காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி 15.6% ஆக இருந்தது. ஆனால் இதற்கு முந்தைய பத்தாண்டுகளில் இது 11.19 சதவீதமாக இருந்தது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.96% ஆகும். 2001இல் இது 6.07 சதவீதம் ஆகும்.

### மக்கள்தொகை பரவல்

மொத்த மக்கள்தொகையின் அடிப்படையில் தமிழ்நாடு பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ருள்ளது.

**அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்**

2011 மக்கள்தொகை கணக்கெருப்பின்படி மாவட்ட அளவில் 4.219 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சென்னையானது அதிக அளவு நகர்ப்புற மக்கள் தொகையைக் கொண்டு முதல் இடத்தில் உள்ளது.கோவை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், தர்மபுரி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்களாகும். இம்மாவட்டங்களில் அதிக அளவிலான மக்கள் தொகை இருப்பதற்குக் காரணம் விவசாயம் மற்றும் தொழில்துறை மேம்பாடு ஆகும்.

**மிதமான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்**

திருவண்ணாமலை, கடலூர், திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் 30 - 35 இலட்சம் மக்கள்தொகையைப் பெற்றுள்ளன. வேலூர், திண்டுக்கல், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் ஒவ்வொன்றும் 15 - 20 இலட்சம் மக்கள்தொகையைக் கொண்ருள்ளன. விவசாயம் சிறிய அளவிலான தொழில்கள் தவிர கடலோரப் பகுதிகளில் மீன்பிடித்தல் ஆகியவை இம்மாவட்டங்களின் முக்கியத் தொழில்களாகும். ///குறைவான மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள் கடலோர மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபாம் மற்றும் சிவகங்கை ஆகியவை 15 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையைப் பெற்றுள்ளன. நீலகிரி மாவட்டம் 10 இலட்சத்திற்கும் குறைவான (7,64,826) மக்கள்தொகையைக் கொண்ருள்ளது. இது 2011 மக்கள் தொகைக் கணக்கின்படி மிகக்குறைந்த மக்கள்தொகையைக் கொண்ட மாவட்டமாகும்.

**மக்களடர்த்தி**

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்களடர்த்தி சதுழ கிலோ மீட்டருக்கு 555 ஆகும். இதுவே 2001இல் சதுர கிலோ மீட்டருக்கு 480 ஆகவும் இருந்தது. இந்தியாவின் மக்களடர்த்தியில் நமது மாநிலம் 12வது இடத்தில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெருப்பின்படி, தேசிய சராசரி மக்களடர்த்தி 382 ஆகும். சென்னை ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 26,503 மக்களடர்த்தி கொண்ட மாவட்டமாகும். இதையடுத்து கன்னியாகுமரி (1106), திருவள்ளூர் (1,049), காஞ்சிபுரம் (927), மதுரை (823), கோயம்புத்தூர் (748), கடலூர் (702), தஞ்சாவூர் (691), நாகப்பட்டினம் (668), சேலம் (663), வேலூர் (646) மற்றும் திருச்சிராப்பள்ளி (602) ஆகிய மாவட்டங்கள் அதிக மக்களடர்த்தி கொண்ட மாவட்டங்களாகும். நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு மக்களடர்த்தி (288 ச.கி.மி) பதிவாகியுள்ளது. மற்ற மாவட்டங்கள் மிதமான மக்களடர்த்தியைக் கொண்ருள்ளது.

**மதங்கள்**

இந்து, கிறித்தவம் மற்றும் இஸ்லாம் நமது மாநிலத்தின் முக்கிய மதங்களாகும். நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் இந்துக்கள் அதிகமாகவும் (87.58%) அதனைத் தொடர்ந்து கிறித்தவர்கள் (6.12%), இஸ்லாமியர்கள் (5.86%), சமணர்கள் (0.12%), சீக்கிய மதத்தினர் (0.02%) மற்றும் புத்த மதத்தினரும் (0.02%) உள்ளனர். பிற மதங்களைச் சார்ந்தவர்களும் (0.01 %) குறிப்பிடவியலா மதத்தைச் சேர்ந்தவர்களும் (0.26%) உள்ளனர்.

### நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்கள் தொகை

2011 மக்கள் தொகை கணக்கெருப்பின்படி தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை 34,917,440 ஆகும். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.40 சதவீதம் ஆகும். கிராமப்புற மக்கள் தொகை 37,229,590 ஆகும். இது மாநில மக்கள்தொகையில் 51.60 சதவீதம் ஆகும்.

### பாலின விகிதம்

பாலின விகிதம் என்பது 1,000 ஆண்களுக்கு இணையாக உள்ள பெண்களின் எண்ணிக்கையைக் குறிக்கிறது. மாநிலத்தின் பாலின விகிதம் 2001இல் 987 ஆக இருந்தது. இது 2044இல் 996 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவின் பாலின விகிதம் 2001இல் 933 ஆகவும், 2011 இல் 940 ஆகவும் அதிகரித்துள்ளது. இதுவே மாநிலப் பாலின விகிதமானது நம் நாட்டின் பாலின விகிதத்தைவிட சாதகமாக உள்ளது. 201 மக்கள்தொகை கணக்கெருப்பின்படி 32 மாவட்டங்களில் 15 மாவட்டங்கள் பாலின விகிதம் ஆயிரத்திற்கும் அதிகமாக உள்ளது. 2001 மக்கள் தொகை கணக்கெருப்பின்போதும் இதே நிலை காணப்பட்டது. சிவகங்கை மாவட்டத்தின் பாலின விகிதம் சரியாக 1,000 ஆக உள்ளது. 12 மாவட்டங்களில் 980 முதல் 1,000 வரையிலான குறைவான பாலின விகிதத்தைக் கொண்ருள்ளது குறிப்பிடத்தக்கது. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டங்களாக நீலகிரியும் (1,041) அதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டமும் (1,031) காணப்பருகின்றன. குறைவான பாலின விகிதம் கொண்ட மாவட்டங்களாகத் தர்மபுரியும் (946) அதனைத் தொடர்ந்து சேலமும் (054) உள்ளன.

### போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு

### சாலைகளின் வகைகள்

மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும். இதில் 60,628 கிலோமீட்டர் மாநில நெருஞ்சாலை துறை மூலம் பராமரிக்கப்பருகிறது. பொதுத்துறை மற்றும் தனியார்துறை கூட்டணி இயக்கத் திட்டத்தின் கீழ் (60) மொத்த சாலைத் திட்டங்களில் 20% பங்களிப்புடன் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

- சாலைகளின் வகைகள் நீளம் (கி.மீ)
- தேசிய நெடுஞ்சாலைகள் - 4,994 கி.மீ
- மாநில நெடுஞ்சாலைகள் - 57,291கி.மீ
- மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகள் - 25350 கி.மீ
- ஊராட்சி ஒன்றிய சாலைகள் - 147,543 கி.மீ
- கிராம பஞ்சாயத்து சாலைகள் - 21,049 கி.மீ
- மற்றவை (வனச் சாலைகள்) - 3348 கி.மீ
- வணிகரீதியிலான சாலைகள் - 1,213 கி.மீ
- வணிகரீதியற்ற சாலைகள் - 20.34 லட்சம் கி.மீ

- (ஆதாரம் - 2017 தமிழ்நாடு புள்ளியியல் கையேடு)

**கூ.தக. :** தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய. நெருஞ்சாலை எண் _ இன் 44-ஐ உடையதாகும். இது ஒசூரிலிருந்து, தர்மபுரி கரூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி வழியாக கன்னியாகுமரி வரை 6272கிலோமீட்டர் தூரம் செல்கிறது தமிழ்நாட்டின் மிகக் குறைவான நீளங்கொண்ட தேசிய நெடுஞ்சாலை எண் - 785 ஐக் கொண்டதாகும். இது மதுரையிலிருந்து நத்தம் வரை செல்கிறது. இதன் நீளம் 38 கிலோ மீட்டர் ஆகும்.

**இரயில்வே போக்குவரத்து**

தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. தற்போது தெற்கு இரயில்வேயின் வலைப்பின்னல் இந்தியாவின் தென் தீபகற்பப் பகுதிகளான தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மொத்த இருப்புப் பாதையின் நீளம் 6,693 கிலோ மீட்டர் ஆகும். இம்மண்டலத்தில் 690 இரயில் நிலையங்கள் உள்ளன. இந்த இரயில்வே வலைப்பின்னல் அமைப்பு இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகியவை இம்மாநிலத்தில் உள்ள முக்கிய இரயில் சந்திப்புகள் ஆகும். சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. தற்பொழுது மெட்ரோ இரயில்வே அமைப்பு, மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்தை விரிவாக்கம் செய்து வருகிறது.

**வான்வழி போக்குவரத்து**

தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. சென்னை சர்வதேச விமானநிலையமானது மும்பை மற்றும் புது டெல்லிக்கு அடுத்ததாக இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையமாக உள்ளது. கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன நாட்டில் பிற சர்வதேச விமானநிலையங்கள் ஆகும். தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியவை உள்நாட்டு விமானநிலையங்கள் ஆகும். இவை நாட்டின் பல பகுதிகளை இணைக்கின்றன. தொழில்துறையின் அத்த வளர்ச்சியானது, பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துகளை அதிகரித்துள்ளது. இது ஆண்டிற்கு 18 சதவீதத்திற்கும் அதிகமான விமான போக்குவரத்து வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**நீர்வழி போக்குவரத்து**

சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் பிற பகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் இம்மாநிலத்தில் உள்ளன. துறைமுகங்கள் ஏறத்தாழ 73 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை ஆண்டு தோறும் கையாளுகிறது. (இந்தியாவில் 24 சதவீத பங்கு) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டின் கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்பருகிறது. சென்னை துறைமுகம் செயற்கைத் துறை முகமாகும்.இதுசரக்குப் பெட்டகங்களைக் கையாளும் நாட்டின் துறைமுகங்களில் இரண்டாவது பெரிய துறைமுகமாகும் . தற்பொழுது 4 இலட்சம் வாகனங்களைக் கையாளும் திறன் கொண்ட பிரத்தியேக முனையம் மேம்பருத்தப்பட்டுள்ளது. இடைநிலை துறைமுகமான எண்ணூர் சமீபத்தில் பெரிய

துறைமுகமாக மேம்பருத்தப்பட்ரு தமிழகத்தில் அதிக நிலக்கரி மற்றும் தாதுக்களைக் கையாளும் துறைமுகமாக உள்ளது .

**தகவல் தொடர்பு**

**தமிழ்நாட்டின் அஞ்சலக மாவட்டங்கள் மற்றும் தலைமையகங்கள் மண்டலம்**

- தலைமையகம் சென்னை - சென்னை
- மேற்கு மண்டலம் - கோயம்புத்தூர்
- மத்திய மண்டலம் - திருச்சிராப்பள்ளி
- தெற்கு மண்டலம் - மதுரை

**வணிகம்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவை வணிகத்தின் இரு கூறுகளாகும். ஏற்றுமதி என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டுப் பணத்திற்கு விற்பதாகும் இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு 12.2 சதவீதம் ஆகும். இறக்குமதி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளை வெவெளிநாட்ரு உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்குவதாகும். தமிழ்நாடு பல பொருட்களை வெளியில் இருந்து இறக்குமதி செய்கிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்பிற்கு இடையேயான வேறுபாரு 'வர்த்தக சமநிலை' என அழைக்கப்பருகிறது.

| தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதிகள் | |
|---|---|
| வேளாண் பொருட்கள் | புகையிலை, தானியங்கள், பருத்தி, கரும்பு, நெல், நிலக்கடலை வாசனைப் பொருட்கள் மற்றும் காய்கறிகள் |
| தோல் பொருட்கள் | சிறுதோல் பைகள், பணப்பைகள், கைப்பைகள், இடுப்பு கச்சை, காலணிகள் மற்றும் கையுறைகள் |
| இரத்தின கற்கள் மற்றும் நகைகள் | விலை மதிப்பு மிக்க கற்கள், முத்துக்கள், தங்க நகைகள், கலை மற்றும் அலங்காரம் பொருட்கள், |
| இரசாயன மற்றும் இரசாயனம் சார்ந்த பொருட்கள் | காகிதம், இரசாயனங்கள், இரப்பர் மற்றும் கண்ணாடி |

**தமிழ்நாட்டின் இறக்குமதிகள்**

இயந்திரக் கருவிகளான போக்குவரத்து சாதனங்கள், இயந்திர உபகரணங்கள், மின்சாதனமல்லா இயந்திரங்கள், மின்சாதன பொருட்கள், மருந்துப் பொருட்கள், பெட்ரோலியம், உரங்கள் மற்றும் செய்தித்தாள் ஆகியவை முக்கிய இறக்குமதிகளாகும். நாட்டின் வணிகத்தில் தமிழ்நாட்டின் முக்கிய துறைமுகங்கள் 10.94% பங்களிப்பைச் செய்கின்றன.

**தகவல்கள் ஆதாரம்** :

- 10 ஆம் வகுப்பு புதிய புத்தகம் - சமூக அறிவியல் - அலகுகள் 6 (தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள்) மற்றும் 7 (தமிழ்நாடு - மானுட புவியியல்)

www.portalacademy.in

# 10. பல்வேறு துறைகளில் தமிழகம் நிகழ்த்தியுள்ள சாதனைகள்.(Achievements of Tamil Nadu in various fields. )

- **நல்லாட்சி வழங்கும் மாநிலங்களின் பட்டியலில் 5.62 புள்ளிகளைப் பெற்று பெரிய மாநிலங்கள் பிரிவில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.** தேசிய நல்லாட்சி தினத்தை (டிசம்பர் 25) ஒட்டி, மத்திய நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொது மக்களின் குறைதீர்க்கும் துறையானது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து. ஒவ்வொரு மாநிலத்திலும் பொது மக்களுக்கு நலத் திட்டங்களை அளிக்கக் கூடிய 17 அரசுத் துறைகளில் இருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் புள்ளிகளை வழங்கியுள்ளது. இந்தப் புள்ளிகளைக் கொண்டு மாநிலங்களின் தரவரிசைப் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்தவகையில், பெரிய மாநிலங்கள் என்ற பிரிவில் 5.62 புள்ளிகளைப் பெற்று சிறந்த நல்லாட்சிக்கான குறியீட்டில் தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

  **எந்தெந்த துறைகளில் முதலிடம்:**

  - குடிநீர் வசதி, கிராமங்கள் மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் மலம் கழிப்பதைத் தடுத்தது, தடையில்லாத மின்சார விநியோகம், புகர்ப் பகுதிகளை அணுகுவதற்கான அம்சங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது தமிழகத்தில் சிறப்பாக இருப்பதாக மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது. இதற்காக பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடு என்ற பிரிவில் மாநில அரசுக்கு 0.74 புள்ளிகளை அளித்து முதலிடத்தை வழங்கியுள்ளது.
  - சட்டம், ஒழுங்கைப் பராமரித்து பொது மக்கள் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவதிலும் தமிழகத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றங்களை நிரூபணம் செய்வது, காவலர்கள் எண்ணிக்கை, மகளிர் காவலர்களின் விகிதம், நீதிமன்றம் மற்றும் நுகர்வோர் நீதிமன்ற வழக்குகளில் தீர்வு அளிப்பது ஆகியவற்றின் அடிப்படையில் தமிழகத்துக்கு 0.56 புள்ளிகள் அளிக்கப்பட்டு இந்தியாவிலேயே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.
  - கர்ப்ப காலத்தில் தாய்- சேய் இறப்பு விகிதம், நோய்த் தடுப்பில் சாதனை, பொது சுகாதார மையங்களில் மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்களின் இருப்பும், மருத்துவமனைகள் 24 மணி நேரமும் இயங்கும் வசதி ஆகியவற்றின் அடிப்படையில் அனைத்து மாநிலங்களுக்கான சுகாதாரத் துறை அம்சங்களும் ஆய்வு செய்யப்பட்டன. அதில், தமிழகத்துக்கு 0.78 புள்ளிகள் அளிக்கப்பட்டதன் மூலம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
  - ஒருமுறை தூக்கி எறியப்படும் நெகிழிப் பைகளுக்கான தடை, காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப மாநில அளவிலான செயல்திட்டம், வனஎல்லை மாற்றம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் துறையில் சிறப்பான செயல்பாடுகளுக்காக இந்தியாவிலேயே தமிழகத்துக்கு 3-ஆவது இடம் அளிக்கப்பட்டுள்ளது.
  - கல்வி அளிப்பதுடன் சிறப்பான திறன் பயிற்சி மூலமாக வேலை வாய்ப்பு அளிக்கும் மனிதவள மேம்பாடுத் துறைக்கும், மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம், நிதி மற்றும் கடன் சுமைகளை கட்டுக்குள் வைத்திருத்தல் போன்ற

காரணிகளால் பொருளாதார மேலாண்மைத் துறைக்கும் ஐந்தாவது இடம் வழங்கப்பட்டுள்ளது.

- o சமூக நலன் மற்றும் மேம்பாட்டுத் துறைக்கு 7-ஆவது இடமும்,
- o வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்கு 9-ஆவது இடமும் அளிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக அனைத்துத் துறைகளுக்கும் அளிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் சராசரி அடிப்படையில் தமிழகம் 5.62 புள்ளிகள் பெற்று முதலிடம் வகிக்கிறது.

**கூ.தக. :** தேசிய நல்லாட்சி தினம் (Good Governance Day) முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் பிறந்த தினத்தில் , டிசம்பர் 25 அன்று 2014 ஆம் ஆண்டு முதல் இந்திய அரசால் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

❖ ஒட்டுமொத்த செயல் திறன்மிக்க முதன்மை மாநிலமாக இந்தியா டுடே ஆய்வு 2019 ல் இரண்டாவது முறையாக தமிழ்நாடு தேர்வு : 'இந்தியா டுடே' பத்திரிகையின் சார்பில் 'மாநிலங்களில் சிறந்த மாநிலம்' விருதுகள் 2019 ல் தமிழகத்திற்கு, **இந்தியாவில் பெரிய மாநிலங்களில் அனைத்துத் துறைகளின் செயல்பாட்டில் மிகச் சிறந்த மாநிலம், சட்டம் ஒழுங்கைச் சிறப்பாகப் பராமரிப்பதில் மிகச் சிறந்த மாநிலம், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் மிகச்சிறந்த முன்னேற்றம் அடைந்த மாநிலம் ஆகிய மூன்று விருதுகள்** வழங்கப்பட்டன.

❖ **இந்தியாவிலேயே அதிக டாக்டர்கள் கொண்ட மாநிலங்களில் தமிழகம் 2வது இடத்தை பிடித்துள்ளது.** தமிழகத்தில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட டாக்டர்களின் எண்ணிக்கை 1,35,456 ஆகும்.

❖ கிருஷி கர்மான் விருதினை 5 முறை பெற்று சாதனை

❖ உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடாந்து 5 வருடங்களாக மிகச் சிறந்த மாநிலத்திற்கான விருது

❖ வலிமைப்படுத்துதல், குழந்தைகள் நேயம். வலுவான கிராம சபை செயல்பாட்டிற்கென 12 தேசிய விருதுகள்

❖ பெங்களூருவில் உள்ள 'பொது விவகாரங்கள் மையத்தின்' அறிக்கையில் நல். ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு

❖ ஃபிராஸ்ட் அண்ட் சல்லிவன் (Frost & Sullivan) நிறுவன ஆய்வறிக்கையில் ஒட்டு மொத்த செயல்பாட்டில் இரண்டாம் இடத்தை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தமிழ்நாடு பெற்றுள்ளது

❖ தாய்மார்கள் இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்ததற்காக மத்திய அரசின் விருது

❖ "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்காக மத்திய அரசின் விருது

❖ தாய்மை பாரத திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சிறந்த மாநில விருது

- பொது விநியோக திட்டத்தை கணினிமயமாக்கியமைக்கு விருது
- ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக 9 தேசிய விருதுகள்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 4 தேசிய விருதுகள்
- இணைய வழி.கற்றலில், முன்னோடி மாநிலத்திற்கான தேசிய விருது
- மூத்த குடிமக்கள் சேவைக்காக தேசிய விருது
- உணவுபாதுகாப்புமற்றும் தரநிர்ணய ஆணையவிருது
- சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு உடல் உறுப்பு தானத்திற்கான சிறப்பு விருது
- புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித்துறைக்கு விருது
- சாலை பாதுகாப்பில் சிறந்த செயல்பாட்டிற்காக மத்திய அரசின் விருது
- போக்குவரத்து கழகங்களின் சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக 9 விருதுகள்
- உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்
- பாகூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்திற்கு தென் மண்டலத்திற்கான தேசிய காமதேனு விருது
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு முதுநிலை விருது
- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் தரவரிசையில் இந்தியாவிலேயே முதலிடம்
- சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு "சிறந்த மேலாண்மைக்கான" மத்திய அரசின் விருது
- 2018ம் ஆண்டிற்கு மத்திய அரசின் தேசிய நீர் ஆதார விருது
- 2018ம் ஆண்டிற்கு மத்திய அரசின் தூய்மையான நகரத்திற்கான சுவச் சர்வக்ஷின் விருது
- மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் “தூய்மையான புனித தலம்” விருது
- பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்காக ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு யுனஸ்கோ விருது
- நாரி சக்தி புரஸ்கார் விருது : 2018 ஆம் ஆண்டு பெண்குழந்தை பிறப்பு பாலின விகிதத்தை அதிகப்படுத்தியதற்காகவும், திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதிற்காகவும் தமிழ்நாடு, நாரி சக்தி புரஸ்கார் தேசிய விருதிற்கு தோந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால், உலக மகளிர் தினம் மார்ச் 8, 2019 அன்று புது தில்லியில் வழங்கப்பட்டது.
- **இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரமாக சென்னை திகழ்கிறது என தேசிய குற்ற ஆவண காப்பகம் தெரிவித்து உள்ளது.** அதேபோல குழந்தைகளுக்கும்,

மிக பாதுகாப்பான பெருநகரமாக சென்னை விளங்குகிறது.2015-17-ம் ஆண்டுகளுக்கான குற்றச்சம்பவங்கள் தொடர்பான புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **தமிழக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 12 தேசிய விருதுகள் :**
    - ஊராட்சிகளில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைகளை திறம்பட செயல்படுத்தியதற்காக, தேசிய அளவில் தமிழகம் முதன்மை மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசின் இ-புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.
    - ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளித்து ஊராட்சிகளின் திறனை மேம்படுத்திய வகையில், மாவட்ட அளவில் சேலம் மாவட்டத்திற்கும், ஒன்றிய அளவில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை மற்றும் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும்; ஊராட்சிகள் அளவில், சேலம் மாவட்டம் கோனூர் கிராம ஊராட்சி; கோவை மாவட்டம் மத்வராயபுரம் கிராம ஊராட்சி ஆகியவற்றிற்கு விருதுகள் வழங்கப்பட்டன.
    - தீன் தயாள் உபாத்யாய ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது நாமக்கல் மாவட்டம்-அரசபாளையம் கிராம ஊராட்சி; ஈரோடு மாவட்டம் வெள்ளாளபாளையம் கிராம ஊராட்சி; மதுரை மாவட்டம்-கோவில்பாப்பாக்குடி கிராம ஊராட்சி; திருவண்ணாமலை மாவட்டம்-எஸ்.யு. வனம் கிராம ஊராட்சி ஆகிய 6 கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கப்பட்டன.
    - வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரிந்தமைக்கான நானாஜி தேஷ்முக் ராஷ்டிரிய கவுரவ கிராம சபை தேசிய விருது திருப்பூர் மாவட்டம் ராவணப்புரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது.
    - குழந்தைகள் நேய கிராம ஊராட்சிக்கான தேசிய விருது தஞ்சாவூர் மாவட்டம், பட்டீஸ்வரம் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டது.
- **தமிழகத்தின் மகப்பேறு இறப்பு வீதம் (Maternal Mortality Ratio (MMR)) 2019 ஆம் ஆண்டில் 57 (ஒரு இலட்சம் பிறப்புகளில்) ஆக குறைந்துள்ளது.** 2015-2017 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 63 ஆகவும் 2018 ஆம் ஆண்டில் 60 ஆகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.
- 2019-20 -ம் நிதியாண்டில் மாநிலத்தின் வளர்ச்சி 7.27 சதவிகிதமாக இருந்தது. 2019-20 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைவிட, தமிழ் நாட்டின் வளர்ச்சி விகிதம் 5 சதவிகிதம் அதிகமாக இருந்தது.
- **2019 ஆம் ஆண்டில், மாநில நீர் மேலாண்மை செயல்பாட்டில் தமிழகம் 13வது இடத்திற்கு முன்னேறியுள்ளது**. கடந்த ஆண்டு (2018) , நீர் மேலாண்மை திட்டங்களில், தமிழகம் 33வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.
- **தூய்மைக்கான நகரங்கள் குறித்த 'தூய்மை சர்வே லீக் 2020' சர்வேயில், குறைந்த மக்கள்தொகை நகரங்கள் பிரிவில் தெற்கு மண்டலத்தில் தமிழகத்தில் உள்ள மேலத்திருப்பந்துருத்தி, டி.கல்லுப்பட்டி, கங்குவார்பட்டி** ஆகியவை தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.
- **நிதி அயோக் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் - இந்தியா பட்டியல் 2.0 (Sustainable Development Goals - India 2.0) ல் முதலாவது இலக்கான ' வறுமை இல்லை' (NO POVERTY) பட்டியலில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது**. 2,3,4 மற்றும் 5 வது இடங்களை முறையே திரிபுரா, ஆந்திரப்பிரதேசம், மேகாலயா மற்றும் மிஷோராம் மாநிலங்கள் பெற்றுள்ளன.

- **2019 ஆம் ஆண்டில் இந்திய அளவில் அதிக நிலப்பரப்பில் நுண் பாசனம் (micro-irrigation) மேற்கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ் நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது**. இந்திய அளவில் மொத்தம் 3.64 lakh hectares நிலத்தில் நுண்பாசனம் செய்யப்படுகிறது. இதில், 1.39 lakh hectares, அதாவது 38% நிலப்பரப்பு தமிழ் நாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த பட்டியலில் 2,3,4 மற்றும் ஐந்தாம் இடங்களை முறையே குஜராத், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களைப் பெற்றுள்ளன.
- **2019-ஆம் ஆண்டுக்கான நாட்டின் சிறந்த காவல் நிலையங்களுக்கான விருது பட்டியலில், தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்துக்கு நான்காவது இடம் கிடைத்துள்ளது**.
- **ஆசியாவிலேயே முதல் முறையாக குழந்தைகளுக்கென பிரத்யோகமாக யோகா மற்றும் இயற்கை மருத்துவ சிகிச்சை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல ஆஸ்பத்திரியில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.**
- **ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தில் தமிழகத்தின் 7 உயர்கல்வி நிறுவனங்கள் தேர்வு :** மத்திய அரசு அறிமுகம் செய்த, இந்திய பொருளாதார வளர்ச்சிக்கான பல துறைகள் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் (எஸ்.டி.ஆர்.ஐ.டி.) மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், அவிநாசிலிங்கம் மகளிர் மனை அறிவியல் மற்றும் உயர் கல்வி நிறுவனம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் ஆகிய தமிழக பல்கலைக்கழகங்கள் தேர்வாகியுள்ளன. அதுபோல, கல்லூரிகள் பிரிவின் கீழ், வ.உ.சிதம்பரம் கல்லூரி, ஹோலிகிராஸ் கல்லூரி, பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணாம்மாள் மகளிர் கல்லூரி ஆகிய 3 தமிழக கல்லூரிகளும் தேர்வாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
- **அந்தியோதயா திட்டத்தை (Mission Antyodaya) அமல்படுத்தியதற்கான தேசிய அளவிலான பஞ்சாயத்துகளின் தரவரிசையில் தமிழ்நாட்டின் திருவண்ணாமலை மாவட்டம் மொழுகம்பூண்டி ( Molugamboondi) கிராம பஞ்சாயத்து முதலிடத்தைப் பெற்றுள்ளது**.
- **தொலைநிலைப் படிப்புகளை வழங்குவதில் சிறப்பு தன்னாட்சி அதிகாரம் தமிழ் நாட்டின் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், எஸ்.ஆர்.எம். அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், தஞ்சை சண்முகா கலை, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அகாதெமி** ஆகிய 4 கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு வழங்கியுள்ளது. இதன் மூலம் இந்த 4 கல்வி நிறுவனங்களும் யுஜிசி அனுமதி பெறாமலே தொலைநிலைப் படிப்புகளைத் தொடர்ந்து நடத்த முடியும்.
- தமிழகத்தில் செயல்படுத்தப்படும் கூட்டுப்பண்ணைய முறை , நுண்ணீர் பாசன திட்டம், ‘இ-தோட்டம்’ திட்டம் உள்ளிட்ட 5 வேளாண் துறை திட்டங்களுக்கு **‘ஸ்காச்’ நற்சான்றிதழ்கள்** ஸ்காட்ச் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.
- **ஒப்பந்த சாகுபடி செய்யும் விவசாயிகள் நலன் காக்க புதிய சட்டம் இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது.** தமிழ்நாடு வேளாண் விளைபொருள், கால்நடை ஒப்பந்தப் பண்ணையம், சேவைகள் ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல் சட்டத்தின் படி (Tamil Nadu Agricultural Produce and Livestock Contract Farming and Services (Promotion and Facilitation) Act, 2019) கொள்முதலாளர் அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனத்துடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்யும்போது, அன்றைய தினத்தின் விலையையே, பொருள்களைப் பரிமாற்றம் செய்யும்போதும் நிர்ணயிக்கும் வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

- **தமிழக அரசிற்கு மின்னணு பஞ்சாயத்து புரஸ்கார் விருது** : ஊராட் 2019சிகளில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைகளை திறம்பட செயல்படுத்தியதற்காக, தேசிய அளவில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டு மத்திய அரசின் மின்னணு பஞ்சாயத்து புரஸ்கார் விருதைப் பெற்றது
- **மாநில வரி வருமானத்தில், தமிழ்நாடு அரசு இந்தியாவில் நான்காவது இடத்தில்** உள்ளது.
- **ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தின் தரம் மற்றும் உள்கட்டமைப்பில் சிறந்த விளங்கியதற்காக மத்திய அரசின் சிறந்த மாநிலத்துக்கான விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.**
    - **கிராமப்புற துப்புரவு கணக்கெடுப்பு 2019** (rural Swachhta survey) ல் பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடத்தையும், ஹரியானா மற்றும் குஜராத ஆகியவை முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளன.
- **மூத்த குடிமக்களின் நலனுக்காக சிறப்பாக பணியாற்றியதற்காக தமிழக அரசுக்கு, மத்திய அரசின் 'வயோஸ்ரேஸ்தா சம்மான்' விருது வழங்கப்பட்டுள்ளது.** முதியோர் நலனுக்காக 2007-இல் இயற்றப்பட்ட சட்ட ஷரத்துகளை முதியோர், பெற்றோர் நலன் காக்கும் வகையில் நாட்டிலேயே சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக தேசிய விருது தமிழகத்திற்கு கிடைத்துள்ளது.

**கூ.தக. :**

- தமிழகத்தில் முதியோருக்கான உணவூட்டும் மானியம் ரூ.653-இல் இருந்து ரூ.1,200ஆகவும், அவர்களுடன் வசிக்கும் குழந்தைளுக்கான மானியம் ரூ.750-இல் இருந்து ரூ.900 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.
- பெற்றோர், மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச் சட்டம் 2007 மற்றும் விதி 2009-இன் படி, தமிழகத்தில், கோட்டாட்சியர்கள் தலைமையின் கீழ் 81 தீர்ப்பாயங்கள், ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளன.

- **பள்ளிக் கல்வித்தரத்தில் இரண்டாவது இடத்தில் தமிழகம்** : நீதி ஆயோக் வெளியிட்டுள்ள 2016-2017 -ஆம் கல்வியாண்டுக்கான தேசிய அளவிலான பள்ளிக் கல்வியின் தரத்தில் ஒட்டுமொத்த செயல்திறன் மதிப்பெண் பட்டியலில் 20 பெரிய மாநிலங்களில், கேரளா 76.6 சதவீத மதிப்பெண்ணுடன் முதல் இடத்திலும், உத்தரப்பிரதேசம் 36.4 சதவீத மதிப்பெண்களுடன் கடைசி இடத்திலும் உள்ளன. தமிழகம் 73.4 சதவீதத்துடன் 2-வது இடத்தில் உள்ளது. இது கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் 63.2 சதவீதமாக இருந்தது.
- **இந்தியாவிலேயே முதல் மாநிலமாக , பள்ளிக் கல்வித்துறைக்கென 24 மணி நேரமும் ஒளிபரப்பாகும் பிரத்தியேக தொலைக்காட்சி, தமிழக அரசின் பள்ளிக் கல்வித்துறையினால் தொடங்கப்பட்டுள்ளது**. இதற்காக சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் 8-வது தளத்தில் கல்வி தொலைக்காட்சி அலுவலம், ஸ்டுடியோ அமைக்கப்பட்டுள்ளது.
- **ஊட்டச்சத்து இயக்க (போஷன் அபியான்) திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக தேசிய அளவில் தமிழகத்திற்கு முதலிடத்திற்கான இரு விருதுகளும், இரண்டாமிடத்திற்கான ஒரு விருதும் வழங்கப்பட்டன.**

- **டெல்லியை போன்று மும்பையிலும் தமிழ்நாடு இல்லம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது**.
- **2019 ஆம் ஆண்டின் இந்தியாவிலேயே சிறந்த காவல் நிலையங்களில் முதலாவதாக கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் காவல் நிலையமும் , ஐந்தாவதாக சென்னை அண்ணா நகர் காவல் நிலையமும்** அறிவிக்கப்பட்டுள்ளன.
- **மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் அதிக நிதியுதவி பெறுவதில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளது.** இப்பட்டியலில் முதலிடத்தில் குஜராத் உள்ளது.
- **நீதி ஆயோக் வெளியிட்ட சுகாதார தரவரிசைப் பட்டியலில் தமிழகத்துக்கு 9-ஆவது இடம் கிடைத்துள்ளது**.
- இந்தியாவிலேயே முன்மாதிரியாக, தமிழகத்தில் விவசாயிகளுக்கு இ-அடங்கல் வழங்கும் திட்டம் ஜூலை 2019 முதல் அமலுக்கு வந்துள்ளது.
- **மூன்றாம் பாலினத்தவருக்கான முதல் பல்நோக்கு மருத்துவ மையம்** : சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.15 லட்சம் மதிப்பில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பல்நோக்கு மருத்துவ மையத்தை அமைச்சர் சி. விஜயபாஸ்கர் திறந்து வைத்தார். தமிழகத்தில் அரசு மருத்துவமனையில் இதுபோன்ற மருத்துவ மையம் திறக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- **உலகின் மிகப்பெரிய இரயில் பெட்டி தயாரிக்கும் நிறுவனமாக சென்னையிலுள்ள ஒருங்கிணைந்த இரயில்பெட்டிகள் ஆலை** (Integral Coach Factory (ICF)) உருவெடுத்துள்ளது. ஐ.சி.எஃப் நிறுவனம், 2018 -2019 ஆம் நிதியாண்டில் 2919 இரயில் பெட்டிகளை தயாரித்துள்ளது. ஆனால், இதுவரையில் உலகின் மிகப்பெரிய இரயில் பெட்டி தயாரிப்பாலையாக அறியப்பட்டிருந்த சீன நிறுவனம் மொத்தம் 2600 இரயில் பெட்டிகளையே தயாரித்துள்ளது.
- **தமிழ்நாடு சமூக நலத்துறைக்கு மத்திய அரசின் 'நாரி சக்தி புரஸ்கார்' விருது** : சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரத்துக்கு சிறப்பாக சேவை செய்த பெண்கள் மற்றும் அமைப்புகளுக்கு 'நாரி சக்தி புரஸ்கார்' என்ற பெண்களுக்கான உயரிய விருதை மத்திய பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்த ஆண்டு இவ்விருதுக்கு தமிழ்நாடு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறை, நாட்டின் ஒரே கமாண்டோ பெண் பயிற்சியாளர் சீமா ராவ் உள்பட 44 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.
- **தேசிய அளவில், ஆரோக்கியமான உணவு முறைகளை, பொதுமக்களிடம், சிறப்பாக விளக்கி, விழிப்புணர்வு ஏற்படச் செய்த மாநிலம் என்ற வகையில், தமிழகத்துக்கு, மத்திய அரசின் விருது கிடைத்துள்ளது.** ஊட்டச்சத்துடன் கூடிய உணவு வகைகளை, பொதுமக்கள் உட்கொள்வது குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை, பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து, அனைத்து மாநிலங்களிலும், மத்திய அரசு மேற்கொண்டிருந்தது.இதன் மூலம், 'சரியான, பாதுகாப்பான,ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுங்கள்' என்ற மையக் கருத்துடன் கூடிய விழிப்புணர்வை, பொதுமக்களிடம், பல்வேறு பிரசாரங்கள் மூலம் விளக்கிக் கூற, நடவடிக்கை எடுக்கப்பட்டது.மற்ற மாநிலங்களை விட, இந்த விழிப்புணர்வு இயக்கத்தை திறம்பட

செயல்படுத்தியதற்காக, தேசிய அளவிலான, 'ஸ்வஸ்த் பாரத் யாத்ரா' விருதுக்கு, தமிழகம் தேர்வாகியுள்ளது. மேலும், சிறப்பாக செயல்படுத்திய நகரங்கள் உட்பட, பல்வேறு பிரிவுகளின் கீழ், தமிழகத்தின் மதுரை மற்றும் சிவகாசி நகரங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- **பெண் குழந்தைகள் பாதுகாப்பில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழக அரசுக்கு 2 விருதுகளை** மத்திய அரசு வழங்கியுள்ளது.
    - மத்திய அரசின் திட்டமான பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளை படிக்க வைப்போம் என்ற திட்டத்தை இந்திய அளவில் சிறப்பாக செயல்படுத்தியதற்காக தமிழக அரசுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.
    - மக்கள் மத்தியில் இந்த திட்டத்தை சிறப்பாக எடுத்து சென்றதில் முதலிடம் பெற்ற திருவண்ணாமலை மாவட்டத்திற்கும் விருது வழங்கப்பட்டது.
- **இந்தியாவில், காற்றாலை மின்சார நிறுவு திறனில், தமிழகம் முதலிடத்தில் உள்ளது.** காற்றாலைகள் வாயிலாக, 2017 ஜூலை, 27ல், 5,096 மெகாவாட் மின்சாரமும்; சூரிய சக்தியில், 2018 அக்டோபரில், 1,924 மெகாவாட் மின்சாரமும் பெறப்பட்டது.
- **வெளிநாடுகளில் ஆவின் பால் விற்பனை :**
    - முதல் முறையாக, சிங்கப்பூர் நாட்டில், 1 லிட்டர் கொள்ளளவில், ஆறு மாதங்கள் கெடாத, ஆவின் பால் விற்பனை, 2017 இறுதியில் துவக்கப்பட்டது. இதுவரை, 2.16 லட்சம் லிட்டர் பால் விற்பனையாகி உள்ளது.
    - ஹாங்காங்கில், 2018 ஆகஸ்டில், பால் விற்பனை துவக்கப்பட்டது.
    - **பிப்ரவரி 2018 , 1ம் தேதி முதல், கத்தார் நாட்டில், ஆவின் பால் விற்பனை துவக்கப்பட உள்ளது**. இதைத் தொடர்ந்து, துபாய், இலங்கை, மொரீஷியஸ், மாலத் தீவு, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும், ஆவின் பால் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது

      **கூ.தக. :** தமிழகத்தில், தினமும், 22.75 லட்சம் லிட்டர் ஆவின் பாலும்; 1 கோடி ரூபாய் மதிப்பிலான, தயிர், வெண்ணெய் உள்ளிட்ட ஆவின் பால் பொருட்களும் விற்பனையாகின்றன.
- **தமிழகத்தில் முதன் முதலாக மாணவர் காவல் படை சென்னையில் 22-1-2019 அன்று தொடங்கப்பட்டுள்ளது**. பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்திலும், பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களிடம் விழிப்புணர்வையும், நல்ல சிந்தனையையும் வளர்க்கும் வகையில் தமிழக காவல்துறை, வருவாய்த் துறை,பள்ளிக் கல்வித்துறை ஆகியவை இணைந்து இந்த மாணவர் காவல் படை என்ற புதிய மாணவர் படையை உருவாக்கியுள்ளன.
- **தமிழகத்தில் சென்னை, திருச்சி, சேலம், ஓசூர், கோவை நகரங்களை இணைக்கும் வகையிலான ராணுவ தளவாட உற்பத்தி வழித்தட திட்டத்தை திருச்சியில் மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் 20-1-2019 அன்று தொடங்கிவைத்தார்.**
- **தமிழ்நாட்டில் ஒரு முறை பயன்படுத்தியதும், தூக்கி வீசப்படும், பிளாஸ்டிக் பொருட்களுக்கு, தமிழக அரசு விதித்துள்ள தடை 01-01-2019 முதல் அமலுக்கு வந்துள்ளது.**
- **அந்நிய நேரடி முதலீடுகளை அதிகளவில் ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் 3-வது இடத்தில்** உள்ளது.

- உடல் உறுப்பு தானத்தில், இந்திய அளவில் தமிழகம் முதலிடத்திலுள்ளது.

- **எச்.ஐ.வி. தொற்று பரவுவதை தடுப்பதில் உலக அளவில் 3-வது இடத்தில் தமிழகம்** : 2001-2002-ம் ஆண்டில் 1.13 சதவீதமாக இருந்த எய்ட்ஸ் நோயின் தாக்கம் தற்போது 0.25 சதவீதமாக குறைந்துள்ளது. இது தேசிய அளவை விட (0.29 சதவீதம்) குறைவானது. தாயிடம் இருந்து சேய்க்கு எச்.ஐவி. தொற்று பரவுவதை தடுப்பதில் உலக அளவில் கியூபா மற்றும் தாய்லாந்துக்கு அடுத்தபடியாக தமிழகம் 3-வது இடத்தில் உள்ளது.

- **முதலீட்டுக்கு உகந்த மாநிலங்களின் பட்டியல் 2018 (N-SIPI - NCAER State Investment Potential Index) -ல் புது தில்லி முதலிடத்தையும் தமிழ்நாடு இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளது**. NCAER எனும் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த பட்டியலில் மூன்றாம் இடத்தை குஜராத் மாநிலமும், நான்காம் இடத்தை ஹரியானா மாநிலமும், ஐந்தாம் இடத்தை மஹாராஷ்டிரா மாநிலமும் பெற்றுள்ளது.

- **பிராமணர் அல்லாதவர் அர்ச்சகராக நியமனம்** : மதுரை அய்யப்பன் கோவிலில், பிராமணர் அல்லாத மாரிச்சாமி என்பவர், முதல் முறையாக, அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.'அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம்' என, 2006ம் ஆண்டு, முதல்வராக இருந்த கருணாநிதி உத்தரவிட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.இதற்கிடையே, பிராமணர் அல்லாதவர்கள் அர்ச்சகராவதற்கான பயிற்சியை, 2008ல் தமிழக அரசு நடத்தியது. இப்பயிற்சியை, 206 பேர் நிறைவு செய்தனர். உச்ச நீதிமன்ற வழக்கில், 'ஆகம விதிகளை மீறினால், பணிநீக்கம் செய்யலாம்' என்பது உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன், 'பிராமணர் அல்லாதவர்களை அர்ச்சகராக நியமிக்கலாம்' என, தீர்ப்பு வழங்கப்பட்டது.இதையடுத்து, அர்ச்சகர் பயிற்சி முடித்த, மாரிச்சாமி என்பவரை, மதுரை தல்லாகுளம் அய்யப்பன் கோவில் அர்ச்சகராக, முதல் முறையாக தமிழக அரசு நியமித்துள்ளது.

- **2017- - 18ம் கல்வி ஆண்டு, சிறந்த பள்ளிக்கான தேசிய விருதுக்கு வேலூர் மாவட்டம், வாலாஜாப்பேட்டை ஒன்றியம், பாலாற்றங்கரையில் அமைந்துள்ள பூண்டி ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி** தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- **தமிழக சட்டசபையில் லோக் ஆயுக்தா சட்ட மசோதா 09-07-2018 அன்று நிறைவேறியது**

- **தமிழக அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி காவிரிநீர் மேலாண்மை ஆணையம், காவிரி ஒழுங்காற்றுக் குழு ஆகியவற்றின் தலைவர், உறுப்பினர்களை மத்திய அரசு நியமித்து 22-06-2018 அன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது.** இதற்கான அறிவிக்கை அரசிதழில் 01-06-2018 அன்று வெளியிடப்பட்டது. இதன் மூலம் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

# 11. தமிழகத்தில் மின்னாளுகை. ( e-governance in Tamil Nadu.)

மின் ஆளுமையில் தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதனைத் தமிழ்நாடு மின்னாளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency – TNeGA), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (Electronics Corporation of Tamil Nadu – ELCOT) மற்றும் தேசிய தகவலியல் மையம் (National Informatics Centre –NIC) ஆகியவற்றின் துணையுடன் தமிழக அரசின் தகவல் தொழிநுட்பவியல் துறை முன்னின்று வழிநடத்துகிறது.

தமிழக அரசின் "மின்னாளுமைக் கொள்கை" (e-Governance Policy) 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

**தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை**

தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் தலைமையேற்று செயல்படுத்திட, மின்னாளுமை ஆணையரகம் 2006-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய மின்னாளுமைத் திட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு மின்னாளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency – TNeGA) தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம், 1975–இன்கீழ் பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. நல்லாளுமையை நிறைவு செய்யும்பொருட்டு, தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் வாயிலாக, அரசாங்கத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மக்களுக்குச் இணக்கமான வகையில் வெளிப்படைத்தன்மையுடன் திறன் மிகுந்த சேவைகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

தகவல் தொழில்நுட்பத்தின் கருவிகளைப் பயன்படுத்தி, பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, குறைந்த செலவிலும், அளவிடக்கூடிய நிர்வாகத் தீர்வுகளை வழங்குவதும் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களான நம்பிக்கை இணையம் (Blockchain),செயற்கைநுண்ணறிவு (Artificial Intelligence), / இயந்திர கற்றல்(Machine Learning) பொருட்களின் இணையம் (IoT), ஆளில்லா குறுவிமானங்கள் (Drones), தரவுப்பகுப்பாய்வு (Data Analytics), மிகைநிகர்உண்மை / மெய்நிகர் உண்மை (Augmented Reality/Virtual Reality) ஆகியவற்றை முழுமையாக பயன்படுத்தி அரசின் சேவைகளைத் திறம்பட வழங்குவதே தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் குறிக்கோளாகும்.

**மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)**

மாநில மின் குறிக்கோள் குழு (SeMT), மாநில அரசுகளின் மின்னாளுமைத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் (NeGP) கீழ், திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. மாநில மின் குறிக்கோள் குழுவானது மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சகம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. SeMT ஆனது திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை ஆகிய பிரிவுகளின் ஆலோசகர்களைக் கொண்ட ஒரு முக்கிய அமைப்பாகும்.

www.portalacademy.in

**மாவட்ட மின்னாளுமை சங்கம்**

மின்னாளுமை மாவட்ட திட்டம் என்பது தேசிய மின்னாளுமை திட்டத்தின் கீழ் மாநில கொள்கை முனைப்பு திட்டங்களின் (State Mission Mode Project) ஒரு பகுதியாக விளங்குகிறது. மிக அதிக அளவில் சேவை வழங்கப்படும் அரசு சேவைகளில், சேவைகளின் தரத்தை உயர்த்தி, இணையம் மூலமாக வழங்குவதற்காக, தகவல் தொழில்நுட்பம் மற்றும் அரசு செயல்பாடுகள் மறுசீரமைப்பு தொழில்நுட்பங்களை இந்த திட்டத்தில் பயன்படுத்துகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை அரசாணை படி அனைத்து மாவட்டங்களிலும் மின்னாளுமை மாவட்ட திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட மின்னாளுமை சங்கம் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டு, அதன் படி மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக்கொண்ட மாவட்ட மின்னாளுமை சங்கம் 30.12.2012 அன்று ஏற்படுத்தப்பட்டது.

**ஆதார் பதிவுக்கான நிரந்தரப்பதிவு மையங்கள்**

ஆதார் பதிவுக்கான பதிவாளராக மின்னாளுமை இயக்குநரகம் (DeG) / தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) நியமிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட் (TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) ஆகியவை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் பதிவு முகவர்களாகச்செயல்பட இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) தமிழ்நாட்டில் நிரந்தரப் பதிவு மையங்களாக (PECs) நியமிக்கப்பட்டுள்ளனர். நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs) ஆதார் சேர்க்கைக்காக தமிழ்நாடு முழுவதும் மாவட்ட ஆட்சியரகங்கள், மாநகராட்சித் தலைமையகங்கள், நகராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் நகராட்சிகளில் அமைந்துள்ளன. கட்டாயம் உயிர்சார் (Bio-metric) புதுப்பிப்பு 3.10.2016 முதல் இணைய இணைப்பு இல்லாத நிலையிலும் இணைய இணைப்புடன் கூடிய மாநில மக்கள் தொகைப்பதிவு மென்பொருள் மூலமாக 07.11.2016 முதல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த சேவைகள் இலவசமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்சமயம் 311 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள், 483 முகப்புகளைக் கொண்டு தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

**UMANG செயலி :**

Unified Mobile Application for New Age Governance தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மின்னாளுமை மூலம் மத்திய அரசுத் துறைகள் முதல் உள்ளாட்சித் துறைகள் வரை வழங்கப்பட்டு வரும் சேவைகள் ஒரே தரவுதளத்தின் கீழ் இச்செயலி வழங்கும். தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலம் மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் சேவைகள் முதற்கட்டமாக வருவாய்துறை கீழ் வரும் சேவைகள் சாதி சான்றிதழ், பிறப்பிட சான்றிதழ், வருமான சான்றிதழ் ஆகியவை செயலியில் இணைக்கபட்டுள்ளது.

https://web.umang.gov.in/web/#/ என்ற URL மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம்** (State Family Data Base)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஜனவரி 2019- இல் மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையின் மீதான பதிலுரையின் போது மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத்

தரவு தளம் (SFDB) உருவாக்கப்படும் என அறிவித்திருந்தார். மாநிலத்தில் குடியிருப்போரின் குடும்பத் தரவு தளம் (SFDB) தமிழ்நாட்டில் குடியிருப்போரின் தரவுகளின் ஒற்றை ஆதாரமாக விளங்கும். பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கான பயனாளிகளைத் தங்குதடையின்றித் துல்லியமாக அறிந்திட உதவும் SFDB மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் மின்னணுமயமாக்கப்பட்ட தரவு தளமாக இத்தரவு தளம்விளங்கும்.

**"நம்பிக்கை இணையம்" (Nambikkai Inaiyam)**

"நம்பிக்கை இணையம்" (Nambikkai Inaiyam) என்ற பெயரில் தமிழ் நாடு கட்டச்சங்கிலி பின்னணியம் (Tamil Nadu Blockchain Backbone) உருவாக்கப்பட்டு வருகிறது.

**தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை**

அரசுத் துறைகளின் முக்கியத் தகவல்களைக் கொண்ட இணையதளங்களை பாதிப்புகள் மற்றும் ஊடுருவல்களிலிருந்து பாதுகாத்திட தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை ரூ.1.76 கோடி செலவில் தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. CERT-IN அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அரசுத்துறைகளின் இணையதளங்கள் மற்றும் மென்பொருள்களைத் தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

**இணையவழித் தேர்வுகளை சேவையாக வழங்குதல்**

இணையவழித் தேர்வு முறையைப் பல்வேறு அரசுத் துறைகள் தங்கள் காலிப்பணியிடங்களை நிரப்ப குறுகிய காலத்திலும் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தலாம். இதில் தேர்விற்கு முந்தைய நிலை மற்றும் தேர்விற்குப் பிந்தைய நிலை செயல்பாடுகள் அடங்கும். இதற்காக தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), திருவாளர்கள் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேன்ஞ் இன்பர்மேஷன் டெக்னாலஜி லிமிடெட் (M/s. (National Stock Exchange Information Technology Limited (NSEIT)) என்ற நிறுவனத்தை இதற்கென தேர்வு செய்துள்ளது.

**உள்ளங்கையில் சான்றிதழ் திட்டம் (Tiny Uniform Resource Locator - Tiny URL)**

அரசுத் துறைகள் பொதுமக்களுக்கு வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை அவர்கள் எந்நேரமும் எங்கும் பதிவிறக்கம் செய்திடும் வகையில் குறுஞ்செய்தி மூலம் அளித்திட ந. உதவுகிறது. இதுவரை 83,08,842 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**அரசுத்துறை இணைய தளங்களின் அணுகுதகமை (Accessibility), தரநிலைப்படுத்துதல்**

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு இணையதளங்கள் S3WaaS (Secure, Scalable and Sugamya Website as a service) கட்டமைப்பின்படியும் அரசு வலைத்தளங்கள் வழிகாட்டி(GIGW) பாதுகாப்பு வழிமுறைகளின்படியும் புதுப்பிக்கப்பட் டுள்ளன .S3WaaS சேவையானது ஒரு இணையதள உருவாக்கம் மற்றும் இணையதளத்தை உருவாக்கி வெளியிட உதவும் ஒரு தேசிய தகவலியல் மையத்தின் மென்பொருள் ஆகும் .

**அம்மா இ கிராமம் திட்டம்**

தமிழக சட்டமன்றப் பேரவை விதி எண்.110-இன் கீழ் தமிழக சட்டமன்றப் பேரவையில் :அம்மா இ -கிராமம்- என்ற திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தை தேர்ந்தெடுத்து அந்தந்த கிராமத்தில், அம்மா இ.கிராமம் திட்ட நோக்கங்களை செயல்படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ள து. தேர்ந் தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள கிராமப்புற மக்களுக்கு தொலை நோக்கு - மருத்துவம். தொலை நோக்கு கல்வி , ஒளி உமிழும் டையோடு (LED) விளக்குகள், நம்பிக்கையான கம்பியில்லா சேவை (WiFi hotspot), திறன் மேம்பாடு, மின்மயமாக்கல் அறிவு மையம் மற்றும் பொது சேவை மையங்கள் போன்ற சேவைகளின் பயன்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு தளத்தை இது உருவாக்க விழைகின்றது . இந்த திட்டம் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் செயல்படுத்தப்படும். இன்று வரை 1.62 கோடி பெறப்பட் டுள்ளது. முதலாம் கட்டமாக இந்த திட்டம் 6 கிராமங்களில் செயல்படுத்தப்படும். ஆறு கிராமங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன

1 வன்னிக் கோனேந்தல், மேலநீலித நல்லூர் வட்டாரம், திருநெல்வேலி

2 டபரியாம்பட்டி, கரியமங்கலம் வட்டாரம், தர்மபுரி

3 நெடுமொழியனூர், மயிலம் வட்டாரம், விழுப்புரம்

4. கோனேரிபட்டி, எடப்பாடி வட்டாரம், சேலம்

5. வாங்கல், கரூர் வட்டாரம், கரூர்

6 விஸ்வநாதம், சிவகாசி வட்டாரம், விருதுநகர்

**தகவல் தொழில்நுட்பவியல் ஆளுமைக்கான மன்றம் (G – IT Forum)**

தலைமைச் செயலகத்தில் உயர்பதவியில் உள்ள அலுவலர்களுக்கு சூறிப்பிட்ட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கலந்துரையாடல் ஒன்று மாதந்தோறும் நடத்தப்படுகிறது.

**தமிழ்நாடு பொறியியல் கல்வி சேர்க்கைக்கான கலந்தாய்வு (TNEA)**

தொழில்நுட்பக் கல்வி இயக்குநாகத்தின் (DOTE) கீழ் செயல்படும் கல்வி நிறுவனங்கள் வழங்கும் பட்டப்படிப்புகளைத் தேர்வு செய்யும் மாணவர்களுக்கு இணையவழி கலந்தாய்வு நடத்த உயர்கல்வித் துறை உத்தேசித்துள்ள து. சவால் மிகுந்த &இப்பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA) தொழில்நுட்பக் கல்வி இயக்குநாகத்திற்கு (DOTE) இணையவழிக் கலந்தாய்விற்கான மென்பொருளை பயன்படுத்திடத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்கும்.

**மின் அலுவலகம்**

மின் அலுவலகம் என்பது அலுவலக நடைமுறைகளை மின்னணு முறையில் செயல்படுத்துவதற்கான ஒரு கருவியாகும். கோப்புகளை விரைவாக முடித்திட மின் அலுவலகத்தின் மின்னணுக்கோப்பு மேலாண்மை பயன்படும். பணிப்பாய்வு

மேலாண்மையானது கோப்புகளை உருவாக்குதல், இயக்கம், கண்காணித்தல் மற்றும் ஒப்புதல் ஆகியவற்றில் மின்னணுமுறையில் செயல்படுத்த உதவுகிறது, இதன் விளைவாக மனிதவளத்தைத் திறம்படப் பயன்படுத்திட, தாமதங்களைத் தவிர்த்து, சிறந்த நிர்வாகத்திற்கு வழிவகுக்கிறது.

**மக்கள் எண்**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2018- 19 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்பான உரையின்போது வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் "மக்கள் எண்" எனும் எண்ணை உருவாக்கியுள்ளது. இந்த எண்ணானது மாநிலக்குடும்பத் தரவு தளம் அமைக்க ஒரு அடித்தளமாக இருக்கும் மற்றும் இந்தப் பயன்பாடு தங்குதடையற்ற வெளிப்படையான எளிதில் அணுகுதகமையுடன் அரசின் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கும்.

**இலக்க (டிஜிட்டல்) ஆவணகாப்பகம் (https://digiarchives.tn.gov.in)**

தமிழகத்தின் இலக்க (டிஜிட்டல்) ஆவணகாப்பகம் என்பது தமிழ்நாடு மின்-ஆளுமை முகமையின் ஒரு முயற்சியாகும். இலக்க (டிஜிட்டல்) வடிவில் மாநிலத்தில் உள்ள பல்வேறு துறைகள் மூலம் கிடைக்கக்கூடிய நுட்பமாய்ச் சோதித்த காப்பகப்படுத்தப்பட்ட ஆவணங்களை ஒருங்கிணைத்து வழங்குவதற்கு ஒரு தளத்தை இந்த திட்டம் வழங்குகிறது மற்றும் இது வருடம் வாரியாக வரிசைப்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்டு, திறவுச்சொற்கள் மூலம் எளிதில் தேடி ஆவணங்களை பார்ப்பதற்கும் பதிவிறக்கம் செய்வதற்கும் பாதுகாக்கப்பட்ட அணுகல் முறையை கையாள்கிறது. இந்த திட்டத்தின் மூலம் தமிழக அரசு துறைகள் தங்கள் காப்பகங்களை வெளியிடுவதற்கும், பொதுமக்களுக்கு எளிதில் அணுகுவதற்கும் துணைபுரியும் வகையில் மாநிலத்தின் கலை உள்கட்டமைப்பில் வழங்கப்படுகிறது.

**திறன் மேம்பாடு**

திறன் மேம்பாடு என்பது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) ஒரு குறிக்கோள் திட்டமாகும். அரசியல் மற்றும் கொள்கை அளவிலான முடிவெடுப்பவர்களுக்கு தொழில் முறையிலான உதவிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் .

திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளின் விவரம்:

- மின் கையெழுத்து விழிப்புணர்வுத் திட்டம்
- சிந்தனை வடிவமைப்புத் திட்டம்
- மின் அலுவலக மென்பொருள் பயிற்சி

**வளர்ந்துவரும் தொழில் நுட்பத்திற்கான உயர்தனிச் சிறப்பு மையம் (Centre of Excellence for Emerging Technology (CEET))**

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களான, நம்பிக்கை இணையம் (Blockchain), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திரக் கற்றல் (Machine Learning), பொருட்களின் இணையம் (Internet

of Things), குறு விமானங்கள் (Drones), மிகை நிகர் உண்மை (Augumented Reality), மெய்நிகர் உண்மை (Virtual Reality), சேர்க்கை உற்பத்தி (Addictive Manufacturing), பகுப்பாய்வு (Analytics), புவிசார் தகவல் அமைப்பு (Geographical Information System-GIS) ஆகியவற்றைப் பயன்படுத்தி இதுகாறும் தீர்க்கப்படாத ஆளுமை குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், புதிய தொழில் நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையத்தை (Centre of Excellence for Emerging Technology (CEET)) அமைப்பதாக கடந்த 2019-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இச்சிறப்பு மையமானது அரசுத் துறைகளில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் உயர்தொழில்நுட்பப் பயன்பாடு ஆகியவற்றிற்கிடையே ஏற்படும் அறிவு இடைவெளியை சமன்செய்யும் ஒரு பாலமாக நிறுவப்படும். தெரிந்தெடுக்கப்பட்ட அரசுத் துறைகளின் புதுமையான முயற்சிகளுக்கு உதவும் ஒரு வினையூக்கியாக (Catalyst) விளங்குகிறது. இந்த மையம் தொழில்நுட்பவியல் துறையில் உள்ள பிற பங்குதாரர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு தளமாக விளங்குகிறது. இதுமட்டுமல்லாமல் இந்த மையம் தொழிற்துறை, அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் தேவைகளை இணைக்கும் பாலமாக விளங்குகிறது.

### தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பு இடம்சார் அல்லது புவிசார் தரவுகளைக் கண்டறிந்து சேமிக்கவும், கையாளவும், பகுப்பாய்வு செய்யவும், நிர்வகிக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். புவியியல் தகவல்களை ஒருங்கிணைத்தல், சேமித்தல், பகுப்பாய்தல், பகிர்தல் மற்றும் வெளிக்காட்டுதல் ஆகியவற்றை செய்யும் ஒரு தகவல் மேலாண்மை அமைப்பாகும்.

தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பில் தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு உட்கட்டமைப்பு (TNSSDI), www.tngis.tn.gov.in என்ற வலைதளத்தில் புவிசார் தகவல் அமைப்பு தொடர்பான அனைத்து தகவல்களும் வெளியிடப்பட்டுள்ளன .இது தமிழகத்தில் புவிசார் தகவல்களை ஒருங்கே கொண்ட இணையதளமாக விளங்குகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை 29 துறைகள் / நிறுவனங்கள் தங்களது அடுக்குகளைப் பகிர்ந்துள்ளன.

### இ.அடங்கல் வலை பயன்பாடு

கிராமம் , வட்டம் , மாவட்டம் மற்றும் மாநில அளவில் விவசாய உற்பத்தியைக் கணக்கிடும் ஒரு முக்கிய அடிப்படை வருவாய்துறை ஆவணமாக அடங்கல் கருதப்படுகிறது. இது கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் கிராமக் கணக்கு எண் 2 ஆகும். தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNGeA) "அடங்கலின் வலைப்பதிப்பை உருவாக்கியுள்ளது. இ.அடங்கல் வலை பயன்பாடு 26.10.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது

### இ-அடங்கல் கைபேசி செயலி

**இ**-அடங்கலுக்கான கைபேசிச் செயலியைத் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை உருவாக்கியுள்ளது இது 05.03.2019 அன்று தொடங்கப்பட்டது. மின் அடங்கலின் அனைத்து செயல்பாட்டுச் சேவைகளும் எளிய முறையில், இந்தச் செயலி மூலம் விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது.

### திறன் மேம்பாடு

திறன் மேம்பாடு என்பது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) தேசிய மின் ஆளுமை திட்டத்தின் (NeGP) ஒரு குறிக்கோள் திட்டமாகும். அரசியல் மற்றும் கொள்கை அளவிலான முடிவெடுப்பவர்களுக்கு தொழில் முறையிலான உதவிகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் . திறன் மேம்பாடு திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளின் விவரம் :-

- மின் கையெழுத்து விழிப்புணர்வுத் திட்டம்
- சிந்தனை வடிவமைப்புத் திட்டம்
- மின் அலுவலக மென்பொருள் பயிற்சி

### மின்னாளுமை முகமையினால் வழங்கப்படும் விருதுகள்

மாண்புமிகு முதலமைச்சரின் மாணவர்களுக்கான மின்னாளுமை உயரிய விருது மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் ம்ன்னாளுமை ஆர்வலர்களிடையே மின்னாளுமை சூறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு, மாணவர்களுக்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மின். ஆளுமைக்கான உயரிய விருதை: அறிவித்துள்ளது. 08.10.2018 அன்று சென்னையில் நடைபெற்ற “கனெக்ட் 2018” (CONNECT 2018) நிகழ்வின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டன.

### தமிழ்நாடு மின்னாளுமை முகமை பெற்ற விருதுகள்

இ.பிஸ் (e-Biz) விருது - தமிழ்நாடு மின்ஆளுமை முகமை உருவாக்கிய ஒற்றைச் சாளர அமைப்பு மாநிலத்தில் தொழில்துறைத் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளா முறையில் அனுமதி வழங்கும் பொருட்டு முதலீட்டாளர் சேவை இணையம் ஒன்றினை உருவாக்கியதற்காக தமிழ்நாடு மின்ஆளுமை முகமை இந்த விருதினைப் பெற்றது. மேலும் பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்களிடமிருந்து அனுமதி பெறும் முறையை எளிமையாக்கியதற்காகவும், கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை எளிய முறையில் வடிவமைத்ததற்காகவும், இந்த விருது வழங்கப்பட்டது.

### வெப் ரத்னா விருது

உலகளாவிய வலையின் ஊடகத்தைப்(World Wide Web) பயன்படுத்தி மின்.ஆளுமையில் முன்மாதிரியான முன்முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக டிஜிட்டல் இந்தியா விருதுகள் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால்(MeitY) நிறுவப்பட்டுள்ள து. கசூடிமக்களின் பல்வேறு விதமான எதிர்பார்ப்பினை பூர்த்தி செய்ய, மேம்பட்ட அணுசுதகமை டு◌ெகொண்ட வலைத்தளங்கள் மற்றும் இணையதளங்களுக்கு, பல்வேறு பிரிவுகளின் கீழ் வெப் ரத்னா: விருது வழங்கப்படுகிறது .

**இ சேவை திறந்த நிலை சேவைதளம்:-**

www.tnesevai.tn.gov.in/citizen என்ற திறந்த நிலை சேவைதளம் மூலம் பொது மக்கள் தாங்களாகவே விண்ணப்பித்து வருவாய்த்துறை கீழ் வரும் 20 சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளலாம்.

**பொது சேவை மையங்கள்**

பொது சேவை மையமானது, தொழில்நுட்பம் வாயிலாக குடிமக்களுக்கு அரசு சேவைகளை வெளிப்படையான, நம்பகமான மற்றும் எளிமையான வகையில் அணுக உருவாக்கப்பட்டதாகும். பொது சேவைகள் மையங்கள் (CSC) தேசிய மின்-ஆளுமைத் திட்டத்தின் (NeGP) கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவை அரசு, வங்கி, சமூக மற்றும் தனியார் துறை சேவைகளை வழங்குவதற்காக கிராம அளவில் தொழில்நுட்பம் வாயிலான முதல் நிலை சேவை மையங்களாக செயல்படுகிறது.

பொது சேவை மையமானது அதன் ஆப்ரேட்டர் (கிராம அளவிலான தொழில்முனைவோர்), சேவை மைய முகமை ஆகியவற்றின் மூலம் மாநில அரசால் நியமிக்கப்பட்ட முகமை (STATE DESIGNATED AGENCY) மூலமாக நடைமுறையில் உள்ளது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப இயக்ககம் (MeitY), மின்-மாவட்டம்(e-District) ஆகியவற்றினை செயல்படுத்துவதற்காக முன்னோட்ட மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு மாநில அளவிலான மின்-திட்டங்கள் தமிழ்நாடு மின்-ஆளுமை முகமை (TNeGA) மூலம் செயல்படுத்தப்பட்டது. பல்வேறு நிறுவனங்களால் இயங்கும் பொது சேவை மையம் TNeGA ஆல் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அரசின் பெரும்பான்மையான சேவைகளை ஒரே இடத்தில் உயர் தரத்துடன் குறைந்த செலவில் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கிராமப்புற பகுதிகளில் பொதுசேவை மையத்தின் வாயிலாக இணையத்தால் செயல்படுத்தப்பட்ட அரசின் மின்-சேவைகளை வழங்குவதும், கூடுதலாக விண்ணப்ப படிவங்கள், சான்றிதழ்கள் மற்றும் மின்சாரம், தொலைபேசி, குடிநீர் போன்ற அன்றாட வாழ்வில் உபயோகப்படுத்தப்படும் சேவைகளுக்கு கட்டணம் செலுத்த ஏதுவாகவும் அமைந்துள்ளது.

**நன்மைகள்:**

- பல்வேறு அரசு-குடிமக்கள் (G2C) சேவைகள் மற்றும் வணிகர்-குடிமக்கள் (B2C) சேவைகளை ஒரே இடத்தில் வழங்கப்படுகிறது.
- குடிமகன் தங்கள் வீட்டு அருகிலேயே அனைத்து சேவைகளையும் பெற முடியும
- குடிமகன் தங்கள் சேவைகளை பெறும் கால அளவு 15 நாட்களில் இருந்து 2 நாட்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது.
- பொது சேவை மையத்திட்டம் கிராமப்புற தொழில்முனைவோர்களுக்கு (VLEs), மக்கள் அமைப்புகளான தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் (PACCS), கிராம வறுமை

குறைப்புக் குழு (VPRC), விவசாய வளர்ச்சிக்கான சர்வதேச நிதி(IFAD) மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்கு இலாபகரமான வியாபாரத்தை வழங்குகிறது.

**CSC மையங்கள் நிர்வகிக்கும் நிறுவங்கள்:**

- TACTV (Tamil Nadu Arasu Cable TV Corporation Limited) - தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்
- ELCOT (Electronics Corporation of Tamil Nadu) - தமிழ்நாடு மின்னணு நிறுவனம்
- PACCS (Primary Agricultural Credit Society) - தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம்
- VPRC (Village Poverty Reduction Committee ) - கிராம வறுமை குறைப்புக் குழு
- IFAD (International Fund for Agricultural Development) - விவசாய வளர்ச்சிக்கான சர்வதேச நிதி
- VLE (Village Level Entrepreneurs) - கிராம அளவிலான தொழில்முனைவோர்

**அரசு இ-சேவை மையங்கள்**

இணைய வழியில் அரசு இ-சேவை மையங்களின் மூலமாக, தொலைதூர கிராமத்திலிருக்கும் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே அனைத்து சேவைகளையும் வழங்க வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறியுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின் சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், ஒரு பொதுவான இடத்தில் வழங்கும் நோக்கில் அரசு இ-சேவை மையங்கள் செயல்படுகின்றன.

தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் (PACCS), புது வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்பு சங்கங்கள் (VPRC), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV), தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் – பிரான்சிஸ் (TACTV Franchise), வேளாண்மை அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நிறுவனம் (IFAD) மற்றும் கிராமப்புறத் தொழில்முனைவோர் (VLE) ஆகியவற்றின் மூலம் அரசு இ-சேவை மையங்கள் நடத்தப்படுகின்றன. மொத்தத்தில் மாநில முழுவதும் 12,649 அரசு இ-சேவை மையங்களை, 13088 செயலிடை முகப்புகளுடன் தமிழகம் முழுவதும் நிறுவியுள்ளது .

**அரசு இ-சேவை மையங்கள் மூலமாக வழங்கப்படும் சேவைகள்:**

(பக்கம் அதிகமாக எடுத்துக்கொள்வதால், இங்கு வழங்க இயலவில்லை, முழு சேவைகள் பட்டியலுக்கு பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும் https://tnega.tn.gov.in/Tamil/csc.html)

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) எல்காட் நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956 இன் கீழ், 21-03-1977 அன்று, மாநிலத்தில் மின்னணுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான, பொதுத்துறை நிறுவனம் ஆகும்.

தொடக்கத்திலிருந்து, பல கூட்டு நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களை முன்னேற்றுவதன் மூலம், மின்னணுத் தொழில் துறை வளர்ச்சி பெறுவதற்கு, எல்காட் நிறுவனம்

பங்களித்து செய்துகொண்டது. பின்னர், எல்காட் நிறுவனம் தன்னுடைய செயல்பாடுகளை விரிவுபடுத்த, சென்னை மற்றும் மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (இரண்டு), திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் சுமார் 132161 எக்கர் நிலப்பரப்பில், ரூ.56211 கோடி முதலீட்டில், எட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கி சுமார் 77,000 நபர்களுக்கு, நோடி வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

**எல்காட் நிறுவனத்தின் பணிகள்**

**மின்னணு அலுவலகம்**

எல்காட் நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக நிறுவன வளத்திட்டமிடல் மென்பொருளை (8) பயன்படுத்தி வருகிறது. மின்னணு கொள்முதல் எல்காட் நிறுவனம் தனக்குத் தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளை இணையதளம் மூலமாகக் கொள்முதல் செய்து வருகிறது.

**மின்னணு வருகைப்பதிவு**

2015.ஆம் ஆண்டு முதல், எல்காட் நிறுவனத்தில் அலுவலர்கள் / பணியாளர்களின் வருகைப்பதிவானது விரல் அச்சுப்பதிவு இயந்திரம் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இந்த மின்னணு வருகைப்பதிவு, நுழைவுக் கட்டுப்பாட்டு அமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மின்னணு-மறு ஆய்வு**

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV) , தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) மற்றும் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) ஆகிய ஐந்து துறைகளால் கையாளப்படும் திட்டங்களை, மறு ஆய்வு செய்யும் மென்பொருள் ஒன்றை எல்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது.

**எல்காட் மின்னணுச் சந்தை (ELCOT e-Market)** (ஒற்றைச் சாளரக் கொள்முதல் வலைதளம்)

emarket.elcot.in என்ற இணையதளம், ஆணையம் வாயிலாக அரசுத் துறைகள், நிகழ்நிலை மூலமாகப் பணம் செலுத்தி அதனைத் சதாடர்ந்து கண்காணிக்கவும், பணம் செலுத்துவதிலிருந்து மதமுள்ள பணத்தைத் திரும்பப் பெறும் வரையிலான நிகழ்வுகளை அவ்வப்போது தெரிந்து கொள்ளவும்

**தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs)**

தமிழ்நாட்டில் 8 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான சிறப்பு பொருளாதார மண்டலங்களை (IT / ITES / SEZs) பின்வரும் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் எல்காட் நிறுவனம் உருவாக்கியுள்ளது.

1. சோழிங்கநல்லூர், சென்னை

2. விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

3. இலந்தைக்குளம், மதுரை

4. வடபழஞ்சி, மதுரை

5. நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

6. கங்கைகொண்டான், திருநெல்வேலி

7. ஜாகீர் அம்மாபாளையம், சேலம்

8. விஸ்வநாதபுரம், ஒசூர்

எல்காட் நிறுவனம் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அடிப்படைத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், கம்பிவடக் குழாய்கள், மழைநீர் வடிகால்கள், சுற்றுப்புறச் சுவர் போன்றவற்றை உருவாக்கி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**தொழில் முனைவோர் மையங்கள்:**

இளைஞர்களின் தொழில் முனைவுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் எல்காட் நிறுவனம் சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 90 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை அமைத்துள்ளது. இதேப்போல், 50 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையக் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், கோயம்புத்தூரில் நிறுவப்பட்டுள்ளது.

**நிதி தொழில்நுட்பச் சிறப்பு மையம்** (FinTech Centre of Excellence) சென்னையிலுள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவுடன் இணைந்து சென்னையில் 2019 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்பு** (Tamil Nadu State Wide Area Network-**TNSWAN)**

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 01-12-2007 அன்று மத்திய மாநில பங்கேற்புடன் நிறுவப்பட்டது. தற்போது, இத்திட்டம் மாநில அரசின் நிதியளிப்புடன் இயங்குகிறது. வலையமைப்பு இயக்க மையம் (Network Operation Centre) எல்காட், பெருங்குடியில் அமைந்துள்ளது.

**தமிழ்நாடு மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்புத் திட்ட விவரங்கள்**

| விவரம் | காலம் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| முதலாம் கட்டம் (Phase-1) | 01.12.2007 முதல் 30.11.2012 வரை | 140.25 |
| இடைக்காலம் (Interim Period) | 01.12.2012 முதல் 08.09.2013 வரை | 16.42 |
| இரண்டாம் கட்டம் (Phase-2) | 09.09.2013 முதல் 08.09.2016 வரை | 74.69 |
| இடைக்கால செயற்பாடுகள் (Interim period operations) | 09.09.2016 முதல் 13.02.2019 வரை | 52.73 |
| இரண்டாம் கட்டம் விரிவு (Phase-2) (Extension) | 14.02.2019 முதல் 13.02.2022 வரை | 69.90 |

### தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் , எல்கோசெசஸ்,, திருச்சிராப்பள்ளி.

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத் துறைகளின் பணிகள் மற்றும் மின்ஆளுமைப் பயன்பாடுகள், சாதாரண நேரங்கள் மற்றும் பேரிடர்களின் போதும் தடையின்றித் தொடர்ச்சியாக நடைபெற ஏதுவாக, மாறுபட்ட நில அதிர்வு மண்டலத்தில், ELCOSEZ திருச்சிராப்பள்ளியில் தரவுகள் மற்றும் சேவைகளுக்கான பேரிடர் மீட்பு மையம் ரூ.59.85 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 09.02.2018 முதல் தனது செயல்பாட்டினைத் தொடங்கியது. இந்த மையம், அரசுத் துறைகளின் பதிவேற்றத் (hosting) தேவைகளையும் நிறைவேற்றும்.

### அருகாமை பேரிடர் மீட்பு மையம்

சென்னை அரசுத் துறைகளின் தரவுகளை உடனுக்குடன் பிரதி எடுத்து மீட்கும் பொருட்டு, சென்னையில் அமைந்துள்ள BSNL நிறுவனத்தின் தரவு மைய உட்கட்டமைப்பு வசதிகளைகப் பயன்படுத்தி ரூ.5.00 கோடி செலவில், அருகாமை தரவு மீட்பு மையம் 20.06.2016.இல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

### தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (TACTV)

தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் 4.10.2007 அன்று, நிறுவனச் சட்டம் 1956.இன் கீழ் நிறுவப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் தொடங்குவதற்கு முன்னர், கம்பிவடத் தொலைக்காட்சி வர்த்தகத்தில், சில பெரிய தனியார் நிறுவனத்தினர் ஆதிக்கம் செலுத்தி, பொது மக்களிடம் அதிகப்படியான கட்டணம் வசூலித்து வந்தனர். இந்நிலையில், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், மற்றும் பொது மக்களுக்கு உயர்தரமான கேபிள் டிவி சேவைகளை வழங்கும் பொருட்டும் 2011-ஆம் ஆண்டு மே மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம்

புனாமைக்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் (Tamil Nadu Arasu Cable TV Corporation Limited) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**அரசுப் பள்ளிகளுக்கு இலவச அகண்ட அலைவரிசை இணையம்**

தமிழ்நாட்டில் கல்வியில் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள 366 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.9.06 கோடி மதிப்பீட்டில் இலவச இணைய வசதி ஏற்படுத்த நிர்வாக அனுமதி அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. முதற்கட்டமாக இத்திட்டத்தை 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாடு ஆரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்த ரூ1.23 கோடி நிதி விடுவித்து அரசு உத்திரவிட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின்(TANFINET) பாரத்நெட் திட்டம் நடைமுறைக்கு வரும்போது செயல்படுத்தப்படும்.

**தனியார் இன்டர்நெட் ப்ரௌஸிங் சென்டர்களை அரசு சேவைகள் வழங்குவதற்காக பதிவு செய்தல்**

அரசு இ.சேவை மைய விரிவாக்கத்தின் முயற்சியாக, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம் 13.012018 அன்று விருப்பமுள்ள தனியார் இன்டர்நெட் ப்ரரணிங் மையங்களை அரசு இ.சேவை மையங்களின் தனியுரிமை நிறுவனங்களாகச் செயல்பட வருவாய்ப் பங்கீட்டின்படி விருப்ப இவளிப்பாடு விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. அதன் அடிப்படையில் 500 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்காக பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் விவரம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், 27.02.2019 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

**“இல்லந்தோறும் இணையம்” இணையவழி சேவை**

14.09.2015 அன்று மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு இந்தியாவில் இணையதள சேவை வழங்குவதற்கான ISP - Class-B உரிமம் வழங்கியுள்ளது. அதன்படி, இல்லந்தோறும் இணையம்: இணையவழி சேவை வழங்கும் திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 0103.2016 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. தற்போது ரயில்வட நிறுவனம் மற்றும் தொழில் பங்கீட்டாளர்களால், வருவாய்ப் பங்கீட்டு அடிப்படையில், இல்லங்களுக்கு இணைய சேவை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் மூலம் - பாரத்நெட் மற்றும் “தமிழ்நெட்” திட்டங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் பொழுது, தமிழ்நாடு அரசு கம்பிவடத் தொலைக்காட்சி நிறுவனம், வருவாய் ஈட்டுவதிலும், சந்தாதாரர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதிலும் பெரிய நிறுவனங்களுடன் போட்டியிடும் சூழ்நிலையை ஏற்படுத்திடும்.

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1983.ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதி அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இது தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

தமிழ் இணையக் கல்விக்கழகமாக 2010-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16-ஆம் தேதியிலிருந்து பெயர் மாற்றம் டசய்யப்பட்டது.

**கல்வித் திட்டங்கள்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் சான்றிதழ், பட்டயம், பட்டம் போன்ற கல்வித் திட்டங்களை வகுத்து வழங்கி வருகிறது. மேலும் கணினித் தமிழ்ப் பட்டயத்தையும் வழங்குகிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் மழலைக் கல்வி, சான்றிதழ் கல்வி, மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், தமிழியலில் இளங்கலைப் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது. இக்கல்வித் திட்டங்களில் பயில்வதற்கு வயது உச்சவரம்பு ஏதுமில்லை.

**மின் நூலகம்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் ஒரு மின் நூலகத்தை உருவாக்கியுள்ளது. இதன் இணையதள முகவரி www.tamildigitallibrary.in. இம்மின் நூலகத்தில் அரிதான அச்சிடப்பட்ட புத்தகங்கள், நாளிதழ்கள், பருவ இதழ்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், ஒளிப்படங்கள் மற்றும் காணொலிகள் ஆகிய சேகரிப்புகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப் படுத்தப்பட்டும், மேம்படுத்தப்பட்டும் வருகின்றன. இந்த இணையதளம் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழ் கலை மற்றும் கலாச்சார செயல்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் மின்னுரு வடிவத்தில் ஆவணங்கள் மற்றும் காப்பகப் பொருண்மைகளைப் பாதுகாத்து இணையத்தில் கர்வ விகவரம வவ என்ற முகவரியில் உரிய தேடுதல் வசதியுடன் பதிவேற்றி வருகின்றது.

**கணினித் தமிழ்**

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியினைப் பயன்படுத்திக் கணினித் தமிழில் ஆராய்ச்சியினை மேம்படுத்துகிறது. அடிப்படை தமிழ்த்தரவு, தமிழ் சம்பந்தப்பட்ட மென்பொருள் கருவிகள், ஒருங்குறி எழுத்துருக்கள் இன்னும் பிறவற்றை உருவாக்கி வருகிறது. மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகம் பிறரால் உருவாக்கப்பட்ட தமிழ் மென்பொருள்கள், அதன் கருவிகளைப் பரிசோதித்துச் சான்றிதழ் அளிக்கிறது. தமிழ் இணையக் கல்விக்கழகம் அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode Consortium) தமிழ்நாடு அரசின் சார்பில் உறுப்பினராக உள்ளது.

**தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)**

தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013- இன் கீழ், 08.06.2018 அன்று பதிவு செய்யப்பட்ட ஒரு தமிழக அரசு பொது நிறுவனம் ஆகும். பாரத்நெட்” மற்றும் “தமிழ்நெட்” திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம பஞ்சாயத்துகள், 528 பேரூராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 15 மாநகராட்சிகள் அனைத்தையும் கண்ணாடி இழை வடத்தை பயன்படுத்தி, அதிவேக அலைக்கற்றை மற்றும் தடையில்லா இணைப்புக்காண உட்கட்டமைப்பில் இணைத்தல் இதன் முக்கிய நோக்கமாகும்.

### தமிழ் நாட்டில் பாரத்நெட் திட்டத்தின் செயலாக்கம்

மத்திய அரசின் பாரத்நெட் திட்டமானது, நாட்டில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை வடம் மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டமாகும். மத்திய அரசின் பங்களிப்போடு இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் மாநில அரசே செயல்படுத்தும் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக, "தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன்" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் உருவாக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 14.09.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110.இன் கீழ் அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013.இன் கீழ், 08.06.2018 அன்று பதிவு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்கப்படும். பாரத்நெட்-II திட்டத்தின் செயல்பாடுகளை தமிழ்நாட்டில் மேற்பார்வையிட, மாநில் அளவிலான செயலாக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, மாநில அரசு அலுவலர்கள் தவிர Universal Services Obligation Fund (USOF) மற்றும் Bharat Broadband Network Limited (BBNL) அலுவலர்களையும் உறுப்பினர்களாக கொண்டுள்ளது.

### தமிழ்நெட் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 14.07.2017 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110.-இன் கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளை இணைக்க மாநிலம் முழுவதும் கண்ணாடி இழை வலையமைப்பு அமைக்கப்பட்டு, அதிவேக அலைக்கற்றை வழங்கப்படும் என்றும், இத்திட்டம் "தமிழ்நெட்" என அழைக்கப்படும் என்றும் அறிவித்தார். இதன்மூலம் டிஜிட்டல் புரட்சியின் நன்மைகள் மற்றும் அரசுத் துறைகளின் சேவைகளை நகர்ப்புற மக்கள் அவரவர் இல்லத்திலிருந்தே பெறமுடியும். தமிழ்நாடு மின் தொடரமைப்பு நிறுவனம் (TANTRANSCO) மற்றும் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) ஆகிய நிறுவனங்களின் தற்போதுள்ள மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள இழை வலையமைப்பினைக் கொண்டு தமிழ்நெட் திட்டத்தின் வலையமைப்பினை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பாரத்நெட் திட்டத்துடன் இணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பாக(Integrated Digital Infrastructure) செயல்படுத்தப்படும்

### ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் கட்டமைப்பிற்கான வலையமைப்பு (Integrated Digital Infrastructure)

"ஒருங்கிணைந்த டிஜிட்டல் கட்டமைப்பு" என்னும் அமைப்பு "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" ஆகியவற்றினை ஒருங்கிணைப்பதன் மூலம் அமைக்கப்படும். இதன் திறன் மூலம் நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள இல்லங்களுக்கு அதிவேக, மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்க இயலும். இவ்வலையமைப்பு, தமிழ்நாட்டில் சுமார் 55,000 கி.மீ அளவிற்கு முற்றிலும் புதிய கண்ணாடி இழை கொண்டு, பரவலாக உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் இணைக்கும். கண்ணாடி இழை கட்டமைப்பானது. பூமிக்கு அடியில் மற்றும் மின்கம்பங்களின் மூலமாகவும் அமைக்கப்படும். இவ்விரு முறைகளில் செயல்படுத்த முடியாத

இடங்களில், ரேடியோ அலைவரிசை, பொதுவெளி கண்ணாடி இழை வட தகவல் தொடர்பு (Radio (RF)/Free Space Optical Communications (FSOC)) தொழில்நுட்பத்தின் மூலம் இணைக்கப்படும்.

**தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICT Academy of Tamil Nadu)**

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஒர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து இவளிவரும் மாணவர்களின் கல்வித் தாரத்தை உயர்த்துவதும், அதன் மூலம் அவர்களை தொழிற்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சிக் குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதை முக்கிய நோக்கமாகக் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் கொண்டுள்ளது.

-------------------------------------